# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை

## தொகுதி - 3

## மெய்யியல்,
## நாட்டுப்புறவியல்

பதிப்பாசிரியர்
முனைவர் தி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை

## தொகுதி - 3

## மெய்யியல்,
## நாட்டுப்புறவியல்

பதிப்பாசிரியர்
முனைவர் தி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title | : | A Descriptive Catalogue of Manuscripts in the International Institute of Tamil Studies, Part III<br>Meyyiyal, Nāṭṭuppuṟaviyal |
| Editor | : | Dr. T. Mahalakshmi, |
| Publisher & © | | International Institute of Tamil Studies, Chennai - 600 113. |
| Publication Number | : | 321 |
| Language | : | Tamil |
| Edition | | First |
| Date of publication | : | 1998 |
| Paper used | : | TNPL 16 kg. Creamve |
| Size of the book | : | Demy 1/8 |
| Printing types used | : | 10 Point |
| Type setting and printed by | : | Shri Vignesh Prints<br>No.158/5, Lake View Road,<br>West Mambalam,<br>Chennai - 600 033.<br>Ph : 4748486 |
| Number of pages | : | xx + 300 |
| Number of copies : | : | 1,000 |
| Price | : | Rs.70/- |
| Binding | : | Paper Pack |
| Subject | : | Philosophy and Folklore Manuscripts available in the International Institute of Tamil Studies |

முனைவர் **ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

# அணிந்துரை

சென்னையில் 1968 - இல் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, உயர்தமிழ் ஆய்வுக்கு வழி வகுக்கும் வகையில், பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டதே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராயிருந்தபோது 1972 - இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பதிவு செய்யப்பெற்றது.

இந்நிறுவனத்தின் ஆய்வுகள் பலவகைப்பட்டன. இவற்றுள் சுவடியியல் ஆய்வும் அடங்கும். தொன்மையான தமிழிலக்கியங்களையும், இலக்கணங்களையும் நம் முன்னோர் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்தனர். அவ்வாறு எழுதப் பெற்ற ஓலைச் சுவடிகளைத் தொகுத்துப் பதிப்பித்து அச்சு நூல்களாக்கித் தந்தவர்களுள் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுக நாவலர் முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களைப் போன்றோரின் முயற்சியால் நீராலும், நெருப்பாலும், பகையாலும் அழிந்து போய் எஞ்சிய ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஓலைச் சுவடிகளின் பெருமைகளை உலகுக்கு உணர்த்தும் வகையில் 1974 - முதல் இந்நிறுவனம் சுவடியியல் பட்டய வகுப்பைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. சுவடியியல் பட்டய வகுப்புப் படிக்கும் மாணவர்கள் ஆண்டு இறுதியில் நிறுவனத்திலிருந்தோ பிற சுவடி நூலகங்களிலிருந்தோ சுவடிகளைப் பெயர்த்தெழுதி ஆய்வு செய்து நிறுவனத்திற்கு ஆய்வேடாக வழங்கி வருகின்றனர். மேலும் சுவடிகள் தொடர்பான கருத்தரங்குகளும் பயிலரங்குகளும் நடைபெற்று வருகின்றன.

தொடக்கக் காலத்தில் இந்நிறுவனம் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்துடன் இணைந்து திங்கள் தோறும்

சுவடியியல் கருத்தரங்கை நடத்தி வந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

1980 - முதல் இந்நிறுவனம் சுவடிப் பதிப்புகளை வெளியிடத் தொடங்கியது. இதுகாறும் 44 சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. முனைவர் வே. இரா. மாதவன் அவர்கள் பதிப்பித்த கண்மருத்துவம் என்ற நூலுக்கும், முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்கள் பதிப்பித்த கருவூரார் பல திரட்டு, தடிவீர சுவாமி கதை - வன்னியராயன் கதை ஆகிய சுவடி நூல்களுக்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் சிறந்த நூல்களுக்கான பரிசுகளை வழங்கியுள்ளது.

'சுவடி அட்டவணை' எனும் திட்டப்பணி இந்நிறுவனத்தில் 1983 - இல் தொடங்கப் பெற்றது. இத்திட்டத்தின் பயனாகக் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களால் 1983 - இல் ஆய்வு செய்யப் பெற்றுத் 'தமிழ்ச் சுவடிகள் அட்டவணை' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தன. 1989 - இல் "Siddha Medical Manuscripts in Tamil' என்ற நூல் முனைவர் வே. இரா. மாதவன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று நிறுவனத்தில் வெளியிடப்பெற்றது. 1995 - இல் முனைவர் நிர்மலாதேவி அவர்கள் பதிப்பித்த 'கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை' என்ற நூலை நிறுவனம் வெளியிட்டது.

இத்திட்டத்தைத் தொடர்ந்து நிறுவனத்திலுள்ள சுவடிகளைப் பாதுகாக்கவும், அட்டவணைப்படுத்தவும் 1990-1991-இல் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் நிறுவன இயக்குநராக இருந்தபோது தில்லியில் உள்ள ஆவணக் காப்பகத்திடமிருந்து ரூ. 5,000 பெறப்பட்டது.

சுவடிகளை அட்டவணைப் படுத்தற்கு வித்திட்டு, அட்டவணைப் படுத்தும் முயற்சியைச் செயற்படுத்தி நடத்திய முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நன்றி. தொடக்க நிலையில் சுவடிகளை அட்டவணைப் படுத்தி இப்பணிக்குத் துணை நின்ற முனைவர் வ.அலுமேலு அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

1995 - 96 - இல் நிறுவனச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்குத் தில்லி தேசிய ஆவணக் காப்பகம் ரூ. 30,000/- வழங்கியது. இத்திட்டத்தின் விளைவாக இப்போது முனைவர் டி. மகாலட்சுமி அவர்கள் பதிப்பித்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகள் விளக்க அட்டவணைகள் நான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன. மிகவும் கடினமான இப்பணியைச் செய்து முடித்த முனைவர் டி. மகாலட்சுமி அவர்கள் பாராட்டுக்குரியவர். சுவடித் துறையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும், சித்த மருத்து வர்களுக்கும் பிறருக்கும் இந்நான்கு தொகுப்புகள் மிகவும் பயனுடையன. நிறுவன ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பெற வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்பட்ட முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களும், நிறுவனச் சுவடிகள் விளக்க அட்டவணை செய்யப் பெற வேண்டுமென்று விரும்பிய முன்னாள் இயக்குநர் பொறுப்பிலிருந்த முனைவர் அன்னி மிருதுலகுமாரி தாமசு அவர்களும் பாராட்டுக்குரிய வர்கள்.

இத்திட்டப்பணி சிறப்பாக அமைய வழிகாட்டிய பெருந்தகை பேராசிரியர் அமரர் மு. சண்முகம் பிள்ளை அவர்களை நன்றியுடன் நினைவுகூர்கிறேன். அவருடன் இணைந்து வழிகாட்டிய முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் என் நன்றி.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதி நல்கிய தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தார்க்கும் நன்றி.

இந்நான்கு தொகுதிகளையும் சிறப்பாக அச்சிட்டுத் தந்த விக்னேஷ் அச்சகத்தார்க்கும் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இலக்கியத் துறையுடன் இணைந்துள்ள சுவடிப்புலம், பட்டய வகுப்புகள், பயில ரங்குகள் வழி மாணவர்களுக்கும் பிறருக்கும் சுவடிப் பயிற்சி அளித்தல், அச்சில் வெளிவராத சுவடி நூல்களைப் பதிப்பித்து அச்சிடல், சுவடிப்பதிப்பு வரலாறு அறிதல், சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரித்து வெளியிடுதல் முதலான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## சுவடி விளக்க அட்டவணை

இந்நிறுவனத்தில் ஏறக்குறைய 592 சுவடிக்கட்டுகளும், அவற்றில் 950 நூல்களும் உள்ளன. 1990-91 இல் இந்நிறுவனச் சுவடிகளைச் செப்பம் செய்வதற்கும் அட்டவணை செய்வதற்கும் ரூபாய் ஐந்தாயிரம் இந்நிறுவன அந்நாளைய இயக்குநர் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களால் தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தி லிருந்து பெறப்பட்டது. பின்னர், 1995-இல் இந்நிறுவனச் சுவடிகளின் விளக்க அட்டவணையை அச்சிட்டு வெளியிடு வதற்கு ரூபாய் முப்பதாயிரம் இந்நிறுவன இந்நாள் இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களால் அக்காப்பகத் திடமிருந்து பெறப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக உருவாகிய விளக்க அட்டவணைகளே இப்போது வெளி வருபவை.

## பொருளடிப்படைப் பாகுபாடு

இந்நிறுவனச் சுவடிகளின் விளக்க அட்டவணை 4 தொகுதிகளில் அமைகிறது. முதல் தொகுதி **சித்த மருத்துவச் சுவடி விளக்க அட்டவணை** என்ற தலைப்பிலும், இரண்டாம் தொகுதி **இலக்கியச் சுவடி விளக்க அட்டவணை** என்ற தலைப்பிலும், மூன்றாம் தொகுதி **மெய்யியல் மற்றும் நாட்டுப்புறவியல் சுவடி விளக்க அட்டவணை** என்ற தலைப்பிலும், நான்காம் தொகுதி **மொழி, கணிதம் மற்றும்**

பண்பாட்டுச் சுவடி விளக்க அட்டவணை என்ற தலைப்பிலும் அமைகின்றன.

இம் மூன்றாம் தொகுதியில் சமயத் தத்துவம், துதி, நாடகம், கதைப்பாடல் எனும் பொருண்மைகள் இடம் பெறுகின்றன. இதில் இடம் பெற்றுள்ள சுவடிக் கட்டுகளில் அடங்கிய நூல்களின் எண்ணிக்கை 272.

## சுவடிக் கொடை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குத் தங்களிடமிருந்த சுவடிகளை அன்பளிப்பாகவும், நன்கொடையாகவும், வழங்கிய நல்ல மனம் கொண்ட அன்பர்கள் பலராவர். திருவாவடுதுறை ஆதீனத்தினரும், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்தினரும் இக்கொடையில் முக்கிய இடம் பெற்றவராவர். இங்ஙனம் சுவடி வழங்கிய அனைவருக்கும் இந்நிறுவனம் மனம் நிறைந்த நன்றியையும், அன்பு நிறைந்த பாராட்டையும் தெரிவிக்கின்றது.

## நன்றியுரை

சுவடி விளக்க அட்டவணை விரைந்து நூல்களாக வெளிவரவேண்டுமென்ற ஆவலோடு என்னை ஊக்கப்படுத்தி யும், ஆற்றுப்படுத்தியும், அச்சிட நிதிபெற்றுத் தந்தும், தோன்றாத் துணையுமாக நின்ற இந்நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கும், இத்திட்டத்திற்கு நல்கை வழங்கிச் சிறப்பித்த தில்லி, தேசிய ஆவணக்காப்பக இயக்குநர் அவர்களுக்கும், சுவடிகளைச் செப்பமிடுவதற்கும் அட்டவணைப் பணியை நான் செய்வதற்கும் வாய்ப்பு நல்கிய அந்நாளைய இயக்குநர் பொறுப்பிலிருந்த முனைவர் அன்னிதாமசு அவர்களுக்கும், கேட்டபோதெல்லாம் அய்யம் தீர்த்துத் துணையாக நின்ற இலக்கியத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும், இந்நூலாக்கத்தின் தொடக்கக் காலக்கட்டத்தில் எனக்கு ஆசானாக இருந்து, நான் இடர்ப்படும்போதெல்லாம் தேவையான ஆலோசனை வழங்கி, எழுத்துருவின் பெரும்பகுதியைத் திருத்திக் கொடுத்துப் பல்லாற்றானும் துணைபுரிந்த முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்களுக்கும், அட்டவணைப் படுத்தும்போது தொடக்கத்தில் எனக்கு

உதவிய முனைவர் வ. அலமேலு அவர்களுக்கும், இவ்வட்டவணைத் தொகுதிகள் சிறக்கவும், விரைந்து முடியவும், துணைநின்ற எங்கள் துறை சிறப்புநிலை ஆய்வாளர் முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், நான் வேண்டும்போதெல்லாம் சிரமம் பாராது தன்வேலையைப் போல் கருதி தேவைப்படும் கருத்துரைகளையும் நூல்களையும் கொடுத்துதவிய எங்கள் துறை ஆராய்ச்சி உதவியாளர் திரு. த.பூமிநாகநாதன் அவர்களுக்கும், தன் பணிகளுக்கிடையே இந்த நூலின் மெய்ப்புகளைத் திருத்துவதில் உதவிய எங்கள் துறை ஆராய்ச்சி உதவியாளர் திரு. மொ. மருதமுத்து அவர்களுக்கும், அட்டவணைப் பணிக்குத் துணைநின்ற எங்கள் துறை ஆராய்ச்சி உதவியாளர்கள் முனைவர் சூ.நிர்மலா தேவி, திரு மூ. பரிமணன் அவர்களுக்கும் அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல்களைத் தடையின்றித் தந்தருளிய அன்பு கெழுமிய நூலகர் திரு இரா. பார்வதி அவர்களுக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவருவதற்கு அச்சுப்பணி செய்த ஸ்ரீ விக்னேஷ் அச்சுக் கூடத்திற்கும் என் நன்றி உரித்து. நான் சிறந்த ஆராய்ச்சியாளராக அமைதல் வேண்டும் என்ற பெரு நோக்கோடு என் கல்விப் பணியில் உற்ற நண்பராக தோள்கொடுத்து நின்றவரும், எந்நிலையிலும் கடமை தவறாதிருக்க வேண்டுமென்ற உணர்வை ஊட்டியவருமான என் இதயம் நிறைந்த, அண்மையில் மறைந்த எனது கணவர் அமரர் எஸ்.சந்திரசேகரன் அவர்களை வணங்கி என் நன்றியை நிறைவு செய்கிறேன்.

தி. மகாலட்சுமி

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருண்மை | பக்கம் |
| --- | --- | --- |
| | அணிந்துரை | iii - v |
| | முன்னுரை | vi - viii |
| | பதிப்புரை | 1 - 11 |
| 1. | சமயத் தத்துவம் | 12-209 |
| 2. | துதி | 210-244 |
| 3. | நாடகம் | 245-253 |
| 4. | கதைப் பாடல் | 254-311 |

# பதிப்புரை

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை மாதிரிப் படிவம் (பொருள் அடிப்படைப் பாகுபாடு)

**நூற்பெயர்: (வரிசை எண்ணுடன்)**

அ. கட்டு எண் + நூல் எண்

ஆ. ஏடுகளின் எண்ணிக்கை

இ. அளவு

ஈ. வரிகள்

உ. சுவடியின் நிலை

ஊ. கையெழுத்தின் தன்மை

எ. சுவடி முழுமை / குறைவு

ஏ. அச்சான விவரம்

முற்குறிப்பு (இருப்பின் மட்டும்) (Colophon)

தொடக்கம் (காப்பு + நூலின் முதல்பாட்டு)

முடிவு (இறுதிப்பாடல்)

பிற்குறிப்பு (இருப்பின் மட்டும்) (Colophon)

**II. குறிப்புரை**

1. நூற்பெயர் (சுவடியில் உள்ள வடிவம்)
2. செய்யுட்களின் எண்ணிக்கை
3. செய்யுளா? உரைநடையா? இரண்டும் கலந்ததா?
4. நூலின் சிறப்பு/நூலின் சுருக்கம்
5. நூலின் உட்தலைப்புகள்
6. நூற்செய்தியைக் கொண்டமைந்த உட்தலைப்புகள்

7. குறிப்பிட்ட ஒரு நூல் இவ்வட்டவணையில் வேறு இடங்களில் இடம் பெற்றிருப்பின் அதனைச் சுட்டுதல்
8. குறிப்பிட்ட அந்நூல் பிற அட்டவணைகளில் இடம் பெற்றிருப்பின் ஓரளவு சுட்டுதல்
9. அந்நூலை இவ்வட்டவணையிலுள்ள பிற நூல்களுடனும், வேறு அட்டவணைகளிலுள்ள நூல்களுடனும் ஒப்பிட்டு அது தொடர்பான சில ஆய்வுச் சிந்தனைகளைத் தருதல்
10. மாற்றுச் சுவடிகள் உள்ள வேறு இடங்கள்
11. அச்சான நூல்களின் விபரம்
12. குறிப்பிட்ட நூல் தலைப்பை ஒட்டி வெளிவந்துள்ள அச்சு நூல் விபரம்
13. சுவடிப்பட்டய ஆய்வேடாக அளிக்கப்பெற்றிருப்பின் அதனையும், ஆய்வேடு நூலாக வந்திருப்பின் அதனையும் சுட்டுதல்.
14. நூலாசிரியர்
15. நூலாசிரியர் காலம்
16. நூலாசிரியரின் பிறநூல்கள்

**சுவடி விளக்க அட்டவணையின் அமைப்பு முறை விளக்கம்**

முதலில் நூல்தலைப்பும், நூல் தலைப்பின் இடது பக்கம் நூல் வரிசை எண்ணும் தரப்பட்டுள்ளன. அதன் பின் அ முதல் ஏ வரையிலான எட்டு உட்பிரிவுகளில் செய்திகள் தரப் பட்டுள்ளன.

**காட்டு**

**536. அத்துவிதானந்தம்**

அ. 137 : 275

ஆ. 1-26 ஏடுகள்

இ. 32 X 3 செ.மீ.

ஈ. 6-7 வரிகள்

உ. முதலும் இறுதியுமான சில ஏடுகள் சிதைந்துள்ளன

ஊ. நன்று

எ. குறை

ஏ. இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம்** என்பதில் நூலின் தொடக்கத்தில் அமையும் முதல் பாடல் முழுமையாகத் தரப்பட்டுள்ளது. 14 அல்லது 16 சீர் வரும் பாடல்களிலும், நூலோடு தொடர்பில்லாத காப்புப் பாடல், நூல் பாடல் ஆகியவற்றைத் தருமிடங்களிலும், ஒரு பாடலின் இரண்டு வரிகளைத் தரும் முறையும் பின்பற்றப் பெற்றுள்ளது. காப்புப் பாடல், நூல்பாடல் ஆகிய இரண்டையும் முழுமையாகத் தரும்முறையும் பின்பற்றப் பட்டுள்ளது. **முடிவு** என்பதில் நூலின் இறுதிப்பாடல் முழுமையாகத் தரப்படுகிறது. **முற்குறிப்பு** என்ற பகுதியில் நூல் தொடங்குவதற்கு முன்பு இடம்பெறும் சில குறிப்புகளும், **பிற்குறிப்பு** என்ற பகுதியில் நூல் முடிந்தபின் இடம்பெறும் சில குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. நூலின்பெயர், நூலாசிரியர் பெயர், நூலை ஏட்டில் எழுதியவர் பெயர், முகவரி, நூலின் காலம், சுவடியை எழுதத் தொடங்கிய நாள், எழுதி முடித்த நாள், சுவடி உரிமையாளர், சுவடியைப் படியெடுக்கச் சொன்னவர், சுவடிக் கட்டில் அடங்கியுள்ள நூல்களின் பட்டியல், நூலை எடுத்தவர்களும், படித்தவர்களும் திருப்பிக் கொடுக்காவிட்டால் இன்னின்ன தீய விளைவுகள் ஏற்படும் என்ற அச்சுருத்தல், இரகசியக் குறிப்பு முதலான செய்திகள் பிற்குறிப்பில் இடம்பெற, இவற்றுள் ஒரு சில செய்திகளே முற்குறிப்பில் இடம்பெறுகின்றன. மேலும் அவ்வாறான இடங்களும் மிகக்குறைவே.

**காட்டு**

## முற்குறிப்பு

801. பாரதப்போர் அம்மானை (45:702)

1347-வது வருசம் வைகாசி மாசம் 12-ஆம் தேதி வியாழனாட்சையும் அனுச நட்சத்திரம் கூடிய சுபயோக சமயத்தில் சொத்தவி குமாரசுவாமி குமரகுருபரன் துணையால் எழுதிப் படித்து வருகிற பாரதப் போர் யம்மானை ஏடு.

# பிற்குறிப்பு

## 772. இலட்சுமியம்மன் தவநிலை (252 : 468)

இந்த ஏடு எழுதி முடிந்தது 1129-ஆம் வருஷம் புரட்டாசி மாசம் 28-ஆம் தேதி புதன்கிழமை சு.காளத்திநாடார் சுப்பிரமணிய நாடார் குமாரர். இந்த ஏடு எழுதினவர் மாடநாடார் குடியிருப்பிலிருக்கும் லட்சுமணப் பெருமாள் நாடார். யாரும் எடுத்துப் படிக்கலாம். ஒருவரும் திருடக்கூடாது.

மேலே குறிப்புரையில் இடம்பெற்றுள்ள அனைத்து விபரங்களும் இடம் பெறாமல் இவற்றுள் ஒன்றிரண்டு விபரங்களை மட்டுமே கொண்டமையும் குறிப்புரைகளும் உள்ளன.

ஒரு சுவடியில் ஒரு நூல் அமைதல் இயல்பானது, அன்றியும் சுவடியில் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் உடன் எழுதப் பெற்றிருத்தலும் உண்டு. அவை வெவ்வேறு பொருள் பற்றியனவாகக் கூட இருக்கலாம். விளக்கத்தில் அவ்வாறு ஒன்றுக்கு மேற்கூறப்பட்ட நூல்கள் ஒரு சுவடியில் இருப்பின் அவற்றிற்கும் தனித்தனியே விளக்க அட்டவணை செய்யப் பெற்றுள்ளது. அங்ஙனம் செய்யப் பெறும் போது சுவடிக்குரிய எண் **கட்டு எண்ணாகவும்,** அதிலுள்ள நூல்களுக்குத் தரப்படும் எண் **நூல் எண்ணாக வும், அ** என்ற பகுதியில் சுட்டப் பெறுகிறது. எனவே ஒரு சுவடியில் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் இருப்பின் கட்டு எண் மாறாது. நூல் எண் தொடர்ச்சியாக எண்களைப் பெறும்.

முதல், இடை, கடை ஆகியவற்றில் ஏடுகள் இல்லாதிருப் பின், இருந்து தெளிவற்று, சிதைந்து இருப்பின் அல்லது ஏடுகளுக்கு எண் இல்லாது இருப்பின் ஏடுகளின் மொத்த எண்ணிக்கை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இல்லாத ஏடுகளின் எண்களும், எண்ணிக்கை விபரங்களும் ஓரளவு தரப் பெற்றுள்ளன. ஏடுகளின் எண்ணிக்கையைத் தரும் நிலையில் ஏடுகள் விடுபட்டிருப்பின் பிறைக்குறிக்குள் மொத்த எண்ணிக்கையைச் சுட்டும் நிலையும் பின்பற்றப் பெற்றுள்ளன.

தொடக்கம், முடிவு ஆகியவற்றின் முடிவில் பெரும் பாலும் பாடல் எண் தரப் பெற்றுள்ளது. ஒரு சிலவற்றில் பக்க

எண்ணும், ஒரு சிலவற்றில் பக்க எண்ணும், பாடல் எண்ணும் தரப்பெற்றுள்ளன.

முழுமையாக, இடையில், இறுதியில் என்றவாறு பல சுவடிகளின் ஏட்டெண்கள் சிதைந்துள்ளன. அதுபோன்ற நிலைகளில் இயன்றவரை பாடல்களை வைத்து ஏடுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பாடல்களிலும் தொடர்ச்சி முறை அறிதலில் இடர்ப்பாடு நேரும்போது ஏட்டுஎண் இல்லாதவை இறுதியில் சேர்க்கப் பெற்றுள்ளன.

ஒரு நூலில் பிற நூற் செய்திகள் இடம்பெற்று அவை அட்டவணை செய்யப்படாது இருப்பின் நூல் தலைப்புடன் முதலியன என்ற சொல்லாட்சி இடம் பெற்றிருக்கும். ஒரு நூலின் தொடர்பற்ற ஒன்றிரண்டு ஏடுகள், சிதைவு போன்றன அட்டவணை செய்யப் படாமைக்குக் காரணங்களாகின்றன.

அச்சு நூல் விவர அட்டவணை ஒரு சேரக் கிடைக்காமையும், விரைந்து அட்டவணையைத் தயாரித்து முடிக்க வேண்டிய நிலையும் இருந்ததனால் அச்சு நூல் விவரக் குறிப்புகள் முழுமையாகத் தரப்படவில்லை. மேலும் ஒரு நூல் அச்சானதா அச்சாகாததா எனத் தெரிந்து கொள்வதில் சில இடர்ப்பாடுகளும் உள்ளன.

**தாள் சுவடிகள்**

ஓலைச் சுவடிக் கட்டுகளின் தொடர் வரிசையில் இடம் பெறாமல் தாள் சுவடிகள் தனித்த எண்களைப் பெறு கின்றன. எனவே அவற்றை வேறுபடுத்திக் காட்ட அ. என்ற பகுதியில் **தாள்** என்ற சொல் சேர்க்கப்பெற்றுள்ளது.

அ. தாள். கட்டுஎண் + நூல் எண்
ஆ. பக்கங்கள்
இ. முழுமை/குறை
ஈ. அச்சானதா / அச்சாகாததா எனும் அமைப்பில் தாள் சுவடிகள் விளக்கம் பெறுகின்றன.

**காட்டு**

804. வன்னிராயன் கதை

அ. தாள்.12:41
ஆ. 18 பக்கங்கள்

இ. முழுமை

ஈ. அச்சானது (நிறுவன வெளியீடு 1996).

**நூல்களுக்குத் தலைப்பிடல்**

இந்த இரண்டாம் தொகுதியில் நூற்பெயர் தெரியாத நூல்களும், ஆசிரியர் பெயர் தெரியாத நூல்களும் இடம் பெற்றுள்ளன. நூற் பெயர் தெரியாத நூல்களுக்கு அந்நூற் செய்திகளைக் கொண்டு தலைப்புகள் வழங்கப் பெற்றுள்ளன. அவை மட்டும் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன. நூற்பெயர் இல்லாதிருப்பின் முதலில் வரும் உட்தலைப்பை நூற்பெயராகத் தரும் முறையும் பின்பற்றப் பெற்றுள்ளது. காட்டு 734 (சிவன் பாடல்கள்).

**பதிப்புக் குறிப்புகள்**

தொடக்கம், முடிவு, முற்குறிப்பு, பிற்குறிப்பு எனும் பகுதிகளில் சுவடிகளிலிருந்து பெயர்த்தெழுதும் போது தற்போது எழுத்துச் சீர்திருத்த முறையைப் பின்பற்றி எழுத்துகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. ஏடுகளில், பாடல்களில் இடம்பெற்றுள்ள தமிழ் எண்கள் அராபிய எண்களாகத் தரப்பெற்றுள்ளன. சுவடிகளினின்று இவ்வாறு பெயர்த்தெழுதிய பகுதிகளில் தேவையான இடங்களில் காற்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியன இடம் பெற்றுள்ளன. சிதைந்த இடங்களைக் குறிக்க '....' என்றவாறு புள்ளிகள் இட்டும், சிதைந்த இடங்கள் வருவித்து நிரப்பப்பட்டிருப்பின் அதன்கீழ் கோடிட்டும் காட்டப்பெற்றுள்ளன. ஒரு நூலின் மாற்றுப் பிரதி இடம்பெறின் அதனை 'இன்ன எண்ணில் காண்க' என்பது சுட்டப்பெற்றுள்ளது. **உ** என்பது உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தையும், **த** என்பது தஞ்சைப் பல்கலைக் கழகத்தையும், **ச** என்பது தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தையும், **கே** என்பது கேரளப் பல்கலைக் கழக அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தையும் குறிக்கும் சுருக்க விளக்கங்களாகின்றன.

**யாப்பு**

பன்னிரண்டு சீர், பதினான்கு சீர், அறுசீர், எழுசீர், எண்சீர் ஆகியவற்றாலான விருத்தப் பாவகைகளே மிகுதியாக

உள்ளன. இவற்றுள் எண்சீர் விருத்தங்களே மிகுதி. வெண்பா, அகவல் போன்ற வகைகளும் உள்ளன. அவ்வகைகளுள் அடங்காத சில பாடல்களும் இடையிடையே காணப் பெறுகின்றன. பல பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. மூல நூல்களில் யாப்பு பெரும்பாலும் சரியாய் அமைந்து, அவை பிரதி செய்யப்படும் போது பல யாப்புக் குறைபாடுகள் தோன்றியுள்ளன. இதனைச் சில சுவடிகளில் அமையும் பல பாடல்களை நோக்குமிடத்து உணரமுடிகிறது.

**சுவடிநடை**

பேச்சு வழக்கு நடை பல சுவடிகளில் காணப் பெறுகின்றன. சில சுவடிகளில் மிகவும் தெளிவற்ற கையெழுத்து இடம்பெறுவதால் படித்தறிவது மிகவும் சிரமமாகவே உள்ளது. இவ்விடங்களில் பொருள் உணர்ந்து எழுத வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சொற்றொடரி லுள்ள எழுத்துகள் ஒன்றன்மீது ஒன்று அமைந்து மிகவும் நெருக்கமாக எழுதப் பெற்றிருப்பதால் சொற்களை உணர்வதும், அது என்ன தொடர் என்று அறிவதும் கடினமாகிறது.

ஏடுகளில் காணப்பெறும் கையெழுத்துகளில் ஒருவர் கையெழுத்துப் போல் மற்றொருவர் கையெழுத்து இருப்ப தில்லை. ஏடெழுதியோர் பயன்படுத்திய வடிவங்களையும், குறியீடுகளையும் நூல் முழுவதும் படித்த பின்னரே முழுமையாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆயின் அட்டவணைக்காக ஓரளவு மட்டும் சுவடியைப் பயன் படுத்தும் நிலையில் ஏடெழுதியோரின் சில எழுத்து வடிவங்களையும் குறியீடுகளையும் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏற்படுகின்றது. பல சுவடிகள் பிழை மிகுந்ததாக இருப்பினும், வழக்கில் சொற்கள் அப்படியும் வழங்கப்பட வாய்ப்பு இருப்பதால் அனைத்துப பிழைகளும் திருத்தப் பெறவில்லை. இயன்றவரை பேச்சு வழக்கு, சுவடிகளில் உள்ளவாறே தரப்பெற்றுள்ளது.

குறிப்புரை என்ற பகுதியில் தரப்பெற்றுள்ள கருத்து களை மூல நூல்களோடு ஒப்பிடும் நிலையில் அவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் சுவடிகளைக்

கூர்ந்து காணக்காண மாற்றங்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. அதைப் போன்று கருத்துகளும் வளர்ச்சி காரணமாக மாறலாம்.

## ஆய்வுரை

538 - 805 நூல்களையுடைய இத்தொகுதியில் **சமயத் தத்துவம்,** துதி, நாடகம், கதைப்பாடல் என்ற பொருண்மைகள் உள்ளன. தமிழகத்தில் பண்டு தொட்டு நிலவும் சமயங்களில் சைவ சமயமும் ஒன்று. இதனைத் தோற்றுவித்தவர் யாரென்று அறிய முடியாவிட்டாலும், இம்மதம் எங்கிருந்து இங்கு நுழைந்தது என்பதில் கருத்து வேறுபாடு நிலவினாலும், இச்சமயக் கடவுளான சிவன் தமிழ்க் கடவுள்தானா என்ற வினா தமிழகத் தத்துவ வாதிகளிடம் விளங்கினாலும், இம்மதம் இன்றும் நிலைத் திருப்பதைக் கொண்டு இதனுடைய தொன்மையை உணரலாம்.

ஒரு சமயத்திற்கு அச்சமயம் சார்ந்த நூல்களில் சிறப்புகளைத் தருவது துதி நூல்களும், தத்துவ நூல்களுமே. சைவ சமயத்தின் தத்துவத்தை 96 வகையாக விரித்துப் பேசுவர். இத் தத்துவங்களைப் பேசும் பெரு நூல்களும், சுருக்கிப் பேசும் சார நூல்களும், பொருண்மையை மட்டும் சுட்டும் கட்டளை நூல்களும் இச்சமயத்திற்கு மெருகூட்டு வனவாய் அமைகின்றன. இவற்றுள் சைவ சமயக் கோட்பாட்டைப் பேசும் பதிபசுபாசக் கட்டளை, வேதாந்தக் கருத்துகளைப் பேசும் அத்துவிதானந்தம், அவிரோத உந்தியார், பேரின்பத்தைப் பேசும் அறிவானந்த சித்தியார், உண்மை என்பதை என்னவென்று விளக்கும் அத்துவித உண்மை, இறை உணர்வு என்ன என்பதை அவரவர் வாயிலாகப் பேசும் அனுபூதி விளக்கம், மனத்திற்கு மகிழ்ச்சி தந்து உள்ளத்தை ஆனந்தமாக வைக்கும் தத்துவத்தைப் பற்றி விளக்கும் ஆனந்த விளக்கம் போன்றன குறிப்பிடத்தக்கன. இந்நிறுவனத்திலுள்ள பெரும்பாலான சமயத் தத்துவச் சுவடிகள் அச்சான நூல்களே. இருப்பினும் அவற்றுள் பலவற்றிற்கு நூல்களும், உரைநூல்களும் கிடைக்கப் பெறவில்லை. எனவே இங்குள்ள பல சுவடி நூல்கள் எளிய, புதிய உரைவிளக்கத் துடனும், ஆய்வுரையுடனும் வெளிவரத்தக்க தகுதியினை உடையன வாய் உள்ளன.

அனைத்துச் சுவடிகளிலும் ஏட்டெண்கள் தமிழ் எண்களாகவே உள்ளன. ஒரு சுவடியில் *(241:457)* **அராபிய எண்** தரப்பட்டுள்ளது. **ஒழிவிலொடுக்கம்** *(130:267)* என்ற நூலில் ஏட்டெண்கள் **கிரந்த எண்ணில்** இடம் பெற்றுள்ளன.

***சிவப்பிரகாசக் கட்டளைச் சிந்தனை*** *(130:266)* என்ற நூலில் அ-ன்வரை **உயிரெழுத்துகளும், மெய்யெழுத்து களும்** *(12+18)* **ஏட்டெண்களாகக் கொடுக்கப் பெற்றுள்ளன.** அடுத்து ஒன்று, இரண்டு எனும் எண்கள் இரண்டு ஏடுகளில் தமிழ் எண்களில் அமைகின்றன. **இச்சுவடியில் ஏட்டெண் தரப்பட்டுள்ள முறை புதிய முறையாக உள்ளது.**

## துதி

'துதிப்போருக்கு வல்வினை போம்' என்று கந்த சஷ்டி கவசம் கூறும். இறைவனின் பெருமைகளை ஒருசேரப் பேசி அவன் அருள் பாலிப்பைப் பெறுவதற்காகப் பாடப்பெறும் நூலே துதிநூல். இது சிறிதும் பெரிதுமாகப் பதிகம், அந்தாதி, மாலை போன்ற இலக்கிய வகைகளில் அமைந்து காணப்பெறும். தமிழக விழாக்களும், சடங்குகளும் இறைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளன. பக்தியின் விளைவாய் இவ்வகைத் துதிநூல்கள் இலவச வெளியீடாக மக்களிடையே மக்களாலேயே தரப்பெறுகிறது. குருதோத்தி ரம், சிவதோத்திரம், திண்டிவனம் வாலை அங்காளம்மன் துதி, நகரத்தார் பேரில் திருமுக விலாசம், பார்வதியம்மன் பேரில் தோத்திரம், மகாலிங்கேஸ்வர சுவாமி தோத்திரம், மல்லிகார்ச்சுன சுவாமி தோத்திரம் முதலான அச்சாகாத பல சிறந்த சுவடி நூல்கள் துதி எனும் பொருண்மையில் இடம் பெற்றுள்ளன.

## நாடகம்

கருத்துகளைப் புலப்படுத்தப் பலவித ஊடகங்கள் இருக்கின்றன. மக்களுக்கு மிக அறிமுகமான ஊடகத்தில் கருத்துகளைக் கூறும்போது எளிதாக மக்களைச் சென்றடை யும்; அவர்களை ஈர்க்கும். அதிலும் காட்சிப் புலப்பாட்டு ஊடகங்களின் வழியே கருத்துகளைப் புலப்படுத்தும்போது அக்கருத்துகள் அவர்களின் உள்ளங்களில் பசுமரத்து ஆணிபோன்று பதிந்துவிடும். இந்த வகையில் உள்ள

ஊடகந்தான் நாடகம். இந்த நாடகத்தில் நடிப்பதற்குப் பாடம் (Script) தேவை. அத்தகைய பாடங்கள்தான் இங்கே சுவடிகளில் எழுதப் பெற்றிருக் கின்றன. ஆகவே இவை நாடகச் சுவடிகள் என்று அழைக்கப் படுகின்றன. வள்ளி நாயகியாள் கதை, சோமவார நாடகம் - சீமந்தினி கதை என்பன அச்சுருக் காண வேண்டிய சிறந்த நூல்களாகும்.

## கதைப்பாடல்

மக்களுக்கு உணர்த்துவதற்காக செய்திகளைக் கொடுப்பதற் காக மக்கள் கலைகளாக இருப்பவை நாட்டுப்புறக் கலைகள். தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கணியான் கூத்து, பாணிக்கூத்து, லாவணி, சேவையாட்டம், ஒயில்கும்மி, வட்டக்கும்மி, கோலாட்டம் ஆகிய கலைகள் நாட்டுப்புற நிகழ்கலைகளாகும். இத்தகைய நிகழ் கலைகளில் கருத்துகளைக் கூற மற்றோர் ஊடகமான கதைப் பாடல் தேவைப்படுகிறது. முன் காலங்களில் நாடகம் நிகழ்வதற்குத் தேவையான பாடங்கள் பாடல் வடிவில் இருந்தன. இது போன்றே மற்ற கலைகளை நிகழ்த்துவதற்கும் பாடங்கள் பாடல் வடிவில் இருந்தன. இந்தப் பாடல் வடிவிலுள்ள பாடங்கள் கதையைப் பொதிந்து இருந்தன. இதுதான் கதைப்பாட்டு. ஆக நாட்டுப்புற நிகழ்கலைகளை நிகழ்த்துவதற்குப் பாடல்கள் தேவைப் பட்டன. இவ்வாறு நிகழ்த்திய வகையிலும், நிகழ்த்த இருந்த வகையிலும் ஆக்கப்பட்டவைதான் ஏட்டு வடிவில் இங்கே இருக்கும் கதைப் பாடல்கள். இவை நாட்டுப்புறவியலைச் சார்ந்தவை.

வீரபாண்டி கட்டபொம்மு, பூலித்தேவன், ஐவர் ராசாக்கள், சேர்வைக்காரன் போன்றோர் வரலாறுகள் நாட்டார் இலக்கியத்தில் கதைப் பாடல்களாக மிளிர்கின்றன. இதுபோன்றே பாரதம், இராமாயணம் போன்ற காப்பிய மாந்தர்களைக் கொண்டு எழுந்த கர்ணன் சண்டை, கண்ணன் தூது, விராட பருவம், அரக்கு மாளிகை, அல்லி அரசாணி கதை, பொன்னுருவி புலம்பல், இராமர் பட்டாபிசேகம், சீதா கல்யாணம், அனுமன் தூது முதலான கதைகள் தமிழகத்தில் கதைப்பாடல்களாக விளங்கு கின்றன. அப்படிப்பட்ட கதைகளுள் ஒருசில இந்நிறுவனச் சுவடிகளிலும் உள்ளன. இலட்சுமியம்மன் தவநிலை, சிவன் பார்வதியைச்

செம்படவனாக வந்து மணந்த கதை, நம்பிராயன் கதை, வைகுண்ட அம்மானை என்ற நூல்கள் அச்சுருக் காண வேண்டிய சிறந்த நூல்களாக உள்ளன.

**ஞான சவுந்தரிய அம்மானை** (*588:946*) என்ற கிறித்துவ சமயம் தொடர்பான கதைப்பாடல் ஒன்று உள்ளது. இப்பொருண்மை திரைப்படமாக, இது போன்ற வேறுநூல் அச்சு நூலாக வந்திருப்பினும் கிறித்தவ இலக்கியம் என்ற வகையில் இது ஒன்றே நிறுவனத்தில் உள்ளது.

சில சுவடிகளின் இறுதியில் அட்டவணை (Index) உள்ளது. இதில் குறிப்பிட்ட ஒரு சுவடிக் கட்டில் உள்ள நூல்களின் பெயரும், பாடல்களின் எண்ணிக்கைகளும், யாப்பு பற்றிய விவரமும் உள்ளன. இதிலிருந்து சுவடியில் இருந்து விடுபட்ட நூல்களை அறியமுடிகிறது.

# 1. சமயத் தத்துவம்

## 534. அஞ்ஞான மெஞ்ஞான விருத்தி

**அ.** ***111:215***; **ஆ.** *1–96* ஏடுகள்; **இ.** 19 x 3செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** நன்று; முதலிரண்டு ஏடுகள் சிதைந்துள்ளன; **ஊ.** கடினம்; சிறிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

### தொடக்கம்

வடக்கே இடம் பண்ணினவிடத்திலே பீடபட்டிகைப் போட்டுத் தட்சிணாமூர்த்தியை நகாரப் பஞ்சாட்சரத்தினாலே பூசை பண்ணி அவரை வேண்டிக் கொண்டு பஞ்ச கௌவியம் பாவிக்கும் படித் தட்சிணாமூர்த்தி சந்நிதானத் திலே ...... நவகோட்டமாய்க்கீறி, கிழக்கே பால், தெற்கே தயிர், மேற்கே நெய், வடக்கே கோசலம், ஈசானத்தில் கோமயம் மத்தியத்தில் சுத்தசலம் வைத்து ஆறு வட்டகைக்கும் தெற்பைப்புல், மாந்துளிர், சந்தனம், கற்பூரம், குங்குமம், கோரோசனம் போட்டுக் கிழக்குப் பால் முதல் கோமயம் வரை சத்துச்சித்து வானந்த நித்திய ...

### முடிவு

நினைத்த போது பிரகாசிக்கும். மறந்தபோது தோற்றாது. இந்த வஸ்துவைத் தவிர மற்ற வஸ்துக்களெல்லாம் இது எப்போதும் விட்டு நீங்காத வஸ்து. ஆகையால் வேத சம்மதியுமாம் விலட்சணமாகையால் ஆகமசம்மதியுமாம். ஆகையால் இந்த நிலை வேதாகமச் சம்மதி என்றறிய இந்த நிலை பெற்றவனே சங்கிசையம் இல்லாத முத்த னென்றறிய. சம்பிரதாய நிலை முற்றும்.

### குறிப்புரை

இந்நூல் பிரம்மானு போகம், ஞானமும் அஞ்ஞான நிவர்த்தியும், பஞ்ச வித பஞ்சப் புரோசனம், சுருதி சாரம், வினா விளக்கம் , மகா வாக்கிய தச காரியம், தியான சமாதி

பேதம், வாத பஞ்சகம், வாக்கிய விவேகம், சவுபாக்கியம் ஒரு மொழிக் கர்த்தம், சவுபாக்கியம் வாக்கிய சம்பிரதாயம், சாங்கு சித்தனுக்கு, காருண்ணியனுக்கு முதலான தலைப்பு களில் அஞ்ஞான மெஞ்ஞானங்களை எடுத்து ஓதுகின்றது.

## 535. அத்துவித உண்மை

**அ. 23:42; ஆ.** *2–127* ஏடுகள்; **இ.** 21.5 x 3செ.மீ.; **ஈ.** *9* வரிகள்; **உ.** பொதுவாக நல்ல நிலை; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

மேலாஞ் சதுட்டச் சாதனங்கண் மேவி நிறைந்த பேர்க்குரைக்கின்
மேலா மதுநா மெனத்திடமாய் விளங்கு மவையில் லாதவர்க்கு
மேலாம் பரமன் மான்மழுவாய் விளங்கி உரைத்தும் விளங்காது
மேலாஞ் சாத னங்களவா மேவ வேண்டும் சாதுசங்கம் (1)

### முடிவு

ஆதியிற் சிவமே லிங்கம் அபினையே அங்க மாகும்
அனாதியவ் அபினை யேயிவ் அங்கம தாயிற் றென்றால்
அனாதியச் சிவமே யந்த வங்கத்திற் புறம்புந் தோன்றும்
அனாதியாக் குருவத் தீக்கை கருத்தமு மிவையே யாகும்

பதினாறாவது சகச நிட்டை முற்றும். குமாரதேவர் அருளிச் செய்த அத்துவித உண்மை முதல் சகச நிட்டை ஈறாய் வரைந்தது முற்றும்.

### பிற்குறிப்பு

பார்த்திப வருஷம் சித்திரை மாதம் *7*–ஆம் தேதி ஆதிவார நாள் பகல் *10* நாழிகைக்கு எழுதி முடிஞ்சது. முற்றும்.

### குறிப்புரை

முதலில் ஒரு வெற்றேடு உள்ளது. இரண்டாவது ஏட்டி லிருந்து பின்வரும் தலைப்புகளில் இந்நூல் அமைகிறது.

| ஏடுகள் | பாடல்கள் | தலைப்புகள் |
|---|---|---|
| 2–12 | 1–12 | அம்பலவாண சுவாமிகள் செய்த தோத்திரம் |
| 13–23 | 1–101 | நன்னெறி வெண்பா அத்துவித உண்மை |
| 24–42 | 1–100 | இரண்டாவது விஞ்ஞான சாரம் |
| 43,50 | 1–101 | மூன்றாவது பிரமானுபூதி விளக்கம் |
| 44–49 | – | ஏடுகள் இல்லை |
| 51 | – | ஏடு இல்லை |
| 52–73 | 5–124 | நான்காவது மகாராசா துறவு |
| 74–75 | – | ஐந்தாவது ஆகமநெறி அகவல் |
| 76–77 | – | ஆறாவது வேதநெறி அகவல் |
| 78–80 | – | ஏழாவது பிரம்மானுபவ அகவல் |
| 81–83 | – | எட்டாவது வேதாந்தத் தசாவத்தைக் கட்டளை |
| 84–85 | – | ஒன்பதாவது தேககைவல்லியம் |
| 86 | – | ஏடு இல்லை |
| 87–90 | – | பத்தாவது அம்மானை |
| 91–96 | – | பதினொன்றாவது பிரம்மசித்தி அகவல் |
| 97 | – | ஏடு இல்லை |
| 98–100 | – | பன்னிரெண்டாவது உபதேசச்சித்தாந்தக் கட்டளை |
| 101–103 | – | பதின்மூன்றாவது சிவதரிசன அகவல் |
| 104–105 | – | பதினாலாவது சமரச அகவல் |
| 106–125 | 1–10 | பதினைந்தாவது சுத்த சாதகம் |
| 126–127 | 1–10 | பதினாறாவது சகச நிட்டை. |

உலகத் தோற்றம் உண்மையன்று, ஞானத்தால் மட்டுமே முத்தி பெற முடியும், சீவனும் பழம் பொருளும் வேறல்ல, பரம் பொருள் நிர்க்குணமானது, சீவன் முத்தி (உயிருடன் வீடு பெறுதல்), சத்தியத்தின் மூவகை நிலை முதலானவற்றின் அடிப்படையில் நூல் அமைந்துள்ளது. நூலின் மிகுதியான பாடல்கள் இல்லை.

இந்நூலை இயற்றியவர் குமாரதேவர். இவர் கன்னட நாட்டில் சிற்றரசராக அரசு செலுத்திய வீரசைவர்; பேரூர்

சாந்தலிங்க சுவாமிகளிடம் ஞான உபதேசம் பெற்றவர். மதுரை சிதம்பரம்பிள்ளை இவரது சீடர். இச்சீடரே பின்னாளில் திருப்போரூரில் ஞான செங்கோலோச்சிய சிதம்பரசுவாமிகள் ஆவார். இவருடைய சீடர் ரெட்டி சிதம்பர சுவாமிகள் விருத்தாசலத்தில் குமார தேவர் பெயரால் திருமடாலயம் ஒன்றினை அமைத்துள்ளார். அந்த மரபு தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

மகாராஜா துறவு, சுத்தசாதகம், விஞ்ஞான சாரம், பிரமானுபூதி விளக்கம், ஞான அம்மானை, வேதாந்த தசா அவத்தைக் கட்டளை, வேதாந்த தச காரியக் கட்டளை, சகசநிட்டை, உபதேச சித்தாந்தக் கட்டளை, பிரம்ம சித்தி அகவல், சிவதரிசன அகவல், ஆகம நெறி அகவல், வேதாந்த நெறி அகவல், பிரம்மானுபவ அகவல், சிவசமவாத அகவல் என்பன இவர் இயற்றிய பதினாறு நூல்களாகும்.

இவர் இயற்றிய நூல்களின் தொகுப்பு **குமாரதேவர் சாஸ்திரக் கோவை** என்ற பெயரில் *1908* ஆம் ஆண்டில் மனோன்மணி விலாச சென்டிரல் புக் டெப்போவால் வெளியிடப்பட்டது.

## 536. அத்துவிதானந்தம்

**அ.** ***137:275;*** **ஆ.** *1–126* ஏடுகள்; **இ.** 32 x 3செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** முதலிலும் முடிவிலும் சில ஏடுகள் சிதைந்துள்ளன; **ஊ.** நன்று; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

### முதலாவது சித்திர தீபிகை

... சீவனாலே கூடஸ்தரு மறைபட்டு இரண்டு மொன்றாகத் தோற்றுகிறதென்று தாம் இந்தச் சீவன் கூடஸ்தரையேன் பகுத்தறிய வில்லையென்கின்ற சங்கைக்கு இதுவே மூலாக்கி ஞானமென்றதாம். இந்த மூலாக்கி ஞானமாகின்ற வவித்தை யெத்தனை விதமாயிருக்கு மென்கின்ற சங்கைக்கு ஆவரணமென்றும் விட்சேபமென்றும் இரண்டு வித மாயிருக்கு மென்றதாம். இந்த இருவகைக்கும் இலட் சணமே தென்கின்ற சங்கைக்கு நான் கூடஸ்தரைக் காணே

னென்கின்ற அறிவாயிருந்துங் கூடஸ்தரைத் தோற்ற வில்லை யென்கின்ற மயக்கமே யாவரணங் கிளிஞ்சிலை வெள்ளியென்று பார்க்கின்றாப் போலச் சுவாவசை தன்னியமாக விருக்கின்ற தன்னைக் கற்பிதமாயிருக்கின்ற... மென்றதாம்.

## முடிவு

... சங்கைக்குக் காமியம் பதினொரு விதமது எங்ஙன மென்னில் சவுந்தரியவன முடையவனாய் ஆரோக்கியத் திடகாத்திரனாய்ப் பஞ்சாய கோடி பூ மண்டலமு மேகச் சக்கரமாக வறண்டுப் பொசிக்கின்றதொரு மனுஷானந்த மிந்தக் கற்பத்திற் புண்ணிய பலத்தினாற் கெந்தர்வ பதத்தை யடைந்த மனுஷன் கெந்தருவ னிவனானந்த மனுஷானந்தத் திலும் நூறத்தனையதிகம். பூருவகற்பத்திற் புண்ணியத் தினாற் கெந்தர்வப் பதத்தை யடைந்தவன் தேவ ... ஞானத்தினாலு மடைந்து வகுப்பத்து தென்று தாம் இந்த நாலுவகையுற் திருத்தித் தீபிகையிலே வெளிப்பண்ணியி ருக்குது. அதையவ் விடத்தில் கண்டு கொள்க. இந்த நிலை வருமளவும் பிரம்மாப்பியாசம் பண்ண வேண்டியது [ஏடு–120].

வித்தியானந்த முற்றும்.

## குறிப்புரை

இந்நூல் முதலாவது சித்திர தீபிகை, இரண்டாவது திருத்தி தீபிகை, மூன்றாவது கூடஸ்த தீபிகை, நான்காவது தியான தீபிகை, ஐந்தாவது நாடக தீபிகை, ஆறாவது தத்துவ விவேகம், ஏழாவது பஞ்ச பூத விவேகம், எட்டாவது பஞ்சகோச விவேகம், ஒன்பதாவது துவித விவேகம், பத்தாவது மகா வாக்கிய விவேகம், பதினொன்றாவது யோகானந்தம், பன்னிரண்டாவது ஆதமானந்தம், பதின்மூன்றாவது அத்து விதானந்தம், பதினான்காவது வித்தியானந்தம் ஆகிய தலைப்புகளில் தத்துவக் கருத்துகளைக் கூறிச் செல்லுகிறது. இறுதியில் பதினைந்தாவது விஷையானந்தம் என்னும் பகுதி முடிவு பெறவில்லை.

## 537. அருச்சுனன் கதை

**அ.** ***70:131***; **ஆ.** *193 - 196* ஏடுகள். **இ.** 38.5 x 2.செ.மீ.; **ஈ.** *7-8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; பல ஏடுகளில் துளைகள் உள்ளன; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச்

*சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

என்னலு ..லாமறி வுற்றேன்
காண்பனவு மெல்லாங் கண்டே
னுன்னருளா லென்னினும் நல்லுணர்வு
வளவுற மீட்டுமொன்று கேட்கேன்
... டமைப் பதாய்க்
கண்ணாடி போற்றோன் றுகின்ற
முன்னு புரியட் டகத்தின் வடிவேலு
மொழியென்ன முனிவன்... (1)

முடிவு

என்றருளித் திருநெடு மாலிப் போது
மௌவுமை போலிருத்த லோடும்
வென்றி மிகுவிசையன் மகிழ்ந்துரை செய்யும்
வகைகேளாய் ..மை வீரர்
கன்றுதுய ரனைத்தும் பொய்யெனது மதிபரம்
பொருளைக் கலத்து தைய்யா
தன்றி ரவிகாண் விரிகமலம் போலென
விசையன் சொல்லு மன்றே (21)

*அருச்சுனன் கதை முற்றும். ஆக சூத்திரம் **515**. யிப்பால் சதவுருத்திரன் கதை.*

குறிப்புரை

**1-21 பாடல்கள்.** *ஞானவாசிட்டத்திலுள்ள அருச்சுனன் கதை இங்குக் கூறப்படுகின்றது.*

## 538. அருள்வாம உண்மை விளக்கம்

**அ.** ***32:55;*** **ஆ.** *1–7 ஏடுகள்;* **இ.** 25 x 3செ.மீ.; **ஈ.** *8 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *ஓரளவு கடினம்;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்

அருள்வாம உண்மையெனும் அத்து விதானந்தமுற
மருள்வாம நீக்கியருள் மாகுரவ னைப்பணிவாம்

சிவலிங்க ரகாரத்திற் சிற்சத்திப் பரையாதி
நவிலச்சா சத்தியொரு ஞானங் கிரிகையுமே (1)

முடிவு

வில்லாத பூரணா னந்தமிகு மேன்மேலும்
கொள்ளைகொள்ளை ஆனந்தம் கொள்ளைகொள்ளை
ஆனந்தம் (110)

வெண்பா

மருள்வாமி நேச மருவர் தொழிதற்
கொருநூறு மேலொருபத் தொன்று-மருள்செய்த
கோவிலில் வாழ்ஞான குருவாறு மாமுகந்தன்
சேவடியைச் சிந்தனைசெய் வோர் (111)

குறிப்புரை

***111* பாடல்கள்.** கொண்ட இந்நூல் திருக்கோவலூர் ஆறுமுக தேசிகன் மீது பாடப்பட்டதாகும். தத்துவப் பாடல்களைக் கொண்ட இந்நூல் எவ்வெவ் முறையில் வழிபட்டால் இறைவன் (சிவன்) அருளைப் பெறமுடியும் என்பதை உணர்த்தும் வகையில் அமைகிறது. *232:447* இல் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

## 539. அருள்வாம உண்மை விளக்கம்

*(மகாவாக்கிய சம்பிரதாய நிலை)*

**அ.** ***109:213*; ஆ.** *1–75* ஏடுகள்; **இ.** 30 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

ஸ்ரீ கயிலாச வாசராயிருக்கின்ற தட்சிணாமூர்த்தி சுவாமிகள் செனகாதிகள் நாலுபேருக்கும் வேதாகமத்திலும் பல சாத்திரத்திலும் உள்ள வாக்கிய சம்பிரதாயத்தைச் சொல்லும் படிஐவகைச் சமாதியு மதற்கதிகாரிகளு மனுசாரமா யறியுந் திருவடி யறுதித் திருவடி தீட்சையும் செய்து அனுக்கிரகித்திற் கனுகூலமாய் மேல்நிற்கவேண்டிய ஞானநிலையைச் சம்பிரதாயமாய்த் திருவுளம் பற்றினார்...

## முடிவு

சாத்திரங்களைப் பார்க்கலாகாது பார்க்கவேணு மென்றதான் தோரந்தவனுபவத்தை விடாமற் கூர்வதானமாய்ப் பூர்வபட்ச மாய்ப் பார்க்கவேணு மஞ்ஞானந்தத்தையுடைய விருத்த மூன்று பேருங்குங் கிறித்தியமெப்படி யென்றால் சமரசனான வன் சற்கிறுத்தியம் வழுவாமற் செய்ய வேணுஞ் சாயுத்த னானவன் சர்வ விடையத் தோடுங் கூடி ஸ்ரீகளோடுங் கூடி யிருந்தாலுந் தேவையில்லை...

## குறிப்புரை

அருள்வாம உண்மைவிளக்கம் என்னும் இச்சுவடி பின் வரும் தலைப்புகளுடன் கூடிய பாடல்களைக் கொண்டுள்ளது.


| தலைப்புகள் | ஏடுகள் |
|---|---|
| மகாவாக்கிய சம்பிரதாயநிலை | 1–2 |
| வாக்கிய சிந்தனை | 12–33 |
| சம்பவனுக்குச் சுத்த சைவசித்தாந்த மனுக்கிரகஞ் செய்யும் படி | 33–36 |
| அஞ்சுவகைச் சமாதிக்கு அதிகாரிகள் | 36 ஆ |
| சமாதிபவம் | 37–38 |
| வியாஞ்ஞாவர் காடியித கிரிக்குச் சொன்னது | 39–42 |
| ஞானமொழிக்க விதம் | 43–45 |
| மகாவாக்கியம் | 46–63 |
| சம்பவனுக்கு | 64–65 |
| மந்தனுக்கு | 66–67 |
| அருள்மொழிக் கன்ம சம்பிரதாயக் கொத்துமணி | 67 ஆ |
| சக்தி | 69 |
| வயிட்ணவம் | 70 |
| சாங்கியம் | 71 |
| வாக்கிய சம்பிரதாயம் | 72–75 |

## 540. அருள்வாம உண்மை விளக்கம்

**அ. *232:447*; ஆ.** *82–91* ஏடுகள்; **இ.** 23.5 x 3.5செ.மீ.; **ஈ.** *8–9* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 32:55 போன்றது.

முடிவு

ஒவ்வா ரருள்வாமத் தென்தாயைப் பூசை செய்வோரே
அவ்வா மருள்வாமத் தோரை யணுகுவரே (111)

வெண்பா

மருள்வாமி நேச மருவர் தொழிதற்
கொருநூறு மேலிருபத் தொன்று – மருள்செய்
கோவிலில் வாழ்ஞான குருவாறு மாமுகந்தன்
சேவடியைச் சிந்தனைசெய் வோர்

*அருள்வாம உண்மை விளக்கம் முற்றும்.*

குறிப்புரை

***1–111* பாடல்கள்.** இதனை அடுத்து ஒரு வெண்பா எண்ணின்றி உள்ளது. *32:55* என்ற எண்ணில் இடம் பெற்ற நூல் இது போன்றதே.

## 541. அவிரோதவுந்தியார்

**அ. *7:22*; ஆ.** *190–336* ஏடுகள்; **இ.** 22 x 3.5செ.மீ.; **ஈ.** *8–10* வரிகள்; **உ.** இறுதியில் 7 ஏடுகள் பாதியாக முறிந்துள்ளன; சில ஏடுகளில் துளைகள்; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற வேறு நூல் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

கரிமுக னிருகழல் பரவுதல் கருத்தே
தவளத் தாமரைத் தாதார் கோயில்
வளைபடு வாற்றுது மருந்தமிழ் குறித்தே
அவன்தாள் தொழுவோ மென்று உந்தீபற (1)

முடிவு

நல்லுணவாகிய சுவைகள் வினைதரி தென்று மேற்கூறுகின்றார்
ஆண்பாலும் கூழும் அகற்றும் பசியல்லாந்தாம்
பின்மலமா மென்று உந்தீபற
சச்சடூந் சந்தெடலென்று உந்தீபற (90)

குறிப்புரை

இந்நூல் 90 பாடல்கள் முடிய விரிவான உரையுடன் காணப் பெறுகிறது. பின்னுள்ள பாடல்களிலும் பொருளிலும் சிதைவுகள் உள்ளன. அறம், பொருள், இன்பம், வீடாகிய நாற்பொருள் பயக்கும் சுருதி முதலானவற்றின் உணர்வுகளையும் பயன்களையும் எடுத்துக் கூறும் இந்நூல் உந்தீபற என்ற மகுட அடிகளை உடையது. வேதாந்தக் கருத்தை ஒட்டி எழுந்தது. உந்தீபற என்ற சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. ஆன்மா உயிரிடத்துக் கொள்ள வேண்டிய நட்பினை உட்கருவாகக் கொண்டு செய்யப்பட்டது. இதனை இயற்றியவர் திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகள். 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இந்நூல் யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழும் சதாசிவப் பிள்ளையவர்களால் சென்னை, வித்யானுபாலன அச்சு இயந்திர சாலையில் 1873–ஆம் ஆண்டு மூன்றாம் பதிப்பாக வெளிக் கொணரப் பெற்றுள்ளது. ரெவரென்ட் Foulkes என்பார் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். தமிழ் மூலத்திற்குச் சிதம்பர சுவாமிகள் என்பார் ஒரு பேருரை செய்துள்ளார். அதற்கு அவர் பல்வேறு பொருண்மைகளில் அமைந்த 79 தமிழ் நூல்களைப் பயன்படுத்தி உள்ளார். பெண்களை முன்னிலைப் படுத்தி எழுந்த தத்துவார்த்த நூலில் இதுவும் ஒன்றாகும்.

இத்திருவுந்தியாரின் ஆசிரியர் உந்தீபறத்தல் என்ற உத்தியைச் சமயக் குரவர் நால்வரில் ஒருவரான மணிவாசகப் பெருமானிடத்துப் பெற்றதாகச் சொல்லுகிறார். வாசீகப் பெருமான் திருவாசகத்தில் இவ்விலக்கிய வகையை அருளிச் செய்துள்ளார் என்பது யாவரும் அறிந்ததே. மெய்கண்ட சாத்திரத்தில் முதல் நூலாக அமையும் திருவுந்தியாரே இவ் இலக்கிய வகைக்கு முதல் நூலாகும்.

*49:74; 79:179; 176:370; 176;372* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. *79:179; 176:372* என்ற எண்களில் அமைந்த நூல்களில் மூலம் மட்டுமே உள்ளது.

## 542. அவிரோத வுந்தியார்

**அ. *49:74*; ஆ.** *1–106* ஏடுகள்; **இ.** 26.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** நன்று; தொடக்கத்திலுள்ள சில ஏடுகள் செல்லரிக்கப்பட்டுள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற வேறு நூல் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**சிவசண்முக ஞான தேசிகன் திருவடி வாழ்க!**
**கரிமுக னிருகழல் பரவுதல் கருத்தே**
... .... ... ..

என்பது, சொல்லுவார் சொல்லும் வண்ணங்கள் அனைத்தையும் உடையவொரு பூரணன் குரு வடிவமாகி இவ்விடத்தில் தோன்றி ஒன்றுக்கும் பற்றாத என்னுடைய பிறவித் துன்பதைத்தை வேரறுத்தருளின கருணை மூர்த்தியினது திருவடிகளைத் தொழா நின்றேன் என்றவாறு ... இது கடவுள் வணக்கம்

முடிவு

**ஆண்டகை ஈசனை அன்றியொன் றின்மையால்**
**வேண்டிய செய்வாரென் றுந்தீபற**

விதி நிடதங்கள் அற உந்தீ பற என்பது, உள்ளன, இல்லன, செய்யப் படுவன, செய்யப் படாதன, உயர்ந்தன, தாழ்ந்தன, நான், பிறன் என்பன ஆதியவனைத்தும் பரமே! ஆதலால் அவ்வுண்மை அறிந்த ஞானிகளாயினோர் இச்சைப் படியே வேண்டிய செய்யா நிற்பர் விதி நிடேதஸ்கள் ஒழிந்தது என்றவாறு

விதி நிடதங்கள் இரண்டினையும் பற்றுதல் விடுதல் இல்லை என்றது எனக் கொள்க.

குறிப்புரை

இந்நூல் முதல் பாடல் தொடங்கி *98*–ஆம் பாடல் முடிய விரிவான உரையுடன் காணப்படுகிறது. *99*–ஆம் பாடல் உரையின்றி அமைந்துள்ளது. *7:22; 79:179; 176:370; 176:372* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. *79:179; 176:372* என்ற எண்களில் அமைந்த நூல்களில் மூலம் மட்டுமே உள்ளது. முதலிலும் இறுதியிலும் ஒவ்வொரு வெற்றேடுகள் உள்ளன.

## 543. அவிரோதவுந்தியார்

**அ.** ***79:179;*** **ஆ.** *66–74* ஏடுகள்; **இ.** 25 x 2.5செ.மீ.; **ஈ.** 7 வரிகள்; **உ.** ஓரளவு நன்று; **ஊ.** தெளிவு; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

எண்ணிய வெண்ணியாங் கெய்தும் கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே
தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுவது மிருந்தமிழ் குறித்தே

முடிவு

நெய்யின்றி யாகமுடிவு மேனிடு பேரை வகையாகமும்
உந்தீ பற்றன பின்றியாகு மென்றுந் தீபற
அஞ்சிவக்கன் புறானதம்புலக் கொடுமெனெஞ்
சிற்கறவுறுத் துந்தீபற (87)

குறிப்புரை

***87* கண்ணிகளை உடையது**. *7:22; 49:74; 176:370; 176:372* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. *176:372*–இல் மட்டுமே இந்நூல் போல் மூலம் மட்டும் அமைகிறது. பிறவற்றில் மூலத்துடன் உரையும் உள்ளன.

## 544. அவிரோத வுந்தியார்

**அ.** ***176:370;*** **ஆ.** *1–124* ஏடுகள்; **இ.** 20.5 x 3செ.மீ.; **ஈ. 7–** *8* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

பூரண முகத்தொளிர் புண்ணிய னுவந்தருள்
வாரண முகத்தவன் மலரடி யிறைஞ்சுவாம்
கரிமுக னிருகழல் பரவுதல் கருத்தே
எல்லா முடையான் குருவாகி யீங்கெம
தல்ல லறுத்தா னென்றுந் தீபற
அவன்றாள் தொழுவோ மென்றுந் தீபற

(எ–து) சொல்லுவார் சொல்லும் வண்ணங்க ளனைத்தையு முடைய வொரு பூரணன் குருவடிவமாகி இவ்விடத்திற் றோற்றி ஒன்றுக்கும் பற்றாத வென்னுடைய பிறவித் துன்பத்தை வேரறுத்தருளின கருணை மூர்த்தியினது திருவடிகளைத் தொழாநின்றே னென்றவாறு. உந்தீயென்றது குழாங் கூடிய மகளிரதோர் விளையாட்டெனக் கொள்க. இது கடவுள் வணக்கங் கூறியது *(1)*

முடிவு

(எ–து) உயர்ந்த கருணையே வடிவாகவுடைய பரம்பொரு ளுடனே கூடியிரண்டறக் கலந்துள்ள முத்தருமித்திசைக் கண்ணுண்டாகிய சராசரங்களிடத்தெல்லா மருளை நீங்கா ரென்றவாறு ... ஆனந்த மெய்தினோ ரென்னுஞ் செய்யுள் தொடங்கி யிச்செய்யுள் காணும் ஞானிகள் தாசாரங் கூறினாரெனக் கொள்க *(100)*.

அவிரோதவுந்தி முடிந்தது.

குறிப்புரை

**1–100 பாடல்கள்.** இந்நூல் மிக **விரிவான** எடுத்துக் காட்டுகளுடன் கூடிய **உரையுடன்** உள்ளது. அச்சு நூலினும்

சில, பல வேறுபாடுகள் உள்ளன. *7:22; 49:74; 79:179; 176:372* என்ற எண்களில் அமைந்த **நூல்கள்** இது போன்றவையே. *79:179; 176:372* என்ற **எண்களில்** அமைந்த நூல்களில் மூலம் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

## 545. அவிரோத வுந்தியார் – மூலபாடல்

**அ.** ***176:372;*** **ஆ.** *1–11* ஏடுகள்; **இ.** 20 x 3செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** சில ஏடுகளில் செல்லரிப்புகள் உள்ளன; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற வேறு நூல் அச்சாகி யுள்ளது.

தொடக்கம்

பூரண முகத்தொளிர் புண்ணிய னுவந்தருள்
வாரண முகத்தவன் மலரடி யிறைஞ்சுவாம்
... .... ...
எல்லா முடையான் குருவாகி யீங்கெம
தல்ல லறுத்தானென் றுந்தீபற (1)

முடிவு

ஓங்கரு ளீசனோ டொன்றியே நின்றொரு
மீங்கரு ணீங்காரென் றுந்தீபற
எல்லா வுயிர்க்குமென் றுந்தீபற (100)

அவிரோத உந்தி மூலபாடம் எழுதி
நிறைவேறினது முற்றும்.

குறிப்புரை

***1–100*** **பாடல்கள்**. *7:22; 49:74; 79:179; 176:370;* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. *7:22; 49:74; 176:370* என்ற எண்களில் அமைந்த நூல்களில் மூலத்துடன் உரையும் இடம் பெற்றுள்ளது.

## 546. அறிவானந்த சித்தியார்

**அ. 236:452; ஆ.** 10 ஏடுகள்; **இ.** 23.5 x 3செ.மீ.; **ஈ.** 7–8 வரிகள்; **உ.** ஏடுகள் தொடர்ச்சியாக இல்லை; ஓரளவு சிதைந்தும் உள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

மருப்பொன் றாணை யிரண்டு செவிமத மூன்று நாலவாய் ஐந்து
கருத்தே வைக்கக் கலைத்தமிழ்நூல் தெரிந்திடுஞ் சைவசித் தாந்தச்
சித்தியினை யுரைத்திட யின்னூல் தனக்கு முன்னே நின்றுதவும்

நிர்வயனி மலனிட கன்னித் தனி றைஞ் சனன் ...
... தேர்ந்தன பத்திலி சுத்தனை பரமானந்தமே .. விரலி...
... கனபேரின்ப வியாபக னென்கரவுளங் கோவில்...
... ழில் போற்றுவன் காத்தற்றே (1)

### முடிவு

இப்போதுல குரடுபாய் வாழ... ரவேந்தற்கு தம்வழிபா
டெப்போது செய்துற்ற துண்மையை ....
யொழியாத செல்வமெப் போதும் பெற்றிட நல்குங்குரவனே
... டுமை தப்பாமல் சீடன் வழிபாடுற் முத்தி சத்தியமே (51)

### குறிப்புரை

ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன. ஏட்டிற்கு எண்கள் இல்லை. அத்வைத கருத்தைச் சொல்லும் இந்நூல் அறிவின் துணைகொண்டு ஆனந்த மயமான பேரின்பத்தை உயிர் உற்று உணர்ந்து சித்திக்கக் கூறும் நெறிகளைக் கொண்டது.

கோ. வடிவேலுச் செட்டியார் மற்றும் சண்முக முதலியார், சென்னை, 1909–இல் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டனர். சித்தியார் என்ற பெயரில் எழுந்த நூல்களில் இதுவும் ஒன்று. சிவஞான சித்தியார் என்பது இதனின்றும் வேறுபட்ட சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் நூல் ஆகும்.

## 547. அறிவும் பகுதி

**அ. *141:302;* ஆ.** *60ஆவது ஏடு;* **இ.** 24 x 3*செ.மீ.;* **ஈ.** *10–11 வரிகள்;* **உ.** *நன்று; கீழ்ப்பக்க ஓரப்பகுதி சற்று உடைந்துள்ளது;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்

உருவை யருவை யொளியை வெளியை
யிருளைச் சிவமென்றி ராதே – மருளைப்
பிறித்தறிவிற் கண்டதனைப் பின்னமர் வேங்குஞ்
செறிந்தபொரு டரனே சிவம் (1)

முடிவு

ஆறாறு தத்துவமு மாணவமு மவல்வினையும்
நீறாக முத்திநிலை நிற்போற்குப் – பேறாகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
யோர்விருத்தப் பாதிபோ தும் (6)

*அறிவும் பகுதி முற்றும்.*

குறிப்புரை : அறிவுப்பகுதி

***1–6* பாடல்கள்.** *நாம் சிவத்தை எதுவென்று அறிய நம்மிடமுள்ள மருள் நீங்க வேண்டும். உண்மைச் சிவத்தை யறியுமுன் கண்டதையெல்லாம் சிவம் என்று எண்ணுதல் கூடாது. ஆணவம், ஒழிந்தால் அனைத்தையும் உணரலாம் என்பன போன்ற செய்திகள் நூலுள் பேசப்படுகின்றன.*

## 548. அறிவோர் புகழ்ச்சி

**அ. *141:307;* ஆ.** *7ஆவது ஏடு;* **இ.** 24 x 3*செ.மீ.;* **ஈ.** *10–11 வரிகள்;* **உ.** *கீழ்ப்பக்க ஓரப்பகுதி சற்று உடைந்துள்ளது;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்

தாக மறந்து சதிர்மறந்து தான்மறந்து
தேகமறந் தட்டமா சித்திமறந் – தாகத்தின்
வந்த தறியா திருந்துமா றாச்சிவானந்
தம்வாழ்வ ராக்கார் சறி (1)

முடிவு

ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை யாய்ந்தறிந்து
காய்வராயிற் வஞ்சவாடகை யெல்லாங் கல்வி கேள்வி யெல்லா
மேய்வரா சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டு மறத்
தோய்வரா கம்மலையுள் ஞானப்பிர காசன் மெய்த்
தொண்டர்களே (5)

*அறிவோர்புகட்சி முற்றும்*

குறிப்புரை : அறிவோர் புகட்சி

**1–5 பாடல்கள்.** பதிபசுபாசத்தின் உண்மை தெளிவு படுத்தப்படுகிறது.

## 549. அனுபூதி நிலை

**அ.** ***141:304;*** **ஆ.** *65–66* ஏடுகள்; **இ.** 24 x 3செ.மீ.; **ஈ.** *10–11* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; கீழ்மேல் ஓரப்பகுதிகள் சற்று உடைந்துள்ளன; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**உள்ளங் கரைய வுடல்கரைய வானந்த**
**வெள்ளங் கரைபுரண்டு மேலாக்கி – கள்ளமலம்**
**பொய்யாக வென்னுட் புகுந்தவா றென்கோ**
**லெவையாதி யாகவினோ தா (1)**

*அனுபூதி 54 முற்றும்.*

குறிப்புரை

தலைப்பு அனுபூதி நிலை என்று உள்ளது. நூல் முடியும் போது 'அனுபூதி 54 முற்றும்' என்றுள்ளது. இறைவனைத் துதிப்பதைக் காட்டிலும் வேறு இன்பம் எதுவுமில்லை என்று நூல் காட்டுகின்றது.

## 550. அனுபூதி விளக்கம்

**அ.** ***130:261;*** **ஆ.** *146–148* ஏடுகள்; **இ.** 20 x 3செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

தேனிவரு மின்பச் சிவானு பவமுரைக்க
வானை முகவனடி பணிந்து போற்றுவாம் (1)
சீராருங் கங்கைநகர் தேசிகர் கோன்மெய் கண்டான்
வாரர தேவந் துரைத்த வார்த்தைவிளங் கூறுவாம் (2)

முடிவு

கங்கை நகரமெய் கண்டான் காற்கமலஞ் சென்னியின்
மேற்றங்க விருணீங்கி யருடா னாந்த போதனரே (64)
வாழி திருநீறு வாழி திருவஞ் செழுத்தும்
வாழி சிவாலை யங்கள் வாழி திருவேடமே (65)

சிவானுபூதி விளக்கம் முற்றும்.

குறிப்புரை

***1–65* பாடல்கள்.** அனுபூதி என்பது பட்டறிவு எனப் பொருள்படும். அவ்வகை யானே இந்நூலாசிரியர் இறை நேயத்தில் தான் கண்டு, கேட்டு, உண்டு உணர்ந்தவற்றைச் சொல்லுவதே அனுபூதி யாகும். சிற்றிலக்கிய வகைகளுள் இதுவும் ஒரு வகையாகும். திருநீற்றின் பெருமை, சிவனது பெருமை, மெய்கண்டார் புகழ் ஆகியன நூற்கண் இடம் பெறுகின்றன. *138:296* என்ற எண்ணில் இடம்பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

## 551. அனுபூதி விளக்கம்

**அ.** ***138:296;*** **ஆ.** *103–105* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

தேனிவரு மின்பச் சிவானு பவமுரைக்க
வானை முகவனடி பணிந்து போற்றுவாம் (1)
சீராருங் கங்கைநகர் தேசிகர் கோன்மெய் கண்டான்
வாரர தேவந் துரைத்த வார்த்தைவிளங் கூறுவாம் (2)

முடிவு

கங்கை நகரமெய் கண்டான் காற்கமலஞ் சென்னியின்
மேற்றங்க வருணீங்கி யருடா னாந்த போதனரே (63)
வாழி திருநீறு வாழி திருவஞ் செழுத்தும்
வாழி சிவாலை யங்கள் வாழி திருவேடமே

குறிப்புரை

***1–64* பாடல்கள்.** *130:261* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே. சிவஞான போத வன்னுவயம் முதல் அனுபூதி விளக்கம் வரையுள்ள இச்சுவடிக்கட்டில் (*138*) *21* நூல்கள் இடம்பெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து சிவஞான தீபத்தில், ஐந்து மலம், ஐந்து சந்தி, நட்டம், திருமந்திரம், ஞான சார விந்தத்தில், காந்தச் சருக்கத்தில், சிவானந்த மாலையில் உணர்த்தும் முறைமை ஆகியன ஒவ்வொரு பக்கங்களில் எழுதப்பட்டுள்ளன. சூரிய பூசை அட்டவணை, சிவ பூசை அட்டவணை என்னும் தலைப்புகளில் மந்திரம் முதலான செய்திகள் *106*–ஆவது ஏடு முதல் *123*ஆவது ஏடுவரை காணப் பெறுகின்றன. இந்நூலை அடுத்து இச்சுவடிக்கட்டில் பின்வரும் நூல்கள் உள்ளன.

| **நூல்கள்** | – | **ஏடுகள்** |
|---|---|---|
| அனுட்டான மந்திரம் | – | *124*அ. |
| சூரிய பூசை மந்திரம் | – | *124*ஆ. |
| சிவபூசை மந்திரம் | – | *125* |
| பஞ்சவர்ண பூசைத் தியானம் (சரசுவதி தியானம், யமுனை தியானம், வராக தியானம்) | – | *126–131*அ. |
| பஞ்சவர்ண பூசை மந்திரம் | – | *131*ஆ – *132*அ. |

| | |
|---|---|
| பிள்ளையார் பூசை மந்திரம் | – 132 – 133அ. |
| வினாயகர் பூசை | –133ஆ – 134அ. |
| அங்க பூசை | – 134ஆ. |
| பத்திர வகை | – 134ஆ. |
| அரச சரணா மந்திரம் | – 135 |
| கேதார பூசைவிதி மந்திரம் | –135ஆ – 136அ. |
| சரசுவதி பூசை அட்டவணை | –136ஆ – 140அ. |
| அபித பூசை மந்திரம் | –140ஆ – 141அ. |
| வாகன பூசை | –141அ – 141ஆ. |
| பிரதோஷ பூசை விபரம் | –141ஆ – 142ஆ. |
| பஞ்ச கெவ்விய அட்டவணை | –142ஆ – 143அ. |
| சமாதிக் கிரிகை | –143அ – 143ஆ. |
| சமாதி அட்டவணை | –143ஆ – 144அ. |
| | (144ஆ. வெற்றிடம்) |

அஞ்சதீபிகை (2 ஏடுகள்), தெசக்காரியம் அகவல் (3 ஏடுகள்), பத்மமந்திரம் (ஓர் ஏடு), குரு மந்திரம் (2 ஏடு), நைட்டிகாசார விவேகம் எண் இல்லை (ஓர் ஏடு), வினா வெண்பா உரை (3 ஏடு), சிவானந்த மாலையில் பத்ம மந்திரம் (2 ஏடு), நாலு பாட்டுக்கு உரை (3 ஏடு), பிரபந்தத் தொகை (2 ஏடு), சகத்திர தாரைத் தட்டம் விபரம் (ஓர் ஏடு), எழுத வேண்டும் வகை (ஓர் ஏடு), தத்துவம் 3க்கும் அதிதேவதை (ஓர் ஏடு), சந்திர சொட்ச கலை புசிக்கிற தேவதைகள் விபரம் (ஓர் ஏடு), குரு மந்திரம்,அறக்களம் அறியும்படி, ருத்திரன் அறியும்படி, சமவத்திகை அறியும்படி, தூதன் அறியும்படி, அயிக்க நிராகரணம் ஆகியன ஒவ்வொரு ஏடுகளில் இடம் பெறுகின்றன. இறுதியில் இரண்டு வெற்றேடுகள் உள்ளன.

## 552. ஆய்ந்தவர் கதை

**அ.** *70:105;* **ஆ.** *48-49;* **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7-8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

உரைசெய் யூசி கதையாலே உண்மை யாகிப் பரமான
கரையில் பிரமமே யுளதாங் காணப்படுவ தொன்றில்லை
வரையில் சிருட்டிகளின் முதலாய மனமே விளங்குமிது
பொருட்டோர்
புர்ரயில்கதை கேளென வசிட்டன் புயல்மேனியற்குப்
புகல்கின்றான் (1)

முடிவு

மனவா னகத்தி லிவர்பத்து வகைபிற சிருட்டி தந்தனரா
லினமா மவற்றி லோரிர வியனு மென்னாவே இன்னாற்
கனமா மனத்தின் விரிவாலே காணுஞ் சகங்க ளுனதாமென்
றனவா கனத்தோன் மனத்தாலே யளித்தான் ராமர்க்கருள்
செய்தான் (10)

குறிப்புரை

***1-10 பாடல்கள்.*** *வசிட்ட முனிவர் கூறுவதாக அமையும் இக்கதை ஞான வாசிட்டத்தில் வரும் கிளைக்கதையாக அமைகின்றது. மரபுவழி யாப்பிலான விருத்தத்தில் கற்பனை கலந்து அமைந்துள்ளது.*

## 553. ஆனந்த விளக்கம்

**அ.** ***141:309;*** **ஆ.** *75–101* ஏடுகள்; **இ.** 24 x 3செ.மீ.; **ஈ.** *10–11* *வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்

மூலத்தில் நின்றகுஞ் சரத்தைப் போற்றி
முளரிநான் முகன்ற ....றி
ஞாலத்தை யுண்டமா லடியை வாழ்த்தி
நலஞ்சிறந் தருத ...பாடிச்
சீலத்தில் மயேசுர னனத்தெரி சித்தப்பாற்
செறிந்த ச..னைச் சிந்தை செய்து
கோலத்தி னின்ற நான்மகளை யன்பாற்
... குருவருளைக் கூட லென்றே (1)

முடிவு

அறுசமை யத்தோர் வாழ்க
அடியவர் குலங்கள் வாழ்க
மறுவிலா வாலை யங்கள்
மாமறை யோர்கள் வாழ்க
பெறுதவத் தோர்கள் வாழ்க
பெருகிய திருவெண் ணீற்றை
வுறுபவர் வாழ்க வாழ்க
வுரைத்த நூலுண்மை வாழ்க (99)

பிற்குறிப்பு

நந்தன வருடந் தன்னில் நலம்பெறு துலாமா தத்திற்
சிந்தை சேரண்டாந் தேயதி சிறந்த சந்திர வாரத்தி
லந்தமாய்ச் செய்யும் நூலா மானந்த விளக்கந் தன்னைத்
தந்திமா முகத்தோன் காற்கச் சாற்றி னேன்றமிழ் மாறன்முன்

ஆனந்த விளக்கம் முற்றும்.

குறிப்புரை

***1–99 பாடல்கள்.*** *குண்டலினி யோகத்தால் ஏற்படும் பரமானந்த ஒளியின் வழியாகத் தெரியவரும் பேரின்பத்தை ஆனந்த வெள்ளம் என்பர். அவ்வகையில் இச்சுவடி யோகமார்க்கத்தால் ஏற்படுகின்ற பயனைச் செப்புகிறது.*

## 554. இட்சுவாகு கதை

**அ.** ***70:139;*** **ஆ.** *242 – 250* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; ஏடுகளில் பல துளை கள் உள்ளன; **ஊ.** *சுமார்;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

தரும மெல்லா முணர்முனியே சாற்று மகங்கா ரப்பேரை
மருவு மனந்தன் வடிவிருக்க மாய்ந்தா லந்த வுண்மைக்கு
பெருகுங் குறியே துரையென வெம்பெருமான் கேட்ப
முனியுரைப்படி
னுருவ மிருக்க மனமிறந்த வுண்மைக்குக் கேளாய் (1)

முடிவு

பரிந்தவ்வாறு கற்பித்துப் ப....பா விரிஞ்சனம்
புரிந்து தனது பொன்மனைபோய்ப் புக்காணிக்கு வாகு னேனும்
விரிந்தபுகழ் மன்னனு மந்தி விழியே ..ன்றான்
விரிந்தகழ் காலி ராமவென விரிட்ட முனிவ னருள்செய்தான் (66)

இட்சுவாகு கதை முற்றும். ஆக விருத்தம் சூத்திரம் 962. இனி மான்வேடன் கதை.

குறிப்புரை

**1-66 பாடல்கள்.** ஞானவாசிட்டத்தில் வரும் ஒரு கிளைக் கதை.

## 555. இராமர் வைராக்கியம்

**அ.** ***70:99***; **ஆ.** *6–16* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** 7–8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; முதல் ஐந்து ஏடுகள் இல்லை; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

கருதிய தளித்தே னென்று கழறிய வாய்மை பெற்றாய
செருவுயர் சிங்க மாம்நீ சிறுவிலங் கியற்கை செய்தாய்
மருவிய கிளைஞ ரோடும் வாழ்த்தியாம் போது மென்று
பெருமுனி முனிய மண்விண் பெரும்பயம் பிடித்த தன்றே (36)

முடிவு

எனவுரைத் தமல சீத மதியென இனியோ னின்சொல்
வினவுநல் விவேகந் தன்னால் விரிந்தெலா மனத்தி ராமன்
மனமகிழ் முனிவர் முன்னர் வாய்மொழி அமைந்து நின்றார்
கனமுகின் முன்னர்க் கேளாய் வந்தவீர் களாவி
போன்றே (122)

குறிப்புரை

**36–122 பாடல்கள்.** இராமர் வைராக்கியம் எனும் கதையுடன் தொடங்கும் இவ்வேடு, ஞானவாசிட்டம்

என்னும் நூலில் உள்ள ஒரு கதை. தொடக்கத்தில் 6 ஏடுகள் இல்லாமையால் இங்குக் காணும் கதையின் தலைப்பே சுவடியின் தலைப்பாகத் தரப்பட்டுள்ளது. இக்கதையில் முதல் 35 பாடல்கள் இல்லை. இச்சுவடியில் இக்கதைகளைப் போன்றே 43 கதைகள் தனித் தனிப் பெயருடன் முழுமையாக இடம் பெற்றுள்ளன.

இதுபோன்ற கதைகள் ஞானவாசிட்டம் என்ற நூலில் (10:25) உரைநடையில் அமைந்துள்ளன. இக்கதைகள் அனைத்திலும் சில இடங்கள் சிதைந்துள்ளன. ஒன்று முதல் 262 ஏடுகளில் பல கதைகள் சிறியனவாகவும், சில கதைகள் பெரியன வாகவும் உள்ளன. இக்கதைகள் அனைத்தும் விளக்க அட்டவணை செய்யப் பெற்றுள்ளன.

இந்நூல் ஆசிரியர் வீரை ஆளவந்தார். இவர் 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். சென்னை நிரஞ்சன விலாச அச்சு இயந்திர சாலையில் நமச்சிவாய முதலியார் அவர்களால் 1924–இல் இந்நூல்அச்சிடப் பெற்றுள்ளது.

இந்நூல் 2055 விருத்தங்களைக் கொண்டது. 32000 கிரந்தங்களில் வசிட்டரால் செய்யப்பட்ட நூலே ஆளவந்தாரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நூலில் வசிட்ட மாமுனிவன் இராமபிரானுக்கு ஞான தர்மத்தைப் பற்றி உபதேசிப்பதாக அமைந்துள்ளது. இக்கதையைச் சொல்லுவதற்குப் பதினெட்டு நாட்கள் ஆனதாக ஒரு கர்ண பரம்பரைச் செய்தி உண்டு. கானூரப் பண்டிதர் என்ற வடமொழி அறிஞர் லகுயோக வாசிட்டம் என்ற பெயரில் வசிட்டரின் கிரந்த நூலை மறு ஆக்கம் செய்துள்ளார். இதுவே ஞானவாசிட்டத்திற்கு வழி நூலாக அமைகிறது.

ஸ்ரீ வீர கேசர சுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமிகள் இதற்கோர் விரிவுரை செய்துள்ளார். அருணாசல தேசிகர் என்பாரும் ஒரு விரிவுரை செய்துள்ளார். இந்நூலை ஞான வாசிட்டம் – வமல இராமாயணம் என்ற பெயரில் முனியப்ப முதலியார் மற்றும் திருவேங்கட முதலியார் ஆகிய இருவரும் சேர்ந்து 1868–இல் வெளியிட்டுள்ளனர்.

| கதைப் பெயர்கள் | | ஏட்டு எண்கள் |
|---|---|---|
| 100. சுகன் கதை | | 17 |
| 101. முமுக்ஷித்துவப் பிரகரணம் | | 21 |
| 102. ஞான விண்மகன் கதை | | 25 ஆ. |
| 103. வீலை கதை | | 31. |
| 104. யூசி | ” | 42 ஆ. |
| 105. ஆயிந்தவர் | ” | 49 |
| 106. வஞ்சவிந்திரன் | ” | 50 |
| 107. மனத்தின் | ” | 51 |
| 108. பாலகன் | ” | 53 |
| 109. சித்தன் | ” | 54 |
| 110. உற்பத்திப் பிரகரணம் | | 58 |
| 111. சுக்கிரன் கதை | | 67 ஆ. |
| 112. தர்மவியாளகடர் | ” | 72 ஆ |
| 113. வீம்பாசதிடர் | ” | 77 |
| 114. தாசுரன் | ” | 79 ஆ. |
| 115. கசன் கதை | ” | 94 |
| 116. திதிபிரகரணம் | | 96 |
| 117. சனகராசன் கதை | | 97 |
| 118. புண்ணிய பாவன் | ” | 102 |
| 119. மகாவ்லி | ” | 108 |
| 120. பிரகலாதன் | ” | 114 |
| 121. காதி | ” | 122 |
| 122. உத்தாலகன் | ” | 127 ஆ. |
| 123. சுரகு | ” | 138 ஆ. |
| 124. பாசவிலாசவர் | ” | 144 ஆ. |
| 125. வீதகவ்வியன் | ” | 147 |
| 126. உபசாந்திப் பிரகரணம் | | 159 |
| 127. புசுண்டன் கதை | | 169 |
| 128. தேவபூசை | ” | 181 ஆ. |

| | | | |
|---|---|---|---|
| *129.* | வில்வ பல் | ,, | *190* ஆ. |
| *130.* | சிலைக் | ,, | *192* ஆ. |
| *131.* | அருச்சுனன் | ,, | *193* ஆ. |
| *132.* | சத உருத்திரன் | ,, | *196* ஆ. |
| *133.* | வேதாளக் கதை | ,, | *199* ஆ. |
| *134.* | பகீரதன் | ,, | *202* ஆ. |
| *135.* | சிகித்துவசன் | ,, | *206* ஆ. |
| *136.* | கசன் கதை | ,, | *236* |
| *137.* | மிருத்தியா புருஷன் | ,, | *238* |
| *138.* | பீரங்கி | ,, | *240* |
| *139.* | இட்சுவாகு | ,, | *242* |
| *140.* | மான்வேடன் | ,, | *250* |
| *141.* | யோகம் சத்த பூமி | ,, | *253* |

## 556. உண்மை நெறி விளக்கம்

**அ.** ***1:16;*** **ஆ.** *234–240* ஏடுகள்; **இ.** 22 x 3.5செ.மீ.; **ஈ.** *8–9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற வேறு நூல் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மண்முதற் சிவம தீறாம் வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவம தீறாம் மலம்சடம் என்றல் காட்சி
மண்முதற் சிவம தீறாம் வகைதனில் தான்நி லாது
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருது மன்றே (1)

முடிவு

பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளும்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள்வந் திடினும்
தனக்கெனஓர் செயலற்றுத் தான்அதுவாய் நிற்கில்
நாதன் இவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து
நான்போ கங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி இதுவே (6)

குறிப்புரை

**1–6 பாடல்கள்.** தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனும் இவற்றை விளக்கும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றான இந்நூலின் ஆசிரியர் உமாபதி சிவம். காலம் 14–ஆம் நூற்றாண்டு. தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ப ரூபம், ஆன்ம சுத்தி, ஆன்ம தரிசனம், சிவ ரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகிய பத்து விதமான சைவ சித்தாந்தக் கருத்துகளை, ஞானப் பாதையின் படிகளை நூல் விளக்குகிறது.

'உந்திகளிறு' என்ற முதற் பாடலை வைத்துப் பார்க்கும் போது இந்நூல் உமாபதி சிவம் இயற்றியதாகத் தெரிகிறது. ஆனால் இந்நூலின் கடைசி வெண்பாவை வைத்துப் பார்க்கும் போது சீர்காழி தத்துவ நாதர் எழுதியதாகத் தெரிகிறது.

தருமபுரி ஆதீனம் *1979*–இல் இந்நூலை வெளியிட்டுள்ளது.

இதைப் போன்ற நூல் *130:256*, *167:354* என்ற எண்களிலும் இடம் பெற்றுள்ளது. நூற் செய்திகள் ஒன்று போலவே உள்ளன. நூற் செய்தி அச்சு நூலில் உள்ளது போலவே அமைகிறது. *138:293* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள இதைப் போன்ற நூல் உரையுடன் கூடியதாக இருக்கிறது.

## 557. உண்மை நெறி விளக்கம்

**அ.** ***130:256;*** **ஆ.** ஏட்டு எண் *118;* **இ.** 20 x 3செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு. **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம்,** முடிவு 1:16 **போன்றது.**

குறிப்புரை

இந்நூல் *1:6; 167:354* என்ற எண்களில் அமைந்த நூல் போன்றதே. மூலம் மட்டுமே இடம் பெறுகின்றது. *138:293* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள இவை போன்ற நூல் உரையுடன் கூடியதாக இருக்கின்றது.

## 558. உண்மை நெறி விளக்கம்

**அ.** ***138:293;*** **ஆ.** *96–99* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங் களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 1:16 போன்றது.

முடிவு

பேதமற நின்று இவனைத் தானாக்கி விடுவேன்
பெருகுசிவ போகம் எனப் பேசு நெறி இதுவே –

இருளை நீக்கின வாதித்தன் சன்னிதியிற்றாராகைக் போலவுங் காந்தமும் ஊசியும் போலவுந் தாடனை போலவு மாணவமு மாற்மாவும் போலவும் வேற்ற நின்று மாறாத சிவானு பவத்தை எப்பொழுது முண்டாக்குவனிது சிவ போகமெனச் சொல்லும் வழியினுசா... ச்சிய நெறியென்றவாறு *(6)* உண்மை நெறி விளக்கம் முற்றும்.

குறிப்புரை

***1–6* பாடல்கள் உரையுடன் உள்ளன.** பாடல் முழுமை யாகத் தரப்பட்டு அதன்பின் அப்பாடலுக்கான உரையில் மீண்டும் பாடல் வரிகள் ஒன்று அல்லது இரண்டு தரப்பட்டு அவற்றிற்கு உரை தெளிவாகத் தரப்பட்டுள்ளது. பாடலின் உரை அச்சுநூலின் உரையினின்றும் வேறுபடுகின்றது. இந்நூல் *1:16, 130:256, 167:354* என்ற நூல்களைப் போன்றதே. ஆயின் அவற்றில் மூலம் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

## 559. உண்மை நெறி விளக்கம்

**அ.** ***167:354;*** **ஆ.** *110–111* ஏடுகள்; **இ.** 24 x 4செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:6 போன்றது.

குறிப்புரை

இந்நூல் *1:16, 130:256* என்ற எண்களில் அமைந்த நூல் போன்றதே. மூலம் மட்டுமே இடம் பெறுகின்றது. ***138:293*** என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள இதைப் போன்ற நூல் உரையுடன் கூடியதாக இருக்கின்றது.

## 560. உண்மை விளக்கம்

**அ.** ***1:12;*** **ஆ.** *204–209* ஏடுகள்; **இ.** 22 x 3.5செ.மீ.; **ஈ.** *8–9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

வண்மைதரும் ஆகமனூல் வைத்தபொருள் வழுவா
உண்மை விளக்கம் உரைசெய்யத் - திண்மதஞ்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம் (1)

பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதாநந் தப்பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய்! விண்ணப்பம்! - பொய்காட்டா
மெய்யா! திருவெண்ணை வித்தகா! சுத்தவினா
ஐயா! நீதான்கேட் டருள் (2)

முடிவு

மன்அதிகை வாழும் மனவா சகங்கடந்தான்
மின்னனைய வாழ்விலுறா மெய்கண்டான் - பன்னுமறை
வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மைவிளக் கம்செய்தான் உற்று (55)

குறிப்புரை

***1–55 பாடல்கள்.*** முதல் பாடல் காப்புப் பாடலாய் அமைகின்றது. மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றான இந்நூல் சிவாகமங்களின் சிறப்புகளைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. சிறந்த சீடன் ஒருவன் ஞான குருவிடம் வினவுவது போலவும் குரு அதற்கு ஏற்ற விடையைச் சொல்வது போலவும் இந்நூல் அமைந்துள்ளது. ஆறாறு தத்துவம், ஆணவ மலம், வினை, ஆன்மாவின் வடிவம், அறிவுப் பொறி, தொழிற் பொறி, அந்தக் கரணம், ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம், ஊனநடனம், ஞான நடனம், ஆனந்த நடனம், முத்திநிலை, நூற் பயன் முதலியன நூலுள் இடம் பெறுகின்றன. மறைகளின் பொருள் சிவாகமங்கள் தரும் விளக்கத்தினாலேயே உணரப்படும் என்பது நூல்வழி விளங்குகின்றது. ஆகமம் அருஞ்சிறப்பு நூல் என்பதையும் நூல் உணர்த்துகின்றது. இதன் ஆசிரியர் மனவாசகங்கடந்த தேவநாயனார். இவர் மெய்கண்டாரின் சீடர். இந்த நூலுக்கு இரண்டு உரைகள் உள்ளன. *130:249; 138:292; 167:355; 567:922* என்ற எண்களில் இடம் பெற்றுள்ள நூல்கள் இந்நூலினைப் போன்றவையே.

## 561. உண்மை விளக்கம்

**அ.** ***130:249;*** **ஆ.** *85–88* ஏடுகள்; **இ.** 20 x 3செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:12 போன்றது.

குறிப்புரை

***1–55 பாடல்கள்.*** 'வண்மைதரும் ஆகம நூல்' எனும் காப்புப் பாடல் முதல் பாடலாய் அமைகின்றது. *1:12; 138:292; 167:355; 567:922* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இந்நூலினைப் போன்றவையே.

## 562. உண்மை விளக்கம்

**அ.** ***138:292;*** **ஆ.** *93–96* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற வேறு நூல்கள் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:12 போன்றது.

குறிப்புரை

***1–55*** **பாடல்கள்.** *1:12; 130:249; 167:355; 567:922* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இந்நூலினைப் போன்றவையே.

## 563. உண்மை விளக்கம்

**அ.** ***167:355;*** **ஆ.** *112–117* ஏடுகள்; **இ.** 24 x 4செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:12 போன்றது.

குறிப்புரை

***1–54*** **பாடல்கள்** *1:12; 130:249; 138:292; 567:922* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இந்நூலினைப் போன்ற வையே. இந்நூலில் 'வண்மை தரும் ஆகம நூல்' என்ற காப்புப் பாடல் இடம் பெறாததால் 54 பாடல்களே உள்ளன.

## 564. உண்மை விளக்கம்

**அ.** ***567:922;*** **ஆ.** *96–105* ஏடுகள்; **இ.** 14.5 x 3செ.மீ.; **ஈ.** *7–10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:12 போன்றது.

குறிப்புரை

*1:12, 130:249; 138:292; 167:355* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றதே.

## 565. உத்தாலகன் கதை

**அ. *70:122;* ஆ.** *127* ஆ– *138* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**இவ்வகை யேயிம் மாயையற நெடிதாய்**
**வேலற்கரி தாயெறித் தாழ்ந்து**
**வெவ்விய மாமோ கங்கள் விளைவித்துப்**
**பரமத் தினமேவி நிற்கு**
**மவ்வகை யாலுரைக் கின்றேன் அவர்தஞ்**
**சொரூபத்தை யடையத் தாரைப்**
**பவ்வ மெனவருந் துயரில் மூழ்விக்கு**
**மிம்மாயப் பண்பு தானே (1)**

முடிவு

அனகற்புத முற்றுடற் புகை மாறிநெடு நாளினிற் கரைந்த
மனமும் பிறப்பும் பொய்நிறைந்து மகாசத்துவ மாயோ வியம்பொற்
கனமிலக் கனத்துவாம் மதிபோற் கதிராய்ச் சின்னாளினிற் சுவறி
யின்னதொளி யரனமாப் பசைக ளிறப்ப போலா யிறப் பற்றான்.(79)

**உத்தாலகன் கதை முற்றும் ஆகக்கவி சூத்திரம் 90.**
**இனி சுரகு கதை.**

குறிப்புரை

1–79 பாடல்கள். ஞானவாசிட்டத்தில் வரும் ஒரு கதையாக அமைகிறது. தாரையின் துயரம் நூலில் கற்போர் மனத்தை நெகிழ வைக்கும் முறையில் அமைகிறது.

## 566. உபசாந்திப் பிரகரணம்

**அ. *70:126;* ஆ.** *159–168* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

என்னவுரைத்த முனிதன்னை யிராம னோக்கி யுரைசெய்வா
னுன்னு சீவன் முத்தியி னோடு.ட் கெல்லா மாம் காயந்
தன்னி... னடத்தல் முதலான சத்தி கரணமென
னென்னவன் றன்வினாவுக் குத்தரங்க ளறியவுரைத்
தானருள் வசிட்டன் (1)

முடிவு

சம்பத்தா பத்திரண் டனும்நீ சமமாய் வந்தனு சரிக்கி
னம்பச் சங்கமந்த ன்றவ நீநாளுந் திரள் வத்து விற்
சம்ப... பத்திதைய சத்துவனாய் மேவும் பகுதித் திறமியற்றி
யிம்பாச சங்க மறுத்தின்ப மிசைவா யிராமவென்
றிசைத்தான் (71)

*உபசாந்திப் பிரகரணம் முற்றும். ஆகக்கவி சூத்திரம் **311**.*
*இனி புசுண்டன் கதை.*

குறிப்புரை

***1 – 71 பாடல்கள்.*** *வசிட்ட முனிவர், இராமர் முதலியோரைக் கொண்டு படைக்கப்பட்ட கதையாக இந்நூல் அமைகிறது.*

## 567. உபதேச விளக்கம்

**அ.** ***141:303;*** **ஆ.** *61–64 ஏடுகள்;* **இ.** 24.6 x 2.9செ.மீ.; **ஈ.** *10–11 வரிகள்;* **உ.** *ஓரளவு நல்ல நிலை; கீழ்மேல் பக்க ஓரப்பகுதிகள் சற்று உடைந்துள்ளன;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

பாவிம னம்போகாப் பாத்தடைய நாளு
மிரவுபக லற்றவிடத் தேதிற மாக்கில்லென்
நான்கண் டதெல்லா நெறிபண்ணி மும்மலமுங்
கொல்லென்றான் ஞான குரு. (1)

முடிவு

ஆற்குந் தெரியாத வானந்த வின்பவெள்ள
மேற்கொண்டு கொண்டு லிடுகுதில்லை - யாற்குந்
தெரியாப் பரப்பிரமஞ் சேர்ந்தா லுனக்குச்
சரியார் சிதம்பரந் தா. (20)

உபதேச விளக்கம்.

குறிப்புரை

***1–20 பாடல்கள்.*** *இந்நூல் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் அழிந்தால் பரப்பிரமத்தை அடையலாம் என்று அறிவுரை புகட்டுகின்றது.*

## 568. உபாய நிலை

**அ.** ***141:305;*** **ஆ.** *67–69 ஏடுகள்;* **இ.** 24.5 x 3செ.*மீ.;* **ஈ.** *10–11 வரிகள்;* **உ.** *நன்று; கீழ்ப்பக்க ஓரப்பகுதிகள் சற்று உடைந்துள்ளன;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

அறிவுநீ யென்னை வறிந்தறிந்து மாயச்
செறிவுநா னென்று சேர்ந்தா - லறிவு
தெரிந்திடுமோ யின்பசுகஞ் சேர்ந்திடுமோ நின்னைப்
பிரிந்திடுமோ சென்மப் பிணி (1)

முடிவு

செனனத் திடரக் கடலிலே ...
பான்று மனமேயுனக் கோர்புத்தி கேளென்று
தனிற்சங்கஞ் சாராமற் றன்பானைச் சேரி
லினிச்சங்கஞ் சேரா திரு (16)

குறிப்புரை

***1-16 பாடல்கள்.*** *மனத்திற்கு அறிவு புகட்டும் தத்துவ போதனை நூலாக இது அமைகிறது.*

## 569. உற்பத்திப் பிரகரணம்

**அ.** ***70:110***; **ஆ.** *58–67* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஆய மனத்தின் செயல்செயலாம்
மதனா லொழிந்த தொழிந்துளதா
மேய மனத்திநிலை யொழித்தோர்
மிகவு நல்..தி..னத் தோர்
தூய மனமா யிடிலவையே
சுழலாக் கடல்போல் பிறப்பிறப்பா
மாயமயக்கங் கேடென்னா வசிட்டன்
மீண்டு முரை செய்வான் (1)

முடிவு

சோக முறுஞ்சங் கற்பனா சத்தால்
மனமாறிற் றொன்று .. தாட்ட
மோக மெனுமூடு பனிவிட் டகலுஞ்
சாற்கால் முதிர வந்தால்
மாகம் விளங்கு வமிதன்ன நல்லறிவு
மாத்திர மாயமா யாதாகி
யேகடிதாய் வடிவன்றி பிறப் பிறப் பில்லாப்
பிரம மிலங்கு நோயதாய். (75)

உற்பத்திப் பிரகரணம் முற்றும். ஆக **516**. சுக்கிரன் கதை.

குறிப்புரை.

***1 – 75* பாடல்கள்.** ஞானவாசிட்டக் கதைகளில் ஒரு பகுதியைக் கொண்டிலங்கும் இந்நூல் ஞான மார்க்கத்தைப் போதிக்கும் வகையில் அமைகிறது.

# 570. ஒழிவிலொடுக்கம் (கருமக்கழற்றி)

**அ. *100:203*;** **ஆ.** *14 - 245* ஏடுகள்; **இ.** 29.5 x 3 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஏடுகள் பல சிதைந்துள்ளன; **ஊ.** நன்று; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**தத்துவத்தை யெல்லாஞ் சடமென்று தாக்கற்றுச்**
**செத்தசத்தின் கண்போற் றிரியாது - வைத்தெடுத்தும்**
**பூரணமே யென்றழைத்துந் தேடிப் புரண்டழுதுங்**
**கோரணிகாட் டும்பேய்க்கு வால் (1)**

தத்துவத்தையெல்லாஞ் சடமென்று தாக்கற்றுச் செந்தசத்தின் கண்போற்றிரியாது என்பது,

தத்துவங்கள் எல்லாம் இதுவிது வென்று தன்னால் அறியப்படலானுந் தன்னை அவை யறியாமையானும் அவற்றைச் சடமென்றன் அறிந்தவைகளொன்றோடுந் தாக்கற்றுச் செத்தாட்டுக் கண்டு பாற்சுட்டறிவு கெட்டுச் சும்மாய் திரியாமல்....

முடிவு

சமர்புரி யாறுமுகன் றானேயென் னுள்ளத் தமர்விருந் தின்னூற் கருத்தந் திமிரமறக் காட்டினான் பொல்லாக் கடையே னைச்சீர் வீட்டி னாட்டினான் பேரருளினால் கையிலுறை பாலின் பங்காட்டு விரலேக சிவமெய்யருளாம் பாதமிடு மென்பதுகை திருக்கோலங் கொண்ட சிறப்பு

குறிப்புரை

**பாடலும் உரையும் உள்ளன.** இச்சுவடியில் இரண்டாவது சத்தினிபாதத்தமர் ஒழிவு, யோக கழற்றி, கருமக்கழற்றி, சரிதைக்கழற்றி, துறவு, அவத்தைத்தன்மை, வாதனை மாண்டார் தன்மை போன்ற உள்தலைப்புகள் உள்ளன. முதல் *100* ஏடுகளின் நடுப்பகுதி சற்றுச் சிதைந்துள்ளது. தொடக்கத்தில் *3* வெற்றேடுகள் உள்ளன. *130:267* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூலினைப் போன்றதே.

## 571. ஒழிவிலொடுக்கம்

**அ.** ***130:267;*** **ஆ.** *23* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** அழகான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

**வேதா கமப்பவுரி வீசுங் களாசநிலை**
**யாதார வெற்பி லபிடேகம் பேர்த்த**
**திருளிலெழு பானுயென தொழிவி லின்பக்**
**கருணைபொழி வானெடுத்த கை (1)**

### முடிவு

**கண்மணியி னாகாய நீழவக லந்தாற்போல்**
**உண்மையை நீயுண்டென் றெனை யுணர்த்தித் -துன்னெனவே**
**பார்த்திருந்த சித்திரம்போற் பார்த்தானைத் தோத்திரஞ்**
**செய்யா பிறவாச் சொல் (13)**

### பிற்குறிப்பு

நிலையியல்பு முற்றிற்று. ஆகத்திருவெண்பா *253*. இராட்சத ஆண்டு சித்திரை மாதம் *5* ந் தேதி சோமவாரமும் அசுபதியுங் கூடின சுபதினத்திற் சுப்பிரமணியன் கையெழுத்தாக ஒழிவிலொடுக்கம் எழுதி நிறைந்தது.

### குறிப்புரை

'முதலாவது வேதாகமம் பொதுவிலுபதேசம்' என்ற தலைப்பு ஒன்று முதல் *43* பாடல்களைப் பெற்று முற்றுப் பெறுகிறது. இரண்டாவது சத்திநிபாதத் தமரொழிவு' என்ற தலைப்பு ஒன்று முதல் *28* பாடல்களைக் கொண்டு முடிகின்றது. மூன்றாவது யோக கழற்றி' ஒன்று முதல் *30* பாடல்களைக் கொண்டு நிறைவு பெறுகிறது. ஒன்று முதல் *16* பாடல்களைக் கொண்டு 'நான்காவது கிரியைக் கழற்றி' என்ற தலைப்பு முடிவு பெறுகிறது. *1 - 14* பாடல்களை 'ஐந்தாவது சரிதைக் கழற்றி' பெற்றிருக்கின்றது. *1 - 13*

பாடல்கள் 'ஆறாவது விரத்தி விளக்கம்' பெற்றுள்ளது. மேலும் துறவு (*1 - 25* பாடல்கள்), அருளவத்தைத்தன்மை (*1- 42*), வாதனை மாண்டார்தன்மை (*1 - 9*), நிலையிழப்பு (*1 - 13*), என்ற தலைப்புகளைக் கொண்டு நூல் முழுமை பெறுகின்றது. ஏட்டெண்கள் கிரந்த எண்களில் இடம் பெற்றுள்ளன. *100:203* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

## 572. கசன் கதை

**அ.** ***70:115***; **ஆ.** *94–96* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

முடிவுறு காலந் தன்னின் மொழிதரு மாண்டு நூறும்
நொடியள வெனினு மில்லை யிதனையே நெடிதாய் நோக்கிப்
பொடிவறு பார்வே டன்குயு றுவதென் பொருள்க ளுன்னி
படிவதா முள்ளத் தாசை பற்றற வொருக்கு நிற்பாய் (1)

முடிவு

மேனியிற் புறத்தி னுள்ளில் மேலோடு கீழிற் றிக்கில்
வானில் வையகத்தி லெங்கும் நானன்றி மற்றொன் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத்தி யாது மில்லை
தானிகழ் வோருள் வேறில்லை சச்சி தானந்த மென்றான் (20)

கசன் கதை முற்றும். ஆக *759*. இனி திதி பிரகரணம்.

குறிப்புரை

**1–20 பாடல்கள்.** ஞானவாசிட்டக் கிளைக்கதையாக அமையும் இந்நூல் நன்னெறியில் ஒழுக வேண்டும் என்பதைப் போதிப்பதற்காகக் கூறப்படும் கதைகளுள் ஒன்றாக அமைகிறது.

## 573. கசன் கதை

**அ. *70:136*;** **ஆ.** *236–238* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

தெளிவு மிக்குயர் சிகித்துவசன் கதைசெப்பின் னில்வ ...
.. விய திற்றியே லிருந்துய ரனுகலையனை யவனெறி போலக்
குளி..ச் சுரக்குரு மகனுணர்ந் தன்னது குறித்துணர்
... தவனுணர்ந்துள் நெறியினை விளம்புதி யெனக்
கேட்டான் (1)

முடிவு

பொய்யா கொம்பினைப் பற்றவும் போக்கவும் நினைப்பா
ரைய்யனே பரபோத பூரணத்திலே ... மாறெனு
பொய்யதாகி யவனேக பாவனையினைப் பொருதல்
புன்பிறப் பாகும்
மைய்ய மின்றிய ... (13)

*முற்றும். கசன் கதை சூத்திரம் 857.*
*இனி மிருத்தியர் புருஷன் கதை.*

குறிப்புரை

***1 – 13* பாடல்கள்.** ஞானவாசிட்டத்தின் கிளைக்கதையாக வரும் இந்நூல் ஞானமார்க்கத்தைப் போதிக்க வரும் கதைகளுள் ஒன்றாக அமைகிறது.

## 574. (கரணியாசம்)

**அ. *76:166*; ஆ.** *12 - 123* ஏடுகள்; **இ.** 17 x 2.5 செ.மீ.; **ஈ.** *8 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

கைய்யார மழுவேம் படையாய்ச் சரணங்
கருணைக் கடலே சரணஞ் சரணம்
பையா டரவப் பணியாய் சரணம்
படர்செஞ் சடையாய் சரணஞ் சரணம்

மையார் கலிவேந்தற் நோர்ந்திட வான
மழைமஞ் செனவே வருநஞ் சயிலும்
மையர் சரணஞ் சரண மெனையாள
மலர்விமலா சரணஞ் சரணம் (1)

முடிவு

ஐயுங் குட்டாப் பியாய நம
கிலியுந் தற்சனி காப்பியாய நம
சௌவு மத்திம் காப்பியாய நம
ஐயும்னாமி காப்பியாய நம
கிலியுங் கனிட்ட காப்பியாய நம
ஐயுங் காதல் கரபிறட்டாப்பியாய நம

*கரணியாசம் முற்றும்.*

குறிப்புரை

நூலின் தொடக்கத்தில் நூற்பெயர் இல்லை. இறுதியில் நூற்பெயர் தரப்பட்டுள்ளது. இத்தலைப்பு நூலின் ஓர் உட் தலைப்பாகவும் இருக்கலாம். முதலில் மூன்று பாடல்கள் வருகின்றன. அதனையடுத்து முடிவுப் பகுதியாகத் தரப் பட்டுள்ள மந்திரத்துடன் நூல் முடிவு பெறுகின்றது. நூல் முற்றுப் பெற்றபின் மூன்று மந்திரங்கள் வருகின்றன. கிரியை மார்க்கத்தைச் சார்ந்த இந்நூலில் ஈசனை வழிபடு முறையும், அவனை வசீகரிப்பதற்கான மந்திரமும் கூறப்பட்டுள்ளது.

## 575. காதிகதை

**அ.** ***70:121***; **ஆ.** *122–127* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** நல்ல நிலை; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

பிறப்பி றப்பாம் பெயருடைய விந்தமாய்ப்
பெருமையினை முடிவுபெறப் பேச வொண்ணா
வறப்பெரிய தன்மனத்தை வென்றால் மாளு
மல்லதொரு வகையாலும் கற்ற லாகாச்

சிறப்புடைய வன்மாயை விரிவினுள்ள சித்திரந்
தோன்றிட வுனக்குச் செப்புங் காதை
மறப்பறு சிந்தை யனாகிக் கேட்டியென்னா
மனுகுலனா யகனுக்கு வசிட்டன் சொல்வான். (1)

முடிவு

வருடமோர் பத்தின் ஞான பூரணனாய்
வாழ்ந்தன்ன பின்னரே தனதாம்
பொருவில் சற்பாவ மடைந்துயர்ந் தோனாய்ப்
பொருந்திய பயந்துயர் நழுவிப்
பருகுறு போகத் திசன்சயற் னுள்ள
படியிலே சந்ததஞ் சுகமே
யுருவமாஞ் சீனன் முத்தனா யாதி
யுயர்மதி யெனவுள் நிறைந்தான். (35)

*காதி கதை முற்றும். ஆகக்கவி 912. யினி உத்தாலன் கதை.*

குறிப்புரை

***1–35 பாடல்கள்.*** *ஞானவாசிட்டம் என்னும் நூலிலுள்ள இக்கதை நல்ல நடையில் அமைகிறது.*

## 576. (குருதத்துவம்)

**அ.** ***149:327;*** **ஆ.** *3 - 205 (107) ஏடுகள்;* **இ.** 23 x 2.5 *செ.மீ.;* **ஈ.** *6 - 7 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *கடினம்;* **எ.** *குறை;* **ஏ.** *அச்சாகாதது.*

தொடக்கம்

ஆதியரண் வாதவூ ராதி னாத
னவனடிக்கு டோத்திகுறுங் காதி போக
னாதியடி யிரளயா னந்த னாத
னவனடியுந் தன்மகுரு வாதி யானுஞ்
சோதிய தீதசாக் கிரந்தி றந்து
சுத்தவொளி பேரின்ப மடைந்த தொன்மை
சாதிகுலப் பிறப்பறுத்திட் டெம்மை யாண்ட
சந்தான சற்குருவைச் சாற்ற லுற்றாம் (9)

குருவணக்கமென்பது சந்தானகுருவென்றுஞ் சமயகுரு வென்றுஞ் சாதிகுருவென்றுந் திரவிய குருவென்றும் நால்வராசாரியராக வைக்கப்பட்டது.

முடிவு

முன்பான பழமுறைகள் தேடிக் காணா
முதல்வனா ரருள் பெற்று விளைவ தாகி
இன்பமாம் பேரொளியிற் கலந்து வாழ்ந்து
இருவினையு மும்மலமு மகல நீக்கி
அன்புடனே அடியார்கள் தம்மை நோக்கி
யருள்கண்ணை வைத்தவர்கள் பிறவி நீங்கி
ஒன்பதா மவதாரம் வந்து தித்தோன்
உற்றகண்ண வானந்த னுணருங் காலே (601)

குறிப்புரை

***9 - 601* பாடல்கள்.** *8* ஆவது பாடல் குறைப்பாடல். சுவடியில் முடிவு இல்லாததால் நூலின் பிறவகைச் செய்திகளிலிருந்து நூல் பெயரைத் தெளிவாக அறிய இயலவில்லை. சந்தானகுரு, சமயகுரு, சாதிகுரு, திரவியகுரு என்னும் நூற்பாக்களையும் உபாய குரு தத்துவம், தீட்சை குருதத்துவம், மோட்ச குரு தத்துவம் என்பன போன்ற உட்தலைப்புகளையும் கொண்டு குருதத்துவம் என்ற பெயர் தரப்பட்டுள்ளது.

தம்பிரான் அடியாரை வணங்குதல், அண்டத்திற் றோற்ற மொடுக்கம், பிண்டத்திற் றோற்றமொடுக்கம், உடலுற்பத்தி, தெளிதல், சிவம், ஞானம், பதிபசுபாசம், அருள்நிலமை, தெருட்சி, தூல, சூட்சநிலை, அனுபூதி, அனுபூதி விளக்கம், சமய நின்னயம் பெரியோரை இகழ்ந்தோர் நிலைமை, பெரியோர் நிலமை, ஓமகுண்டம், தெட்சணாமுகம், துறவுதூல சூட்சநிலை, சம்பிரதாயம், சம்பிரதாய விளக்கம், அறிந்தோர் நிலைமை, விதிப்படி பஞ்சாட்சரம், சற்குரு சற்சீஷர் நிலை, அசற்குரு அசற்சீஷநிலை முதலான தலைப்புகள் உள்ளன.

## 577. குருமரபுச் சிந்தனை

**அ.** ***514:787***; **ஆ.** *118 - 125* ஏடுகள்; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகாதது.

### தொடக்கம்

பதிபசுபாசமென்னும் முப்பொளுக்குட் பதி முதலாய்ச் சொல்லுவதோ! பாச முதலாய்ப் பகர வேண்டியதோ வென்னின் பாசம் பசுபதியென்பது பெத்தத் திசை யாகையாற் பாசத்துக் குள்ளே பசு மறைந்து பசுவுக்குள்ளே பதி மறைந்து நின்றமையாற் பெத்த மென்பது முத்தித் திசையில் பதிக்குள்ளே பசு மறைந்து பசுவுக்குள்ளே பாசமறைந்து நின்றமையான்...

### முடிவு

... பாவத்தினாலே உண்டுறங்கியப்பிள்ளை விடிந்த காலை இல்லையென்று சாதித்தாற் போலும் சுத்த வீரனுக்கு உயித்தியங்கள் திலதிரியான கிலேசம் மறைந்து நின்றாற் போலும் இருவித முத்தியினும் பிரார்த்தம் நின்ற நேர்மை காண பிரார்த்த வழக்கு முற்றும் (6)

ஆணவ வழக்கு, மாயை வழக்கு, கன்மவழக்கு, திருமேனி கொண்ட வழக்கு, அனாதி வழக்கு, பிரார்த்த வழக்கு என்றவாறு வழக்குங் கூறிய குருமரபுச் சிந்தனை முற்றும்.

### குறிப்புரை

**உரைநடை.** சைவசித்தாந்தக் கருத்துகளை விளக்கும் இந்நூல் ஆணவ வழக்கு முதலாய்ப் பிரார்த்த வழக்கு ஈறாய் ஆறுவகை வழக்குகளை விளக்குகின்றது.

## 578. (குலப்பெருமை)

**அ.** ***158:339***; **ஆ.** 4 - *10* ஏடுகள்; **இ.** 17 x 3 செ.மீ.; **ஈ.** 6 - *9* வரிகள்; **உ.** சுமாரான நிலை; **ஊ.** தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

மிக்ககுல மேபிரம மென்பீ ராகின்
　　மீன்வாணு வத்திபிள்ளை வேத வியாதன்
தக்கபரா சன்றாயா ரவளு வத்தி
　　சத்திமுனி யின்றாயார் சண்டா ளத்திக்
கொக்கமகி ழும்வசிட்டன் றாயார் வேசி
　　ஓதுநா ரதன்தாயார் தாசி யின்னோர்
தக்கதப சாற்பிரம குலமா மன்றிச்
　　சாதியினா லுயர்வென்னச் சாற்றொ ணாதே (10)

முடிவு

உருவாய்வன் மையமாதி பஞ்ச கோச
　　மொன்றொன்றாய் நீங்கியதை யுணரறிவு தானா
யிருவாத னைகணீங்குச் சகலமே வலமு
　　மிராப்பகலி லாதநிட்டை யினிலிரா திருந்தே
பொருவிலா நிரதினசயா னந்த மேவும்
　　புண்ணிய ரேசமய சாதிகளி லேனு
நிருபாதி கப்பிரம வாருதியின் மூழ்கு
　　நிலைமையரே பிரமகுல நிகழ்த்திடவுந் தகுமால் (22)

குறிப்புரை

*நூல் பெயர் அறிய இயலவில்லை. பாடல்களின் பொருட் சிறப்பு கொண்டு 'குலப்பெருமை' என்று பெயர் கொடுக்கப் பெறுகிறது. இது மாற்றம் பெற இடமுண்டு.*

## 579. குறுந்திரட்டு

**அ.** ***55:83;*** **ஆ.** *2 -56 ஏடுகள்;* **இ.** 17 x 2.5 *செ.மீ.;* **ஈ.** *8 வரிகள்.* **உ.** *1, 3 - 6, 9 - 10, 13, 16, 17, 18, 20 - 22, 26, 28 - 30, 33, 35, 36, 38, 40, 42 - 45, 48 - 50, 52, 55 ஆகிய ஏடுகள் இல்லை; 13 ஏடுகள் எண் முதலியன அறிய முடியாமல் சிதைந்துள்ளன. அவை இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளன;* **ஊ.** *ஓரளவு கடினம்;* **எ.** *குறை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

விழுந்துமுன் பணிபவர் வினைகள் முன்விழு
மெழுந்திருப் பாரவர்வினை யெழுந்திரா திறக்கு
மழுந்துசென் னியிற்றூசு களங்கொருத மனுவிற்
கொழுந்துசூடு வோருலகில் வீத்திருப்பார் கள்குடியாய் (4)

முடிவு

தன்னையரு ளாலறிந்து தானறிந்த தெல்லாம்போ
யிம்மைப் பெருவாழ்வை யெய்தினர்க்கு முன்னே
நடந்தறிந்த போது நசிப்பே யிருக்கு
மிடம்புறங்கா டென்ப திலை (68)

அவரைப் போலிருப்பர் தாமவர்போ லாகா
ரவரவர்க் கொப்பின் றெனினு முவமைசொலில்
வேசி பணம்வெய்யோன் வீணை வெளிவிசிறி
யாசியாபோ லென்கினுமா வர் (69)

திருச்சிற்றம்பலம்

குறுந்திரட்டு முற்றும்

குறிப்புரை

தத்துவராயர் பெருந்திரட்டில் தொகுத்த பாடல்கள் சிலவற்றைத் திரட்டிக் குறுந்திரட்டு என்ற நூலாகத் தந்துள்ளார். அந்நூற் பகுதியே இக்குறைச் சுவடி. வேதாந்தத் தத்துவ நூலான இதனில் சிவ வழிபாடும் திருமால் வழிபாடும் சிறப்புறக் கூறப்பட்டுள்ளது.

## 580. கைவல்ய நவநீதம்

**அ.** ***94:196;*** **ஆ.** *34 - 116* ஏடுகள்; **இ.** 16 x 2 செ.மீ.; **ஈ.** 6 - 7 வரிகள்; **உ.** தொடக்க இறுதி ஏடுகள் இல்லை; உள்ள ஏடுகளில், இறுதி இரண்டு ஏடுகளைத் தவிர ஏனைய ஏடுகள் நல்ல நிலையிலிருக்கின்றன; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

தேக மல்லாமல் வேறே தேகியார் காணா தென்றாய்
மோக மாங்கன் வில்வத்து முளைத்த வனவனார் சொல்லாய்
சோக மாங்கனவு தோன்றுச் சுழுத்தி கண்டவனார் சொல்லா
யாகதீ நினவி லென்னு மறிவு தானெது சொல்லாய் (23)

முடிவு

நெய்யு மெண்ணையு மிடுவோர் களுமறி
நினைவிற்பிறி வறிவினி லில்லை
செய்யும் நன்வினி லிறுகு மனிதொடு
சேறாஞ் சின்மய விஞ்ஞான
னைய்யுந் துயராம் னழுகுந் துயிலமுழு
ஞானச்சுக மூணுமா னந்தன்
பெய்யும் துளிகளும் நீருங் குளமொடு
பாரும் பொலிவீர் பிறிவன்றே (128)

குறிப்புரை

**23 - 130 பாடல்கள்.** இச்சுவடியில் பூர்வபடலம், சந்தேகம் தெளிதல் எனும் இரண்டு இயல்களும் காணப்பெறுகின்றன. இந்நூல் 14 ஆம் நூற்றாண்டுக்கு முன் எழுந்த நூல். கைவல்ய நவநீதம் என்பதன் பொருள் கைமேல் கிட்டிய வெண்ணை என்பதாகும். இது அத்வைதத் தத்துவத்தைப் பற்றி விளக்கும் நூல். சீவனுக்கும் பிரம்மத்திற்கும் உள்ள இணைப்பை நூல் விளக்குகிறது; உபநிஷதங்களைப் பயில்வோருக்கு உண்டாகும் ஐயங்களை நீக்குகிறது. இந்நூல் உலகு மற்றும் உலக பந்தங்கள் பற்றியும் இறைவன் மிகப் பெரியவன் என்ற தத்துவத்தை யும் விளக்கி உயிர் இறையோடு சேருவதே அதன் பயன் எனக் கூறுகிறது. வைணவ சமயத்தில் கூறப்பெறும் மர்க்கடக நியாயம், மார்சால நியாயம் என்பது உயிரானது இறைவனைத் தேடிச் செல்வதும், அருள் வடிவமாகத் திகழும் இறைவன் உயிரைத் தேடி வருவதும் ஆகும். இத்தத்துவத்தை இந்நூல் விரிவாகப் பேசுகிறது. உபநிஷதங்களின் சாரமாக 555 சூத்திரங்கள் அடங்கிய பிரம்ம சூத்திரம் என்ற நூலை வியாச மகரிஷி இயற்றினார். இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

தாண்டரவாய சுவாமிகள். இந்நூல் *1869* இல் பரப்பிரம்ம முத்திராட்சஅச்சகச்சாலையில்அச்சிடப் பெற்றுள்ளது. இந்த நூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர் என்றாலும் ஸ்ரீகோவிலூர் பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் இயற்றிய தத்துவார்த்த தீபம் என்ற உரை நூல் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. பதினான்கு வேதாந்த சாத்திர நூல்களுள் இதுவும் ஒன்று. *157:338; 176:373* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 581. கைவல்ய நவநீதம்

**அ.** ***157:338*; ஆ.** *1 - 50* ஏடுகள்; *40, 42, 46, 48, 49* ஆகிய ஏடுகள் இல்லை; **இ.** 21 x 3 செ.மீ.; **ஈ.** *7 - 9* வரிகள். **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளம்
தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்
என்னிலங் களினுமிக்க எழுநில மவற்றின் மேலாம்
நன்னிலம் மருவும் ஏக நாயகன் பாதங்கள் போற்றி (1)

முத்தனை வேங்க டேச முகுந்தனை எனையாட் கொண்ட
கத்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீ தத்தைத்
தத்துவ விளக்கம் என்னும் சந்தேகந் தெளித லென்னும்
வைத்திரு படல மாக வகுத்துரை செய்கின் றேனே (2)

முடிவு

குலவுசற் குருவின் பாதம் குளிர்புனற் றலைமேற் கொண்டா
லுலகினில் தீர்த்த மெல்லா முற்றபே ரடைவார் போல
நலமையா குங்கை வல்ய நவநீத நூலைக் கற்றோர்
பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய் வாழ்வர் (176)

பூர்வபடலந் தத்துவ விளக்கம் செய்யுள் *110*
உத்திரபடலஞ் சந்தேகந் தெளிதல் செய்யுள் *176*
ஆகச் செய்யுள் *286*. கைவல்ய நவநீதம் முற்றும்.

குறிப்புரை

***1 - 176* பாடல்கள்.** முதலையும் முடிவையும் பெற்றும் நூலின் இடையிடையே சில பாடல்கள் இல்லை. மேலும் அச்சு நூலிலுள்ள சில பாடல்கள் இச்சுவடி நூலில் இல்லை. பூர்வபடலம், சந்தேகம் தெளிதல் எனும் இரண்டு இயல்கள் இதில் காணப்பெறுகின்றன. *94:196; 176:373* என்ற எண்களிலமைந்த நூல்கள் இந்நூல் போன்றவையே. இறுதியில் சைவதத்துவம் தொடர்பான ஏடு ஒன்றுள்ளது. இதனை இயற்றியவர் நன்னிலை தாண்டவராய சுவாமிகள். இவரது குரு நாராயண தேசிக சுவாமிகள். இவர் நன்னிலத்தில் பாணலிங்கங்களைக் கொண்டு ஆலயம் அமைத்தார். அந்த லிங்கங்களுக்கு ஏகநாயகன் என்ற பெயரைச் சூட்டினார். இவர் இந்நூலில் பல இடங்களில் பரம் பொருளான இந்த ஏகநாயகனைச் சிறப்புடன் போற்றுகிறார்.

## 582. கைவல்ய நவநீத உபநிடதம்

**அ.** ***176:373;*** **ஆ.** *12 - 59;* **இ.** 20.5 x 3 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** சுமாரான நிலை; **ஊ.** கடினம்; **எ.** முழுமையானது; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப்போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம், முடிவு 157:338 போன்றது.**

குறிப்புரை

*94:196; 157:338* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இந்நூல் போன்றவையே. இந்நூல் அச்சு நூலினின்றும் சிற்சில வேறுபாடுகளைப் பெற்றுள்ளது. நூல் முடிந்தபின் "ஆகப் படலம் இரண்டுக்குத் திருவிருத்தம் 271. கைவல்ய நவநீதம் பரிபூரணமாகியது" என்று எழுதப்பட்டுள்ளது.

## 583. கொடிக்கவி

**அ.** ***1:11;*** **ஆ.** 204. ஒரே ஏடு; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமருள் நல்கக் கொடி (1)

முடிவு

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினும் இருளடரா துள்ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிரருள் கூடும் படிகொடி கட்டினனே (4)

குறிப்புரை

**1 - 4 பாடல்கள்.** இவை சிவத்தின் சிறப்பை உணர்த்துவதோடு இறுதியாகக் 'கொடி' என்ற மகுடச் சொற் கொண்டு முடிந்துள்ளன. கொடி காட்டுதல், கொடி ஏற்றம், கொடியின் தன்மை என்றவாறு சிவத்தின் சிறப்பு கொடிமேல் ஏற்றிப் பாடப்பட்டுள்ளது. இறைவனே அனைத்தும், அவன் அருளே நமக்கு வேண்டும் போன்ற செய்திகள் நூலில் வெளிப்படுகின்றன. உயிர்கள் திருவருளைக்கூட, சிவத்தினைத் தெளிவாக அறியக் கொடி கட்டினேன் என்ற பொருளை நூல் உணர்த்துகின்றது. மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றான இந்நூலின் ஆசிரியர் உமாபதி தேவநாயனார். *130:254; 138:290* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

இந்நூல் பற்றிய கதை ஒன்று உலவுகிறது. சிதம்பரத்தில் கோயில் உற்சவத்தின்போது தில்லை மூவாயிரவர் கொடியேற்றுவது மரபு. ஒருமுறை கொடியேற்றும்போது அக்கொடியைக் கம்பத்திலிருந்து எவ்வளவு முயன்றும் மேலே செலுத்த முடியவில்லை. அப்போது ஓர் அசரீரி சிவநேயனான உமாபதி சிவம் வந்து பாடினாலன்றிக் கொடி உயரே செல்லாது என்று தெரிவித்தது. அதைக் கேட்ட தில்லை மூவாயிரவர் உமாபதியாரைத் தக்க மரியாதையுடன் அழைத்து வந்தனர். அவர் கவி பாடக் கொடி மேலே ஏறியது. ஆகவே கொடிக்குப் பாடிய கவியால் இந்நூல் கொடிக்கவி என அழைக்கப் பெறுகிறது.

சைவசித்தாந்த அன்பர்கள் விழாக்களைத் தொடங்கும் போது இடபக் கொடியேற்றி இந்தச் செய்யுட்களை ஓதுதல் மரபு.

மறைஞான சம்பந்தர் உமாபதி சிவாச்சாரியாரின் குருவாக அவரைத் துதித்து நெஞ்சுவிடு தூதில் உமாபதி சிவம் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலுக்கு கே. சுப்பிரமணிய பிள்ளை என்பார் ஒரு விரிவுரை செய்துள்ளார். அது தருமபுர ஆதீனத்தால் *1962* இல் வெளியிடப் பெற்றுள்ளது. காஞ்சி சிவ. சதாசிவம் விரிவான தெளிவுரையை இதற்கு எழுதியுள்ளார். ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை என்பார் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். தருமபுர ஆதீனம் *1946* இல் இந்நூலை வெளியிட்டுச் சிறப்பித்தது. மெய்கண்ட சாத்திரம் பதினான்கில் எட்டு நூல்கள் இவர் இயற்றியன. இவ்வெட்டு நூல்கள் அல்லாத இவ்வாசிரியர் இயற்றிய பிற தமிழ் நூல்களாவன: *1.* கோயிற் புராணம், *2.* திருப்பதிக் கோவை, *3.* சேக்கிழார் புராணம், *4.* திருமுறை கண்ட புராணம், *5.* திருத்தொண்டத் திருவந்தாதி. அதேபோல் சமஸ்கிருதத்திலும் பல நூல்கள் செய்துள்ளார். அவையாவன: *1.* புஷ்கர பாஷ்யம், *2.* சத்ரத்ன சங்கிரக குஞ்சிதாங்கிறிங்தவம்.

## 584. கொடிக்கவி

**அ.** ***130:254;*** **ஆ.** *112 - 113* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:11 போன்றது.

குறிப்புரை

***1 - 5* பாடல்கள்.** *1:11; 138:290* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. இறுதியில் கொடிக்கவி முற்றும் என்று எழுதப்பெற்றுள்ளது.

## 585. கொடிக்கவி

**அ.** ***138:290;*** **ஆ.** *92 - 93* **அ. இ.** 38 x 3.5 செ.மீ.; **ஈ.** *6 - 7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை.

தொடக்கம் 1:11 போன்றது.

முடிவு

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் கூறக் கொடி (4)

குறிப்புரை : கொடி

***1 - 4* பாடல்கள். *1:11; 130:254*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. இதில் 4 பாடல்கள் உள்ளதால் மற்ற இரு நூல்களின் இறுதிப் பாடலான ஐந்தாம் பாடல் இதில் இடம்பெறவில்லை.

## 586. சங்கற்ப நிராகரணம்

**அ.** ***1:9;*** **ஆ.** *176 - 201* ஏடுகள்; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்க்
கமையாக் காத லமையாது பழிச்சு
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப் பெருங் கோட்டுத்

முடிவு

உள்நிலை யுடையோ னொருவ னுரைத்த
தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காச செழுந்தமி ழுண்மையை
யருளுட னாய்ந்து கொள்ளத்
திருவருள் வினவத் திருந்திடு மன்றே

## குறிப்புரை

சிவபெருமானைத் தம் முழுமுதல் தலைவனாகக் கொண்ட சைவசமயம் தனது சித்தத்தினால் தெளிந்து, அதன் முடிந்த முடிவை, முடிவாகக் கூறுவதே சைவசித்தாந்தம். இது பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருளை விளக்கிப் பசுவாகிய உயிர்கள், பாசங்களைக் களைந்து, பதியாகிய சிவபெருமானை அடைவதற்குரிய வழிகளை விரிவாகக் கூறுகின்றவை சைவசித்தாந்த நூல்கள். இவை உயிருக்கு மெய்யான வழியைக் கண்டறிந்து காட்டுவதால் மெய்கண்ட சாத்திரங்கள் என்றழைக்கப்படுகின்றன. இவை திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்ற பதினான்காகும்.

இவற்றுள் சங்கற்ப நிராகரணம் 20 நெடும் ஆசிரியப் பாக்களால் ஆனது. இந்நூலின் 20 பகுதிகளில், முதல்பகுதி காப்பாகவும், இரண்டாம் பகுதி பாயிரமாகவும், 18 பகுதிகள் நூலாகவும் அமைகின்றன.

இதில் மாயாவாதம் முதலில் சிறப்புடன் பேசப்பட்டு, அதன் சிறப்புகள் ஐக்கிய வாத சமயத்தின் கொள்கைகளால் மறுக்கப்படுகின்றன. இந்த ஐக்கிய வாத மதத்தின் கோட்பாடுகள், பாடாண வாதத்தால் மறுக்கப்படுகின்றன. பாடாண வாதத்தின் சிறப்புப் பேசப்பட்டு அது பேதவாத சமயத்தால் மறுக்கப்பட்டு ஒதுக்கப்படுகின்றது. அப்படி உயர்த்தப்பட்ட பேதவாத சமயத்தைச் சிவசமவாதத்தாலும் அதில் சிறப்புடன் சொன்னவற்றைச் சங்கிராந்த வாதத்தாலும் மறுத்து அது அதனினும் சிறந்ததாகக் காட்டப்படுகின்றது. பின்னர் சங்கிராந்த வாதம், ஈசுவர அவிகார வாதத்தால் மறுக்கப்பட்டு, இறுதியில் சைவ சித்தாந்த நெறியின் மேன்மை விளக்கப்படுகிறது.

இப்படி ஒன்றினைச் சிறப்பித்துக் கூறி, அதனை மற்றோர் நூலால் கண்டித்துத் தொடர் சங்கிலிபோல் வாத விவாதங் களை அமைந்திருப்பது வேறெந்த நூலிலும் காணமுடியாத இந்நூலுக்கே உரிய தனிச் சிறப்பு ஆகும்.

இந்நூலுக்கு இரண்டு பழைய உரைகள் உள்ளன. இவற்றில் ஞானபிரகாச தேசிகர் உரையே பதிப்பிக்கப் பட்டுள்ளது.

## 587. சங்கற்ப நிராகரணம்

**அ.** ***130:257;*** **ஆ.** *118:133* ஏடுகள்; **இ.** 20 x 3.5 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:9 போன்றது.

பிற்குறிப்பு

ஆக அகவல் 13. சங்கற்ப நிராகரணம் முற்றும். தார வலையத்துள்ளே கடந்த சங்கற்ப நிராகரணம் மென்னானி கழுத்தும், பிரானையினி வெம்பந்த நீங்கத் தொழுமன் வியன்மருதச் சம்பந்தன் வந்தருளுந்தான். பிலபவ ஆண்டு மாசி மாதம் 20 ஆம் நாள் புத வாரமுஞ் சுவாதி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் அடியேன் சுப்பிரமணியன் மெய்கண்ட சாத்திரம் பதினாலுஞ் சுகிஷ்தலிகிதமாயெழுதி நிறைந்தன. முற்றும்.

குறிப்புரை

*1:9* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூலினைப் போன்றதே இந்நூல்.

## 588. சச்சுதாநந்த வழக்கம்

**அ.** ***522:813;*** **ஆ.** *1 - 18* ஏடுகள்; **இ.** 13 x 4.5 செ.மீ.; **ஈ.** *10 - 11* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** மிகக்கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

காப்பு

முச்சுட ராகி யொன்றாய் முடிந்ததோர் சோதிபாதம்
அச்சுத னயனுங் காணார் கண்டபூ ரணமாய் நின்ற
சச்சு தானந்த மான சதாசிவக் குருவைப் பாட
மெச்சுட ருதைய மான விளக்கொளி உண்மை சேர்வாம்

நூல்

முத்தமாய் நின்றபர நாதவொலி கீதமொரு முச்சந்தி வீதிநடுவில்
மும்மல மகற்றி வெளிநிறமல சொரூபமா முச்சுடரி னுச்சிமுடிவில்
உத்தமா தேசிபரி சுத்தமாய் அட்டதிசை ஊடாடி வெட்டவெளியில்
யொழியாகி யிருசுடறி னுதையகிரி யணையில் ஒருணாளு மிருளாளுன்

முடிவு

சச்சுதா நந்த மென்னுந் தன்மையைப் புகழ்ந்து கேட்போர்
உச்சிமேல் வைப்பார் வைப்பாகி யுள்ளவழி திறந்து முப்பால்
வச்சிர யொளியுந் தாண்டி மகிழ்ந்தொரு வாசல் கண்டு
நிஷ்ஷய நிஷ்க்களத்தே கண்டு நிர்மயச் சோதி சேர்வாம்

பிற்குறிப்பு

*சச்சுதாநந்த வழக்கம் சுபா வருடம் சித்திரை மாதம் 26 ஆம் தேதி வரையில் யெழுதி முகித்தது. அரிய முத்தாப் பிள்ளை குமாரனாகிய வாத்தியார் ராமசாமிப் பிள்ளை.*

குறிப்புரை

*முதலிலுள்ள இரண்டு காப்புப் பாடல்களைத் தவிர்த்து* ***33 பாடல்கள்*** *12 சீர்விருத்தத்திலும் கலித்துறையிலும் அமைதுள்ளன. இறுதியில் நூற்பயன் தரப்பட்டுள்ளது. பல்வேறு மந்திரங்களுக்குப் பொருள் கூறுதல், முப்பொருள், மும்மலம், முச்சுடர், சதாசிவம், ஆகமம் முதலானவற்றின் தன்மைகளை எடுத்து விளக்குதல் என நூல் பொருட்சிறப்பு கொண்டிலங்குகிறது. சத்து, சித்து, ஆனந்தம் என்று சொல்லப்படக் கூடிய பேரின்ப நிலையைப் பற்றி விளக்கும் நூலிது. சச்சிதானந்தம் என்பது சிவனைக் குறிக்கும். ஞான மார்க்கத்தைப் பின்பற்றி யோக நெறியைக் கடைப்பிடித்து ஆறு ஆதாரங்களைத் தட்டி எழுப்பி உள்ஒளி கண்டால் பேரின்பம் பிறக்கும் என்பது இந்நூல் தரும் செய்தி. ஆறு ஆதாரங்களாவன: மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப் பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்பன.*

## 589. சசிவண்ணபோதம்

**அ. *470:719*; ஆ.** *965* ஏடுகள்; **இ.** 20 x 4.5 செ.மீ.; **ஈ.** *10 - 11* வரிகள்; **உ.** ஓரளவு சிதைவு; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஈன்றளித் தளிக்கும் செய்கைக்
  கேதுவாம் மயனாய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே
  அனந்த மூர்த்தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தமுனா யின்பப்
  புணரியா தவனாய் நாளும்
தோன்றிய விமல போத
  சொரூபத்தை அளிக்கின் றேனே

முடிவு

குலவுசற் குருவின் பாதக்
  குளிர்புனல் தலைமேல் கொண்டால்
உலகினிற் தீர்த்த மெல்லாம்
  முற்றி பேர்அடைவர் மேல
நலகை... யாகு கலைய
  நருநீ தீ நூலைக் கற்றார்
பலகலை ஞான நூல்கள்
  படித்த ஞானிக ளாய்வாழ்வர் (185)

குறிப்புரை : சசிவண்ண போதகம்

சைவசமயத் தத்துவங்களைக் கூறுவ தாக முதல் *48* ஏடுகள் அமைகின்றன. தொடர்ந்துசசிவண்ணசரித்திரம்,முதல் மூன்று ஏடுகளிலும், 4 ஆவது ஏடு முதல் 45 ஆவது ஏடுவரை சசிவண்ணபோதம் என்ற நூலும் எழுதப்பட்டுள்ளன.

இதனை இயற்றியவர் ஸ்ரீதத்துவராய சுவாமிகள். இந்நூல் இவரது மோகவதைப் பரணி என்ற நூலின் ஒரு பகுதியாகும். கடவுள் துதியாக 2 பாடலும், நூலாக *110* பாடல்களும் இந்நூலில் இடம் பெறுகின்றன. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மண், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு வடிவமாக இருக்கின்ற பரம் பொருளுக்கு வணக்கம் செய்து இந்நூல் தொடங்குகின்றது.

வடமொழியில் அமைந்த சூதசங்கிதை முத்தி காண்டத்தின் ஏழாம் அத்தியாயத்தில் சசிவர்ணன் என்பவனுடைய கதை பரமேசுவரனால் திருமாலுக்குக் கூறப்பெற்றுள்ளது. இதில் குருசேவை மகிமை, பக்தி முதலியன கூறப்பட்டுள்ளன. சசிவர்ணன் அடைந்த ஞானப் பேரறிவைக் கூறுவதால் சசிவர்ண போதகம் எனப் பெயர் பெற்றது.

இந்நூலுக்குத் திருப்பூவணம் வேதாந்த மடம் ஸ்ரீ காசிகானந்த சுவாமிகளால், பதார்த்த பாஸ்கரன் என்ற உரைநூல் வரையப்பெற்றுள்ளது. விருத்தாசலப் புராணத்தி லும் சசிவண்ணன் கதை சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

பதினான்கு வேதாந்த சாத்திர நூல்களுள் இந்நூலும் ஒன்று.

## 590. சசிவண்ணபோதம்

**அ.** ***423:667;*** **ஆ.** *1, 3-33 (29)* ஏடுகள்; **இ.** 27 x 4 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம்**

குருசந்ததைக் குணகளிற் குன்றினை
நெஞ்சகத்தி லிருத்தி நினைமினோ
னீமம் புதல்வர்குடி பாதகராம் யாவர்க்கும் மிக்கவ னாகுமிவன்
நாமம் புகழ்வார் குலமும் எரிவாய் நரகம் புகுமாறு நடந்தனனே

என்றது இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தயிக... தாரணை, தியானம், சமாதி இந்த அட்டாங்க யோகக் கிரமங்களை அனுஷ்டியாதவனுக்குப் பஞ்சமா பாதகம் போகாத படியினாலே மகாபாபிஷ்டனென்று சொல்லப் பட்டதென்று வேதாகமம், சாஸ்திர புராணங்கள் முறையிடுகிறபடியினாலே இந்தச் சசிவர்ணன் என்று யாதொரு புருடன் பேர் சொல்லுகின்றார்களோ அவனுடைய பிதுர்கள் அவன் வம்சம் எல்லாம் நரகத்திலே குடியேறுவார் கள் என்றவாறு (6).

முடிவு

என்றது, தாபத்திரயைமான வானவத்தியான்மீகமாதி பௌதிகமாதி, தெய்வீகமெனப்பட்ட மூன்றுவகை அதிலத்தியான்மீகமாவது சரீரத்திலே இருக்கப்பட்ட எலும்பு தொட்டு சரீரத்திலே உண்டான வியாதிகளாலே தேகம் விழுந்து போறது வத்தியான்மீகம் என்று பேர்... (ஏடு.33).

போதம் முற்றும்.

குறிப்புரை

முதல் ஒரு காப்புப் பாடலைப் பெற்றுள்ளது. சசிவண்ண போதம் என்னும் நூலில் ஆறாவது பாடலின் உரை தொடங்கி *83* ஆவது பாடலின் உரைவரை உள்ளது. 33 ஆவது ஏட்டையடுத்து 43 ஆவது ஏடு ஒன்றே காணப்படுகின்றது. 20 ஆவது ஏடும் இல்லை.

## 591. சதவுருத்திரன் கதை

**அ.** ***70:132***; **ஆ.** *196–199* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; சில ஏடுகளில் துளைகள் உள்ளன; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மீட்டுமோர் கதைகே ளென்று வீரர்க்கு வசிட்டன் சொல்வார்
நாட்டுளோர் சன்னி யாதி ஞானவான் சமாதி யுள்ளோ
னீட்டுறு சமாதி யாலே நிமலமாம் நெஞ்சே னோன்றை
யீட்டுற நினையிப் போதெய்து நீரலை யாமா போல் (1)

முடிவு

தெளிசன் னாசி சங்கற்பத் தவராஞ் சீவடன் முதலோர்
களிகொள் தத்தம் வேற்றுலகைக் கண்டா ரீசனுரு வந்தால்
விளிவில் சங்கற்பத் துண்மை வேனி ராதஞ் சங்கற்பத்
தெளிது செருமரு காடைந்த ...சன் விஞ்ஞானத் தாலே (30)

சதவுருத்திரன் கதை முற்றும். ஆகச் சூத்திரம் 545.
இனி வேதாள கதை.

குறிப்புரை

**1 – 30 பாடல்கள்.** ஞானவாசிட்டம் என்ற நூலின் கிளைக் கதையாக வரும் இந்நூல், அறநெறி புகட்டும் வண்ணம், நல்ல நடையில் அமைந்துள்ளது.

## 592. சனகராசன் கதை

**அ.** *70:117*; **ஆ.** *97 - 102* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஏடுகளின் ஓரப்பகுதிகள் சிதைந்துள்ளன; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

சுரர்குருவின்.... யியவ
வுலகலாஞ் சொரூப மாகும்
விரவிய நீள்பிறப் பிறப்பாம்
வேறென்னு மோகத்தை வெறுத்தொழிப்பாய்
பிரம மூலச் சித்தி
லெழுவன் கற்பனை யெல்லாம்
பிரித்துநோக்கி லிருங்கட லில்லைபோல்
மெய்யாகி யில்லையா யியலுமன்றே (1)

முடிவு

பரமா தித்தனை மறைத்துக் கரு...
... துப் படர்ந்து நீண்டு
திரமான வகங்கார முகில்விவேகக்
காத்தாற் சிதறிப் போகும்
வரமான பதம்வேண்டி...
... முதல்மாற்ற வேண்டு
முரமான புவியை முதலுமு தன்றோ
விளைபயன்க ளுறுகின் றாரே (37)

*சனகராசன் கதை முற்றிற்று... 102. யினி புண்ணியபாவன் கதை.*

குறிப்புரை

**1 - 37 பாடல்கள்.** ஞானவாசிட்டம் என்ற நூலின் ஒரு கதையாக அமைகிறது.

## 593. சவுபாக்கியம் - வாக்கியச்சிந்தனை

**அ.** ***111:216***; **ஆ.** *96 - 123* ஏடுகள்; **இ.** 19 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

### தொடக்கம்

ஸ்ரீகைலாசவாசாரிய காருண்ய மூர்த்தியாய் கிருபாசமுத்திர மாய் கேடில்லாத வஸ்துவாய் சருவவிக்கின வஸ்துவாய் சச்சிதானந்த வடிவாய் இருக்கிற தட்சிணாமூர்த்தி சாதன சதுட்டய சம்பன்னராய்தீ... சத்தினி பாகத் தன்மையு டையவராய் வைராக்கிய உபாதி உடையவராய் சிவகடாட்சமும் குரு கிருபையும் உடைத்தான சனகாதிகள் நால்வருக்கும் வாக்கிய சிந்தனையைத் திருவுளம் பற்றும்படி எப்படி என்னில்...

### முடிவு

நானே, நீநீயே நான்நானே, நான்நீயே, நீ ஆனதெல்லாம் பொய்யென்றகற்றியே மோனமதுமில்லை யென்றானே தென்றால் அன்னாள் நான் எண்ணுவனோ நல்ல சுப பாக்கியனை நான்.

வாக்கிய சம்பிரதாயம் முற்றும்

### குறிப்புரை

**உரைநடை.** இந்நூல் ஸ்ரீகைலாசநாதருடைய அருளை அடையும் நெறிமுறைகளையும், நான் என்ற அகந்தை ஒழியும் வழிமுறைகளையும் கூறிப் பேரானந்தத்தை அடையும் நிலையைக் காட்டுகின்றது.

## 594. சிகித்துவசன் கதை

**அ.** **70:135**; **ஆ.** *206 - 238* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

வகித்து நிமிர மனமென்னு மாப்பறவை
    தனைமுன்னே மாற்றி யோட்டிச்
சிகித்து வசன்றனைப் போலச் சாந்தனா
    யுன்னிடத்தே செறிவா யென்னச்
சுகித்துணர் வில்நின் றுளவச் சிகித்துவசனா
    ரைய்யா சொல்வா யெல்லாஞ்
சகித்துணர்வு மென்மேலும் நிறைவதற் கென...
    ... வன்கெடப் பத்தவனுஞ் சொல்வான் (1)

முடிவு

வள்ளலே செயுமர பினாற் றொழில்களில் மருவித்
துள்ளு துன்பமில் சாந்த மெப்போதினுந் துடர்ந்தாற்
றெள்ளு போகமும் வீடு முண்டா மென்று
தெளிந்த வுளமாதவ வசிட்டமா முனிவர னுரைத்தான் (240)

*சிகித்துவசன் கதை முற்றும். ஆக விருத்தம் சூத்திரம் 844.*
*இனி கசன் கதை.*

குறிப்புரை

**1 - 240 பாடல்கள்**. ஞானவாசிட்டம் என்ற நூலின் ஒரு கதை கிளைக்கதை யாக வரும் இந்நூல், நல்ல நடையில் நீதியைப் புகட்டும் பொருண்மையில் அமைகிறது.

## 595. சித்தன் கதை

**அ**. ***70:109***; **ஆ**. 54 - 58 ஏடுகள்; **இ**. 38.5 x 2.5 செ.மீ.; **ஈ**. 7 - 8 வரிகள்; **உ**. ஏடுகளின் ஓரப்பகுதி சிதைந்துள்ளது; **ஊ**. சுமாரான எழுத்து; **எ**. முழுமை; **ஏ**. இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

தங்கள் சங்கற் பத்தாலறி வில்லோர்
    சால மோகிப்பர் நல்லறிஞர்
பொங்கு நல்விசாரம் பகுதியால் மயங்கார்
    புந்தியா பொய்மையை யொழித்துத்

துங்கமெய் யுணர்வாய் பந்தமற் றிருந்து
துடர்புறு பந்தமுண் டென்று
பங்கமுற் றயரேல் மலமா யழியா
பரம்பொருள் பந்தமுற் றிடுமோ (1)

முடிவு

யிருந்த மந்திரியர் சித்தன் னறிவனா
றென்றலு மிமைப்பிடை மறைந்தான்
பொருந்திய வுலகமன மன்றி வேறே
புலப்படக் காட்டுவான் விடுத்தத்
திருந்திய தெய்வ மாயை யீதாகுஞ்
செப்புமிச் செயலி னாற்றீர்
பெருந்தகைப் பரத்தின் விகாரமே மனமாம்
பேருல கென்றன னென்றான் (26)

*சித்தன் கதை முற்றும். ஆக 445. இனி உற்பத்திப் பிரகரணம்.*

குறிப்புரை

***1 - 26 பாடல்கள் உள்ளன.*** *இந்நூல் ஞானவாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாகும்.*

## 596. சித்தாந்த சிரோமணி

**அ.** ***76:161;*** **ஆ.** *91 - 104 ஏடுகள்;* **இ.** 17 x 2 *செ.மீ.;* **ஈ.** *8 - 10 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சானதாகத் தெரியவில்லை.*

ஒன்றாகிச் சின்மயமாய்ச் சுகசத்தாய்ப் பரமா
யோதரிதாய்ப் பூரணமா யொருகுறியுங் குணமு
மின்றாகித் தன்னியல்பாய் மன்னி யருளுருவா
யிலகியனைத் தையுமாக்கி யிருத்தி யிருடீர்ந்து
நன்றே பெற்றிட அணர்த்தி யாடலினால்
மலஞான முத்தோ தம்மைநாடிச் சிற்பரமாய்க்
குன்றா முத்தியை யருளுஞ்சிவப் பிரகாசர்
சற்குருராயர் வென்தெண்ணங் கூறுவன் கேட்டருளே (1)

முடிவு

மறைமுடி வந்தத் திலங்கிய சின்மயனை
  மன்னுவித்து மூன்றுடலில் வகுத்தெல்லாரு சித்தாய்க்
குறியிறந்து தொற்றியிருந் தங்குநற் தற்பரமாய்க்
  கூரரிதாய் சுதமயமாய்க் கொள்கை பெறவருளிச்
செறியுமென் தையமோடு பவநோயைத் தீர்த்த
  சிவப்பிரகா சையாயான் செய்வதிலைக் கைமாறி
யுருவாய் முப்பொருளைத் தொழுதேத்தி யுருகி
  யரிச்சிக்க வருளன்றும் மலவருட் கடலே (41)

குறிப்புரை

**1 - 41 பாடல்கள்.** ஞான மார்க்கத்தால் கிடைக்கப் பெற்ற இறைவுணர் அறிவு (சின்மயம்) மேலும் பெருகுதல் வேண்டி செய்து கொள்ள வேண்டிய நடைமுறைச் சடங்கு உள்ளிட்ட வகைப்பாடுகளை இந்நூல் இயம்புகிறது.

## 597. சிலை கதை

**அ.** ***70:130;*** **ஆ.** *192 - 193* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; சில ஏடுகளில் துளைகள் உள்ளன; **ஊ.** சுமார்; **எ.**முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மீண்டு மோர்கதை விசித்திர வியப்பது வரநீ கேளென்று
நீண்ட மாதவனுரை செய்வான் சிக்கென்று நெருங்கி மெல்லியதாகி
யீண்டகன்று வித்தார் முடிவன்றி யிலங்குமோர் பெருங்கல்லு
மாண்ட துண்டத னிடைவிரி கமலங்கள் மலர்ந்தன வரம்பில்லை(1)

முடிவு

பிரமத் தின்சற் பாவ வடிவான
  பேருலகின் பேத மெல்லாம்
பரமற்ற சுழுத்தி யாய்ச்சார்ந்த மாய்ச்சம
  மாகிப் பயின்ற சித்தாய்க்

கரமுற்ற தன்னுரு வாங்கண் ணாகுங்
கல்லிடைத் தாமரைகள் போலத்
திரமற்ற சிருட்டி யெலாம்பய னில்லை
யுடல்க ளெலாஞ் சேரா தென்றும் (8)

*சிலை கதை முற்றும். சூத்திரம் 494. அருச்சுனன் கதை.*

குறிப்புரை

***1 - 8* பாடல்கள் உள்ளன.** ஞானவாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாக இந்நூல் அமைகிறது.

## 598. சிவகுருலீலை

**அ.** ***103 - 206*; ஆ.** *1 - 136* ஏடுகள்; **இ.** 23 x 3 செ.மீ.; **ஈ.** *7* வரிகள். **உ.** நன்று; **ஊ.** சற்றுக் கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

திருநாவுக் கரையர்முதல் உரைகோலற் குயர்கடவுள்
பெரியானைக் கணபதியின் இருதாளைப் பணிகுவனே
... ... ... .. ..
தவமுய ரெவையும் கணந்தோறும் செய்து
வமையில் அடியர் குளங்கண் டிரங்கிச்
சிவமருள் குருவாய்ச் சிவகதி கொடுக்கும்
சிவகுரு லீலைஎனச் செப்புவதே

முடிவு

சீர்ஓங்கு கோவில் வாழி சிறந்தசிற் பரமும் வாழி
பாரோங்கு கோவி னகர்ப் பண்ணவர் அடியார் வாழி
வீரோங்கு வீரெட்ட னாதர் தன்விமலை பெரியநாய கிவாழி
காரோங்கு மேக மென்னா கருணையால் அடியார் வாழி
நல்விஜய வாண்டு ஞான இடபமதியில்
தொல்லோர் குறுலீலை தொகுதிப்படி - வல்விறைந்து
வரைந்தான்சண் முகமா முனிமடத்துச் சோன
வரையான்சண் முகமா முனி

ஆண்டாகும் விஜயத்தின் ஆவினது மாதத்தில்
வேண்டியதை அருளுசேன் விதிநீக்கும் குருவாய் வந்து
காண்டரலீ லைகள்செய்த காதைதனை அன்புடனே
ஈண்டெழுதி முடித்தான்நம் இனியசண்முக முனிவன் தானே

குறிப்புரை

இந்நூல் முதலாவது குருலீலைச் சருக்கம், இரண்டாவது ஞானமூர்த்திப் பிள்ளையார் பூசைச் சருக்கம், மூன்றாவது இட்டலிங்கப் பூசை, ஆதிதரிணை அனுக்கிரக அனுபவச் சருக்கம், நான்காவது யாத்திரைச்சருக்கம், ஐந்தாவது அனுக்கிரகச் சந்தானச் சருக்கம், ஆறாவது பூரணாதீத பிரகாசச் சருக்கம், ஏழாவது முந்திய சீடச் சருக்கம் என்ற ஏழு சருக்கங்களையுடையது. சிவபிரான் சிவநேயர்களை ஆட்கொள்ளும் பாங்கு இந்நூலின் வழியாகக் கூறப்படு கிறது. அதாவது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களை உடைய சிவபிரான், மும்மலச் சழுக்கில் தோய்ந்து உரைந்து கிடக்கும் மானிடரை மறைத்தல் நீக்கிய அருள்நிலை கொண்டு அருள்பாலிக்கும் பேற்றினை இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

## 599. சிவஞான சித்தியார் சுபக்கம்

**அ.** ***1:3;*** **ஆ.** *68 - 122* ஏடுகள்; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்க ளின் குறிஇ றந்தங்
கறிவினில் அருளான் மன்னி அம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம் (1)

முடிவு

பரப்பிரமம் இவனென்றும் பரசிவன்தா னென்றும்
பரஞானம் இவனென்றும் பராபரன்தா னென்றும்
அருன்தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே அவனிவன்தா னாயே

இரங்கியவா ரணம்யாமை மீன்அண்டம் சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமாபோல் சிவமே யாக்கும்
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந் தானே (327)

பனிரெண்டாஞ் சூத்திரம் முற்றும்.

சிவஞான சித்தியார் முற்றும். திருச்சிற்றம்பலம். மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க. மாணிக்க வாசக தேசிகன் திருவடி வாழ்க. அம்பலவாணன் திருவடி வாழ்க.

குறிப்புரை

**1 - 327 திருவிருத்தப் பாடல்கள்**. மூலம் மட்டும் உள்ளது. இந்நூல் பரபக்கம், சுபக்கம் என இருபகுதிகளைக் கொண்டது. மெய்கண்ட சாத்திரம் 14 நூல்களுள் இதுவும் ஒன்று. இதனை இயற்றியவர் அருள் நந்தி சிவாசாரியார்.

சிவபெருமானின் பெருமையைக் கூறுவதோடு சைவ சமயத்தின் தத்துவ விளக்கப் பெட்டகமாகத் திகழ்வது இந்நூல். சைவ சித்தாந்தங்களில் மூத்த நூலாகக் கருதப் பெறும் சிவஞான போதத்திற்கு எழுந்த துணை நூல் என இது போற்றப் பெறுகிறது.

**சிவத்துக்கு மேல் தெய்வமில்லை.சிவஞான சித்திக்கு மேல் சாத்திரமில்லை** என ஒரு பழமொழியும் உண்டு. இந்நூல் சுபக்கம் என்று கூறப்பெறும். அஃதாவது இந்நூலில் கூறப்பெற்றுள்ள செய்திகள் அனைத்துமே ஏற்புடையதாகச் சைவசமயத்தாரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளன. ஆகவே இது சுபக்கம் எனப் பெறுகிறது. ஒவ்வாச் செய்திகள் பரபக்கம் என்ற பகுதியிலே கூறப்பெறுகின்றன. சன்மார்கம், தாசமார்கம், சற்புத்திர மார்கம், சகமார்கம் என்ற நான்கு மார்கங்கள் எவ்வாறெல்லாம் சைவ சமயத்தாருக்குப் பயன்பாடுடையது என்பதை இந்நூல் விளக்குகிறது.

பரபக்கம் - சுபக்கம் என்ற இரண்டு பகுதிகளில் முன் பகுதியான பரபக்கம் உலகாயதம், நால்வகைப் பௌத்தம், இருவகைச் சமணம், இரண்டு மதங்களான மீமாம்சம், ஏகான்மவாதத்தின் முப்பிரிவுகள், சாங்கியம், வைணவம் ஆகப் பதினான்கு வகையான சமயக் கொள்கைகளை

மறுத்து அவை எப்படித் தமது கொள்கை விளக்கத்தில் பொருத்தமற்றுள்ளன என்பதையும் விளக்குகின்றது.

இரண்டாம் பகுதியான சுபக்கம் சைவ சித்தாந்தக் கொள்கைகளை விளக்கி அதனைப் போற்றுகின்றது.

சிவஞான சித்தியார் என்பதற்குச் சைவ ஆகமங்களில் உள்ள பல்வேறு ஞானபாதக் கருத்துகளை ஆராய்ந்து உண்மையை நிறுவுதல் என்பது பொருள்.

இந்நூலுக்கெனச் சில தனிச்சிறப்புகள் உண்டு. திருவாவடுதுறை ஆதீனர் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள். சிவஞான போத மாபாடியத்தைப் பின்பற்றி இதற்கோர் உரை செய்துள்ளார். திரு. டி. முத்தையா பிள்ளை மற்றும் எம். திருவிளங்கம் என்பார் ஓர் உரை செய்துள்ளனர். சிவஞான சித்தியார் ஆராய்ச்சி என்ற பெயரில் 1949 இல் திரு வ. சிவகுருநாத பிள்ளை என்பார் ஓர் உரை செய்துள்ளார். 1960 இல் வ.ஆ. தேவசேனாபதி அவர்கள் ஒரு திறனாய்வு நோக்கிலான ஆங்கில உரையை எழுதியுள்ளார். இந்நூலுக்கான ஒரு பழைய உரை 1895 இல் அறுவர் உரை என்ற பெயரில் ஒரு தொகுப்பு நூலாகக் காணப்பெறுகிறது. இவ்அறுவர் பெயர்களாவன: வெள்ளியம் மறைஞான தேசிகர், சிவாக்கிரயோகி, நிரம்ப அழகிய தேசிகர், ஞானப்பிரகாசர், சிவஞான யோகிகள், இந்த ஆறு உரைகளுக்கும் பொழிப்புரை தந்தவர் சுப்பரமணிய தேசிகர். இந்நூலாசிரியர் இயற்றிய மற்றொரு நூல் இருபா இருபஃது என்ற ஒன்றாகும். இதுவும் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாகும்.தமிழில் காணப்பெறும் சிறப்புமிகு தொகுப்பு நூல்கள் ஆறினுள் இதுவும் ஒன்று. பிற. 1. திருக்குறள், 2. திருவாசகம், 3. தொல்காப்பியம், 4. திருக்குறள் பரிமேலழகருரை, 5. திருத்தொண்டர் புராணம்.

*130:247; 151; 329; 155:335; 167:350; 172:365; 173:367* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 600. சிவஞான சித்தியார் சுபக்கம்

**அ.** ***130:247;*** **ஆ.** *48 - 79* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதனைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம், முடிவு 1:3 போன்றது.**

பிற்குறிப்பு

பிலபவ ஆண்டு ஆனிமாதம் மூன்றாம் நாள் சுப்பிரமணிய ஓதுவார் கையெழுத்ததனாலே எழுதி நிறைந்தன.

குறிப்புரை

'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம்' என்று தொடங்கும் முதற்பாடல் தொடங்கி ***327*** ஆம் பாடல் முடிய அனைத்து உதாரணச் செய்யுட்களோடு ***12*** சூத்திரங்களும் முழுமையாக உள்ளன. மங்கல வாழ்த்து, அளவையிலக்கணம் ஆகிய தலைப்புகளுடன் முதல் சூத்திரம் முதல் பனிரெண்டாஞ் சூத்திரம் வரை, தலைப்புகள் உள்ளன. ஒவ்வொரு சூத்திரத்திற்கும் பாடல் எண்கள் தனித்தனியே இடம் பெறுகின்றன.

## 601. சிவஞான சித்தியார் சுபக்கம்

**அ.** ***151:329;*** **ஆ.** *1 - 61* ஏடுகள்; **இ.** 23 x 3 செ.மீ.; **ஈ.** *3 - 9* வரிகள்; **உ.** இருபக்கங்களிலும் உடைந்துள்ள முதல் ஆறு ஏடுகளைத் தவிர ஏனையவை நல்ல நிலையிலுள்ளன; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம்**

புத்திமற் காரி யத்தால் பூதாதி புருடன் றானு
மத்தனு கரணம் பெற்றா லறிதலா லவற்றை மாயை
உய்த்திடு மதனான் மாயைக் குணர்வொன்று மில்லை யென்றே
வைத்திடு மதனா லெல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்(17)

முடிவு 1:3 போன்றது.

குறிப்புரை

*சிவஞான சித்தியார் சுபக்கம் 12 சூத்திரங்களும் அடங்கியது இச்சுவடி. ஆயினும் முதல் ஆறு ஏடுகள் இருபுறமும் உடைந்துள்ளன. 36 ஆம் பாடலைக் கொண்ட ஏழாவது ஏடு முதல் முடிவு ஏடு வரை ஏடுகள் நன்றாக உள்ளன. முதலில் 35 பாடல்கள் முழுமையாக இல்லாததால் குறைச் சுவடியாகவே கருத முடிகிறது.*

*1:3; 130:247; 155:335; 167:350; 172:365; 173:367 என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.*

## 602. சிவஞான சித்தியார் சுபக்கம்

**அ.** ***155:335;*** **ஆ.** *1 - 90 ஏடுகள்;* **இ.** 14.5 x 3 *செ.மீ;* **ஈ.** *7 - 10 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *ஓரளவு தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
　　னால்வானயங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
　　தருமொருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
　　யிரவுபக லுணர்வோர் நிந்தைத்
திருகோட்டு மயன்திருமால் செல்வமுமொன்
　　றோவென்னச் செய்யுந் தேவே.
அளவை காண்டல் கருதலுரை
　　அபாவம் பொருளொப் பாறென்பர்
அளவை மேலும் ஒழிபுண்மை
　　ஐதீ கத்தோ டியல்பெனநான்
களவை காண்பர் அவையிற்றின்
　　மேலுமறைவ ரவையெல்லாம்
அளவை காண்டல் கருதலுரை
　　என்றிம் மூன்றின் அடுங்கிடுமே (6)

முடிவு 1:3 போன்றது.

பரம்பிரம மிவனென்றும் பரசிவன் தானென்றும்
பரஞானம் இவனென்றும் பராபரன் தானென்றும்
பரிந்தவைதா மாக்குமாபோல் சிவமே யாக்கும்
பரிசித்துப் சிந்தித்தும் பார்த்துந் தானே (7)

ஆக 327 சித்தியார்சுபக்கம் முற்றும்.

குறிப்புரை

*1:3; 130:247; 151:329; 16:350; 172:365 173:367* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இதுபோன்றவையே. நூலின் தொடக்கத்தில் மூன்று வெற்றேடுகள் உள்ளன.

## 603. சிவஞான சித்தியார் சுபக்கம்

**அ.** ***167:350;*** **ஆ.** *11-59* ஏடுகள்; **இ.** 24 x 4 செ.மீ.; **ஈ.** 9 - *10* வரிகள்; **உ.** சுமார்; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே(1)

முதற்சூத்திரம் (சிறப்புப்பாயிரம்)

மலர்தலை யுலகின் மாயிருள்துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதை
காண்டல் செல்லாக் காண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு கண்ணீருள் தீர்ந்
தருந்துயர்க்குரும்பையி னான்மா நாடி
மயர்வற நந்திமுனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்

பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

என்பது பாயிரம்.
முதற் சூத்திரம்

ஒருவனோ டொருத்தி ஒன்றென்
றுரைத்திடும் உலக மெல்லாம்
..........
மருவிடு மநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே (20)

குறிப்புரை

தொடக்க ஏட்டில் 'சிவஞானபோதம்' என்ற தலைப்பே காணப் பெறுகிறது. தொடர்ந்து சிவஞான போதம் என்னும் நூலின் பாயிரம், 'தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்' என்னும் அவையடக்கப் பாடல் ஆகியவை உள்ளன. அடுத்த ஏடுகளில் 'ஒன்றலா வொன்றா லுளதாகி' என்பது போன்ற உதாரணப் பாடல்களும் காணப் பெறுகின்றன. *18* ஆவது ஏட்டில் அளவை முற்றும் என்று முடிகிறது. அடுத்து 'ஒருவனோ டொருத்தி ஒன்றென்று' என்னும் சிவஞான சித்தியார் சுபக்கத்தின் முதற் சூத்திரம் தொடங்குகிறது. அதுமுதல் சுபக்கம் முழுமையாக முடிவு பெறுகிறது.

*1:3; 130:247; 151:329; 155:335; 172:365; 173:367* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இதுபோன்றவையே.

## 604. சிவஞான சித்தியார் சுபக்கவுரை

**அ.** ***172:365;*** **ஆ.** *1 - 265* ஏடுகள்; **இ.** 30 x 3 செ.மீ.; **ஈ.** *7 - 9* வரிகள்; **உ.** இறுதியில் சில ஏடுகள் சிதைந்தும் செல்லரித்தும் உள்ளன; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

பொருவை நீங்கிய பூங்கரு ணைக்கனி
தருவை யன்பெனுற் தண்மலர்ப் பாலுறை
மருவை யென்பெரு வாழ்வை நிறைந்தசற்
குருவை நாடொறுங் கூறிவ ணங்குவாம்.

ஒருகோட்ட னிருசெவியின் மும்மதத்தன்
நால்வா யைங் ... கரத்த னாறு
...... ...... ...... ...... ......
திருகோட்டு மயன்திருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே.

என்னவே யானுமிந்நூலைக் காப்பது நிமித்தமாக வந்தச்சி பாதங்களை யொழியாதே யனவரதமு மென்னிரு தயத்திலே வைத்துக் கொள்ளா நின்றே னென்பது கருத்து. இது காப்பு.

முடிவு 1:3 போன்றது.

குறிப்புரை

மங்கல வாழ்த்து, அளவை இலக்கணம் தொடங்கி, 'சிவஞான சித்தியார்' என்னும் நூலில் பன்னிரண்டு சூத்திரங்களும் உரையுடன் உள்ளன. உரை விரிவானதாக, அச்சு நூலினும் வேறுபட்டதாகக் காணப்பெறுகிறது. முதலில் 3 வெற்றேடுகள் உள்ளன.

*1:3, 130:247; 151:329; 155:335; 167:350; 173:367;* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 605. சிவஞான சித்தியார் சுபக்கவுரை

**அ.** ***173:367;*** **ஆ.** *1 - 266* ஏடுகள்; **இ.** 23 x 3.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஏடுகள் சிதைந்துள்ளன; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 1:3 போன்றது.

முடிவு

அந்தச் சிவசக்திகளினது சிருட்டியுணர்த் தலுற்றார்
சிவஞ்சத்தி தன்னை யீன்னுஞ் சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்தங் குலகுயி ரெல்லா மீன்று
மவன்பிரம சாரியாகும் பான்மொழி கன்னி யாகுந்
தவத்திரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே (77)

குறிப்புரை

இந்நூல் இரண்டாஞ் சூத்திரத்து **77 ஆம் பாடலுடன்** முடிவடைகிறது. நீண்ட **உரையுடன் கூடியது.** அச்சு நூல் உரையினும் வேறான உரையைப் பெற்றுள்ளது. *1:3; 130:247; 151:329; 155:335; 167:350; 172:365; 173:367* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 606. சிவஞான சித்தியார் பரபக்கம் - மூலம்

**அ.** ***1:2;*** **ஆ.** *18 - 67* ஏடுகள்; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு படிக்கக் கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாயன்
ஐங்கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழி தாழ்சடையான் தருமொருவா
ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே இரவுபகல்
உணர்வோர் சிந்தை
திருகோட்டு மயன்திருமால் செல்வமுமொன் றோவென்னச்
செய்யும் தேவே (1)

முடிவு

இப்படிப் பிருகு சாபத் தீரைந்து பிறப்பில் வீழ்ந்து
மெய்ப்படு துயர முற்று வருபவன் விமல னல்லேன்
அப்படி யானும் சொன்னேன் நிறையறி அல்லன் என்றே
யைப்படி கண்டன் அண்டன் மலரடி வணங்கி டாயே (299)

குறிப்புரை

சிவஞான சித்தியார் என்னும் நூலின் 'பரபக்கம்' எனும் பகுதி ஏடு *18 - 67* முடிய முழுமையாகஉள்ளது. இறை வணக்கப் பாட்டைத் தொடர்ந்து "ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி" என்ற பாட்டுத் தொடங்கி 299 பாடல்கள் உள்ளன. உலகாயுதன் மதம், மறுதலை, புத்தர்மதம், அதன் மறுதலை,

பட்டாச்சாரியன் மதம், யோகாச்சாரியன் மதம், மாத்தணிகன் மதம், அமணரிலருகண்டவாதி மதம், ஆசீவகன்மதம், ஆசீவகன் மறுப்பு, பட்டாச்சாரியன் மறுப்பு, பிரபகாரன் மதம், பிரபாகரனை மறுப்புடல், சப்த பிரம்மவாதி, வைமாகானமதம், சப்த பிரம்ம வாதியை மறுப்புடல், மாயாவாதி மதம், மறுத்தல், பரற்கரியன்மதம், மறுப்பு, நீரில் சுவாசாங்கியன் மதம், மறுப்பு, பஞ்சராத்திரி மதம், பஞ்சராத்திரியை மறுப்புடல் என்ற பொருண்மைகளில் முதற் சொன்னது அம்மதத்தின் விளக்கமாக அமைகிறது. அடுத்துச் சொல்வதில் அம்மதம் சைவ சமயத்தில் இருந்து மாறுபட்டு குறைந்து காணப்படுவதால் இதற்குப் பரபக்கம் என ஆசிரியர் பெயர் தருகின்றார்.

இந்நூல் எழுதுவதற்குக் காரணமாக அமைந்த நூல்கள் பின்வருவன; 1. சங்கரருடைய சர்வ தரிசன சங்காரகம், 2. சர்வமத உபநயனம், 3. ராமநாதாச்சாரியின் பரமத நிராகரணம், 4. சித்தாந்த தீபிகை, 5. அகோர சிவாச்சாரியின் சித்தாந்த சமுச்சியம். இந்நூல் 1925 இல் கழக வெளியீடாக வந்துள்ளது.

## 607. சிவஞானப் பிரவாகம்

**அ.** 26:48; **ஆ.** 127 - 131 ஏடுகள்; **இ.** 23 x 3.5 செ.மீ.; **ஈ.** 9 வரிகள்; **உ.** நல்ல நிலை; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

**தொடக்கம்**

குருதுதி

உலகளந்த மாயவனு மோதிவமு ராதேவும்
குலமறையுங் காணாத கோமார் - நிலகியுமி
முள்ளக் கையிலாய ஓங்கண்மிசை நின்றாடும்
வள்ளலுக்கு முண்டோ கைமாறு (1)

உண்டும் இலையென்றான் ஒருவ னொருத்தி சுகம்
கண்டும் இலையென்றான் கருத்தென்னோ மண்டனிலே
என்போல் வந்திங் கிருநிலத்தோர் கண்காண
என்போத மாய்த்தாய் இசை (2)

(வேதச்சிறப்பு)

முடிவு

ஆசானைக் காண்டோறும் அன்புறுகும் கைகுவியும்
ஆசால் உடம்பும் மயிர்க்கூர்ச் செறியும்
பேசாத வானந்த முள்ளுறும் அக்கணமே
பாசங்க ளடானந்து முக்தி தரும் (46)

குறிப்புரை

***1 - 46 பாடல்கள். 47*** ஆவது பாடல் குறைப்பாடல். இந்நூல் குருதுதி, வேதச்சிறப்பு, ஆகமச் சிறப்பு, அடியார் வணக்கம் என்ற தலைப்புகளோடு தொடங்கி இறைவனை அடைதலுக்குரிய உள்ளப் பக்குவங்களையும், அதற்கான ஆசை துறத்தல் முதலான வழிமுறைகளையும் நல்ல உவமைகளோடு கூறிச் செல்கிறது. செய்யுள் நடை மிகவும் நன்றாக உள்ளது.

## 608. சிவஞானபோதம்

**அ.** ***1:1;*** **ஆ.** *1 - 17* ஏடுகள்; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி
அன்றும் புலனாயவ் வஞ்செழுத்தை யொன்றறிதல்
உள்ளதே யாகி லதுநீ தனித்தனி கண்டு
உள்ளலவை யொன்றில்லை யோர் (1)

முடிவு

சிவமென்னு மந்தர சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாங் கண்வா சகத்திற் - சிவமுண்டாம்
ஒன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவால்
இன்றிந்நூன் மும்மை மலர்க்கு (12)

குறிப்புரை

முதல் நான்கு ஏடுகள் இல்லையாதலால் உளதில தென்றலின் எனதுடல் என்றலின் எனும் மூன்றாஞ் சூத்திரத்தின்

மூன்றாமதி கரணம் "ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி" எனும் உதாரணப் பாடல் 5 ஆம் ஏட்டில் காணப் பெறுகிறது. அந்தக் கரண மவற்றி னொன்றன்றவை எனும் நான்காம் சூத்திரத்திலிருந்து தொடங்கி இறுதி சூத்திரமாகிய பனிரெண்டாம் சூத்திரம் வரை முழுமையாக உள்ளது. இந்நூலின் உரை அச்சாகியுள்ள நூல்களின் உரைகளிலிருந்து வேறுபட்டு மிகச் சுருங்கிய அளவில் அமைகிறது. சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்களுள் இது மூன்றாவது நூலாகும். பதி, பசு, பாசம் என்பனவற்றின் விளக்கங்களைக் கூறி, சைவ சமய முழுமுதல் கடவுளான சிவபிரானின் சிறப்புக்களை இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

தமிழ்நூல் என்றும், மொழிபெயர்ப்பு நூல் என்றும் 19 ஆம் நூற்றாண்டில் பெரிய வாதங்களை உருவாக்கிய பெருமை இந்நூலுக்குண்டு. சமஸ்கிருத நூலான ரவுத்ரா ஆகமம் என்ற நூலின் மொழிபெயர்ப்பு என்பர் சிலர். இதற்குப் பல உரைகள் எழுந்துள்ளன. சிவஞானமாபாடியம், பாண்டிப் பெருமாள் விருத்தியுரை என்பவை பேருரைகளாகும். சாமிநாத தேசிகர் என்பார் சிவஞான போத சூரணைக் கொத்து என்ற பெயரில் ஓர் உரை செய்துள்ளார். சிவஞான சித்தியார் என்ற நூலும் உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவப்பிரகாசம் என்ற நூலும் இந்நூலுக்கு வழிநூல்கள் ஆகும். இந்நூல் ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்ச் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ரெவரன்ட் ஹென்றி ஹாய்சிங்டன் இதனைத் தமிழிலிருந்து 1854 இல் மேற்சொன்ன மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார். 1925 இல் இந்நூல் கழக வெளியீடாக வந்துள்ளது.

சிவஞான போதம் என்பதற்குச் சிவஞான முனிவர் செய்த மாபாடியமே சிறப்பான பேருரை ஆகும். ஆகவே சங்கராச்சாரியார் செய்த சூத்திர பாஷ்யத்துடன் இதனை ஒப்பிட்டுக் கூறுவர். பெண்ணாடகம் என்ற ஊர் விழுப்புரம், திருச்சிராப்பள்ளி தடத்தில் உள்ளது. விருத்தாசலத்திலிருந்து 11 கி.மீ. தூரமுள்ளது. இத்தலத்தில்தான் இந்நூலாசிரியான மெய்கண்டார் தோன்றினார். இப் பெண்ணாடகம் தேவாரத் தலங்களுள் ஒன்றாகும். சம்பந்தரும் அப்பரும் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

திருவுந்தியாரும், திருக்களிற்றுப் படியாரும் சிவஞான போதம் தோன்றுவதற்கு முன்பே இயற்றப் பெற்றவை. ஆயின் திருவெண்ணை நல்லூர் மெய்கண்ட தேவநாயனார் சிவஞான போதமாக மெய்கண்ட சாத்திரத்தை வெளிப்படுத்திய பின்னரே இச்சாத்திரத்தின் சிறப்பு செழித்து வளர்ந்தது. தத்துவரீதியாகச் சுருக்கி நெறிப்படுத்தப்பட்ட முறையில் சைவ சித்தாந்த சாத்திரத்தை முதலில் அருளிய பெருமை இம்மெய்கண்ட தேவரையே சாரும்.

இவரது இயற்பெயர் சுவேதவனப் பெருமாள். பரஞ்சோதி முனிவரால் மெய்கண்டதேவர் என்ற பெயர் இவருக்குச் சூட்டப் பெற்றது. இவர் தான் எழுதிய சிவஞான போதத்திற்கு வார்த்திகம் என்ற பொழிப்புரையை எழுதியுள்ளார். தொடர்ந்து இருபா இருபஃது என்ற நூலையும் இயற்றினார். இவருடைய குலகுருவான சகலாகம பண்டிதரே இவருடைய மாணவனாகி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பன்னிரண்டு சூத்திரங்களில் அமைத்த சிவஞானபோதம் என்ற நூலை விரித்துப் பரபக்கம் சுபக்கம் என்ற இரண்டு பெரும் பாகங்களைக் கொண்ட சிவஞான சித்தியார் என்ற நூலை இயற்றினார்.

இந்நூல் *138:276* என்ற எண்ணில் அமைந்த நூல் போன்றதே.

## 609. சிவஞான போதம்

**அ.** ***292:517*; ஆ.** *6 - 42* (மொத்தம் *13*) ஏடுகள்;. 26.5 x 3.5 செ.மீ.; **இ.** *9* வரிகள்; **உ.** நன்று; இடையில் பல ஏடுகள் இல்லை; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

நூற்பா

கணியாத பவக்கடு வான திருகுகன
வைத்த னுமுவிட் டணுகா துகடும்
பிணியா வையும் நல்ல பிதாவிறை
தாள் பேணிப்பணி யென்றுபெயர்ந் தனனே (15)

முடிவு

ஏட்டில் சிவனறி யிசைதன் னிலியல்
வினதி யிவ்வு டம்பி னுடனே
வீட்டி லுறைவா னையினி வீடு
பேறு மென்பது விளம்பு கிறனே (106)

குறிப்புரை

***15* முதல் *106* பாடல்கள் உள்ளன.** இடையிடையே பல பாடல்கள் இல்லை. பாடலையடுத்து உரை அமைந்துள்ளது. சுவடிக் கட்டு எண் *34* இல் வேறு பல சுவடிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இது தொடர்பான *30* ஏடுகள் உள்ளன. இந்நூல் *1:1* என்ற எண்ணில் அமைந்த நூல் போன்றதே.

## 610. சிவஞானபோத வன்னுவயம்

**அ.** ***138:276;*** **ஆ.** *1 - 26* ஏடுகள்; **இ.** 38 x 3.5 செ.மீ.; **ஈ.** *6 - 7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

கலலா ண்ழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே

என்பது காப்பு.

மலர்தலை யுலகின் மாயிருள்துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதை
காண்டல் செல்லாக் காண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு கண்ணீருள் தீர்ந்
தருந்துயர்க்குரும்பையி னான்மா நாடி
மயர்வற நந்திமுனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்

பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்

என்பது பாயிரம்.

முடிவு

பன்னிரண்டாஞ் சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயலந் தானு மரனெனத் தொழுமே
வேதம் பசுவதன்பான் மெய்யாக மமவற்றின்
ஓது திருப்பாட்டே யுள்ளுறுநெய் - நீதியா
.... ..... ..... ..... ...... .....
நெய்யிற் சுவையாகு நீள்வெண்ணெய் மெய்கண்டான்
சைவத்தா லாய்ந்த தமிழ்
மூன்று மலங்கெடுத்து மூலமா மப்பொருளுந்
தோன்ற வருளுந்தன் தொண்டர்க்கிங் - கான்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடன்ஞாலத் தெப்பொருட்கு
மெய்கண்ட தேகன் விரைத்தாள்.
சிவஞான போத வன்னுவயம் முற்றும் (ஏடு 26)

குறிப்புரை

சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களும் அன்வய நடைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன. உதாரணப் பாடல்களும் உள்ளன. சிவஞான போத நூற்பாக்களைக் கையில் எடுத்துக் கொண்டு செய்யுளில் காணும் தொடரைப் பொருள் பொருத்தமுற ஒழுங்குபடுத்துதல் என்னும் உத்தியைக் கையாண்டு இந்நூல் எழுந்துள்ளது.

## 611. (சிவதத்துவப் பாடல்)

**அ.** ***264:484;*** **ஆ.** *59, 99, 101, 104, 128, 155, :.., 200* எனும் எட்டு ஏடுகள்; **இ.** 21 x 3 *செ.மீ.*; **ஈ.** *9 - 11* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; ஏடுகளில் துளைகள் உள்ளன; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

தடுத்த தொழில் செய்வது தகாதது நமக்கே
யடுத்த தொழில் செய்வது கெடுமெனு மடி...யா
விடுத்த கருமம் பெரிதுசெய் வதனின் மேலோர்
தொடுத்த கருமஞ் சிறிதுசெய் கைதொழி லென்றான்

முடிவு

நூற்படு நெறியுமன்றி துதித்த வாழுதலா யுள்ளோர்
தாற்பிரியமும் வேறறித் தக்கமந் திரமு மன்றின்
யேற்பவர்க் கீதலன்றி யியற்றுறு கின்ற யாகந்
தார்ப்பொலி கின்ற மார்பதாம் தரியாகு மாமே.

குறிப்புரை

**பாடலும் உரையும் உள்ளன.** தத்துவம் தொடர்பான இச் சுவடியிலுள்ள பாடல்கள் முழுமை பெற்று அமைந்து, ஒவ்வொரு பாடலும் ஒரு தத்துவக் கருத்தை உள்ளடக்கி நிற்கின்றன.

## 612. சிவப்பிரகாசக் கட்டளை

**அ.** ***130:244;*** **ஆ.** *1 - 7* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங் களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

| | | |
|---|---|---|
| மகாபூதங்களாவன | - | ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆக ஐந்து, |
| ஞானவிந்திரியங்களாவன | - | சோத்திரம், தொக்கு, சடசு, சின்னுவை, ஆக்ராணம் ஆக ஐந்து, |
| கன்மவிந்திரியங்களாவன | - | வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆக ஐந்து. |
| தன்மாத்திரைகளாவன | - | சத்தப் பரிச ரூபாச கெந்தம் ஆக ஐந்து, |
| அந்தக்கரணங்களாவன | - | மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் ஆக நான்கு |

ஆக இருபத்தி நான்கு. இதற்கு ஆத்தும தத்துவமென்றும், அசுத்த தத்துவம் என்றும், போக்கிய காண்டம் என்றும் பெயர்.

## முடிவு

இனி, சிவயோகமாவது அகண்ட பரிபூரணமாகிய சிவனிடத்தழுந்தி உள்ளும் புறமுமென்னாமற் சிவனையுள்ளபடி கண்டு, இரண்டறப் புணர்ந்திருக்கும். இதுவே சிவயோகம். சிவபோகமாவது, பராசக்தியின் இடமாக நின்று அனுபோகத்துடனே கலந்து பேரின்பமாகிய சிவன் என, தானென இரண்டற அஃகினிக்கு வெண்மை போலவும் நீருக்குட் தட்பம் போலவும் சிவத்திலே அழுந்துமது சிவபோகம் (8)

சிவப்பிரகாசக் கட்டளை முற்றும்

## குறிப்புரை

**உரைநடை.** சிவப்பிரகாசக் கட்டளை எனும் இந்நூல் முதல் ஏழு ஏடுகளில் காணப்படுகிறது. இதனையடுத்து ஏட்டெண் இன்றி 3 ஏடுகள் சற்றுச் சிதைந்த நிலையில் உள்ளன. தொடர்ந்து இச்சுவடியுள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் போன்ற 22 நூல்கள் காணப்படுகின்றன. திருவுந்தியார் முதல் நூலாகவும் மும்மணிக்கோவை இறுதி நூலாகவும் ஒன்று முதல் 175 ஏடுகளில் காணப்படுகின்றன. இதே சுவடியில் பக்க எண் 175 முடிந்தபின் 34 வெற்றேடுகள் காணப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து 'சிவப்பிரகாசக் கட்டளைச் சிந்தனை' (நூல் எண். 266) என்னும் நூல் இடம் பெறுகின்றது. இந்நூல் சிவப்பிரகாசக் கட்டளையைக் காட்டிலும் சற்று விளக்கமாக அமைந்துள்ளது. கட்டு எண் 130 இல் 300 க்கும் மேற்பட்ட ஏடுகள் உள்ளன. இதன் ஆசிரியர் சிவப்பிரகாசர். இவர் திருவாரூரில் சைவ சித்தாந்த மரபில் தோன்றியவர். சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை விளக்கிக் கூறுவதே இந்நூலின் கோட்பாடாகிறது. அவ்வகையில் இந்நூல் ஒரு வரைமுறை செய்யப்பட்டசைவ நெறியை விளக்குவதாகிறது. 96 வகை தத்துவங்கள், பஞ்சபூத விளக்கம், காற்றின் சுழற்சி, ஐம்புலன்கள் பற்றிய தத்துவப் பயன்பாடுகள்

முதலியன முதல் பகுதியிலும், இரண்டாம் பகுதியில் உயிருக்கும் வேகத்திற்கும் உள்ள ஒற்றுமை பற்றியும், இவ்விரண்டும் பிரபஞ்சத்தில் அது கொள்ளும் மாற்றங்கள் பற்றியும், சிவபிரானின் தத்துவச் சிறப்பும் எடுத்தியம்பப் படுகின்றன. சித்தாந்த நூல்களின் அடிப்படையை விளக்கும் சித்தாந்தக் கட்டளை நூல்கள் ஐந்தினுள் இதுவும் ஒன்று.

கட்டளை நூல்கள் உரைநடையிலேயே அமைந்திருக் கின்றன. ஒருசில கட்டளை நூல்களாவன: 1. சிற்றம்பல நாடிகள் இயற்றிய சிற்றம்பல நாடிக் கட்டளை (14 ஆம் நூற்றாண்டு), 2. பூவை. அட்டாவதானம் கலியாண சுந்தர முதலியார் இயற்றிய அத்துவாக் கட்டளை, சேசாத்திரி சிவனார் இயற்றிய ஞான சிவவாதக் கட்டளை அல்லது தத்துவக் கட்டளை, வேதசிரோன்மணி சிதம்பர சுவாமி இயற்றிய உபதேச உண்மைக் கட்டளை, சிவப்பிரகாசர் இயற்றிய திருவாலவாய் கட்டளை ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

இந்நூலாசிரியர் பிறந்த ஊர் புன்கூர் என்பதாகும். இது மூவர் பாடிய தேவார சிவதலங்களுள் ஒன்று. இத்தலத் திறைவன் சிவலோகநாதர், இறைவி சொக்கநாயகி. இத்தலத்திற்கு ஒரு கதை உண்டு. இங்குள்ள நந்தி இறையின் ஆணையை ஏற்று திருநாளைப் போவார் நாயனாருக்காக விலகியதாகக் கூறுவர். இன்றும் கற்சிலையாக உள்ள நந்தி சற்று விலகியே காணப்பெறுகிறது. கோபாலகிருஷ்ண பாரதி இந்தப் புராணக் கதையைத் தனது நந்தனார் கீர்த்தனையில் ‘சற்றே விலகியிரும் பிள்ளாய்’ என்ற வரியின் வாயிலாகக் கூறுவது காணத்தக்கது.

*130:266; 163:346; 268:490* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இதுபோன்றவையே.

## 613. சிவப்பிரகாசக் கட்டளை

**அ. *163:346;* ஆ.** *1 - 11* ஏடுகள்; இ, 26 x 3.5 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** பல ஏடுகள் முறிந்தும் சிதைந்தும் உள்ளன; இடையிடையே சில ஏடுகள் இல்லை; **ஊ.** கடினம்; **எ.** குறை. (இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 130:244 போன்றது.

முடிவு

துரியத்திலே பிராணவாயு நிற்க மற்றவுள்ள மொன்று மூலாதாரத்திலே யடங்கினவ்விதந்துரியா தீதமிப்படி கீழால் வதன்தயைத் தெரிசிப்பானிதாணவத்தைக் கேவலமென்றுங் கொள்க. இப்படி கேவலாவத்தையைப் பொருந்திய தீதப்பட்டுக் கிடக்கும் வதந்ததிறுணர்த்து முறைமை யெங்ஙனேயென்னில்...

குறிப்புரை

சிவப்பிரகாசக் கட்டளை என்னும் தலைப்பு முதல் ஏட்டில் கொடுக்கப் பெற்றுள்ளது. இதைத் தவிர தொடர்ச்சியான கருத்துகள் எவையும் இல்லை. ஏனெனில் பல ஏடுகள் இடையிடையே இல்லை. இவை இரண்டு திருவிருத்தம் தீர்த்தப் பிரசாதத்தின் மகிமையு.. என்று முணர்த்தியது (37) என்பன போன்ற சில தொடர்களை மட்டுமே இடையிடையே காண முடிகிறது. 100 க்கு மேற்பட்ட ஏடுகளையுடைய இச்சுவடியில் 11 ஏடுகள் மட்டுமே கிடைத்துள்ளன. 130:244; 130:266; 268:490 என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 614. சிவப்பிரகாசக் கட்டளை

**அ.** ***268:490***; **ஆ.** *27 - 38* ஏடுகள்; **இ.** 20.5 x 3 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; இறுதி ஏடு சிதைந்துள்ளது; **ஊ.** படிக்கக் கூடிய எழுத்து; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 130:244 போன்றது.

முடிவு

... நின்று ஒன்பது குணங்களாலேயும் பேதிப்பித்து பொய்யை, மெய்யென மயங்கா நிற்கு மாற்று மாதினாலே செனனமரண... பபட... வருமிதற்குச் சிலாவத்தையென்றும் பெயர். அறுசாமங்கமுற்றும். இனி அத்தாவத்தையின்

காரியமான நின்மல வத்தையின்றே..ரிசனம். அமுதப்படி யென்னிலிவனுக்குக் கனம் வொப்பு மலப்பரிபாக முண்டாவை வதரத்திலே ஞானாசாரியனாலே ஞானரூ பத்தைப் பெற்ற காலத்துச் சிவனையும் மாதாவையும் பாசத்தையு முணர்த்த உணர்ந்த காலத்து அருட்படு மவதா மெங்ஙனே...

## குறிப்புரை

***130:244; 130:266; 163:346; 268:490*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 615. சிவப்பிரகாசக் கட்டளைச் சிந்தனை

**அ. *130:266;* ஆ.** *33* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** 9 - *10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.**முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

மகாபூதங்களாவன - பிருதவி, அப்பு, தேயு, வாயு,
ஆகாசம் ஆக ஐந்து
இதற்குப் பூதங்களென்று பேர் வருவானே னென்னில்
பிண்டமும் அண்டமும் புவனமு மாயிருத்த லாலே.
ஞானவிந்திரியங்களாவன - சோத்திரம், தொக்கு, சட்சு,
சின்னுவை, ஆக்ராணம் ஆக ஐந்து. இதற்கு
ஞானவிந்திரியங்களென்று பேர் வருவானேனென்றில்-
அவையங்களாவன யான்மாவுக்கு வறிவு
சீவித்தறகிடமாயிருத்தலாலே.
தன்மாத்திரைகளாவன - சத்தப் பரிச ரூபரசகெந்தம்
ஆக ஐந்து
இதற்குத் தன்மாத்திரைகளென்று பேர்வருவானே
னென்னில்
தந்த மிந்திரியங்களிடமாக நின்று விளங்குதலாலே.
கன்மவிந்திரியங்களாவன - வாக்கு, பாதம், பாணி,
பாயு, உபத்தம் ஆக ஐந்து.

இதற்குக் கன்மவிந்திரியங்களென்று பேர் வருவானேனென்னிற் தொழிற்படு மவையங்களாயிருத்தலாலே. அந்தக் கரணங்களாவன - மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் ஆக நான்கு.

இதற்கு அந்தக் கரணங்களென்று பேர் வருவானேனென்னிலுள்ளே நின்றறிகையாலே. ஆக ஆன்மதத்துவம் 24. இதற்கு ஆன்ம தத்துவமென்று பேர் வருவானேனென்னிற் றான்மாவுக்குத் தனு, கரண புவன போகங்களாயிருத்தலாலே.

## முடிவு

சிவபோக மவையாவன - தன்னைச் சுட்டாமலச்சிவத்துள்ளே யிரண்டறப் பொருந்தின விடத்திலப்பராசத்தியினிடம் அனுபோகத்து டனே கலந்துமவ்விடத்துப் பேரின்பமாகிய சிவத்துடனே யிரண்டறறக்கினியுஞ் சூடும் போலவும், நீருங் குளிர்ச்சியும் போலவுமழுந்திப் பேரின்ப வீட்டைப் பெற்றி ருத்தலெனவறிக. சிவப்பிரகாசக் கட்டளைச் சிந்தனை முற்றும்.

## பிற்குறிப்பு

பிலவங்க வருசம் அற்பசி மாதம் ஒன்றாம் தேதி சுப்பிரமணிய ஓதுவார் கையெழுத்தா லெழுதி நிறைந்தன.

## குறிப்புரை

இந்நூலுள் அ - ன வரை உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் (12+18) ஏட்டின் எண்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அகரத்தைத் தொடர்ந்து தமிழ் எண்கள் (க, ங) கொடுக்கப்பட்ட இரண்டு ஏடுகள் உள்ளன. சிவப்பிரகாசக் கட்டளை எனும் சுவடிநூல் போலவே இருப்பினும் அதைக் காட்டிலும் இந்நூல் விரிவாக அமைந்துள்ளது. தோற்றமொடுக்கம், குணந்தொழில், வித்தியா தத்துவம், கீழாலவத்தை, மத்தியாலவத்தை என்னும் தலைப்புகளில் நூற்பொருள் இடம் பெறுகின்றது. இச்சுவடிக்கு எண் தரப்பட்டுள்ள முறை புதிய முறையாகவுள்ளது.

130:244; 163:346; 268:490 என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 616. சிவப்பிரகாசம்

**அ.** 1:4; **ஆ.** 123-147 ஏடுகள்; **இ.** 22 x 3.5செ.மீ.; **ஈ.** 8-9 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார் வரும்ஆனை கழல்நாளும் மறவாமல்
அளியாளும் மலர்தூவும் அடியார்கள் உளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே (1)

முடிவு

திருவருள்

திருவருள் கொடுத்து மாற்றிச் சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளிய மாற்றால் விளம்பிய ஏது நோக்கிப்
பெருகிய உவமை நான்கின் வெற்றியில் நிறுவிப் பின்முன்
தருமலை வொழியக் கொள்வேன் தன்மையிற் சாற்ற
லாமே (100)
பெருநூற் பொருளைப் பின்முன் மலைவற
அருளுடன் கொள்பவர்க் கமைத்தநூ லென்றது.

குறிப்புரை

**1-100 பாடல்கள்.** சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்ற நூல்களின் பிழிவாக, சராமாக இது அமைந்துள்ளது. இந்நூல் ஆசிரியர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இந்நூல் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாக அமைகிறது. இந்நூல் "பொது, உண்மை" என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொன்றுக்கும் ஐம்பது ஐம்பது திருவிருத்தங்களுள்ளன. இதில் பொதுப்பகுதி என்பது உயிரானது உடம்பொடு கூடிய நிலையில் பெறும் அனுபவத்தையும், உண்மைப் பகுதி என்பது முத்தி நிலையையும் விளக்குகின்றது. மாயை, தத்துவம், பஞ்சமலங்கள், சத்திபாதம், முத்தி பேதம், ஆன்ம தரிசனம்,

ஆன்ம சுத்தி, ஆன்மலாபம், இறையது உண்மை, முருகனது பெருமை, தேசிகன் பெருமை, யோகத்தன்மை, ஞான விதி, சத்தியின் மூவிதத் தன்மை, படைக்க வரிய பரிசு, மாயையின் வாக்கு, சுத்த, அசுத்த மாயையை வகுத்தது, ஆயவும் போகமும் சாதியுமாய் உரு, சுத்த தத்துவம், கலைவித்தை, தன்னிலைத் தத்துவம், ஐந்தவத்தை, தன்னை உணர்தல், வினையை உணர்தல் என்பன போன்ற பல பொருள்களை உணர்த்துவதாய் பெருநூல் பொருளை மலைவற உணர்த்தும் அரிய நூலாக விளங்குகிறது.

பிறசமயத்தினர் கூறும் குறைகள் பட்டியலிடப்பட்டு, அதற்கு விடை தருவது போல் நூல் அமைந்துள்ளது.

சைவ சித்தாந்த நெறிமுறைகளை விளக்கும் நூல்களில் இது தலைசிறந்ததாகும். இந்நூல் 101 திருவிருத்தங்களைப் பெற்றுள்ளது. பசு, பதி, பாசம், பொது என்ற பொருண்மைகளில் இந்நூல் விளக்கப்பெறுகிறது. சைவ சமய பண்டார சாத்திரமான 14 நூல்களைக் கற்பவர்கள் இந்நூலை ஓதிய பின்னரே முழுமை பெறுவர்.

இந்நூலுக்கு நந்தி சிவாக்கர யோகிகள், இலக்கணம் சிதம்பரநாத முனிவர், நல்லசிவதேவன் ஆகியோர் சிறப்புறு உரைகள் செய்துள்ளனர். 1967 இல் சிவபிரகாசத்துக்கு உரை எழுதிய திரு டி.எஸ். மீனாட்சி சுந்தரம் பிள்ளை மேற்சொன்ன உரைகளைப் பின்பற்றியே உரைசெய் துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சிவப்பிரகாசம் என்ற பெயரில் நூலாசிரியரே ஓர் உரை செய்துள்ளார். இந்நூலின் 101 பாடல்கள் கூறும் பொருண்மைகளை உள்வாங்கி திரு. சீனிவாசாச்சாரியார் என்பார் 1960 ஆம் ஆண்டு சிவப்பிரகாசம் சீர்மைக் கட்டுரை என்ற பெயரில் செய்யுள் வடிவிலான நூல் ஒன்றினைச் செய்துள்ளார். திரு.கா. சுப்பிரமணியம் பிள்ளை என்பார் சிவப்பிரகாசம் என்ற பெயரில் 1961 ஆம் ஆண்டில் உரைநடையில் அனைவரும் எளிதில் விளங்கும்படியாக ஒரு நூலைச் செய்துள்ளார். H.R. Hoisington என்ற மேலை நாட்டு அறிஞர் 'Light of Siva'என்ற பெயரில் ஆங்கிலத்தில் இந்நூலை மொழிபெயர்த்துள்ளார். மதுரை சிவப்பிரகாசர் சிந்தனை உரைகாரர், இலங்கை மு. திருவிளங்கம், மதுரை ஞானப்பிரகாசர், திருமாமலை ஆகியோரும் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளனர்.

இதற்கு உரையாகப் புன்கூர் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசக் கட்டளை என்ற நூலை இயற்றியுள்ளார். சிவப்பிரகாசத்தின் கருத்துக்களைச் சூத்திரங்களின் வடிவில் காழி பழுதை கட்டிச் சிற்றம்பல நாடிகள் என்பவர் சிவப்பிரகாசக் கருத்துரை சூத்திரம் என்ற நூலாக இயற்றியுள்ளார்.

இந்நூலாசிரியர் இயற்றிய பிற நூல்களாவன: 1. கொடிக்கவி, 2. சங்கற்ப நிராகரணம், 3. போற்றிப் பஃறொடை, 4. வினாவெண்பா, 5. நெஞ்சுவிடு தூது, 6. திருப்பதிக்கோவை, 7. ஞானபூசை, 8. ஞான தீட்சை, 9. பெரியபுராண சாரம், 10. வைப்புத் திருத்தொகை. இந்நூலினைச் சண்முக சுந்தர முதலியார் சென்னை, தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் 1872 இல் பதிப்பித்துள்ளார்.

*117:227; 130:250; 135; 273, 167: 351* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. காவை அம்பலவாண முனிவர் செய்த சிவப்பிரகாசம் என்பது இந்நூலினின்றும் வேறானது.

## 617. சிவப்பிரகாசம்

**அ.** ***117:227;*** **ஆ.** *2-47* ஏடுகள்; **இ.** 27.5 x 3.5செ.மீ.; **ஈ.** *6-9* வரிகள்; **உ.** நன்று; முதல் ஏடும் இறுதிப் பகுதி ஏடுகளும், சற்றுச் சிதைந்துள்ளன **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச்சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது. அச்சு நூலிலிருந்து இந்நூல் முழுமையாக மாறுபடுகிறது.

தொடக்கம்

நாளைய தரமறு குலதெமக் கெளிதரு சிவப்பிர காசங்
காளியா மெனத்திரிந்த வன்பணி புரிந்தரிய வீட்டைக் கில்லாய்
கேளையோ மனையாதி யவலத் திலேகிடந் துழைத்தனை
நெஞ்சே
நாளை யோலையுந் தூதரும் வரினிவர் துணைகொலோ
நவில் வாயே

என்பது - அசுரர் முதலாய்த் தாபர மீறாகச் சொல்லப்பட்டு எழுவகைப் பிறவித் துன்பங்களையுந் துடைத்தல் செய்யுமரிய திருவடிகளைக் கொடுத்ததற்குப் பக்குவனென்

றும் வாக்குவனென்றும் பாராது அருமைப்படுத்தாதெமக் கெளிதிற்றந்த சிவப்பிரகாசரென்னு நாமதேயத்தை அவரது திருவுளத்திற்குப் பாங்காய் நடந்து கொண்டவர் தேவர் பணிவிடைகளைச் செய்து யாவர்க்குமரிய வீட்டினை யடைந்தாயில்லை....

முடிவு

எழிச்சி டும்பவப் பகைவிரைந் துள்ளமே
யோதுமூதுரை வோர்முற்
பழிச்சு பாடலை யரற்கலை விடற்கிளம்
பாவையருரை போலுங்
கழிச்சி டேலுப சாரமென் றிதனைநீ
கட்டுரையெனக் காண்பாய்
விழிச்சு மாரனை யெரிச்சதே வருள்பெறும்
விருப்பினர்விருப் பீதே

(எ-து).... பிறவியாகிய பகையதிசீக்கிரமா யொழிந்து பேர் முதலியர் மூவர் மாணிக்கவாசகர் முதலாகிய பேரறிவினை யுடையோர் முன்னாளிற் தோத்திரம் பண்ணிய பாடல்களை நெஞ்சும் நீ தோத்திரம் பண்ணுதி.....

குறிப்புரை

தாளைப்பெறுதல், துணைபெறுதல், நாலுவேதமும் ஒரு சமநிலை போன்ற பலநிலைகளைப் பெற்று அடைந்தா யில்லை என்று நெஞ்சினுக்குக் கூறுவதாயமைந்த பாடல் களைக் கொண்டுள்ளது. பலவகைச் சான்றுப் பாடல்களுடன் கூடிய உரையுடன் உள்ளது. நல்ல நடையுள்ளது. தவறின்மை குறிப்பிடத்தக்கது. கெடுவதாம், அன்றெனக்குநீ, பூசை செய்து, செய்யுன, நாமற்கரிச்சனை, நீ மெஞ்ஞான, புகலரும், நெஞ்சமேயினி, மறத்தலும், ஒன்றுநஞ்செய லில்லை. என்றும் வீட்டை, வீடு கூட்டுவான், வாழலாமான, இருப்பை நாமொரு, ஆமையாருறுப, தாயுமாகுயென, சதுமறைப் பொருள், என்னைக் கண்டுநீ, பெறுவதென்னை, ஆதரித்தவனை, நினைப்பினும், இன்று சூழ தருவனிதை, போற்றி நீரணி முதலான தலைப்புகள் உள்ளன. *1:4; 130:250; 135:273; 167:351* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இதுபோன்றவையே.

## 618. சிவப்பிரகாசம்

**அ.** ***130:250***; **ஆ.** *89-104* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9-10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம், முடிவு 1:4 போன்றது.**

**பிற்குறிப்பு**

பெருநூற்பொருளைப் பின்முன் மலைவர் வருளுடன் கொள்பவர்க்கு அறைக வென்றது திருவருளென்றுங் குருநூல் கொடுப்பது - சிவப்பிரகாசம் முற்றும். தவப்பிரகாச சற்குரு திருவடிதுணை.

**குறிப்புரை**

**ஒன்று முதல் 100** பாடல்கள். *1:4; 117:227; 135:273;* ***167:351*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 619. சிவப்பிரகாசம்

**அ.** ***135:273;*** **ஆ.** *1-33* ஏடுகள்; **இ.** 24.5 x 3செ.மீ.; **ஈ.** *6-7* வரிகள்; **உ.** நல்ல நிலை; **ஊ.** அழகிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம்**

ஓங்கொளியா யருண்ஞான மூர்த்தி யாகி
  யுலகமெலா மளித்தருளு முமையாள் காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் தங்கைத்
  திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்று
  ணின்றிமையோர் னுதிசெய்ய நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும் !
  புந்தியிலு முறவணங்கிப் போற்றல் செய்வாம்.
மன்னிய கடவுள் பொன்னடி வாழ்த்தி
  முன்னவ னுண்மை முறைமையான் மொழிந்தது.

முடிவு 1:4 போன்றது.

பிற்குறிப்பு

பெருநூற் பொருளைப் பின்முன் மலைவற வருளுடன் கொள்பவர்க் கறைந்தநூ லென்றது இந்தச் சிவப்பிரகாசம் கொற்றங்கொடி முதலியார் அருளிச் செய்தது.

குறிப்புரை

***1-100* பாடல்கள். *1:4; 117:227; 130:250; 167:351*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 620. சிவப்பிரகாசம்

**அ. *167:351;* ஆ.** *60-85* ஏடுகள்; **இ.** 24 x 4 செ.மீ.; **ஈ.** *9-10* வரிகள்; **உ.** சில ஏடுகள் செல்லரித்து உள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:4 போன்றது.

பிற்குறிப்பு

திருநெல்வேலி வீரராகவபுரத்திலிருக்கும் இராமப்பன் கையெழுத்து

குறிப்புரை

***1-100* பாடல்கள். *1:4; 117:227; 130:250; 135:273;*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 621. சிவப்பிரகாச விகாசம்

**அ. *126:239;* ஆ.** *1-60* ஏடுகள்; **இ.** 24 x 3செ.மீ.; **ஈ.** *8-9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

காப்பு

எடாஅக் கரத்தி லேழிலங்கு சமகப்
படாஅக் கருத்தறப் பாகரைத் தாள்களாற்
நடாஅக் கழற்றத் தளைவிடுஞ் சிற்சவக்
கடாஅக் களிற்றைக் கருத்தி லிருத்துவாம்

பொன்டிரை கடுக்கை வேணி புகன்றவா கமக்கு ளத்தைத்
தன் பெயர் விகாச நாமச்சரு
குன்றைவிற் குழகன் கூவநற் சரிதற் தன்னைத்
தென்றமிழ்க் கவிபு னைந்த சிவப்பிர காசன் நானே (1)

நீர்கொளும் படர்சடை நிலவெ றிப்பமென்
றார்கொளும் பரன்றிருத் தாளி றைஞ்சினான்
சீர்கொளுஞ் சிவாகமந் தெரிந்து கூறுவன்
பார்கொளும் பதிபசு பாசத் தன்மையே. (12)

முடிவு

சகலசிவா கமப்பொருளுந் தெரிந்து கூறத்
தக்கசிவப் பிரகாச னுரைத்த நூலுள்
விகலமறு பொருளதனை விளங்கு முத்தி
மிடியகன்று வாழ்வுபெற வேண்டு வார்கட்
ககலமுறு மறிவானந் தங்க ளெய்த
வருளினா லளிப்பவனை யார ணங்கள்
புகலுறுமொண் சிவனெனக்கட் புலத்திற் காணப்
போந்தினனென் றுலக்கமெலாம் போற்று நின்றே (56)

ஆகத்திருவிருத்தம் 333
சிவப்பிரகாசன் திருவடி வாழ்க
தவப்பிர காசந் தானே வருமே....

பிற்குறிப்பு

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளருளிச் செய்த சிவப்பிரகாச விகாசம் முற்றும். விரோதிகிருது வருசம் மாசி மாதம்.

குறிப்புரை

***1-333* விருத்தங்கள்.** வீரசைவ நூலாகிய இந்நூல், சிவாகமம், பதிபேதவியல், பசுமரபு, பாசமரபு, பிரளயத்தெரிதல் என்னும் இயல்களை உடையது.

இச்சுவடியில் முதல் ஏட்டில், "சிவப்பிரகாச விகாசம், பெரிய நாயகி விருத்தம், பெரியநாயகி விருத்தம் (வேறு), சதமணிமாலை இந்நான்கும் அடங்கியிருக்கின்றன" என்ற குறிப்புக் காணப்படுகிறது. ஆயின் இந்த ஒரு நூல் தவிரப் பிற நூல்கள் இல்லை.

## 622. சிவபோகசாரம்

**அ.** ***138:283;*** **ஆ.***45-52* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *6-7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதுபோன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

சித்திதரு நாத ரென்கமலை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன் - முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாத னங்குருநா தன் (1)

முடிவு

தில்லை வணங்கா சிறிருவா ரூர்மாயூர்
முல்லை வனங்கூடன் முதுகுன்ற - நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணைக் காளாத்தி
வாஞ்சியமென் முத்தி வரும் (10)

சிவபோகசாரம் முற்றும்.

குறிப்புரை: சிவபோதசாரம்

***1-10* பாடல்கள்.** ஞானப்பிரகாசருக்குப் பெருமை சேர்க்கின்றது. இறைத்தலங்களுக்குச் சென்று வணங்குதலும், குருவைப் போற்றுதலும் முத்திக்கு வழி வகுக்கும் என்பதை நூல் எடுத்துரைக்கின்றது. மேலும் இந்நூல் யோக

நெறியில் சிவத்தை அடைந்த ஒரு சிவநேயனின் பேரின்ப நிலையை விளக்குகிறது. ஆணவத்தை நீக்கிய இறையோடு பதிசேரும் பேரின்பப் பேரானது, எல்லா உயிர்க்கும் பொதுத்தன்மை ஆனதே என்றும், அதனை உணர்ந்து அவ்வழி செல்லுதற்குக் குருவருள் இன்றியமையாதது, குருவருள் வேண்டப் பெற்றோர் கள்ளம் நீக்கிய உள்ளத்தராய், ஆணவமற்றவராய், ஐந்தெழுத்தாம் சிவதத்துவத்தை நாளும் போற்றுபவராய் இருத்தல் வேண்டும் என்றும் நூல் வலி யுறுத்துகிறது. சாரம் என்பதற்குப் பொருண்மை என்றும், போகம் என்பதற்குப் பேரின்பம் என்றும், பேரின்பம் என்பது சிவமே என்றும் இந்நூலின் தலைப்பு கூறுவதால் இந்நூல் சிவபோக சாரம் என வழங்கப் பெறுகிறது.

இந்நூலாசிரியரின் பெயர் குருஞான சம்பந்த சுவாமிகள். இவர் 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் இயற்றிய பிறநூல்கள் வருமாறு: 1. சொக்கநாத வெண்பா, 2. சொக்கநாதக் கலித்துறை, 3. ஞானப் பிரகாச மாலை, 4. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், 5. சோடச கலாப்பிரசாத சட்டகம், 6. முத்தி நிச்சியம், 7. நவரத்தின மாலை. இவரது இந்நூல்களை எல்லாம் தொகுத்துத் தருமபுரி ஆதீனம் தருமபுர பண்டாரச் சாத்திரம் என்ற பெயரில் வழங்கி வருகிறது. தருமபுரி மடத்தைச் சார்ந்த சோம சுந்தர பிள்ளை என்பார் இந்நூலினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

இவ்வாசிரியர் பெயரால் வழங்கப்படும் பிற நூல்களாவன:

1. ஞானவர்ண விளக்கம், 2. சிவபூசாபத்ததை, 3. பேரானந்தச் சித்தியார்.

திருப்பனந்தாள் காசி மடம் மகாலிங்கத் தம்பிரான் அவர்களால் இந்நூல் 1953 இல் அச்சிடப் பெற்றுள்ளது.

## 623. சிவபோகசாரம்

**அ. 141:300; ஆ.** 57-58 ஏடுகள்; **இ.** 24.5 x 3செ.மீ.; **ஈ. 10-11** வரிகள்; **உ.** நன்று; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதுபோன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஞான வனுபூதி வெண்பாநான் முற்றுங் கற்பதற்கு
தானா தரவினொடுந் தந்தருள்வாய் - நானா
விதவா ரணமேவி யந்துரைக்கு ஞான
மதப ரணமே வரம் (1)

முடிவு

காண்பதும்பொய் கேட்பதும்பொய் காரியம்போல் யிதமாய்ப்
பூண்பதும்பொய் யெவ்விடத்துப் போகமும்பொய் மரணபாகத்
தோற்றியின்ப வெள்ளத்துன்னி யென்னுடசம்பந்தன்
நெறிமுப்ப தொன்றுமே மெய்.
அடிகள் வணக்கம் முற்றும்.

குறிப்புரை

***1-10* பாடல்கள்;** *திருஞான சம்பந்தரின் இறைக்கோட்பாட்டு நெறியைப் போற்றுகிறது.*

## 624. சிவவாக்கியம்

**அ.** ***197:400;*** **ஆ.** *1-14* ஏடுகள்; **இ.** 22 x 3செ.மீ.; **ஈ.** *8-9* வரிகள்; **உ.** சுமார் நிலை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதுபோன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

அரியதோர் நமசி வாய மாதி யந்த மாகியே
ஆறு நூறு கோடி தேவர் அன்று ரைத்த மந்திரம்
பெரிய போர்கள் சிறிய பேர்கள் கற்று ணர்ந்த பேர்களும்
பேதை நாய னோது கின்ற பிழைபொ றுக்க வேணுமே (1)

முடிவு

பாச மான வலையில் நின்று பரத விக்கு மூடர்கள்
ஈசர் கல்லு மாவரோ ஈன மேது யென்சொல்வேன்
மாசில் லாத மேனி சொக்கர் சோதி சொன்ன வாசமே
ஈசன் நாம ராம ராம ராம மென்னும் நாமமே (101)

குறிப்புரை

**1-101 செய்யுள்கள்.** ஆதியாய் அனாதியாய், ஆணுமாய்ப் பெண்ணுமாய் நின்ற இறைவனின் பெருமைகளையும், அஞ்செழுத்து முதலாக ஓது முறைகளையும் தொகுத்துச் சொல்லும் இந்நூல் சிவவாக்கியம் என்னும் பெயர் பெறுகிறது. சந்தப் பாடல்களால் இயன்றது. இது சொற்சுவையும் பொருட் சுவையும் நிறைந்த நூல்.

சிவனே பிரம்மம், உயிர்கள் ஞானமார்க்கத்தின் வழியாக சாயுச்சிய நிலையை அடைந்து அதிலிருந்து ஞானத்தைப் பெறுவது ஒவ்வொரு உயிரின் கடமை. இது எல்லா உயிர்க்கும் உகந்தது. மத வேறுபாடுகள் இன்றி ஒவ்வொரு உயிரும் அது ஏற்றுக் கொண்ட மதத்தின் வழியாகப் பரத்தை அடைவதே ஞானமாகும். அதாவது ஒவ்வொரு உயிரும் 'துரியமும் கடந்து நின்ற தூர தூரமான தூரமே ஞான'மாகும்.

இந்நூலாசிரியர் சிவவாக்கியர். 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். பதினெண் சித்தர்களில் ஒருவர். இந்நூலுக்குச் **சிவவாக்கியம் ஆயிரம் பாடல்** என்ற பெயரும் உண்டு. பட்டினத்து அடிகள் இந்நூலாசிரியரைப் பாராட்டிப் பல பாடல்கள் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலைச் சிவவாக்கியம் என்ற பெயரில் பூவிருந்தவல்லி, கமலாலய விலாச அச்சுக்கூடத்தில், 1876 இல், கந்தசாமி முதலியார் என்பார் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

## 625. சிவானந்த போதம்

**அ.** 138:287; **ஆ.** 80-81 ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ; **ஈ.** 6-7 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதுபோன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

முப்பது வகைப்படு முத்திநன் னெறியினைச்
செப்புவ னமைத்துத் தேச காரியத்திற்
பொறையிலைம் பூதமும் பொய்யென வருளான்
முறையுற நீங்கு முத்திச் சகலமும்

பஞ்ச பூதப் பழிப்புறு முடலு
மைஞ்சு புவன்றனை யறிந்திடும் பொறிகளுஞ்
செறிந்திடும் புலனைத் தெரிந்தி டிற்றனித்
யறிந்திட வறியா வந்தக் கரணமும்
அக்கர ணங்கள் அகல்வ நன்றிடுந்
தக்க கலாதித் தத்துவக் குழுவு
மத்தகு கலாதிக ளகல்வ கன்றிடுஞ்
சுத்தத் துவமுந் துடர்ந்தெழு முயிர்ப்பும்
வடிவுற் கண்டு மலமெனத் தெரிந்து

## முடிவு

நற்பர சிவத்துள் நண்ணுபே பேரின்பஞ்
சிற்பரா னந்த தெரிசன மாகும்
பேறுபரானந்தப் பெருக்கிணைக்க வந்தாங்
குறுவதா னந்த யோகம தாகு
மருந்துமா னந்த வவச மேலிடு
பொருந்திய நிலைசிவ போக மதாகு
மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளினுள்
வையகங் காண்பது மறித்துக் காட்சியே.

*சிவானந்த போதம் முற்றும்.*

## குறிப்புரை

இந்நூலினை இயற்றியவர் கமலை ஞானப்பிரகாசர். இவர் *16* ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சிவ + ஆனந்தம் + போதம் என்பதே சிவானந்த போதம் எனப்படுகிறது. தன்னை உணர்தல், குருவழி உணர்தல், சிவத்தை உணர்தல் ஆகிய மூன்று நிலைகளில் தானே சிவத்தை உணர்தல் என்பதே பேரின்பப் பேறு என விளங்கப் பெறுகிறது. அவ்வகையில் ஆன்மா இறையோடு பெறுகின்ற உவகையே போதம் என்ற பேரறிவு. முழுமையான அறிவு இவ்விடத்தில் சிவம் எனப்படுகிறது. இங்ஙனம் இந்நூல் சித்தாந்தச் செய்திகளைத் தத்துவ நெறியில் விளக்குகிறது.

இந்நூலாசிரியரின் வரலாற்றைச் சிதம்பரநாத முனிவர் கூறியுள்ளதை ஞானப் பிரகாச மான்மியம் என்ற அவரது நூலின் வழியாக அறியலாம்.

கமலை ஞானப் பிரகாசரின் பிற நூல்களாவன: 1. அனுட்டான அகவல், 2. புட்பவிதி, 3. பூமாலை, 4. சிவபூசை அகவல், 5. பிரசாத மாலை 6. அத்துவிதசாரம், 7. அத்துவாக்கட்டளை, 8. அண்ணாமலைக் கோவை, 9. ஆயிரப்பாடல், 10. தியாகராசர் கழிநெடில், 11. சாதி நூல், 12. திருமழுவாடிப் புராணம், 13. திருவானைக்கா புராணம், 14. தியாகராச லீலை (சமஸ்கிருதம்).

கோ. மாணிக்கம் முதலியார் என்பார் சென்னை, மனோன்மணி விலாச அச்சுக்கூடம் வழியாக 1897 இல் இந்நூலை வெளியிட்டுள்ளார்.

167:360 என்ற எண்ணில் இடம் பெற்ற நூல் இது போன்றதே.

## 626. சிவானந்த போதம்

**அ. 167:360; ஆ.** 126 - 127 ஏடுகள்; **இ.** 24 x 4 செ.மீ.; **ஈ.** 9 - 10 வரிகள்; **உ.** ஏடுகள் சிதைந்துள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 132:287 போன்றது.

குறிப்புரை

நூல் 126 - 127 ஏடுகளில் முழுமை பெறுகிறது. ஏடு முறிந்துள்ளதால் காப்புப் பாடலைத் தர இயலவில்லை. இரண்டு ஏடுகளிலும் பாதி முறிந்து விழுந்துவிடும் நிலை காணப்படுகிறது. 138:287 என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இது போன்றதே. ஆயின் அதில் காப்புப் பாடல் தரப்படவில்லை. இந்நூலை அடுத்துச் சித்தியார் சுபட்சத்துக்கு மதம் எனும் நூலின் ஐந்து ஏடுகள் காணப்பெறுகின்றன.

## 627. சிவானந்த போதம்

**அ. 368:609; ஆ.** 1 - 51 ஏடுகள்; **இ.** 26 x 3செ.மீ.; **ஈ.** 5 - 6 வரிகள்; **உ.** வலதுபக்க மேற்பகுதி அனைத்து ஏடுகளிலும் சிறிதளவு உடைந்துள்ளது; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

## தொடக்கம்

சிவாநந்த போதகமாம் சித்தி முத்தி....
சிவாநந்த மானவினை இரவிக்கும்....
ஈசனே தானாகும் என்வடிவித தாள...
பாசமுடன் தொழுபவர்க்குப்.... அரிவைதனை

## முடிவு

என்பது இதைப் படித்தவர்களும், இதனாலே பேறு பெற்றவர்களும், காதினாலே கேட்டவர்களும், எழுதினவன் அடியேனும் அன்புடனே பூசை செய்தவர்களும் வாழி, வாழி, வாழியே. கவிகள் *80*. காப்பு *10*, வெண்பா *5*, கலித்துறை *4*, வாழி *1* ஆகப் பாட்டுகள் *100*.

## பிற்குறிப்பு

சுபானு வருடம் மார்கழி மாதம் 9 ந் தேதி வேலூர்த் தாலுக்கா கரடிக்குடி மணியம் அப்பிகவுடன் குமாரன் கட்டாரித் தாசம்ம நாயடு ச(ஸ)ம்ரணை செய்கின்ற ஞான போத பணிய..த்தல்... இதை யாராவது அன்புடனே படிக்க வேணுமென்ற...தால் மேற்படி தாசம்ம நாயடு அவர்களிட பிரியத்தினால் படித்து உடனே மேற்படி தாசம்ம நாயடு அவர்களிடத்திலே சேர்க்க வேண்டியது. அப்படிச் சேர்க்காமல் ஞான போதனை இல்லாமல் ஞானிகளைத் தூஷிசித்த பாவிகள் நரகில், ஸ்ரீமன்னாராயண மூர்த்தி... நற்பிராப்தி அடைவார். இது எழுதியது சித்தூர் சில்லா வந்தவாசி தாலுக்கா தெள்ளார் க. முத்துசாமி குமாரன் வேலூர் தாலூக்கு கரடிக்குடி கிராமத்தில் கல்வி... வைத்துக் கொண்டு தன் கைப்பட எழுதிக் கொடுத்த ஞானபோத ப..த்தல். காலமகள் துணை. மேற்படி முத்துசாமி குமாரன்....

## குறிப்புரை : சிவானந்த போதகம்

நூலின் தொடக்கத்தில் நூற்பெயர் இல்லை. இறுதியிலிரண்டு இடங்களில் எழுதப்பட்டிருப்பினும் முழுமையாக அறிந்துகொள்ள முடியாதவாறு சிதைந்துள்ளது. பாடல் உரையுடன் இடம் பெற்றுள்ளது. **1 - 100 பாடல்கள்.** மனம் கேள்வி கேட்க அறிவு விடையை விளக்குவது போல்

நூல் அமைகிறது. மானிட திரேகம் கிடைத்த விதம், வினைவழி திரேகமெடுத்தது யாராலே, ஒருவர் செய்த பாவ புண்ணியம் ஒருவருக்கு உண்டென்பது எவ்விதம், இந்த உடலை விடும்போது அடுத்து எடுக்கும் திரேகம் எது, திருவடிப் பயனை வாழ்வின் பிற்பகுதியில் அடைந்தால் போதாதா, திருவடி அடைவதற்கு வழி, முத்தி நிலையைப் போதிக்கின்ற நூல் எது, எந்தச் சாதியாயிருந்தாலும் பெரியோர்களுக்குத் தொண்டு செய்யலாமா, சாதி பிரித்துச் சொல்லுவதனால் குற்றமுண்டோ, தரிசனம் கண்டு கொள்வதற்கு ஏதாவது மார்க்கமுண்டா, ஞானாச்சாரி யாரிடத்தில் அனுக்கிரகம் பெற்றுக் கொண்டால் போறாதா, சாஸ்திரம் பார்க்க வேணுமோ, சாஸ்திரங்களிலே சரியை, கிரியை, யோகம் ஞானமென்று சொல்லுகிற முத்தொழிலும் செய்து முடித்த பின்பு ஞானமறிய ஞானாச்சாரியார் கிருபை வேண்டும், ஞான அனுபோகத்தை இல்லறத்திலே இருந்துகொண்டு பெற்றிருக்கின்றவர்களுண்டோ, குரு துரோகிக்கு முத்தி இல்லை, குருவை வணங்கி நேசிப்பவர்களுக்கு ஏற்படும் பலன், பேதமை என்பது என்ன, இனிமேல் நடக்க வேண்டியதெவ்வாறு, சித்து வித்தைகள் செய்வது எவ்வாறு, பெரியோர்களுக்குத் தொண்டு செய்தால் அன்னம் உண்ண வழி என்ன? இனி பிறவாமல் இருக்க என்ன வழி? தீட்டை, நூல், குருசொல், சாதகம் என்பவையே முத்தி வீடு, செனனம் நீங்கி சிவானந்த போதகமாய்த் தெரிய வழி, சற்குரு கடாட்சம் பெற்றுக் கொள்ளும் வகை, ஓமென்ற முத்திநெறி, நிலைக்க என்று வந்தவரில் தவறிப் போனவர்கள், உடல், பொருள், ஆவி மூன்றும் நீதான் என்று அன்புடன் அடிமை செய்தல், ஞானமென்பதில் உள்ள நூல் வகைகளின் விளக்கம், தான முத்தன், சிவயோகம், மோன முத்தம், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றின் விளக்கம், அறிவு போத மென்ற நூல் பேரின்ப அமுர்த மழை பெய்த நூல், பந்தம் அறுத்த பின்பு, குருவைத் தேடிப் பரமாகி வாழ்ந்தவர்கள் யார் யார்? சிறந்த பத்தி செய்வோருக்குரிய பலாபலன்கள் என்ன முதலான செய்திகளின் வழி இறைவனைக் காண்பதற்கான தடைகள், அவற்றை நீக்கும் முறைகள், மந்திரத்தின் சிறப்பு, ஞானத்தின் மகிமை, பக்திச் சிறப்பு

முதலானவற்றை விளக்குகிறது. தொடக்கத்தில் ஒன்றும், இறுதியில் இரண்டும் ஆக மூன்று வெற்றேடுகள் உள்ளன.

## 628. சுக்கிரன் கதை

**அ.** ***70:111***; **ஆ.** 6 - 72 ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

எழுது வோரு மெழுதிடமு
மெதிர்காண பொருளு மிலதாகி
வழுவிலாத விண்ணிடையே வந்து
தோன்று மோவி யந்தான்
பழுது மேவுந் தனைத்தானே
பாரா நிற்கும் பல்பொறியும்
நழுவு மியல்பி னாலன்றி
நனவால் மேவுங் கனவொக்கும் (1)

முடிவு

பிருகுவு மைந்தன் றானும்
பிறங்கு மந்திரத்திற் காணிற்
றிருகிய சித்த மென்னுந்
தீப்பகை தீர மாற்றி
வருதிரை யிலாத நீர்போல
மாசறு நிலையில் வாழ்ந்தார்
கருணைமா முகிலே யென்று
கற்றுணர் வசிட்டன் சொன்னார் (46)

*சுக்கிரன் கதை முற்றும். ஆக 563. இனி தர்ம வியாள கடர்கதை முற்றும். ஆக 606. இனி வீம்பர் சதிடர் கதை.*

குறிப்புரை

***1-43*** **விருத்தப்பாக்கள்.**

## 629. சுகசனகசம்வாதம்

**அ.** *16:33;* **ஆ.** *19 - 27* ஏடுகள்; **இ.** 24 x 3 செ.மீ.; **ஈ.** *8-9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

### தொடக்கம்

ஸ்ரீசுக சனகாதியளுடைய சம்வாதத்தை நிருபிச்சுக் கிரிரோனாசுகரைச் சனகர் நீர் யாரைய்யா வென்று கேட்டார். சுகர் நான் சொரூபமென்று உத்தரஞ் சொன்னார். சொரூப மெப்படி யென்றார் ராசா.

> **சுகர் வாரு மிராசாவே கேளு**
> **மகண்டச் சித்தானந்த பரிபூரணமா**
> **யவங்க மனசு கோசரமுமாய்**
> **சகலப் பிரபஞ்சா/தாராதிட் டானமுமாய்**
> **மகத்துக்கும் மகத்தா யவஷத்துவுமா**

### முடிவு

யிந்தச் சுகசனகா சம்வாதஞ் சாந்தொக்கிய வுபநிடத்திற் சொல்லப்பட்ட அறத்தைப் பிரா கிருத பாண்டியனான் ஏவு சவுபாாக்கியர் சொன்னார். யிந்த சாஷ்த்திரஞ் சகலமான பேரும் படித்துக் கிருதார்த்தராகவும். சிவசண்முக மெஞ்ஞான தேசிகன் றிருவடி வாழ்க.

> **தானுவினோ டத்துவிதஞ் சாதிக்கு மானவுனை**
> **யாணவத்தோ டத்துவித மாக்கு கின்றார்**
> **கோணர் நீயென் னாணை யென்னாணை**
> **யென்னாணை யேகமிரெண் றெண்ணாமற் சும்மாயிரு.**

### குறிப்புரை

இராசா கேட்கும் கேள்விகளுக்குச் சுகர் பதில் கூறுகின்ற முறையில் இந்நூல் அமைந்துள்ளது. இராசா கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அதிசூட்சமாக சுகர்பிரமரிசி உத்தரங்கூற இராசா மனம் மகிழ்ந்து அனந்தங்கோடி நமஷ்காரம் செய்வதாக நூல் முடிகின்றது. சித்து, சொரூபம், சத்து சித்தானந்தம், தேவானந்தவர் பத்தி, சுகம்,

யிருதையக்கிரந்தி, ஆணவம், சூட்சும தேகம், தூல சரீரம், குரு, சீடன், சிவம், பூரணம், விருத்தி ஆத்மானந்தம், அபரோட்சம், ஆகமம் முதலானவை நூற்கண் விளக்கம் பெறுகின்றன.

## 630. சுகன் கதை

**அ.** ***70:100***; **ஆ.** *17 - 20* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** சுமாராக உள்ளது; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மைம்மல மோக னல்லான் மாய்த்திடும் புதுமைத் தான
செம்மல் வாசகங்கள் கேட்டு திருந்தவை இருந்தோ ரெல்லாம்
இம்மொழி கேட்டார் போல எழுந்த பேருவகை மிக்கார்
விம்மல் சேர்சித்தர் சேனை விண்மிசை களித்த தன்றே (1)

முடிவு

கலைமுனியே நீமொழிந்த படியே செய்வன்
கற்றுணர்ந்த பெரியோர்சொற் கடப்பார் யாரே
நிலையில்பல மயக்கமற பதும வேதா
நிட்டமலை மேலுரைத்த நிமல ஞானந்
தொலைவில் பரபத மேவற்குந் தோன்றுமாறு
சுத்தவினை யத்தினுடன் சொல்வ தானான்
அலைவறுநற் பெரியோர்கள் செவிக் கமுத மாக
வரிசையது வசிட்டமுனி அறைய லுற்றான். (25)

குறிப்புரை

***1 - 25* பாடல்கள் உள்ளன.** ஞானவாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாக இந்நூல் அமைகிறது.

## 631. சுரகு கதை

**அ.** ***70:123***; **ஆ.** *138 - 144* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஏடுகள் அனைத்தும் சற்று சிதைந்துள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இந்த வொழுங்கா லுணர்வை யுணர்வினா
    லுணர்ந் துலகி லியங்கா நின்றே
யந்த மரும்பெரும் பத்ததே யாறுதி
    யாற்காண் கின்ற தனைத்து மான
சந்ததஞ் சாதித் ததனைப் பெருமளவும்
    நூல்குரவன் றனி நெஞ்சா...
... மறுத்த துவத்தை
    விசாரித்தே பெறவேண்டும் பதுமக் கண்ணாய் (1)

முடிவு

பரந்த சொற்களாய் பயனென்கோ பயனெலாம் பாறிநின்
நிரந்தரஞ் சமமாய் மனசன் றன்னு ளெரிசூழ்ந்து
சுரந்த வின்பமாய் நிகரிலா வொடுவழி தோன்றித்
திரந்தனிற் றெரிகின்ற தாலென் றன்ன தெளிந்தோன்.(45)

*ஆகக்கவி சூத்திரம் 1317. இப்பால் பாசவிலாசர் கதை.*

குறிப்புரை

**1 - 45 பாடல்கள் உள்ளன.** ஞானவாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாக இந்நூல் அமைகிறது.

## 632. சொரூபானந்தப் பொருளாகிய உபநிடதம்

**அ.** *10:26;* **ஆ.** *231 - 260* ஏடுகள்; **இ.** 24 x 2.5 செ.மீ.; **ஈ.** *6* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; ஏடுகளில் ஆங்காங்கே பல துளைகள் உள்ளன; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது. அச்சாகியுள்ள உரையினின் றும் இது வேறானதாகக் காணப்படுகிறது.

தொடக்கம்

மெய்யுடைய அடியார்மேல் விருப்புண் டாக
    கருப்பூர விளக்குப் போலென்
பொய்யுடைய அருள்போதப் பொருளு டையான்
    அருளுடையான் கதை ஐந்தாலு

மையுடைய மனத்தாலும் மயக்குடையார்
மதங்களைத்தா மதங்க ளாக்குங்
கையுடைய முகமுடையா கைமுடையா
னெனக்கருத்தில் இருத்தல் செய்வாம் (எ-து)

முடிவு

இருளகற்று நான்வேதத் துபநிடதென் னான்கோன் சொன்ன
பொருளதனை நெஞ்சகத்தே சௌபாக்கிய குருவெனுமப்
பொருளிடத்தும் படிஅழுத்தித் தமிழ்போலு மதனைஒரு
வழியென்னான்காய்
அருளகத்தில் இருந்துஉரை செய்மவ்வதி செயமற் றருகி லேனே
(எ-து)..

தமிழென்று சொல்லப்பட்ட விருத்த மொழி அறிந்த மாத்திரம் *32* செய்யுளாக அருளாகிய அகத்திலிருந்து சொன்ன எவ்வதிசயமோ தெரியப்படுகிலேன் என்றவாறு *(33)*.

ஆக *136* சொரூபானந்தம் நிறைவேறியது. முற்றும்.

பிற்குறிப்பு

கஞ்சமனாதன் பேட்டையிலிருக்கும் குமார விருப்பாட்சிக்குச் சொரூபானந்தம் எழுதி நிறைவேறியது.

குறிப்புரை

**33 விருத்தங்களும் அதற்கான உரையும் உள்ளன.** நான், தான், அவன், இவன் என்பன போன்ற கற்பனையை அடிப்படையாகக் கொண்டு உழலுகின்ற அடியேனுக்கு இவ்வனைத்தினுடைய மறுநிலைஇது, வேதாந்த உபசாந்தங் களிவை தன்மயமாகிய மௌன வசனமிது என்பன போன்ற வேத உட்பொருள்களாலும், உபநிடதங்களாலும் எடுத்துக் காட்ட இயலாத பொருள்களை உணர்த்தும் தகுதி வாய்ந்தவர் ஞானகுருவே என்று தொடங்கி அத்தத்துவங் களை எல்லாம் குருவானவர் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது இந்நூல். சுத்த அவத்தை, சுத்தபூதம், அவ்விய அவத்தை, வாசனாபூதம், வலியா கிருத அவத்தை, அவற்றின் காரணபூதம், இரணியாகற்ப அவத்தை, அதற்குரிய சூட்சுமபூதம், விராடவவத்தை அதற்கான

தூலபூதம் போன்றவற்றின் தன்மைகள் பலவும் இந்நூலுள் விளக்கம் பெறுகின்றன.

சத்து சித்தானந்தம் என்று சொல்லப்படக் கூடிய சத்து - உண்மை, சித்து - அறிவு, ஆனந்தம் - பேரின்பப் பேறு என்பதனின் உள்ளார்ந்த விளக்கத்தைத் தெளிவு செய்யும்படியாக அமைந்தது இந்நூல். உபநிடதக் கருத்துகளை உள்வாங்கி வேதாந்தத் தத்துவத்தை விளக்குவது இந்நூலின் தனிச்சிறப்பு.

சென்னை, வித்யானுபாலன அச்சு இயந்திரசாலை என்ற அச்சகத்தில், யாழ்ப்பாணத்து நல்லூர் சதாசிவப் பிள்ளை அவர்களால், *1908* இல் இந்நூல் வெளியிடப் பெற்றது. கே. வடிவேலுச் செட்டியார் என்பார் **1925** இல் இதற்கோர் பதவுரையும் விளக்கவுரையும் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

## 633. ஞானகிரியை

**அ.** ***138:282;*** **ஆ.** ஏட்டு எண் 44; **இ.** 38 x 3.5 செ.மீ.; **ஈ.** 6 - 7 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

ஆரம்நி வேதனமே நைவேத்தியம் பானியமும் தாம்பூலமும்
அருளேமுக வாசஉண்டை சிவயமூன்றும் மணிநம்
இரண்டுந் தூபதீபம் சிவபூரணத்தி லிவனிறைவு
திருவா வத்தி பரைதிரு நீற்றுக் காப்பு

முடிவு

அந்தகன் றனக்கோர்கோல் பிடித்தியக்கு
மவன்செய்கை யன்றிவே றில்லை
யிந்தக மெனக்கு முன்செய் நீயா
னெனதெனும் வினைவழி யேறும்
பந்தனன் துயர்க்குமள வில்லைநீக்கு
மறிவிலை பதகனோக் கிரங்கி
யிந்திரன் பூசை புரியிபவனத்து
ளிறைவசற் றிரங் குதவி யல்லே

குறிப்புரை

பாடல்களுக்கு எண்கள் தரப்படவில்லை. நூலுள் பலபாட்டு என்னும் உட்தலைப்பு உள்ளது. துன்பத்திற்கு முன்வினையே காரணம். அத்துன்பம் நீங்க இறைவனடியே உறுதுணை புரியும் என்பதை இந்நூல் கூறுகின்றது.

## 634. ஞானதீட்சை

**அ.** ***138:278;*** **ஆ.** *38 - 40* ஏடுகள்; **இ.** 38 x 3.5 செ.மீ.; **ஈ.** *6 - 7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மன்னுபவ பிறவிகளின் முன்னே செய்த
வைதீகமா தவல்வியான் மருவிச் சைவந்
தன்னில்வளர் சமையவிசே டர்தி யான
சரியைகிரி யாயோகந் தரித்து ஞான
நன்னிலைமை பெறச்சத்தினி பாத மேவி
நாடுமள வினிலிறைவ னருளால் நண்ணும்
பன்னரிய பரகுருமற் றவனை நாளும்
பணிந்துபணி செய்யவந்து பலிக்கு மன்றே (1)

முடிவு

தேசுமிகு மருப்பயின்ற சிவப்பிரகா சத்தின்
றிருந்துபோதுச் சங்கற்ப நிராகரணந் திருத்தி
யாசிலருள் வினாவெண்பாச் சார்வு நூலா
லருளெளிதிற் குறிகூட வணைத்து ஞான

பூசைதக்க கரணமுன்பு கன்றதனிற் புரிந்து
புரிவிக்கச் சிவஞான போதசித்தி வழிநூல்
மாசில்சத மணிக்கோவை முன்னூல் சான்று
மருவுதிரு முறைத்திரட்டு வைத்தனமன் னுயிர்க்கே(8)

ஞானதீட்சை முற்றும்

குறிப்புரை

**1 - 8 பாடல்கள்.** இந்நூலில் சரியை, கிரியை, யோகம் முதலான தத்துவத் தொடர்களின் பொருளும், உரிய தீட்சை முறைகளும் கூறப்பெற்றுள்ளன.

## 635. ஞான தீக்ஷை

**அ.** ***138:280*; ஆ.** ஏட்டுஎண் *43*; **இ.** 38 x 3.5 செ.மீ.; **ஈ.** 6 - *7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

உடற்பொறைவிட் டுயிருணர்வி னுடனடங்கி லண்ண
லுருவிலுரு வொடுக்குநெறி யுயரமை யான
விடத்திலொரு கடத்திலிறை யிருத்தியர னுருவ
மெய்தும்வகை திருநாம மிறைஞ்சி யங்கி
யடுத்ததொரு குண்டத்தறி றண்டி லத்தி
லருச்சித்தா குதியும் பலவழங்கி யட்டமூர்த்தி
தொடைக்கணர னுருவினையா லிதுகவர்க வென்று
தொழுதிருந்து சிவமதனைச் சுத்தி சேர்த்தே (1)

முடிவு

அங்கயனுங் கும்பத்து மரனொருமை யுன்னி
யவனுடவா குதிபண்ணிற் றாகத் தானே
செங்கனல்வந் னதம்பூதச் சிதைவிறகி லவன்றன்
சிரமணுகப் பூரணையைத் திருத்தி நாமம்
பொங்குபுன லிடையாகச் சூழ்ந்து போர்ந்து
புனைமூழ்கி யன்றுமுதற் புனித னன்பர்
மங்கலமார் தரவமுது செய்வி யாண்டு
வாவரவுஞ் செயவருளே மன்னு மன்றே (2)

ஞானாதீக்ஷை முற்றும்.

குறிப்புரை

**1 - 2 பாடல்கள்.** சிவனது திருவடியை அடைய மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் கூறும் நூலாக இது இலங்குகின்றது.

## 636. ஞானபூசா கரணம்

**அ.** *138:279;* **ஆ.** 40 - 43 ஏடுகள்; **இ.** 38 x 3.5 செ.மீ.; **ஈ.** 6 - 7 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

திகழ்சிவப் பிரகா சத்திற் றிருந்திய வகையா லுண்மை
நிகழ்பவ ருடற்செய் கன்ம நேரிடு மளவு முன்போற்
றகவினை புரியார் துயப்புந் தவிந்தார்தனு வெடுத்த
வகமென மருவி யாவு மாற்று மாசாற்ற லுற்றாம் (1)

முடிவு

எண்டோகை யுரைப்பித் தோர்பொலி யம்பின ரெண்ணி யெண்ணி
மண்டிக ழலகு வைத்து மற்றை யத்தொகை வழாமற்
கண்டுளந் தெளிதல் போனமுற் கற்றசொற் பொருள் கருத்துட்
கொண்டுரை பவர்க்கி யாவுங் குறிவழி நடத்த லாமே (30)

ஞானபூசாகரணம் முற்றும்

குறிப்புரை

**1 - 30 பாடல்கள்.** இந்நூல் இறைஞானத்தைப் பெறவும் அவற்றுக்கான பூசைகளை மேற்கொள்ளவும் உரிய காரண காரியங்களை எடுத்துக் கூறுவதாக அமைகின்றது. இதனை இயற்றியவர் அருள் நமச்சிவாய தேசிகர். 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இந்நூல் தருமபுர ஆதீனத்து, சட்டநாதத் தம்பிரான் அவர்களால், 1934 இல் வெளியிடப் பெற்றது. ஞானமார்க்கத்தை அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு இறை நேயனும் தக்க ஆசானைத் தேர்ந்தெடுத் தல் வேண்டுமென இந்நூல் வலியுறுத்துகிறது. அனைத்து இறை நேயரும் சிவப்பிரகாசர் சொன்ன செய்திகளை ஏற்று அவ்வழி நடத்தல் வேண்டும். ஞானமார்க்கத்தை அடைய பூசை சடங்கு முறைகளே ஏற்ற ஊடகம் என இந்நூல் இயம்புகிறது. இவ்வாசிரியரின் பிற நூல்களாவன: 1. ஞானபூசாவிதி, 2. ஞான தீட்சாவிதி, 3. ஞான அந்தியேட்டி, 4. போசன விதி. இந்நான்கு நூல்களோடு ஞான

பூசாகரணத்தையும் இணைத்து **ஞான சாத்திரப் பஞ்சகம்** என வழங்குவது மரபு. இவ்வைந்து நூல்களும் சிவப்பிரகாசரின் சிந்தனைகளை அடியொற்றியே சொல்லப் பெற்றுள்ளன.

இந்நூலாசிரியர் தொடக்கத்தில் மறைஞான சம்பந்தரின் மாணவராக விளங்கினாலும், பிற்காலத்தில் கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியரால் அருள் பாலிக்கப்பட்டவர். இவ்வாசிரியர் அக்காலத்தில் ஒரு வீட்டின் உப்பரிகையில் வாழ்ந்ததால் இவரைப் பொதுமக்கள் மச்சு செட்டியார் என விளித்தனர்.

## 637. ஞானபூசாகரணம்

**அ**. ***167:357;*** **ஆ**. *121 - 124* ஏடுகள்; **இ**. 24 x 4 செ.மீ.; **ஈ**. *9 - 10* வரிகள்; **உ**. நன்று; **ஊ**. தெளிவு; **எ**. முழுமை; **ஏ**. இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 138:279 போன்றது.

குறிப்புரை

இந்நூல் *138:279* என்ற எண்ணில் இடம்பெற்ற நூல் போன்றதே.

## 638. ஞானவாசிட்ட தெளிவு

**அ**. ***130:268;*** **ஆ**. 2 ஏடுகள்; **இ**. 20 x 3 செ.மீ.; **ஈ**. *9 - 10* வரிகள்; **உ**. நன்று; **ஊ**. தெளிவு; **எ**. முழுமை; **ஏ**. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

நிவைற வெளிதின் வந்த நின்னுயர் காட்சி யாலே
வினையெலாந் தவிர்ந்து வெய்யோன் மேவிய கமல மொத்தே
இனையதோ ரின்ப மென்று மியைந்திலென் மழையி லாறா
ணனைதரு மழையு மந்த னண்ணிய கண்ணு மொத்தேன்(1)

முடிவுரை

நிறைபவந்தீ ருபாயநான்கா மிவர்க ளோடு
நிறைநட்பார் பவகடலை நீற்றா ரன்னாய்
குறையுமன மோகந்தீ ரிச்சொற் கேட்பாய்
குணம்விரும்பா திச்சொல்லைக் குறிகொண் டோர்க்கு
மறையுணர்வு வலிதின்வருங்காம மாறி
மயக்கமறுஞ் சரற்கால வாவி நீர்போற்
கறைதவிர்ந்துனீந்தெளியுங் கவத் தோரைக்
களைகள்போன் மிடிமுதலாங் வேலை தாக்காய் (10)

குறிப்புரை

***1 - 10* பாடல்கள்.** ஞான வாசிட்டம் என்ற நூலின் திரட்டே இச்சுவடியாகும். வசிட்ட முனிவன் இராமனுக்கு ஞானம் பெருகும் பொருட்டுச் சொன்ன உபதேச தத்துவங்கள் பல இந்நூலில் கூறப்பட்டு அவை தர்க்கத் தத்துவ முறையில் மக்களுக்கு விளக்கப்படுகிறது.

## 639. ஞானவாசிட்டம்

**அ.** ***10:25***; **ஆ.** *125 - 230* ஏடுகள்; **இ.** 24 x 2.5 செ.மீ.; **ஈ.** *6* வரிகள்; **உ.** நல்லநிலை; ஓரிரு ஏடுகள் சற்றுச் சிதைந்துள்ளன; இடையிடையே ஏடுகள் இல்லை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஞானபரிநாமமான புத்தியுடனே உன்னை நீயே பார்த்துக் கொண்டு ஆனந்தப் பதத்தை அடைவேனென்று சொல்லி சுக்கிரன் சொர்க்கத்திற்குப் போனான். பலி இந்த மூன்று லோகமும் சின்மயமாக அறிந்து திரிசிய தரிசனமில்லாமல் கேவல ஞான சொரூபனாய் நிராபாசனாய் சகல ஜகத்துக்கும் காட்சியாய் பரமேஸ்வரனான ஆன்மா நானேயென்று சிற்சாயையல்லாத சித்து ரூபமும் சர்வ பரிபூரணமும் சர்வமும் சகலமும் அறிவே நிலையாகவும் ஞான சொரூபமான... பரிமமான நிருவாண பதத்தை அடைந்தானென்று வசிட்டர் பலி உபாக்கு ஞானம் சொல்லி

இராமனுக்குப் பின்னையும் சொல்லுகிறார். ஈஸ்வர அனுக்கிரகத்தினாலே உண்டாகவேணும். இந்த அர்த்தத்தில் பிரகலாதன் கதையைச் சொல்லுகிறேன் கேள்.

## முடிவு

இராமசுவாமி நீர் அச்சுதன் அனாதி விஷ்ணு சொரூபன் காரணார்த்தமாய் ஜனனத்தை அடைந்து என்மேலே தயையினாலே இந்த அர்த்தம் கேட்டு, சகல உலோகத்தை யும் பவித்தரம் பண்ணினீர் என்று வினய வாக்கியங்கள் சொல்லி இராமசுவாமியினாலே அனுபவிச்சுக் கொண்டு வசிட்டர் தம்முடைய ஆசிரமத்திற்குப் போனார். இராம சுவாமி சர்வசமனாய்ச் சாந்தனாய் சீவன் முத்தனாய் இராஜ்ஜிய சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார். நீ இந்த அர்த்தத்தை மறவாமல் சித்தத்தில் நிறுத்திக் கொண்டு சுகமாய் இரும் என்று உபதேசித்தது கேட்டுப் பரத்துவாசர் வான்மீக முனீந்திரனுக்குத் தண்டம் பண்ண அனுபவிச்சுக் கொண்டு பரமஞான சம்பந்தனாய் சீவன் முத்தனாய் தன் இச்சையினாலே ஸ்வரித்துக் கொண்டிருந்தார். ஞானவா சிட்ட இராமாயணம் முற்றும். இந்த வாசிட்டம் யாதான் ஒருத்தன் நாற்பத்து மூன்று கதையையும் பரோட்சமாக எண்ணாமல் பரோட்ச அனுபவத்தினாலே அனுபவித்துக் கொண்டால் உடனே சீவன் முத்தி அடைவான்.

## பிற்குறிப்பு

சோபகிருது வருஷம் ஆனிமாதம் குருவாரத்தில் திதி துவாதசியில் பிரதோட புண்ணிய காலத்தில் நாழிகை 16க்கு மேல் கஞ்சநாதம் பட்டென்னும் சேத்திரத்திலே எழுந்தருளி யிருக்கும் சுவாமிகளுக்கும் புதுவை நகரிலிருக்கும் அம்பலவாண வாத்தியார் குமாரன் சுப்பன் ஞானவாசிட்டம் எழுதி முடித்தான். இதிலே, எழுத்துக் குற்றமிருந்தாலும் பொருத்து இரட்சிக்கக் கடவது. சிவமயம்.

## குறிப்புரை

ஞானவாசிட்டம் எனும் இச்சுவடியில் தொடக்க ஏடு இல்லை. பிரகலாதன் கதையைச் சொல்லுகிறேன் என்னும் செய்தி முதல் ஏட்டிலே காணப்படுகிறது. ஏட்டு எண் 125

லிருந்து தொடங்குகிறது. இத் தத்துவ நூலில் பின்வரும் பல கதைகள் கூறப் பெறுகின்றன.

1. பிரகலாதன் கதை, 2. காதியந்திர பிராமணன் கதை, 3. உத்தாளகன் கதை, 4. பாசவிலாசன் கதை, 5. வீதகவ்வியன் கதை, 6. ஆகாசகதி அபாவ உபாக்கிஞானம், 7. நிருவாணப் பிரகரணம், 8 புசுண்டர் கதை, 9. தேவபூசை உபாக்கிஞானம், 10. வில்வ உபாக்கிஞானம், 11. சிலோ உபாக்கிஞானம். 12. அர்ச்சுன உபாக்கிஞானம், 13. சதருத்திர உபாக்கிஞானம், 14. வேதாளன் கதை, 15. சிகித்துவசன் கதை, 16. பகீரதன் கதை, 17. கிராதன் கதை. 18. சகஉபாக்கிஞானம், 19. மித்தியா புருஷ உபாக்கிஞானம், 20, பிருங்கி உபாக்கிஞானம், 21. வியாதன் கதை, யோகபூமி ஏழுக்கு ஆகிய பல கதைகள் உரைநடையில் அடங்கியுள்ளன. இவை வசிட்டர் இராமருக்குக் கூறியதாக அமைந்துள்ளன. இறுதியில் ஒரு வெற்றேடு உள்ளது. இந்நூலில் இடம்பெறும் பல கதைகள் கட்டு எண் எழுபதில் பாடல் வடிவில் இடம் பெறுகின்றன. இவ்விரண்டும் பொருண்மை அடிப்படையில் ஒன்று பட்டவையே.

வசிட்டரால் இராமனுக்கு ஞானம் பெருகும் பொருட்டு உபதேசிக்கப்பட்ட நூல் ஞானவாசிட்டம் என்பது. இது வடமொழியில் அமைந்த இராமாயணத்தில் ஒரு லட்சம் சுலோகங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது என்பர். காஷ்மீர தேசத்து ஸ்ரீ அபிநந்த பண்டிதர் என்பார் இதனைச் சுருக்கி 6000 சுலோகத்தில் லகுயோக வாசிட்டம் என்ற நூலாக்கினார். இந்த ஆறாயிரம் சுலோகங்களையும் தமிழில் ஆறு பகுதிகளும், முப்பத்தேழு கதைகளும் கொண்ட 2055 பல்வகை விருத்தப் பாடல்களால் வீரை ஆளவந்தார் என்பவர் மொழிபெயர்த்துள்ளார்.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு நூலுக்குக் கோவிலூர் மடாலயம் ஸ்ரீ துறவாண்டவரின் மாணவராகிய ஸ்ரீநித்யானந்த சுவாமிகள் சம்சாரதாரணி என்ற பேருரையை மொழிபெயர்த்து இணைத்துள்ளார். இந்த உரையுடன் ஸ்ரீ வாசிஷ்ட சந்திரிகை, ஸ்ரீ வாசிஷ்டதாத்பரியப் பிரகாசம் முதலியவற்றுடன் இணைந்த ஸ்ரீ வீரசேகரம் எனும்

உரையை வீரசேகர ஸ்ரீ சுப்பைய தேசிகர் தொகுத்துள்ளார். இதுவே இப்பொழுதுள்ளவற்றுள் மிகப் பெரியபதிப்பாகும். இது சென்னை வேப்பேரி ஆனந்தாசிரமத்தின் வெளியீடாக *1928* ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

## 640. ஞானவிண்மகன் கதை

**அ.** *70:102*; **ஆ.** 25 - 30 ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

முத்தியை நயந்தோர் செய்கை மொழிந்தநஞ் சகங்கள் தோன்றும்
அத்திற மினிது கேட்பாய் அனுபவர் பேற்றி நாளே
ஒத்துமுன் னிலைபேறு பெற்ற உணர்வுநஞ் சீவ னித்தைச்
சித்தொடு பூமாங் கந்தை முன்னிலை சீவ னென்ப (1)

முடிவு

அயனொடுமால் சங்கரனும் சதாசிவனும்
மிந்திரனும் அருக்கன் தானும்
வியனிலுப சாந்தராம் வேலையினில்
உபாதியெல்லாம் விட்டு நீங்கி
பயனில்சக மென்கின்ற பற்றகன்று
சின்மயமாம் பரம ரூப
உயர்விகற்ப மிலாவடிவா யெங்கும்நிறை
சிவமாகி ஒன்றாய் நிற்கும் (44)

ஞானவிண்மகன் கதை முற்றும்

ஆகக்கவி *233*.

குறிப்புரை

***1 - 44* பாடல்கள்**. ஞானத்தைப் போதிக்கும் வகையில் இதன் கருப்பொருள் அமைகிறது. ஞானவாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாக இந்நூல் அமைகிறது.

## 641. தசகாரியம்

**அ.** *138:295;* **ஆ.** *101–103* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

சிவனுருவ மானந்தஞ் சொருப
  மிச்சா ஞானந் திகழ்கிரியை
சுபாவமசை வற்றுநிற்றன் விசேட
  மாதி யந்தத் தான்றுகை
வியாப கந்தான் புவியில்
  வற்காண்ட லாங்குணங் கருணை
நிறந்தான் பொருந்தினார் பொருந்திய
  தேயாகுங் காட்சி யவமில்
சகாதீதத் தப்புறத்த தாகுமருஞ்
  சுத்திபதை யாதங்க முந்தறானே (1)

முடிவு

நீயிருக்க வென்னறிவில் யான்பட்ட நெட்டூரந்
தீயிருக்குங் கையாயென் செப்புகென போயகலப்
பாவனை செய்வார்க் கரிய பரதர்
சிவாயசிவ தீவினையி லேறயற நொந்தேன்.

*முற்றிற்று.*

குறிப்புரை : தெசகாரியம்.

*சிவன் உருவம் ஆனந்த சொரூபமயமானது என்பது தொடங்கி பத்து வகையான செயல் நெறிகளை முறைப் படுத்திக் கூறுவது ஆதலின் இந்நூல் தசகாரியம் என்னும் பெயர் பெறுகிறது. இதனை இயற்றியவர் சுவாமி நாததேசிகர். 17–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். உயிரானது தனது முயற்சியால் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவதரிசனம், சிவ ரூபம், சிவ சுத்தி என்ற பொருண்மைகளில் உழன்று, ஆணவம், கன்மம், மாயை என்ற முத்தளைகளை*

அறுத்துக் கொண்டு சிவமெய்ஞானத்தில் இணைகின்றது. அதற்கான வழிகளை இந்நூல் விரித்துக் கூறுகின்றது.

சைவ சித்தாந்த நூல்களில் அதிகம் பேசப்பட்டுள்ளது 'தசகாரியம்' ஆகும். ஆன்மா பரம் பொருளுடன் இரண்டறக் கலந்து முத்திப்பேற்றை அடைவதற்கு முன் உள்ள பத்து நிலைகளே தசகாரியம் எனப்படுகிறது. இவற்றைச் சைவ சாத்திரங்களில் பதின்மூன்றாவதான உண்மைநெறி விளக்கம் விவரித்துக் கூறுகின்றது. மேலும் திருவாவடுதுறைச் சந்தானத்துப் பண்டார சாத்திர நூல்களான அம்பலவாணர் தசகாரியம், தட்சணாமூர்த்தி தேசிகர் தசகாரியம் என்ற நூல்களும் தசகாரியத்தைச் சிறப்பாக விளக்குகின்றன. இவற்றைத் தொடர்ந்து தசகாரிய அகவல் என்ற நூலும் எழுந்துள்ளது. குரு ஞானசம்பந்த சுவாமிகள் தமது சித்தாந்த அட்டகத்தில் திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் என்ற நூலை அருளியுள்ளார்.

சைவசித்தாந்திகள் மட்டுமின்றி வேதாந்திகளும் தசகாரியங்களை விளக்கியுள்ளனர். அவர்கள் கூறும் தசகாரியம் மாறுபாடு உடையது. அவை மாயாரூபம், மாயாதரிசனம், மாயாசுத்தி, ஜீவரூபம், ஜீவதரிசனம், ஜீவசுத்தி, பிரம்மரூபம், பிரம்மதரிசனம், தேககைவல்யம், விதேககைவல்யம் என்பனவாகும். குமாரதேவ சுவாமிகள் வேதாந்த தசகாரியக் கட்டளை என்ற நூலையும், கரந்தை ஞானப்பிரகாச தேசிகர் தசகாரியம் என்ற நூலையும் இயற்றியுள்ளனர்.

இந்நூலாசிரியர் திருவண்ணாமலை அய்யர் என்றும், ஈசான தேசிகர் என்றும் அழைக்கப் பெறுகிறார். இந்நூலாசிரியர் செய்த பிற நூல்களாவன: 1. இலக்கணக் கொத்து, 2. சிவஞான போத சூரணைக் கொத்து, 3. கடம்ப நாத புராணம், 4. திரிச்செந்திற் கலம்பகம்.

## 642. தத்துவ நிராகரணம்

**அ.** *111:218;* **ஆ.** *129–132* ஏடுகள்; **இ.** 19 x 3 செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** இடையிலும், இறுதியிலும் ஏடுகள் பல சிதைந்துள்ளன; முடிவுப் பகுதி மிகவும் சிதைந்துள்ளது;

வலது பக்க ஓரப் பகுதிகள் சற்று முறிந்துள்ளன; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

*தீபத்திலே சூடிக்கிறாப்போலே சருவசாட்சி இடத்தில் சிற்சத்தி இருக்கும் தீபத்திலும் கிரகத்திலும் பிரகாசிச் சிருக்கிற பிரகாசம் சகலருக்கும் சுகத்தின் பொருட்டாய் இருக்கும். தீபத்திலும் சலத்திலும் பிரவேசிச்சிருக்கிற சூடு சகலருக்கும் துக்கத்தின் பொருட்டாய் இருக்கும். அப்படிப்போல....*

குறிப்புரை

உரைநடை. தத்துவங்கள் 96 பற்றிக் கூறும் இந்நூல் வேதாந்த மற்றும் சித்தாந்தத் தத்துவங்களின் சிறப்புகளை யும், இவையல்லாத பிறதத்துவங்களுக்கான மறுப்புகளை யும் எடுத்துக் கூறுகிறது.

*132* - மகாவாக்கியார்த்தம்

*133* அ. - -

*133* ஆ. - பஞ்சீகரணவாக்கியம்

*134* ஆ. - ஒருமொழி அஞ்சுபேதம்

என்பன தொடர்ந்து காணப்பெறுகின்றன. இறுதியில் இருபத்தியைந்து மூர்த்திபேதங்களுக்கு அட்டவணை அடங்கியுள்ளது.

## 643. தத்துவாமிர்தக் கட்டளை

**அ.** ***228:442***; **ஆ.** *44 - 87* ஏடுகள்; **இ.** 24.5 x 3 செ.மீ.; **ஈ.** *6 - 7* வரிகள்; **உ.** சிதைவு; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஸ்வரூபானனந்த சுவாமிமேல் தத்துவராய சுவாமி திருவாய் மலர்ந்தருளிய சாத்திரத்தில் இரண்டாவது தத்துவாமிர்தம் முதலாவது அதிகார பத்ததி

உளவிரு ளொழிதர ஒளிர்பல னெவனவன்
அளவரு மரியநல் லறிவின னெவனவன்
வளமலி யடியவர் மதிநல மெவனவன்
அளிதரு மடிதொழு தனமன வரதமும் (1)

முடிவு

இனி கலிவிருத்தம்
தொம்பதந் தத்பதந் தோன்றும் சிற்பதம்
நம்பிய சீவன் பரன்சிவ மாய்நிற்க
வம்பத மேலைச் சொரூபமா வாக்கிய
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே

நேரிசை வெண்பா

புசிப்போஞ் சிவபோகம் பூரணமா யெங்கும்
வசிப்போ முலகில் வசியோ - முசிப்பின்றி
வாழ்வோஞ் சிவனையுணர் மாதவர்தம் பொன்னடிக்கீழ்த்
தாழ்வோ மெமக்கார் சரி

குறிப்புரை

அதிகாரபத்ததி, சிரவணபத்ததி, மனைபத்ததி, நித்தியாச பத்ததி என்ற தலைப்புகளில் ஒருபகுதி முடிகிறது. மீண்டும் மூன்றாவது அத்வைத சுத்த வேதாந்த தரிசனம், தற்சொரூபம் என்னும் பல தலைப்புகளில் நூல் அமைகிறது. இறுதியில் தத்துவாமிர்தக் கட்டளை முற்றும் என்றே காணப்பெறு கிறது.

முப்பொருள், தொண்ணூற்றாறு தத்துவங்கள், தனு, கரண, புவன, போகங்கள் போன்ற தத்துவ நூல்களிலுள்ள குறியீட்டுக் கலைச் சொற்களின் பொருளை விளக்கமாக அறிய வேண்டி எழுந்த நூல்கள் **கட்டளை நூல்கள்** என்று பெயர் பெற்றன. இவையாவும் உரைநடை நூல்கள். 'கட்டளை' என்பதற்கு முறைப்படுத்தல் அல்லது நெறிநிற்றல் என்பது பொருள்.

இவ்வகையில் பல நூல்கள் எழுந்தன. இவற்றுள் சித்தாந்த நூல்களின் அடிப்படையை விளக்கும் ஐந்து நூல்களும், வேதாந்த நூல்களின் அடிப்படையை விளக்கும் ஒன்பது நூல்களும் சிறப்புமிக்கன.

நாநாஜீவ வாதக் கட்டளை, ஞானக்கட்டளை, தத்துவாமிர்தக் கட்டளை, வேதாந்த தத்துவக் கட்டளை, வேதாந்த தசா அவத்தைக் கட்டளைச் சுருக்கம் (குமார தேவர்), வேதாந்த தசகாரியக் கட்டளை (குமாரதேவர்), உபதேச சித்தாந்தக் கட்டளை, உபதேச உண்மைக் கட்டளை, பிரம்மோபதேசக் கட்டளை ஆகிய ஒன்பதும் வேதாந்த கட்டளை நூல்களாகும்.

சிவப்பிரகாசக் கட்டளை, திருவாலவாய் கட்டளை, சித்தாந்தக் கட்டளை, சித்தாந்த சாதனைக் கட்டளை, சித்தாந்த தசகாரியக்கட்டளை ஆகிய ஐந்தும் சித்தாந்த கட்டளை நூலாகும்.

மேற்சொன்ன கட்டளை நூல்கள் பதினான்கில் 9, 13, 14 ஆகிய மூன்று நூல்களை நீக்கிவிட்டு, ஜீவோற்பத்தி சிந்தாமணி, சித்தாந்த கட்டளை நூன்முகம், சித்தாந்த தத்துவ லட்சணம் என்பனவற்றைச் சேர்த்துக் **கட்டளைக் கொத்து** என்ற பெயரில், சென்னை, ரிப்பன் பிரஸ்ஸில் 1914 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இவை தவிர துகளறு போதக் கட்டளை, ஞானமிர்தக் கட்டளை, சுத்த சிவப்பிரகாசக் கட்டளை போன்ற நூல்களும் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளன.

## 644. தத்துவாமிர்தம்

**அ.** *228:440*; **ஆ.** *24 - 37* ஏடுகள்; **இ.** 24.5 x 3.5 செ.மீ.; **ஈ.** 7 - 9 வரிகள்; **உ.** சில ஏடுகளில் தொளைகள் உள்ளன; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### முற்குறிப்பு

தத்துவராய சுவாமிகள் அருளிச்செய்த இந்த இரண்டுடன் தத்துவாமிருதக் கட்டளையும், காஞ்சிபுரம் சுத்தவைதிக சைவாசாரியறுவருளொருவராகிய சண்முக தேசிகர் குமாரர் அருணாசல தேகிகர் முன்னிலையில் பரிசோதித்துக் கொன்றை மாநகரம் ம-ள-ள-ஸ்ரீ முருகப்ப முதலியார வர்களால் தேசாபிமானி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டன....

தொடக்கம்

பூவருநான்குமப் புத்தேள் படைத்த
பாவரு மண்டபம் பற்பல கோடியுள்
உயர்ந்ததிவ் வண்டம் ஓங்கதிற் சிறந்தது
நயந்தபூ வுலகம் நவிற்றதிற் பொலிந்தது
சம்புத் தீவதிற் றக்கது தென்றிசை
மற்றதிற் றிகழ்ந்தது வண்டமிழ் நாடதில்
வெற்றிசேர்சைவ சமயமெய்க் குரவரா
மொப்பில் சம்பந்த னுதித்திடுங் காழி...

முடிவு

சொருபானந்த சுவாமிகள் சமாதி திருவண்ணாமலைக்கும் விருத்தாசலதத்துக்கும் மத்திஸ்தானம். தத்துவராய சுவாமிகள் சமாதி சிதம்பரத்துக்கும் விருத்தாசலத்துக்கும் மத்திஸ்தானம். இந்தச் சரித்திரம் மேற்படி சுவாமிகளுடைய பரம்பரை மாணாக்கர்களுக்குப்பின் பிரதிகளின்படி பதிப்பிக்கப்பட்டது. இந்தச் சரித்திரம் வரும் பிரதிகளில் விரிவாகத் தெரிவிக்கப்படும். முற்றிற்று.

குறிப்புரை

சிவப்பிரகாசம், தத்துவாமிர்தக் கட்டளை, ஆகிய நூல்களைப் பதிப்பித்த முன்னுரையுடன் கூடிய இச்சுவடி மேற்கண்ட அச்சு நூல்களின் படியாகும். அச்சுப்படியினின்றும் படியெடுக்கப் பெற்றுள்ளது.

தத்துவராயர் இயற்றிய தத்துவாமிர்தம் என்ற இந்நூல் ஐந்து பத்ததி என்ற பகுதிகளை உடையது. 137 விருத்தப் பாடல்களால் ஆனது. இந்நூலை விளக்கிப் பின்னாளில் வேதாந்தத் தத்துவாமிர்தக் கட்டளை என்ற வசனநூலும் எழுந்துள்ளது.

தத்துவராயர், சிவப்பிரகாச வெண்பா, திருத்தாலாட்டு, பிள்ளைத் திருநாமம், வெண்பா, அந்தாதி, கலித்துறை, அந்தாதி, சின்னப்பூ அந்தாதி, தசாங்கம், இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலிப்பா, ஞானவினோதன் கலம்பகம், உலா, சிலேடையுலா, நெஞ்சுவிடு தூது, கலிமடல், அஞ்ஞவதைப் பரணி,

மோகவதைப் பரணி, அமிர்தசாரம், பாடுதுறை, சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, சிவானந்தமாலை, ஈசுவரகீதை, பிரம்மகீதை, சசிவண்ணபோதம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

தமிழில் வேதாந்த நூல்களுக்கு வித்திட்டவர் இவரே. காலம் 15 ஆம் நூற்றாண்டு. இவர் சோழ நாட்டிலுள்ள வீரை நகரில் வைதீக சைவப் பிராமண குலத்தில் பிறந்தவர். சொரூபானந்தர் இவரது மாமன். சொரூபானந்தரின் குரு சிவப்பிரகாசர். தத்துவராயர் சொரூபானந்தரின் பெருமை களை விவரித்துப் பாடிய பிரபந்தங்கள் தத்துவராய சுவாமிகள் பாடுதுறை என்று அழைக்கப் பெறுகின்றன.

## 645. தர்மவியாளகடர் கதை

**அ.** ***70:112***; **ஆ.** *726 - 77* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமாரான எழுத்து. **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மீண்டுரை செய்வான் முற்றும்
 விசாரத்தோர் தொழில்தீர் நெஞ்சோர்
நீண்டதோர் மனனம் விட்டோர்
 நிகழ்சுக வறிவை யுள்ளோர்
பூண்டுள காட்சி தன்னிற்
 போவ போய்க்கொள்வ கொண்டோர்
காண்டகை யோனைத் தன்பொற்
 காணாதோர் தனைக்காணா தோர்வ (1)

முடிவு

அறிவதா யறிவே மெய்யா யகலமா யனைத்தா யாறிப்
பிரிவுறு வரவு போக்கில் பிரமமே யுளதா மந்தச்
செறிபொருட் சத்தி தோற்ற மாத்திரஞ் செகமாய் நிற்கும்
பொறிகொள் பலகாட்சி பொய்யே பொருள்மெய் யென்று
 வாழ்வாய். (43)

*தர்மவியாளகடர் கதை முற்றும். ஆக 606.*
*இனி வீம்ப சதிடர் கதை.*

குறிப்புரை

**1 - 43 பாடல்கள் உள்ளன.** ஞானவாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாக இந்நூல் அமைகிறது.

## 646. தாசுரன் கதை

**அ.** ***70:114***; **ஆ.** *79 - 94* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள். **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஒழியாத் துயர்மா யையெனு மரத்தை
யொழிக்க மனநாச மோருபாய மாகு
மிழியாத மெஞ்ஞானப் பொருளை யெல்லா
மியம்பக்கேட் டயரா மலிதையுங் கொள்வாய்
பழியான போகத்தி னிச்சை தானே
பந்தமா மிதுவிடலே பரம மாகும்
ஒழியான பன்னூலாற் பயன்க ளென்னே
வருந்தாம லிவ்வழியே வருதல் வேண்டும் (1)

முடிவு

எனஅவ ருரைத்த யாவையுங் கேட்டவ்
விரவிலங் கவரை நானேத்த
மனமகிழ்ந் தருச்சித்தே னோடத் தளிர்மேல்
விதித்தன ளிருவரு மெய்மைக்கண்
கதைகளினாற் காத லுற்றவர் பொறகங்
குலைக்கண் மேனக் கழித்தவ்
வன்கனை நீங்கி கங்கையுற் றன்னானு
வன்கதை போலு மிச்சகம் (108)

தாசுரன் கதை முற்றும். ஆக. *739.* யினி கசன் கதை.

குறிப்புரை

**1 - 108 பாடல்கள் உள்ளன.** ஞானவாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாக இந்நூல் அமைகிறது.

## 647. திதிபிரகரணம்

**அ.** ***70:116;*** **ஆ.** *96 -97* *ஏடுகள்;* **இ.** 38.5 x 2.5 *செ.மீ.;* **ஈ.** *7 - 8* *வரிகள்;* **உ.** *ஏடுகளின் ஒருபகுதி சிதைந்துள்ளது;* **ஊ.** *சுமாரான எழுத்து;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

பெறக்கொ ணாத சத்துவக் குணப்பிறப் புரைபுவிமே
னிறத்து வாழ்வது வான்றிகழ் நிறைமதி நிகார மவர்க்கு
குறதுன் பத்திலை தூடல ரிழிவு தானவ னாறுஞ்
சிறக்கும் பொற்கம லத்தலர் குவியுமோ சிறிது (1)

முடிவு

தாமதத் துடனி ராசதஞ் சாத்திக மென்னும்
நாம முக்குணப் பிறவியு முயற்சியாய் யண்ணனுஞ்
சேம முத்தியைச் செய்திடுஞ் சாத்திகச் ....
நாம வுத்தம ராகவ வென்று மீட்டிசைப்பான். (7)

*திதி பிரகரணம் முற்றும். 766. சனகராசன் கதை.*

குறிப்புரை

***1 - 7 பாடல்கள் உள்ளன.***

## 648. திரிகாலத்திரங்கல்

**அ.** ***99:202;*** **ஆ.** ***1 - 14*** *ஏடுகள்;* **இ.** 30 x 3 *செ.மீ.;* **ஈ.** *6 வரிகள்;* **உ.** *ஓரளவு நல்லநிலை;* **ஊ.** *ஓரளவு தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

செல்காலத்திரங்கல்

சேரச் சிவமான தெளிவுந் தெளிந்தவிந்த
நேரம்போன் முன்னாளு நின்றுவிடப் பெற்றிலமே
(ஏடு. 3; பா.26)
ஆகா பொருள்தேடி யாம்பொருளைக் கைவிட்டு
போகா உடல்தோறும் புக்குழன்று விட்டனமே
(ஏடு.3; பா.27)

முடிவு

மெய்யணைய வந்தருளும் மெய்கண்டார் மேனியன்றே
கையிணைகள் கூப்பிக் கருத்துருகப் பெற்றிலமே (50)

நிலையாம் பொருளின் நிறுத்துங் குருவைத்த
தலையால் வணங்காமற் றாழ்வுசெய்து விட்டனனே (51)

*செல்காலத்திரங்கல் முற்றும்*

## ஆ. நிகழ்காலத்திரங்கல்

தொடக்கம்

கூடுவது எவ்வாறு வேதாந்த மார்க்கங்
　　குறியான மூன்றெழுத்து உபதே சந்தான்
நாடுவது நாலெழுத்து ரெண்டாந் தீட்சை
　　நலம்பெறவே அஞ்செழுத்து மூன்றாம் தீட்சை
ஊடுவது ஆறெழுத்து நாலாந் தீட்சை
　　உத்தமனே எட்டெழுத்து அஞ்சாந் தீட்சை
ஆடுவது பத்தெழுத்து ஆறாந் தீட்சை
　　அப்பனே பதினைஞ்சும் ஏழு மாச்சே (1)

முடிவு

எங்கும் நிறைந்தவர்தாம் ஏக உருவாகிச்
செங்கமலத் தாள்வழங்கச் சசாந்தத் ததிசயமே (49)

*நிகழ்காலத்திரங்கல் முற்றும்*

## இ. வருங்காலத்திரங்கல்

தொடக்கம்

தோன்றி மறையு மிந்தத் தொல்லுலகு தோன்றாமல்
ஆன்ற அறிவுநாம் ஆய்விடுவ தெக்காலம் (1)

முடிவு

அவையோகம் தன்னிலே ஆசையற வென்றும்
சிவயோகம் தானருந்தத் தேசிகனே தந்தருளே (5)

*வருங்காலத்திரங்கல் முற்றும்*

பிற்குறிப்பு

*இந்த மூன்று காலத்திரங்கல்களும் சிற்றாயக் காட்டுச் சிற்றம்பலநாடி பண்டாரம் திருவுளம் பற்றினது. ஆகப் பாட்டு 152.*

குறிப்புரை

***1 - 152* பாடல்கள்.** இரங்கல் எனும் தலைப்பில் அமைந்துள்ள இச்சுவடி, மூன்று காலத்துச் செய்திகளை நினைத்து இரங்குவதாக இயன்றுள்ளது. ஆசிரியர் பெயர் சிற்றம்பலநாடி பண்டாரம் என்பது இறுதிக் குறிப்பால் தெரியவருகின்றது. இறைவனைக் கூடாததால் ஏற்படக் கூடிய கால விரயத்தைச் செல்காலத்திரங்கல்களிலும், நினைக்கும் வாய்ப்பை நழுவவிட்டுக் கொண்டிருக்கக் கூடிய இக்காலத்தை நிகழ்காலத்திரங்கல்களிலும், எப்படியேனும் உன் பதம் பற்றுவேன் என்ற சிந்தனையைத் தர வேண்டு வதை வருங்காலத்திரங்கல்களிலும் ஆசிரியர் கலிப்பாவில் கூறியுள்ளார்.

இரங்கல் என்று சொன்னால் இறைவன் மாட்டு மாறுபட்டு இருக்கின்ற மனத்தினை எண்ணிக் குறிப்பதாகும். துலைந்து பட்டபொருளினை எண்ணி, கவழ்ந்து பட்டு நிற்கும் நிலையன்று; இறைவன்பால் நாம் செலுத்த வேண்டிய நேயமே இரங்கல் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்நூலுள் திருநீற்றின் பெருமை, சிவயோகத்தின் சிறப்பு, மெய்கண்டாரின் புகழ் முதலியன பேசப்படுகின்றன. இறைச் சிறப்பின் பெருமைகளை அறியாமல் இருந்து விட்டோமே என்று இரங்குவது போன்று மூன்று காலங்களிலும் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. ***130:263*** என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

## 649. திரிகாலத்திரங்கல்

**அ. *130:263*; ஆ.** *150 - 157* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; இறுதியில் மூன்று வெற்றேடுகள் *(158 - 160)* உள்ளன; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

சீரார் திருநீறுந் தீதிலருள் வேடமுன்
சேராம லய்யோ தெளியா திருந்தனமே (1)

வந்து பிறந்திருந்த மானிடராய் மண்மிசையி
லெந்தை பணிசெய்வதற் கென்றெண்ணா திருந்தனமே (2)

முடிவு

அவயோகந் தன்னி லாசை யறவென்றுஞ்
சிவயோகந் தானந்தத் தேசிகனே தந்தருளே (48)

சத்திய ஞானமனந் தானந்தந் தானாகி
நித்தமாய் நின்றுவிட நின்மலனே தந்தருளே (49)

*திரிகாலத்திரங்கல் முற்றும்*

பிற்குறிப்பு

*பிலவங்க ஆண்டு ஆவணி மாதம் 22 ம் தேதி சிற்றம்பலநாடி சுவாமிகள் சாத்திரம் சுப்பிரமணியன் கையெழுத்தாக எழுதி நிறைவேறினது.*

குறிப்புரை: சிற்றம்பல நாடிகள் திரிகாலத்திரங்கல்

**1-49 பாடல்கள்.** *99:202 என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூலினைப் போன்றதே இந்நூல்.*

## 650. திருக்களிற்றுப்படியார்

**அ.** ***1:14;*** **ஆ.** *213 - 223 ஏடுகள்;* **இ.** 22 x 3.5 *செ.மீ.;* **ஈ.** *8 - 9 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** தெளிவு; **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை; பழைய அச்சுநூல் உள்ளது.*

தொடக்கம்

அம்மையப்ப னைஉலகுக்கு அம்மையப்ப ரென்றுஅறிக
அம்மையப்ப னைபரிசே வந்தளிப்போம் - அம்மையப்பன்
எல்லா உலகுக் கும்புரத்தார் இப்புறத்து
மல்லா ரவர்போல் நிற்பார் அவர் (1)

முடிவு

சிந்தையிலும் எந்தன் சிரத்தினிலும் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாரா மறந்தவனை
மாதினுட னெத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதால்
ஏதுசொல்லி வாழ்த்துவே னென்று (100)

குறிப்புரை

***1 - 100 வெண்பாப் பாடல்கள்.*** மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. இச்சித்தாந்த நூல்கள் பதினான்கனுள் திருவுந்தி யாரும், திருக்களிற்றுப்படியாரும் காலத்தால் முந்தியன. நூலுள் பாசவீடு, சிவப்பேறு, பரமுத்தி, சிவநெறி, அணைந்தோர் தன்மை முதலியன கூறப்பெறுகின்றன.

சிவஞான போதத்துக்கு இதுவே முதல் வழி நூல். மெய்கண்ட சாத்திரத்தில் இரண்டாம் நூலாக இடம் பெற்றது இதன் தனிச்சிறப்பாகும். திருஉந்தியாருக்குப் பாக்களால் எழுதப்பெற்ற உரைநூல் போல் இந்நூல் அமைந்துள்ளது.

உய்யக்கொண்ட தேவநாயனார் இந்நூலை இயற்றிய பின் பெரிய கோவில் என அழைக்கப்பெறும் சிதம்பரம் தில்லை நடராசர் சன்னதிக்குக் கொண்டு சென்றார். அப்போது அச்சன்னதிப் படிக்கட்டுகளைத் தாங்கி நின்ற கல்உருவத்தால் அமைந்த இரண்டு யானைகளில் ஒன்று தன் துதிக்கையால் நூலைப் பெற்று இறைவன் திருவடி அகத்தே சேர்த்தது. ஆகையினால் இந்நூல் திருக்களிற்றுப்படியார் என அழைக்கப் பெறலாயிற்று.

உருவமற்ற இறைவன் குருவடிவாய் வந்து ஆட் கொண்டு நம்மை அவனாக ஆக்குவார், குருவின் திருவாக்கு ஐயங்களைப் போக்கவல்லது, குருவானவர் சீடனின் பிறவி நோயைப் போக்க வல்லவர், ஐந்தெழுத்தைத் தொடர்ந்து ஓதினால், தன்னையும் இறைவனையும் காணலாம், ஞானம் பெறின் உயிர் உலகத்தோடு தொடர்பின்றி அட்ட மூர்த்தியாகிய இறைவனோடு ஒட்டி நிற்கின்றது முதலான கருத்துகள் நூலுள் இடம் பெறுகின்றன.

இந்நூலாசிரியர் ஆளுடைய தேவ நாயனாரின் மாணவர். அவரோ திருவுந்தியார் இயற்றிய திருவயலூர் உய்யவந்த

தேவநாயனாரின் மாணவர். 12 ஆம் நூற்றாண்டில் எழுந்த மூன்று சைவ சித்தாந்த நூல்களில் இந்நூல் இரண்டா மிடத்தைப் பெற்றுள்ளது. முதலிடத்தைத் திருவுந்தியாரும், மூன்றாமிடத்தை ஞானாமிர்தமும் பெற்றுள்ளன. 'திரு' என்ற அடை சைவ சித்தாந்தம் (மெய்கண்ட சாத்திரம்) பதினான்கில் இந்நூலுக்கும், திருவுந்தியாருக்கும் மட்டுமே அமைகிறது. சிவஞான சித்திக்கு 'ஆர்' விகுதிபின்னே கிடைத்திருப்பது எண்ணத்தக்கது. இதுபோன்று பன்னிரு திருமுறையில் திருவாசகத்துக்கும், திருக்கோவையாருக்கும் 'திரு' கிடைத் திருப்பது குறிப்பிடத்தக்கது. சங்கம் மருவிய நூலில் குறளுக்குத் 'திரு' முன்னேயும், 'நாலடிக்கு 'ஆர்' பின்னே யும் கிடைத்திருப்பது நோக்கத்தக்கது.

கழக வெளியீடாக இந்நூல் 1925 இல் வெளிவந்துள்ளது.

*130:246* என்ற எண்ணில் இடம்பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே. *99:201* என்ற எண்ணில் இதே போன்ற நூல் உரையுடன் உள்ளது.

## 651. திருக்களிற்றுப்படியாருரை

**அ.** ***99:201;*** **ஆ.** *1 - 96* ஏடுகள்; **இ.** 30 x 3 செ.மீ.; **ஈ.** *6* வரிகள்; **உ.** இறுதிப் பகுதியிலுள்ள ஒன்றிரண்டு ஏடுகளின் ஓரப்பகுதி சிதைந்துள்ளது; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

அம்மை யப்பரே உலகுக்கம்மை யப்பரென் றறிக என்பது, பராசக்தியும், பரமசிவனுமே சித்த சித்துக்களிரண்டினையும் தோற்றுவிக்கவும் ஒடுக்குவிக்கவும் சேட்டிக்கவும் முதல் என்றறிக. அறிந்த நிலையே வழியாக அறிவானுக்கு அருளே இடமாக்கி அனுபவமாகிய தம்மைக் கொடா நிற்பர். இத்தன்மை தெரிசனம் ஒழிந்தார்க்கு மனுபவபோதம் உள்ளளவும் கிட்டாரெனவறிக.

முடிவு

> இக்கணமே முத்தியினை யெய்திடினும் யானிணைந்த
> வக்கணமே யானந்தந் தந்திடினும் நற்கணத்தார்
> நாயகர்க்கும் நாயகிக்கும் நந்திக்கும் நாமடிமை
> யாயிருப்ப தன்றியிலோ மியாம்

என்பது, இப்பொழுது தற்போதத்தை யறுதியாகப் பெற்றிடினும் எனது போதத்தை நாடுமளவில் அந்தப் போதமெல்லாங் கணமாத்திரையிலே பேரானந்தத்தைப் பெற்றிடினுமிதுபேறாக யாங்கொள்ளோமென வறிக (98).

குறிப்புரை

திருக்களிற்றுப்படியார் என்னும் இச்சுவடியுள் தொடக்க முதல் நூறு பாடல்களும் உரையுடன் உள்ளன. ஆயினும் 99, 100 ஆகிய இரண்டு பாடல்கள் சிதைந்துள்ளன. இச்சிதைவால் இறுதியில் அமைந்துள்ள சுவடி பற்றிய குறிப்புரையை அறிய இயலவில்லை. முதலில் 4 வெற்றேடுகள் உள்ளன. 1:14; 130:246 என்ற எண்களில் இடம் பெற்றுள்ள நூல்கள் இந்நூல் போன்றதே ஆயினும் அவற்றில் மூலம் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

## 652. திருக்களிற்றுப்படியார்

**அ.** 130:246; **ஆ.** 3 - 47 ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** 9 - 10 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:14 போன்றது.

குறிப்புரை

1:14 என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே. 99:201 என்ற எண்ணில் இதே போன்ற நூல் உரையுடன் உள்ளது.

## 653. திருவருட்பயன்

**அ.** ***1:6;*** **ஆ.** *156 - 161* ஏடுகள்; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நல்லநிலை; **ஊ.** தெளிவு. **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்**
**கற்கும் சரக்கன்று காண (1)**

**அகர உயிர்போல் அறிவாகி எங்கும்**
**நிகரில்இறை நிற்கும் நிறைந்து (2)**

### முடிவு

**மும்மைதரும் விளைகள் மூளாவாம் மூதறிவோர்க்கு**
**அம்மையும் இம்மையே யாம் (9)**

**கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை**
**வெள்ளத் தலைவர் மிக. (10)**

### குறிப்புரை

**கடவுள் வாழ்த்துடன் 101 குறள் வெண்பாக்கள் உள்ளன.** பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருண்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறியும்நெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை என்று பத்து உட்தலைப்புகள் காணப் பெறுகின்றன. ஒவ்வொரு உட்தலைப்பிற்குள்ளும் பத்துப் பத்தாக மொத்தம் 100 பாடல்கள் பத்து அதிகாரங்களில் அமைந்துள்ளன. இதிலுள்ள பத்து அதிகாரங்களும் முறையே பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருள்மலநிலை, அருளது நிலை, அருள் உருநிலை, அறியும் நிலை, உயிர் விளக்கம், இன்புறுநிலை, அஞ்செழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்ற பெயரினைப் பெறுகின்றன.

சிவப்பிரகாசத்தில் சுருக்கமாகக் கூறப்பட்ட திருவருள், திருவைந்தெழுத்து ஆகியவற்றின் விளக்கங்களைத் திருவருட்பயன் சிறப்பாகக் கூறுகின்றது.

இதில் பதியாகிய சிவபெருமானின் தன்மை, உயிரின் தன்மை, அதனைப் பற்றியுள்ள மலங்களின் விளக்கம், அது பெரும் அருள், அருளை அறியும் நிலை, உயிர் பற்றிய விளக்கம் ஆகியவை படிப்படியாக விளக்கப் பெற்றுள்ளன.

இறைவனின் சிறப்பினையும் அதனை அடையும் ஆன்மாவின் சிறப்பினையும் கூறுவதாக இந்நூல் அமைந் துள்ளது. இந்நூல் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாக அமைகிறது. இதனை இயற்றியவர் கொற்றங்குடி உமாபதி சிவாச்சாரியார்.

இவர் 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் இடையில் வாழ்ந்தவர். இவரது குரு மறைஞான சம்பந்தர். தில்லைப் பெருமானை மெய்தீண்டிப் பூசிக்கும் தீட்சிதர்களின் மரபில் உதித்தவர். இவர் தில்லை நகருக்கு அருகிலுள்ள கொற்றவன் குடியில் மடம் அமைத்து ஆன்மாக்களுக்கு ஞான உபதேசம் செய்து வந்தவர்.

இந்நூலுக்குப் பல விரிவுரைகள் எழுந்துள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு: டாக்டர் இராமகோஸ் (Dr. Rama Ghose) என்பார் கிரேஸ் இன் சைவ சித்தாந்தா (Grace in Saiva Siddhanta) என்ற தலைப்பில் ஓர் உரை செய்துள்ளார். நமச்சிவாயத் தம்பிரான் உரை, தே.ஆ. சீனிவாசா சாரியார் உரை, காவை அம்பலவாணரின் உரை (இவ்வுரை செய்யுள் வடிவத்தால் ஆனது), பெயர் அறியப்படாத ஒரு பழைய உரை, சைவ சித்தாந்த சமாஜம் வெளியிட்ட திருவருட்பயன் சிந்தனை உரை என்பன குறிப்பிடத்தக்கன.

வேலப்ப பண்டாரம், நல்ல சிவதேவர், கா.சுப்பிரமணி யப் பிள்ளை, க. சுந்தரமூர்த்தி, எஸ். சிவபாதசுந்தரம், க. வச்சிரவேல் முதலியார், வே. மாணிக்க வாசகம் பிள்ளை ஆகியோரும் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளனர்.

இந்நூலை ஜே.எம். நல்லசாமி பிள்ளை என்பார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஜி.யூ. போப் அவர்களும், நிரம்ப வழகிய தேசிகர் அவர்களும் தனித் தனியே 16 ஆம் நூற்றாண்டில் இதற்கோர் உரை செய்துள்ளனர். எ.வி. ரங்கநாதன் ஹிந்தியில் மொழி பெயர்த்துள்ளார்.

*1925* இல் கழக வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

*118:229; 130:251; 167:352* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இதுபோன்றவையே.

## 654. திருவருட்பயன்

**அ.** ***118:229;*** **ஆ.** *6 - 10* ஏடுகள்; **இ.** 28.5 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** இரண்டு ஏடுகள் பாதியாக முறிந்துள்ளன; பல ஏடுகள் இலேசாக முறிந்தும் சிதைந்தும் உள்ளன; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்

பதியிலக்கணம்

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து (1)
தன்னிலமை மன்னுயிர்கள் சார்ந்த தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான் (2)

முடிவு

இம்மை தருவினைகள் மூளாவா மூத்றிவாற்
கம்மையு மிம்மையே யாம் (99)
கள்ளத் தலைவர் துயர்கருதித் தன்கருணை
வெள்ளத் தலைவர் மிக (100)
ஆகவதிகாரம் 10க்குச் செய்யுள் குறள் 100

குறிப்புரை

*1:6; 130:251; 167:352* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 655. திருவருட்பயன்

**அ.** ***130:251;*** **ஆ.** *104 - 108* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:6 போன்றது.

குறிப்புரை

***1:6; 118:229; 167:352*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 656. திருவருட்பயன்

**அ.** ***167:352;*** **ஆ.** *1 - 5* ஏடுகள்; **இ.** 24 x 4 செ.மீ.; **ஈ.** *9 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 1:6 போன்றது.

குறிப்புரை

***1:6; 118:229; 130:251*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 657. திருவாலவாய்க் கட்டளை

**அ.** ***141:310;*** **ஆ.** *102 - 127* ஏடுகள்; **இ.** 24 x 3 செ.மீ.; **ஈ.** *10 - 11* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

பசுபதிபாச மூன்று மனாதி நித்திய மிவைகளிற் பதியாவது, பரிபூரணமா யொன்றா யறிவுக்கறிவாய் நின்மலமாயுயிர்க் குயிராகக் குறியுங் குணமு மில்லாததாய் யருவுமுருவு மில்லாததாய் கண்டிதமாயானந்த மயமாயிருக்கிற

பரமசிவமும் பராசத்தி, ஆதிசத்தி விச்சாசத்தி, ஞானாசத்தி, கிரியாசத்தி எனப்பட்ட பஞ்ச சத்திகளாகிய யருளும் பின்னமில்லாமற் சூரியனுங் கிரணமும் போல் வொன்றா யிருக்கு மிப்படியிருக்கிற பரமசிவம் ஆன்மாக்களை லட்சிக்கும் பொருட்டாக...

முடிவு

தன்னையுங் கண்டு தானுமருளு நிற்கிற முறைமை யறிந்து யருளே நாவாக முத்தி பஞ்சாக்கரத்தைச் சேவியாமற் சேவிப்பது யதுவுங் கூடாதாகில் ஞான நூலோதி சிந்தித்துந் தெளிந்துந் தரியாகம் பண்ணவும் இப்படிச்செய உண்மை வந்து கூடுமிந்தப்படி நெய்த் தழுந்தல் முதலாக எந்தநிலை நின்றாலும் ஆச்சாரியாரையுந் திருக்கோயிலையுந் திருவேடத் தையும் மிகவும் வழிபட வென்றவாறு - குரு முன்னிற்க.

குறிப்புரை

**உரைநடை.** பதி, பசு, பாசம் என்ற மூன்றைப் பற்றிய தத்துவ விளக்கமும், இறையை, குருவை வழிபடும் முறை பற்றியும், ஞானமார்க்கம் பற்றியும், முத்தி பற்றயும் நூலுள் விளக்கம் தரப்படுகிறது. *1914* ஆம் ஆண்டு வெளிவந்த கட்டளைக் கொத்து என்ற தொகுப்பு நூலில் இந்நூல் இடம் பெறுகின்றது. *569:926* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

## 658. திருவாலவாய்க் கட்டளை

**அ.** ***569:926;*** **ஆ.** *8-14;* **இ.** 22 x 3.5செ.மீ.; **ஈ.** *8-9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

கைக்குலவு ஞானக் களுறேமுக் கட்கடத்து
மெய்க்குலவுஞ் சித்தி வினாயகர் - பொய்க்குலவா
மடட்டளவி லாதசிவம் வாய்த்ததிரு வாலைவாய்க்
கட்டளைக்கு உன்பாதமே காப்பு

## முடிவு

தாக்கரிதாகி சிவ ஞான நூலோதலாதி சிந்தித்து மந்தரியாகம் பண்ணவு மிப்படிச் செய்ய உண்மை வந்து கூடுமிந்தப் படி நெய்த்தழுந்த விடுதலாக வெந்த நிலையிலே நின்றாலும் ஆசாரியாரையுந் திருக்கோவிலைந் திருவேடத்தையும் மிகவும் அறியப்படுக வென்றவாறு. திருவாலவாய்க் கட்டளை எழுதி முடிந்தது முற்றும்.

## குறிப்புரை

**உரைநடை.** பதிபசுபாச லக்கணங்கள், சிவம், பராசக்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி, ஞானக்கிரிகை, தத்துவத்தின் தொழில், ஞானவிந்திரியம், கன்மவிந்திரியம், அந்தக் கரணத்தின் தொழில், வித்தியாதத்துவத்தின் தொழில், சிவதத்துவம், வாயுவின் கூறு, சுழுத்தி, சகலவவத்தை சுத்தவவத்தை, சாத்துவிதம் காரணவவத்தை முதலானவை விளக்கம் பெறுகின்றன. அடுத்து 23, 24, 30 - 33 ஆகிய ஏடுகளில் இப்பச் செய்த வினை இப்பவரும், மனத்தினுடைய வல்லபம், அகப்பற்று நீங்க வேண்டும், உயிர்க் கருணை உண்டாக வேணும், உங்குற உணவு நீங்க, மனிதருட மனம் மருவலாகா, சரியை, வீடு பேரின்பம், பரமானந்த உண்மை, முதலான செய்திகள் உள்ளன. இவற்றுள் இறுதிப் பகுதியில் சிற்றம்பல நாடி என்ற நூலின் செய்திகளும், கச்சி ஏகம்பனே என்று முடியும் பாடல்களும் உள்ளன. *141:310* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

# 659. திருவுந்தியார்

**அ.** *1:13;* **ஆ.** *210-213;* **இ.** 22 x 3.5செ.மீ.; **ஈ.** 8-9 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

## தொடக்கம்

அகளமா யாரு மறிவெறி யப்பொருள்
சகளமாய் வந்த தென்று உந்தீபற
தானாகத் தந்த தென்று உந்தீபற (1)

முடிவு

வைய முழுது மல்க கயம்கண்டிடும்
உய்ய வந்தா னென்று உந்தீபற
உண்மை உணர்ந்தா னென்று உந்தீபற (45)

குறிப்புரை

**1-45 கலித்தாழிசைப் பாடல்கள்.** இந்நூல் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. உலக மக்கள் அனைவரும் இன்புறு அடைந்து மெய்யுணர்ந்தோர் ஆதல் வேண்டும் என்ற கருத்தை நூல் நவில்கின்றது. இதனை இயற்றியவர் உய்யவந்த தேவர். பெண்கள் விளையாடும் உந்தீபற என்ற பொருண்மையின் அடிப்படையில் இந்நூல் எழுந்துள்ளது. உந்தீ பறத்தல் என்பது பெண்கள் ஆடும் ஒருவகை ஆட்டம். இதன் அமைப்பு ஒரு பெண் முதல் இரண்டு அடிகளில் ஒரு கேள்வியைக் கேட்க, அதற்கு விடையாக மற்றொரு பெண் மூன்றாவது அடியைக் கூறுவதுபோல் அமைகின்றது. பாடலில் உந்தீபற என இருமுறை ஒலித்தல் இவ்விலக்கிய வகையின் தனிச்சிறப்பு, சரியை, கிரியை, யோக, ஞானமார்கங்கள் சிறப்புற விளக்கப் பெற்றுப் பேரின்பப் பேற்றை நல்கும் சிவபிரானின் சீர்மிகு செவ்வடிகள் நினைந்து போற்றப்பெறுகின்றன.

இத்திருவுந்தியார் திருக்களிற்றுப்படியாரின் வழிநூல். உந்தீபற என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய பெரியாழ்வார். இச்சொல்லினை அவரது மூன்றாம் திருமொழியில், ஒன்பதாம் பத்தில் ஒன்று முதல் 11 வரிகளில் காணலாம்.

மணிவாசகர் இவ்வுந்தீபற என்ற சொல்லினை வைத்து ஒரு பதிகம் செய்துள்ளார். தத்துவராயரால் செய்யப்பெற்ற தத்துவராயர் திருவுந்தியார் எனும் நூல் இந்நூலிலிருந்து வேறுபட்டது மட்டுமல்லாது உந்தீபற என்ற சிற்றிலக்கிய வகையினைச் சார்ந்தது ஆகும்.

இந்நூலுக்குச் சிவப்பிரகாசரால் செய்யப்பட்ட மிகப் பழைய உரை ஒன்று காணப்படுகிறது. திருவாவடுதுறை மடம், தருமபுர ஆதீனம், விருத்தாசலத்திலுள்ள சிவப் பிரகாசர் ஆதீனம், தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம் ஆகிய

நூலகங்களில் சிந்தனை உரை என்ற பெயரில் பல ஏடுகள் பதிப்பாகாமல் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றில் திருவுந்தியார் சிந்தனை உரைகளும் உள.

*130:245* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

## 660. திருவுந்தியார்

**அ.** ***130:245;*** **ஆ.** *1-3* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *9-10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம், முடிவு 1:13 போன்றது.**

குறிப்புரை

***1-45*** **பாடல்கள்.** *1:13* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் போன்றதே. திருவுந்தியார் முற்றும் என்று நூல் இறுதியில் உள்ளது.

## 661. துகளறு போதக்கட்டளை

**அ.** ***138:286;*** **ஆ.** *68-80* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *6-7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம்**

பூர்வ செனனங்களிலே யனுட்டித்த சரியை கிரியா யோகங்களினுடைய முதிர்ச்சியினாலே யிதற்கு மேலாகிய ஞானபாதத்துக்கு யோக்கியமான சத்தினிபாதம் பிறந்த ஆத்மாவைத் தேர்ந்தவாசாரிய னிவனுடைய மனவாக்குக் காயங்களிற் பழைய வாதனைகளிற் செலுத்தாமல் மோட்டசத் துறையிலே புரிதல் திருவுளம் பற்றி யிவனுக்குப் பதிபசுபாச தெரிசனம் பண்ணிவிப்பதாக வதனுண்மைகளை யருளிச் செய்ய இவனறியாதவனாகையாலே யருளிச் செய்ததை மறுத்துத்தன் போதத்துக் கெட்டினவற்றைத்

தானென்று சாதித்துப் பின்னறிவுடன் படத்துக்களறுத் தினாசவிக்கப் பொருந்தின முறைமையைச் சொல்லுகையாற் துகளறு போதமெனப் பெயராயிற்று.

## முடிவு

இப்படி நின்றாள் பார்வதி சிவனென்றும் பரமனந்தி யென்றும் பேராம். இப்படி யென்னாலும் என்போல்வ ராலும் வேதாகமம் முதலான பொருள்களாலு மறியப்படாத பொருளே அடியேன் பொருட்டாகத் திருப்படை வீடு சீர்காழியென்று நாமஞ்சிற்றம்பல நாடி நாயனார் தென்னுந் திருமேனி மானிஷமாக வெழுந்தருள வேணுமோ. தன்மையினாலே யுணர்த்தினாலாகாதோ அது விஞ்ஞான கலாக்கும் பிரளையாக வாக்கு முண்ணான் றுணர்த்துவது. நீ சகல னாகையாலிப்படி வேண்டிற்றெனக் கொள்வ து. களறு போதக் கட்டளை முற்றும்.

## குறிப்புரை

**உரைநடை.** சரியை, கிரியை, யோகம் ஆகிய சைவ முறைகளை முப்பிறவியிலே கையாண்டு வந்ததன் முதிர்ச்சியினாலே பிறந்த ஆத்மாவானது மனவாக்கு காயங்களில் தூய்மை பெற்று பதி, பசு, பாச தரிசனத்தை இயற்கையாகவே எய்தும் என்னும் முறைமைகளைக் கூறுவதால் இந்நூல் துகளறு போதக்கட்டளை என்னும் பெயர்பெற்றது. சைவ சித்தாந்தத்தை விளக்கும் இந்நூல் பதி, பசு, பாசம் மற்றும் இறைவன் சிவபிரானின் ஐந்து செயற்பாடுகளைப் பற்றி விரித்துக் கூறும்.

சிற்றம்பல நாடிகள் அருளிச் செய்த துகளறு போதம் என்ற நூலைப் படிப்பவர்க்குத் துணை செய்ய எழுந்த நூல் இதுவாகும். இதில் பரமேசுவரன் ஆன்மா, ஆணவ மலம், புண்ணிய பாவம், தனுகரண புவனயோகம், மகாமாயை இவற்றின் உண்மைகளைப் படிப்படியாக வினவிக் கொண்டே போய்ப் பஞ்சபூதப் பழிப்பு, பொறியறவுணர்தல் அந்தக் கரண சுத்தி என்று தொடங்கி ஞானமார்கம் வரை இனிய எளிய நடையில் விளக்கப்பட்டுள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம் 1954 ஆம் ஆண்டு இந்நூலை வெளியிட்டுள்ளது.

இக்கட்டளை நூல்களில் சிற்றம்பல நாடிகளால் இயற்றப்பெற்ற சிற்றம்பல நாடிக் கட்டளையே முதல் கட்டளை நூல். தத்துவராயரின் வேதாந்த தத்துவாமிர்தக் கட்டளை 15 ஆம் நூற்றாண்டில் எழுந்த நூல். கமலை ஞானப் பிரகாசரின் அத்துவாக் கட்டளை 16 ஆம் நூற்றாண்டில் எழுந்த நூல்.

காலத்தால் பிற்பட்ட சில கட்டளைகளாவன: 1. சண்முக சுவாமிகள் இயற்றிய பிரம்மோ உபதேசக் கட்டளை, 2. தத்துவஞான தீபிகை, 3. புன்கூர் சிவப்பிரகாசர் இயற்றிய சிவப்பிரகாசர் கட்டளை. 4. சேசாத்திரி சிவனார் இயற்றிய ஞான சீவவாத கட்டளை, 5. தசகாரியக்கட்டளை, 6. தத்துவாக்கட்டளை.

## 662. துகளறுபோதம்

**அ.** *1:15;* **ஆ.** 223-233 ஏடுகள்; **இ.** 22 x 3.5செ.மீ; **ஈ.** 8-9 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

எல்லாம்பொய் யென்றே எனைக்காட்டி எம்பிரான்
சொல்லாத பேரறிவு தான்சொல்லி - நல்லதொரு
வற்புதமாம் ஆனந்த மாம்கருத்தல் செப்புதற்குக்
கற்பகத்தின் தாளிணையென் கண்

நூல்

பதிபசு பாசம் தெரிந்தந்த பாச
விதிவழியை வென்றதனின் வேறாங் - கதிவிளங்கும்
மெய்கண்டான் சந்தான மேவிச் சிவானந்தம்
கைகண்டார் காணா கரு (1)

முடிவு

அலகு திருமெழுக்கிட் டாலயத்தில் அன்பாய்
இலகு திருவிளக்கு மேற்றிப் - பலகாலும்
சென்று வணங்கித்திரு வடிவா ரெஞ்சேர்த்தி
நின்றிருகைத் தொண்டர்பணி நேர் (98)

குறிப்புரை

***1-98* பாடல்கள்.** காப்புப் பாடல் தவிர்த்து நூறு பாடல்களையுடையது. இந்நூலில் *98* பாடல்களே உள்ளன. இறுதி இரண்டு பாடல்கள் இல்லை. ஆணவம், கன்மம், மாயை, பதி, பசு, பாசம் முதலான சைவ சித்தாந்தக் கருத்துகள் நூலுள் பேசப்படுகின்றன.

இதனை இயற்றியவர் சிற்றம்பல நாடிகள். இவர் இயற்றிய நூல்களுள் செல்காலத்திரங்கல், வருங்காலத் திரங்கல், நிகழ்காலத்திரங்கல், திருப்புன்முறுவல் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவ்வாசிரியர் ஆடல் வல்லானைத் தில்லைச் சிற்றம்பலவர் எனப் போற்றுவார். அதனால் மக்கள் இவரைச் சிற்றம்பல நாடிகள் என அழைத்தனர்.

இவர் கங்கை மெய்கண்டாரின் மாணவர். இவர் நினைவாக மயிலாடுதுறையில் சித்தர்காடு என்ற இடத்தில் ஒரு நினைவுக்கூடம் எழுப்பப்பெற்றுள்ளது. இந்நூலின் நூறாம் பாடலும் உமாபதி சிவம் இயற்றிய கொடிக்கவியின் இரண்டாம் பாடலும் ஒன்று போலவே உள்ளன.

துகளறு போதம் என்பது விரிக்கின் துகள் + அறு + போதம் எனப் பொருள்படும். அஃதாவது ஆணவம் என்ற ஒன்றைத் துகளற, போதம் என்ற அறிவு நீக்குவதால் இந்நூலுக்குத் துகளறு போதம் என்ற பெயர் வருமாயிற்று.

சென்னை, ரிப்பன் அச்சுக் கூடத்தில், நாகப்பட்டினம் வேதாசலம் பிள்ளை அவர்களால் *1898* இல் இந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது.

*138:285* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூல் போன்றதே.

## 663. துகளறு போதம்

**அ.** ***138:285*; ஆ.** *60-67* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ; **ஈ.** *6-7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 1:15 போன்றது.

முடிவு

இவை மூன்றுஞ் சரியை
அந்த மலமறுத்திங் கான்மாவைக் காட்டி
யதிற்கந் தவறிவை யறிவித் தங்கி தறிவை
மாறாமன் மாற்றி மருவுசிவப் பேறென்றுங்
கூறாமற் கூறக் கொடி (100)

குறிப்புரை

இந்நூல் *1:15* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் போன்றதே. 'எல்லாம் பொய் யென்றே' என்ற காப்புப் பாடல் இதில் இடம்பெறவில்லை.

## 664. துற்றவின் பகுதி

**அ.** ***141:306;*** **ஆ.** *70* ஆவது ஏடு; **இ.** 24.5 x 3செ.மீ; **ஈ.** *10-11* ஏடுகள்; **உ.** கீழ்ப்பக்க ஓரப்பகுதி சற்று உடைந்துள்ளது; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

துரத்தியுனை யாசை துடராம லென்றும்
விரத்தியினால் .... துக வத்தை விட்டுப் பரத்திலன்பு
செய்யடா செய்யடா சொப்பிற பஞ்சமெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய் (1)

முடிவு

எத்திசையு மெவ்வுலகு மெத்தொழிலு மெப்பத்து
நித்தியமென் றெண்ணி நினையாதே புத்தியின்தன்
கண்ணாடி யிற்றோன்றி மாய்ந்துவிடுங் காணிவற்றைக்
கண்ணாடி யிற்கனவிற் காண் (4)

துற்றவின் பகுதி முற்றும்.

குறிப்புரை

**1-4 பாடல்கள்.** உலகத்து உயிர்களிடம் அன்புகாட்ட வேண்டும். இவ்வுலகம் பொய்யானது நாம் வாழும்

எத்தகைய வாழ்க்கையும் நிலையானது அல்ல என்பன போன்ற அறக்கருத்துகள் நூலுள் இடம்பெறுகின்றன.

## 665. தேவபூசை கதை

**அ.** 70:128; **ஆ.** *181 - 190* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** சுமாரான நிலை; **ஊ.** சுமாரான எழுத்து. **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

தோற்றரவு மாத்திரமே யீதிப்போ
திப்படி யிற்றோன் றுகின்ற
தூற்றவிவனீ நானென் னுடலினை
யுள்ளூர நினைத்த லுற்றபொய்யே
யேற்றநரம் பெலும்பினா லியன்ற
வுடலிடைநா னென்றெண்ணு மோக
மாற்றுவ தியார் சங்கற் பத்தா
லியன்ற வடிவுக் கோரம்.... டாமோ (1)

முடிவு

பிறவிக் கடலிற் நீர்நிலைமை
பெற்றுப் பிறழகற் பனையெல்லா
மறவிட்ட யாவற்ற றவலி
தாயரவே தெளிந்தான் நத்ததை
யுறவுட் குளிர்ந்து நன்றான
துள்ள மென்று மெய்ஞானத்
திறவித்த கனாம் வசிட்டனுடன்
செப்பி மேலுஞ் செப்ப லுற்றான் (70)

தேவபூசை கதை முற்றும். ஆக விருத்தம் சூத்திரம் 470.
இனி வில்வபல் கதை.

குறிப்புரை

**1 - 70 பாடல்கள் உள்ளன. ஞான வாசிட்டம் என்ற நூலில் வரும் ஒரு கதையாக இந்நூல் அமைகிறது.**

# 666. (தேவமுத்தநிலை)

**அ.** ***93:195;*** **ஆ.** *1-202 ஏடுகள்;* **இ.** 25.3 x 2.5செ.மீ; **ஈ.** *6-7 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *கிறுக்கெழுத்து; ஓரளவு கடினம்;* **எ.** *குறை;* **ஏ.** *அச்சாகவில்லை.*

**தொடக்கம்**

வேதமுதல் விண்ணொடு மண்ணும் போற்ற
விளங்கு சுடராய் நின்ற விலமமூர்த்தி
யாதியந்தங் கடந்டதுநின்ற பேரொளி
தாள்வனி தனிற்குரு வாய்வந் தவதரித்து
மாதுலே யானொரு வரமே வைத்தங்கதன்
வளர்மதுரை யெரிக்குரை வழங்கு மன்னர்
தீதுடைய பிறப்பேழு மகல்வ யத்த
குருவடிகளெப் போதும் வணக்கஞ் செய்வாம்

முடிவு

கருக்கலங்கும் பிறவியெல்லாம் கலந்து நாளும்
கருதரிய தீவினையைக் கருதி னோர்க்கு
வருகதிரவன் வந்துவரு ளின்பஞ் செய்து
அருந்தவத்தின் நெறியெல்லாம் அறிவித் தாலும்
உருகதியுள் நரகமெலா புகுந்து வேத்தர
ருழிக்கதழ் விட்டகுறை யுழல வேண்டி
குருக்கள்தான் சீஷனைப்பின் செல்லுங் காலங்
கொடுங்கலிய நெறியதனைக் கதறுங்காலே (590)

குறிப்புரை

**செய்யுள் நடை.** இச்சுவடியில் குருவணக்கம், குருவருளை நாடுதல், மயக்கம் தெளிவித்தல், உபதேசம், குருப்பிரசாதம், சரியை, தாலச்சடங்கு, சமைய குருதத்துவம், புல்லரிவாளர் நிலைமை, முதல் முத்த நிலைமை, அளவிலா ஆனந்தம், இருவினைப்பயன், தவநிலை, தவமொழிதல், ஆரண காப்பு, குலவியாகமம், தத்துவ வகுப்பு, அழுக்கறா நிலைமை போன்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன. முழுமையையோ தெளிவையோ இந்நூலுள் காண இயலவில்லை. தத்துவச்

செய்திகள் இடம் பெற்றுள்ளதால் தேவ முத்த நிலை என்று பெயர் கொடுக்கப்பட்டது. *189* என்ற எண்ணிடப்பட்ட ஏட்டில் கலியா வாக்கியம் என்ற தலைப்பு மட்டும் இடப்பட்டு வெற்றிடமாக எழுதப்படாமல் உள்ளது.

## 667. தேவி காலோத்திரம் உரைபாடம்

**அ.** *2:17;* **ஆ.** *1-66* ஏடுகள்; **இ.** 27 x 2.5செ.மீ; **ஈ.** *8-9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. பழைய அச்சு நூலில் மூலம் மட்டும் வெளியாகியுள்ளது.

தொடக்கம்

முத்திவினா யகன்மனத்தின் முரணறவே
முடுகிநில முதல்வி ளைக்கும்
மத்திவினா யகனெனவந் தவித்தையியல்
பனைத்துமழித்தறத்தை யாக்கும்
சத்திவினா யகனுயர்ந்த தாணுவினா
யகன்றோற்றந் தருமோ ரட்ட
சித்திவினா யகன்மதுரைச் சித்திவினா
யகனிருதாள் சிரத்தில் வைப்பாம்.

இருள்விளையாட் டொளிவிளையாட் டெனவுணர்த்தி
மறைத்தமலத் தூடு நீங்கா
மருள்விளையாட் டோருயிர்கள் மயங்காமல்
அகிலமெல்லாம் மகிழ்ந்து போற்றி
யருள்விளையாட் டெனவியப்ப வருந்தமிழ்நாட்
டணிமதுரை யதனு ளெண்ணென்
டிருவிளையாட் டுடையபிரான் செங்கமலப்
பொற்பாதஞ் சென்னி சேர்ப்பாம்.

பாயிரமுற்றும்

முடிவு

வானவர் தலைவர் இந்த மண்ணுயிர் முக்தி யெய்த
வானவ ரரசர் ஞான மருளினா லருளெனன் றேத்தி
மானமா யிலவே லொண்கண் மணமலி முமுதச் செவ்வாய்த்

தேனமர்க் குழலால் அவன் திருந்தடி பணிந்து சொன்னாள்
முன்னான ஞானமுட னாசார முடிவெல்லா
மென்னாலே யிக்கால ஞானத்தை யியம்பினதால்
மின்னாரு நுண்ணிடையா யினியுனக்கு மீண்டிதனைச்
சொன்னாலென் சொலத்தகுவ தனைத்தினையுஞ்
சொன்னோமே

குறிப்புரை

இந்நூலின் தொடக்கம், ஆன்மாக்களுக்குச் சிவசாயுச்சி யுத்துக்குக் காரணமாய் இருக்கின்ற ஞானத்தையும், ஞான சாரத்தையும் கூறி அருளவேண்டுமென, சிவபெருமானை உமாதேவியார் கேட்டுக்கொள்கிறார். அதன்படி இறைவன் திருவாய் மலர்ந்தருள்வதாக அமைகிறது.

அடுத்து ஞான சாதகருடைய சொரூபம் மோட்ச உபாய சாதகனுடைய பலம், நீரோத உபாயம். ஆன்மாவினது விருத்தி, ஞானம், சொரூப ஞானம் எனத் தொடங்கி மோகம், மாயை, கனவு, சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற சைவ தத்துவங்களை விரிவாகக் கூறிச் செல்லுகிறது.

இதன்மூலம் மட்டும் அச்சாகி உள்ளது. மிகப்பழைய பதிப்பு. 66 பாடல்கள் உள்ளன.

69 பாடல்களில் இந்நூல் முற்றுப்பெறுகிறது. பதவுரையோடு கூடியது. சுவடியின் இறுதியில் சிவபெருமானாதி திருவஞ் செழுத்துமே - நக்கீரர் வாக்கு தேவிகாலோத்திரமானதே - செந்நாப்புலவர் வாக்கு... தீர்த்தகிரிப்புராணம் என்றுரைத்த தேவிகாலோத்திரமே பஞ்சைநூல் மற்றதெல்லாம் பார் - பதிபசு பாச விளக்கம். தெய்வம் தெரியில் தேவிகாலோத்தர தேற்றமே தேற்றம் - திருவாரூர்ப்புராணம் .... மற்றும் வருவனவற்றாற் காண்க எனும் சில பாடல்களால் இந்நூல் பிற நூல்களால் சிறப்பிக்கப்பெறுதல் எடுத்துக் கூறப்பெற்றுள்ளது.

இந்நூல் சமஸ்கிருதத்தில் ஆன நூல். இந்நூலைத் தமிழில் செய்தவர் யார் என்று தெரியவில்லை. சூரியனார் கோவில் ஆதீனத்தைச் சேர்ந்த சிவாக்கிரயோகிகள் தேவிகாலோத்திரம்

மற்றும் சர்வஞானோத்திரம் என்ற இவ்விரு நூல்களையும் அவ் ஆதீனத்திற்குரிய தலையாய நூலாகக் கருதுவர். இந்நூல் 28 உப ஆகமங்களில் ஒன்றாகக் கருதப்பெறுகிறது. இந்நூலில் அமைந்த பாடல்களில் வழக்குச் சொற்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன. இதனைச் சென்னை, கலாரத்னாகரம் அச்சுக்கூடத்தில், முருகேச முதலியார், 1875 இல் வெளியிட்டார். இச்சூரியனார் கோவில் ஆதீனம் தற்போது திருவாவடுதுறை ஆதீனத்தால் நிறுவகிக்கப்பட்டு வருகிறது. தெற்கே திருவாவடுதுறைக்கருகே உள்ள இச்சூரியனார் கோவில் தவிர, வடக்கே ஒரிசா மாநிலத்தில் பூரி என்ற இடத்திலும் ஒரு சூரியனார் கோவில் உள்ளது. தஞ்சை மயிலாடுதுறை நெடுஞ்சாலையில் இத்தலம் அமைந்துள்ளது. நவக்கிரக தோடம் உள்ளவர்கள் இன்றும் இக்கோவிலுக்குச் சென்று வருகின்றனர்.

*72:143; 176:371; 259;479* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே.

## 668. தேவிகாலோத்திரம்

**அ.** ***72:143;*** **ஆ.** *1-43* ஏடுகள்; **இ.** 30 x 3.5செ.மீ.; **ஈ.** *7-8* வரிகள்; **உ.** நன்று; இறுதி இரு ஏடுகள் முறிந்துள்ளன; கூந்தல்பனை; **ஊ.** நன்று; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; மூலத்திற்கு மட்டும் பழைய அச்சு நூல் இருக்கிறது.

தொடக்கம், முடிவு 2:17 போன்றது.

தேவிகாலோத்திரம் முற்றும். திரு. சிவசண்முகதேசிகன் திருவடி வாழ்க. திருச்சிற்றம்பலம்.

குறிப்புரை

*2:17; 176:371; 259:479* என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. **69 பாடல்கள் பதவுரையுடன்** இடம் பெறுகின்றன.

## 669. தேவிகாலோத்திரம் - உரையுடன்

**அ.** ***176:371;*** **ஆ.** *124 - 183* ஏடுகள்; **இ.** 20.5 x 3.9செ.மீ.; **ஈ.** *7-8* வரிகள்; **உ.** சில ஏடுகளில் இடையிடையே செல்லரிப்பு உள்ளது; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; மூலத்திற்கு மட்டும் பழைய அச்சு நூல் உள்ளது.

### தொடக்கம்

ஸ்ரீ கயிலாய பரமேஸ்வரனுடைய திருமுகத்திலே யிருந்து உண்டாக்கப்பட்டதாய லோகோபகாரமாயிருக்கப் பட்ட தேவிகாலோத்திரமென்னும் பேரையுடைய சிவாக மத்திலே சுத்தமாயிருக்கிற ஞானத்தையும், ஞானசாரத்தை யும் போதிக்கிறதாயிருக்கிற ஞானாசாரப் போதகப்படலங் காமி காதி சிவாகமமிருபத்தெட்டிலுஞ் சாராற்சாரமா யெடுத்துச் சேர்த்த சங்கிதையாயிருக்கிற சாஸ்திரம் சருவத்திலுஞ் சாராற் சாரமாயிருக்கிறவிந்தப் படலம் எண்பத்தஞ்சு சூத்திரத்தை யும் ஆராய்ந்து தம்முட செய்யுள் அறுபத்தொன்பதாகச் செய்யப்பட்ட .... விருத்தியைக் ..... கேட்டு .... நின்றவர் கள்... சிவசாயுச்சியத்தையடைவதற்குச் சந்தேகமில்லை. பாயிரம் முற்றும்.

### முடிவு

(எ-து) முந்திச் சொல்லப்பட்ட ஞானமும் ஞானா சாரத்தினுட முடிவுமாகிய பரிபாககாலத்திலே யுண்டாகிற ஞானத்தை... சொல்லத்தக்க கதியாயிருக்கிற சருவத்தையுஞ் சொனனோமே. இனிசொல்லப் போறதைக் கேட்க உத்தேகப்படுகிறீர் *(69)*.

### குறிப்புரை

***2:17; 72:143; 259: 479*** என்ற எண்களில் அமைந்த நூல்கள் இது போன்றவையே. உரை விளக்கம் மட்டும் நூலுக்கு நூல் மாறுபட்டு அமைகிறது.

## 670. தேவி காலோத்திரம் உரைபாடம்

**அ. *259:479*; ஆ.** *1-63* ஏடுகள்; **இ.** 28 x 2செ.மீ.; **ஈ.** *8-9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** அழகான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 2:17 போன்றது.

முடிவு

என்பது மின் போன்ற நுண்ணிடையினையு டையாளே யினிமேலுனக்குத் திரும்பவுஞ் சொல்லத்தக்க கதியா யிருக்குற சறுவத்தையுஞ் சொன்னோமே யினிச் சொல்லப் போறதேது. யிதல்லாம லன்னியமாயுள்ளதேனு கேட்கவுத் தேசப்படுகுறீரென்றவாறு (*69*). தேவிகா லோத்திரம் முற்றும்.

குறிப்புரை

இந்நூல் *2:17; 72:143; 176:371* என்ற எண்களில் அமைந்த நூல்களைப் போன்றதே. பாடல்களும் உரைவிளக்கமும் இந்நூலில் முழுமையாகவுள்ளன.

## 671. நாதாந்த சாரம்

**அ. *76:162*; ஆ.** *105–112*; **இ.** 17 x 2.5செ.மீ.; **ஈ.** *8–10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

அரியெனவே ஓதுகின்ற ஆதியா மாதாரத்தைத்
தெரியவேஅறி வில்லார்க்குச் செப்புநாதாந் தச்சாரம்
உரியதோர் பொருளிதென்று உத்துநான் கூறுதற்குக்
கரிமுகன்கட வுளான்றண்கழ லிணைகாப்புக் கொள்வாம் (1)

அகாரமாய் முதலாயுள்ள அன்பத்தோ ரட்சரத்தால்
சிகாரமாமெழுத் தஞ்சாலுஞ் செப்பிய வேதநான்கால்
பகாரமாஞ்சமை யத்தாலும் படித்திடு பயன்களாலும்
நிகரில்லா உண்மையென் றேநிகழ்த்துவோம் நிகழ்ந்துபாரீர் (2)

முடிவு

ஈசனுக்கும் ஈசனா யிருந்து பின்னுஞ்
செய்தொழிலும் பண்ணியே செல்வ மண்ணிலே
வேசமென் னும்வேடத் தைப்பூண் டிருப்பான்
வேறுமொரு சமயத்தில் சார்ந்து நில்லார்
நேசமுடன் சாதிதன்னை விளக்கஞ் செய்வார்
நிலையுடைய அஞ்செழுத் தினில்மை சொல்வார்
வாசமென்னுந் திருவடித் தாமரைகள் காட்டி
மனிதரைப்போ லத்தாமிருப் பார்வண்மை யானே (33)

குறிப்புரை

***1–33 பாடல்கள்.*** ஓம் எனும் பிரணவ மந்திரத்தைப் படிப்போமானால் அ,இ,உ என விளங்கும். இந்நிலையை நாதாந்தம் என்பர். அதாவது ஓசையில் அருவமாய் இருக்கக் கூடிய முப்பெருங் கடவுளரைப் பின்வருமாறு குறிப்பர். அகரம் என்பது படைப்புக் கடவுளாகிய பிரமனையும், இகரம் என்பது காப்புக் கடவுளாகிய திருமாலையும், உகரம் என்பது மறைப்பு அல்லது அழிப்புக் கடவுளாகிய உத்திரன் எனப்படும் சிவனையும் குறிக்கும் என வேதம் கூறுகிறது. ஆகவே இந்த மூவரை உணர வேண்டுமானால் அகர இகர உகரமாக இருக்கின்ற ஓங்காரத்தைத் தெரிதல் வேண்டும். ஓம் என்ற ஓசை இயற்கை முழுதும் பரவியுள்ளதை நாம் அறிவோம். ஆனால் செவிப்புலம் வழியாக அந்த நாதத்தை உணர்தலே நாதாந்தம் எனப்படுகிறது.

இச்செய்தி பற்றிய விளக்கத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதால் இந்நூல் நாதாந்த சாரம் எனும் பெயர் பெறுகிறது.

## 672. நாதாந்தத் திறவுகோல்

**அ.** ***79:177;*** **ஆ.** *32–48* ஏடுகள்; **இ.** 205 x 2.5செ.மீ.; **ஈ.** *7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இருளொளி வேளிமூன் றாகி யிலங்குமுப் பாலுக் கப்பால்
பெருவெளிக் கமிலை மீதே பேரொளி யாகு மெங்குங்
குருவழிக் குலத்துக் கெல்லாங் கோதிலா ஞான மான
திருவரு ளுருவ மென்னுந் திருவடி நெஞ்சுகள் வைப்பாம் (1)

முப்பால் மூன்று மாயை முப்பத்து மூன்று வட்டத்
தப்பாலும் இப்பு றத்து மானந்த மயமாய் நின்று
தப்பாமல் உலகுக் கெல்லாந் தானவ னான சோதி
வைப்பாக எந்த னுச்சி வட்டத்தே வைத்த னாதன் (2)

முடிவு

**செகமாய்கை நீக்கிப்பின் சிற்பர மாய்கைச் செயலகத்தி**
**யகமாய்கை யாகிய யாணவ மும்மல மாவதல்லாஞ்**
**சுகமான துக்கச் சுதந்தர மான சூடகத்தி**
**மகமான பேரொளி பாதார விந்தத்தை மன்னிநில்லே**
**நாதாந்தத் திறவுகோல் எழுதி முடிந்தது (99)**

குறிப்புரை

***1–99 பாடல்கள்.*** மூலமும் நடுவும் உச்சியுமாகிய ஞாலத்தில் சிலங்கையும் அவற்றைக் கடைப் பிடிக்குமாறுகளையும் அவற்றால் உண்டாகும் பயன்களையும் நாதசத்தியின் அடிப்படையில் விரித்துக் கூறுகிறது. இறையின்பப் பேற்றினை அடைவதற்கான நிலைகளுள் ஒன்றான நாதாந்தம், விளக்கம் பெறுகிறது. நாதம் என்னும் ஒலிக்கு மூலமாய் இருப்பது ஓங்காரம். இறைவன் சோதியாய்த் தோன்றும் முன்பு நாதவொலி கேட்கும். இந்த நாதாந்த நிலையைக் கடந்து சோதி வடிவான இறையைக் காண்பதற்கான வழியை இந்நூல் நுவல்கிறது.

## 673. நாதாந்த திறவுகோல்

**அ.** *1:3;* **ஆ.** 21 - 28 பக்கங்கள்; **இ.** முழுமை; **ஈ.** இந்தச் சுவடி அச்சாக வில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

குரு சுவாமிகள் பாதா விந்தமேல் ரட்சிக்கவும். முருகேசப் பிள்ளை பாதமே துணை.

### விநாயகர் துதி

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் உந்தியைக் காக்கவும்
பருவ மாய்நம துள்ளம் பூக்கவும்
பெருக ஞானத்துப் பிள்ளையைப் போற்றுவோம்.

முடிவு

**மனமே மூலம் வன்னிகதிர் மதியாய் நின்றுமாறி யொன்றாய்**
**நினவே யுச்சி மூலமதாய் நின்றே யியங்கும் திருவடிதான்**
**தினமே நோக்கி இருந்தவர்கள் திடமாஞ் சிவயோ கத்தவரே**
**மனமே மாயைதனை நீக்கும் மதியால் நோக்கி மதித்திடுமே**
**(41)**

முற்றும்

குறிப்புரை

இந்நூலில் முதலில் இடம்பெறும் காப்புப் பாடலுக்கு எண் இல்லை. அதனையடுத்துத் தொடங்கும் நூலினுடைய முதல் இரண்டு பாடல்களும் *79:177* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் போன்றவை. இந்நூலில் ***41*** பாடல்கள் இடம் பெற்று, முற்றும் என்ற சொல்லும் இடம்பெற்றுள்ளது. *79:177* என்ற எண்ணுள்ள நூலில் ***99*** பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

## 674. பகீரதன் கதை

**அ.** 70:134; **ஆ.** 202ஆ - 206ஆ ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாக வில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**அசைவிலா வுட்போ தத்தா லனைத்தினு முளத்தை வாங்கி**
**யிசைவசெய் திச்சை யின்றி யிளைப்பறப் புந்தி யாறி**
**.... நஞ்சை விண்ணென விமல மாக்கி**
**வசையறு மேனி யேதன் காந்தமே வடிவ மாகி (1)**

முடிவு

மச்சய மன்றி வந்த தொழிலொன்றின் வழியி னின்று
மெச்சிய வியப்பி லாதோன் மிகுந்த பல்லாண்டு நோற்றுத்
துச்சமில் தவத்தாற் கங்கைக் குணர்ந்து தோல்பிதர ருய்ய
விச்சக விசையே கீர்த்தி யீற்ற நிறுத்தி னானே (33)

முப்பத்தேழாவது பகீரதன் கதை முற்றும். ஆக விருத்தம் சூத்திரம் 604. சிகித்துவசன் கதை.

குறிப்புரை

**1 - 33 பாடல்கள் உள்ளன.**

## 675. பஞ்சமலங் கழற்றி

**அ.** ***304:529;*** **ஆ.** *21 ஏடுகள்;* **இ.** 21.5 x 3.5செ.மீ.; **ஈ.** *8–10 வரிகள்;* **உ.** ஏடுகளின் இடது பக்க ஓரப்பகுதிகள் சிதைந்துள்ளன; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாக வில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

அஞ்செழுத் துண்மை யாணவம் பலந்தன் னானமூலந்
துஞ்சிருள் கிழிய நின்று தாந்தோ மென்ற மனம் காணக்
குஞ்சித நடனஞ் செய்யுங் குருமலர் பதமுட் கொண்டு
வஞ்சக மலங்க ணீங்க வாழ்த்தி முன்வணங்க லுற்றாம் (1)

முடிவு

அனுக்கிரக மாதியா யைந்தொழிலு மன்றி
மனுக்கிரிகை யத்தனையு மாற்றி-தனுக்கழன்று
போ.. கிலன்றே புகலிநகர் வள்ளலே
மாமாயை நீங்கு மது (5)

பஞ்சமலக் கழற்றி முற்றும்.

குறிப்புரை

**5 பாடல்கள்.** பஞ்சமலம் என்பது ஆணவம், கன்மம், மாயை, அசுத்த மாயை, திரோதனம் என்று சொல்லப்படக்

கூடியவைகளே. இவை உயிரைச் சுற்றி உள்ளதால் உயிரை இறைவனோடு இணைய விடாது அவ்வப்போது தடுத்துக் கொண்டிருக்கும். ஆகவே இவை கழற்றப்பட வேண்டியவை. ஆகவே தான் இந்நூல் பஞ்சமலங் கழற்றி எனப் பெயர் பெறுகிறது. கழற்று என வினையடியாக வந்த சொல்லே கழற்றி. இந்த ஐந்தையும் நீக்கினால் உயிர் இறைவனிடம் இணையும் என்பதே இதன் தத்துவம். ஞானக்கிரியை, ஞானமுறைமை, ஞானசாரம், சீவிக்கிற முறை, சீவமுத்தி, சித்தி தத்துவம் ஆகிய செய்திகள் இதில் இடம் பெறுகின்றன.

இந்நூலாசிரியர் பெயர் காழி கண்ணுடைய வள்ளல் என்பதாகும். சீர்காழி என்பதே காழி என அழைக்கப் பெறுகிறது. இவ்வாசிரியர் அதிகையில் (அதிகை வீரட்டானம்) வாழ்ந்தாலும் பின்னர் இவர் சீர்காழிக்குச் சென்று, மானசீகமாகக் குருவாக ஏற்றுக் கொண்ட திருஞான சம்மந்தர் பெயரில் ஒரு மடத்தை நிறுவி அதற்கு இவரே தலைவரானார். இம்மடத்தினர் தங்கள் பெயரோடு வள்ளல் என்ற பெயரையும் இணைத்துக் கொள்ளுதல் மரபாக இருந்து வந்தது. எனவே இவரது பெயரோடும் வள்ளல் என்ற சொல் இணைந்துள்ளது. சைவ சமயத்தில் ஐக்கியவாதக் கொள்கை என்ற ஒன்றினை இவ்வாசிரியர் ஏற்படுத்தினார். இம்மடத்தினர் மட்டுமே இக்கொள் கையைப் போற்றினர்.

பழனி மாமுனிவர் என்பார் பஞ்சமலக் கழற்றி என்ற இதே பெயரில் வேறு ஒரு நூல் செய்துள்ளார். அந்த நூலானது சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பதிப்பாகாமல் உள்ளது. கண்ணுடைய வள்ளல் ஏற்படுத்திய ஒழிவிலொடுக்கமே அப்பரம்பரையினரின் முதல் நூலாகக் கொள்ளப்படுகிறது.

## 676. பஞ்சவிதப் பஞ்சபுரோசனம்

**அ. 101:204; ஆ.** 9–78 ஏடுகள்; **இ.** 31.5 x 3செ.மீ.; **ஈ.** 6–7 வரிகள்; **உ.** ஓரளவு சிதைவு; இறுதிப் பகுதி ஏடுகள் மிகுதியான சிதைவு; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

## தொடக்கம்

அகண்ட பிரம்மத்தைத் தோற்றுவிக்கும் சொரூபஞானம் சாட்சி அறிவாலே பிரம்மத்தை அறியில் அறிவென்றும், அறியப்படுகிற பொருளென்றும், அஞ்ஞானத்தைப் போக்கி ஏக பிரம்மன் தானாய் தோற்றுவிக்கும் சுபாவஞானம் சுபாவத்தை மறைச்ச சச்சுதானந்த அஞ்ஞானத்தைப் போக்கு சுபாவம் தனக்கும்.

தெசஞானமும் அஞ்ஞான நிவர்த்தியும் முற்றும்.

பஞ்சவிதப் பஞ்ச புரோசனமாவது, பிராந்தி பஞ்சகம், தாதார்மிய பஞ்சகம், அஞ்சான பஞ்சகம், ஐக்கின பஞ்சகம், சைதன்ய பஞ்சகம் ஆக ஐந்து.

## முடிவு

கோவின்சாதி ஏகமாயிருக்கும் கொம்பு கால் முதலான அவையமும் பல வண்ணங்கள் வெத்தி நானா வாயிச் சாதியை விட்டிராது வெத்தியை விடாமல் அப்படிப் போலச் சர்வ சாட்சி ஏகமாயிருக்கும் நானாவாயிருக்குஞ் சச்சிதானந் தத்தை விடா மலம் அதை விட்டிராது வெத்தியை விடாமல் சாதியை அறியுறாப் போலச் சச்சிதானந்தத்தை விடாமல் சர்வ சாட்சியை அறிந்து அது தானாயிருக்க அதிபத வாச்சியமான சத்தம்.

## குறிப்புரை

பிராந்தி பஞ்சக அஞ்சாவது புத்தி, சுருதிசாரம், பரமத் வாதசங்கை, உத்தரம், வினாவிளக்கம், மகாவாக்கிய திசைகாரியம் (உரைநடை), தியான சமாதி பேதம் (1–24 பாடல்கள்), சிவபர ஐக்கிய பேதம் பரபதம் (உரைநடை), வாத பஞ்சகம் (உரைநடை), சவுபாக்கியம் ஒருமொழிக் கர்த்தம், வாக்கிய விவேகம், சமாதி பலம், காருண்ணி யனுக்கு, சமரசனுக்கு, சம்பவனுக்கு, மந்தனுக்கு, சவுபாக்கிய சம்பிரதாய நிலை என்ற தலைப்புகளில் இந்நூல் இயன் றுள்ளது. இதனையடுத்து, பார்வதி அம்மன் பேரில் ஊசல் எனும் தலைப்பில் இரண்டு ஏடுகளும், திருவிடை மருதூர் பணத்தச் சாதகம் எனும் தலைப்புடைய சில ஏடுகளும்

காணப் பெறுகின்றன. அவையனைத்தும் மிகவும் பழுது பட்டனவாக இருக்கின்றன.

## 677. பதிபசுபாச அட்டவணை முதலியன

**அ.** *356:589*; **ஆ.** *1–23* ஏடுகள்; **இ.** 23.5 x 3.2செ.மீ.; **ஈ.** *9–11* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

**தொடக்கம்**

சிவதருமோத்திரம்

யிந்திரன் புயத்துற வாத மீடின்ன
சந்திரன் சயோரகந் தரித்துச் சாம்பின்ன
மைந்தனு முடவனேல் மற்றை யோரெலா
மெந்தவா றுடலெடுத் திடரப் படாதவர்யின்னம்
காலையும் மலத்தினாற் கட்டிய துன்பமே
சாலவும் பசியி னாற்றளர் வருச்சியின்
மாலையிற் காம மீதூர் வாடுவர்
வேலை கடொறுந்து யர்விளையும் விஞ்சியே
என்றும் வருவன வற்றாற் காண்க.

**முடிவு**

தானந்த மில்லான் றணையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுந்தவைத்தான் காணேடி
யானந்த வெள்ளத் தழுந்துவித்த திருவடிகளே
வானந்த தேவர்கட்கே வான் பொருள் காண்சாழலோ

– என்றும் வருவனற்றாற் காண்க. பதி, பசு, பாச அட்டவணை முற்றும்.

**குறிப்புரை**

'பதிபசுபாச அட்டவணை' எனும் இந்நூல் முழுமையாக உள்ளது. கலிவெண்பாவால் அமைந்த இந்நூல் இடையிடையே உரைநடையுடன் காணப்படுகின்றது. இந்நூல் சைவ சித்தாந்தக் கருத்துகள் அடங்கியதாய் பதி–பசு–பாசங்களை விளக்குவதாய் அமைந்துள்ளது. இந்நூலின் தொடக்கத்தில் சிவதரு மோத்திரத்திலிருந்து சில செய்திகள் எடுத்தெழுதப் பட்டுள்ளன.

## 678. பதி–பசு–பாச விளக்கம்

**அ. 58:86; ஆ.** *18–26* ஏடுகள்; **இ.** 28 x 3செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** நன்று; *18*–ஆம் ஏடு சற்று உடைந்துள்ளது; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

### தொடக்கம்

மாயலற்றார் கேட்க மகிழ்ந்துரைத்த வார்த்தை
அயலுக் குபதேச மாகும் துயிலாத
தொருவனைப் போனின்று கெடுகேழிக்கும் நோயும்
மறுமுறைத் தோற்றா – முரைப்பதை
அண்டமுதலா னந்தம் பிறப்பில் விதம்
கொண்டு நரராயே வினைகள் கூடுறுத்து – தொண்டிற்
சரிதாதி செய்து தவச்சார்பினிற் போர்க்
கரிதரன் பக்குவ நாலாம்.

### முடிவு

கேட்டார்கள் பக்குவமோ கேட்டப்பொருள் சொல்லுதற்கு
மாட்டாமலோ வாக்கில் வாராதோ – நாட்டறிய
ஞான மடந்தையுடன் நால்வர்களும் கேட்டுவப்ப
மோனமுடன் நீஇருத்தல் முன்.

### குறிப்புரை

கேட்டார்க்குச் சர்வசந்தையமும் தீருகைக்கு அவ்னியமாக வியக்கியான முத்திரையிலே சித்தாந்தர் உள் ஞாயமனுக்கு உரைத்ததென அறிக. இந்நூல் சைவ சித்தாந்தக் கருத்துகள் அடங்கியதாய்ப் பதி–பசு பாசங்களை விளக்குவதாய் அமைந்துள்ளது. கலிவெண்பாவால் அமைந்து ஆங்காங்கு உரைநடையுடன் காணப்படுகின்றது. சுவடியில் முதல் *17* ஏடுகள் இல்லை. *18*–ஆவது ஏட்டில் இருந்து *26*–ஆவது ஏடு முடிய இந்நூல் அமைந்துள்ளது. தொடர்ந்து சிவானந்த மாலை *27,28*- ஆம் ஏடுகளிலும் எழுதப்பட்டுள்ளது.

## 679. பதியிலக்கணம்

**அ.** ***147:324;*** **ஆ.** *36–40* ஏடுகள்; **இ.** 33 x 3செ.மீ.; **ஈ.** *7* வரிகள்; **உ.** நன்று; ஆங்காங்கே சில துளைகள்; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

### தொடக்கம்

**வேக மாநெறி சேரும் வினைகளும்**
**தாக போகம் விடாத தளர்ச்சியும்**
**சோக வாரியி னால்வரு துன்பமும்**
**போக வானை முகத்தனைப் போற்றுவாம்.**

பதிபசுபாச மூன்றும் நித்தியம் .இவற்றில் பதியாவது

பரிபூரணமாய் ஒன்றாய் அறிவுக்கறிவாய் நின்மலமாய் உயிருக்குயிராய் குறியுங் குணமும் இல்லாததாய் ... இப்படிப் பஞ்சக் கிருத்தியங்களைச் செய்யுமது.

### முடிவு

அதுதான் அகந்தைக்கு வித்தாயிருக்கும். அவைதான் தைசதவாங்காரமென்றும், வைகரியாங்காரமென்றும், பூதாதியாங்காரமென்றும் மூன்று வகைப்படும்... ஆக இவை ஆறுந் தோன்றும்.

### குறிப்புரை

**உரைநடை.** பதி, பசு, பாசம் என்பவற்றுள் பதியினது இலக்கணம் மட்டும் கூறுவதாய், பதியின் அருவத் தோற்றம் முதல் ஆங்காரத் தன்மை யீறாக விளக்குகிறது.தொடர்ந்து வரும் *41*ஆம் ஏட்டில் வயிராக தீபம் என்னும் நூல் தொடங்குகிறது.

## 680. பரமரகசிய சடுத்தலம்

**அ.** ***127:241;*** **ஆ.** *21* ஏடுகள்; **இ.** 35 x 2.5செ.மீ.; **ஈ.** *5–6* வரிகள்; **உ.** ஓரிரு ஏடுகள் பாதியாக முறிந்துள்ளன; துளைகள் உள்ளன; **ஊ.** சற்றுக் கடினம்; **எ.** குறை; **ஏ.** அச்சானது (நிறுவன வெளியீடு, *1996*).

தொடக்கம்

இவை இரண்டு திருவிருத்தமும் குருமரபும் குருஸ்துதியும் ஆயினவாறு உணர்க.

ஆதிகுரு பரன்இருதாள் இதையத் தேந்தி
யர.. அழிக்குமுமை யம்மை கேட்ப
வேதியநூல் கூடல்சங்க மாதா ளேத்து
முத்தமநர் கருநடத்தால் உகர்ந்து நல்க
நீதியினால் விளங்குசடத் தலத்தை யானும்
நிகழ்த்துவதை தமிட்சிறுமை நெடியோ னாதி
சோதியில் இமையவரும் சகல ராம...
தொல்லுலகில் உயிருமெனச் சொல்வார் நல்லோர் (3)

இது நூல் மரபும் அவையடக்கமும் உணர்த்தியது.

முடிவு

விளங்கு பிரசாத பஞ்சமதி லயன்மேல்
அந்தவிதி முளிரிமுளரி யரியரியும் திருமாலும்
துளங்கு கடலினில் முனிவன் கரத்திலாழி
தொன்முனியும் குடத்ததுவும் மண்ணிற் சின்னம்
வளங்கெழு மண்பணித் தலைமேல் அந்தநாக
மாதுமைகைக் காப்புமையு மிறையிற் பாக
முளங்கொளரும் பிணாகிசிவ பத்தருள்ளத் தொடுங்கு
தாலற்ற பத்தரியல் யுரைக்கொ ணாதே (73)

இது சிவபக்தர்கள் மகிமை உணர்த்தியது. பரம இரகசிய சடுத்தலம் எழுதி நிறைவேறினது முற்றும்.

குறிப்புரை

பரம இரகசிய சடுத்தலம் எனும் இந்நூலின் முதல் ஏடு காணப்படவில்லை. சடதல லிங்கத்து இயல்பு, நித்திய குணங்குறி, சிவசதாக்கியம், மூர்த்தி சதாக்கியம், அமிர்த சதாக்கியம், சத்துரு சதாக்கியம், கன்ம சதாக்கியம், என்னும் பஞ்ச சதாக்கியங்கள், சிவ வேடத்து மகிமை, சிவபக்தர்கள் மகிமை போன்ற பல தலைப்புகளில் சிவலிங்கத்துச் சிறப்புகள் கூறப் பெறுகின்றன. இடையிடையே ஏடுகள் சிதைந்து காணப்படுகின்றன. ஏடுகளுக்கு எண்கள் காணப்

பெறவில்லை. இந்நூல் சடத்தலம் என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

## 681. பலசாத்திரத்திரட்டு

**அ.** *9:24;* **ஆ.** *1–142* ஏடுகள்; **இ.** 18.5 x 2.5செ.மீ.; **ஈ.** *6–8* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

### தொடக்கம்

திருநாவுக் கரையர்முதல் உரைகோவர்க் குயர்கடவுள்
பெரியானைக் கணபதிதன் இருதாளைப் பணிகுவனே

நூல்

பந்தமா சார சீலம்
பசிதகண் டிகைஅஞ் செழுத்தும்
கந்தமா திமலர்க் கொண்டு
கடவுளர்ச் சனையி னேய
மிந்தநன் னிலையில் நின்றன்
எதிர்த்தொன்றாத் துறவி யாகி
அந்தமுதல் இல்லா வீட்டுக்
கண்ணலே ஆசைப் பட்டேன்

### முடிவு

தேவர்களும் முனிவர்களும் செழுமறையும் பழையவரு
மூவருமென் றறிந்தினையோ முழுமுதலென்ற றந்தனையோ
பாவுடைநூல் படும்சிந்தை யினில்பறப்ப லுவந்தப ராபரனார்
சேவடி தனதமை பாடிரே செய்ய கருணையைப் பாடிரே
மீட்ட விரகினைப் பாடிரே விளம்பிய தொன்றென்று பாடிரே
நாட்டி வருளினையும் பாடிரே ஞான வினோதனைப் பாடிரே

### பிற்குறிப்பு

மகாகுரு சுவாமிகள் திருவாக்குப் படிக்கு அருணாசலய்யர் பலசாத்திரத்திரட்டு.

குறிப்புரை

இந்நூல் தொடக்கத்தில் கணபதி, ஆறுமுகன், சிவபெருமான் போன்ற பல கடவுளர் வணக்கம் கூறித் தொடங்குகிறது. வீட்டுப் பேற்றினைப் பெற விரும்பிய ஆசிரியர், அப்பேற்றினை உணர்த்த வல்லவர்களான பல முனிவர், ஞானியர், யோகியர் போன்றவர்களையும் புகழ்ந்து பாடுகிறார். புண்ணிய பாவச் செயல்கள் ஒழுக்கம் நீசச் செயல்கள் போல்வன விளக்கம் பெறுகின்றன. இடையிடையே திருமூல சுவாமிகள் வாக்கு அறிவானந்த சித்தியார் வாக்கு ஞான வாசிட்ட கருத்து, வீராகமக் கருத்து, சர்வதியானத் தோத்திரம், ஞானாமிர்தம், உமாமயேஸ்வரர், சம்ஹாதித்தல், தேவிக்குப் போதனை பண்ணுதல், பட்டினத்துப் பிள்ளை, கழிகாலத்து இரங்குதல், நிகழ் காலத்து இரங்குதல், எதிர்காலத்து இரங்குதல், சிவஞான சித்தியார், வீர சைவத் தத்தவப் பிரகாசம், நாதாந்தத் திறவுகோல், பட்டினத்துப் பிள்ளையார் பாடிய வண்ணம், காரியாச்சாரியார் இலட்சணம், தெட்சிணா மூர்த்தி நால்வர்க்கு அனுக்கிரகம் பண்ணியது, வீரசைவ நிசானு பவசாரத்திலமந்த பிண்டலக்கணம், ஞானப் பிரகாசத்தில் பெரியோரை இகழ்ந்தோர் நிலைமை முதலான பல நூல்களிலுள்ள உட் தலைப்புகள் தொகுக்கப்பட்டு பல பாடல்களின் தொகுதியாக இச்சுவடி அமைகிறது.

திருக்கோவலூர் வீரட்டேசுவரர் குரு ஸ்வாமி ரதத்துக்கு உரிய பொருள்கள் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளன.

## 682. பாசவிலாசவர் கதை

அ.70:124; **ஆ.** *144 - 147*; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இத்திறஞ் சுரகு பரிகனென் றிசைத்த விருவருஞ்
சகத்தொழுங் தென்...தி செய்தொருவர்க் கொருவர்
பூசித்துப் பரிந்து தம்பணிநிலை நின்றரத்தி யாற்றும்மே
நிற்றலும் வடிவாய் கமுக ம...கிழ் தினவிடாம
லனுபவிப்பவர் சிறிது மோரா குலஞ்சேர் (1)

முடிவு

மடமை நோய்க்கு மாமருந்தா.. மாற்றுப் பேற்றை
விடநின் றவர்க்கு வன்பிறப்பாம் விடுசிமன்மேல் வந்திடுமே
லிடரின் பத்தினிடைப் பட்டு மிறப்பில் ப..பில் வீ..ற்
தடமா ருலகி லுயிர்கள் சருகுலுழ்வ ரெண்றி சைத்தான் (17)

பாசவிலாசர் கதை முற்றும். ஆகக் கவி சூத்திரம் 1514.

வீதகவ்வியன் கதை

குறிப்புரை

***1 - 17* பாடல்கள் உள்ளன.**

## 683. பாலகன் கதை

**அ.** **70:108;** **ஆ.** *53 - 54 ஏடுகள்;* **இ.** 38.5 x 2.5 *செ.மீ.;* **ஈ.** *7 - 8 வரிகள்;* **உ.** *ஓரளவு நல்லநிலை;* **ஊ.** *சுமாரான எழுத்து;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

முழுது சத்தியுமாய் பூரணமா யென்று
    முடிவறு பிரம்ம மாவதுதான்
பழுதில் ஞானிகள் தம்மனமலர் தில்லைப்
    பரமமா மிதிலிலா தில்லை
யெழுதரு சத்தி யாவுமா யிலங்கு
    யிவைக...ளார் காலமென் றுளதாம்
வழுவிலாப் பிரம முடைய சிற்சத்தி
    மறிதரு முடலிலே தோன்றும்     (1)

முடிவு

அவரெலா நிரம்ப வுண்டபின் மிகுந்த
    தருந்தினர் வேட்ட களாடி
யிவர்கள் மூவரு மங்கிருந் தனரென்ன
    விளமையால் நம்பினன் சிறுவன்
புவனமிவ் வாற்றி...லோர் காணப்பா
    புகல்மன விரிவு சங்கற்பம்

விவரமா மிதனா லுலகமா மிதனை
விடுநிருவி கற்பமாய் விடுநீ (8)

பாலகன் கதை முற்றும். ஆக 419. இனி, சித்தன் கதை.

குறிப்புரை

**1 - 8 பாடல்கள் உள்ளன.**

## 684. பாலகிருஷ்ண பிள்ளை உபதேசம் முதலியன

**அ. 228:439; ஆ.** 2–87 ஏடுகள்; **இ.** 24.5 x 3செ.மீ.; **ஈ.** 7–9 வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; சில ஏடுகள் செல்லரித்துள்ளன; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

தேயுவின் கூறுகள் 5-க்கும் வகை – பசி, தாகம், நித்திரை, சோம்பல், மைதுனம் ஆகத் தேயுவின் கூறு ஐந்தும் சரி. வாயுவின் கூறு ஐந்துக்கும் வகை – இருத்தல், நடத்தல், கிடத்தல், ஓடல், நிருத்தல் ஆக ஐந்தும் சரி. ஆகாசத்தின் கூறு ஐந்துக்கும் வகை – காமம், குரோதம், லோபம், மோகம், மதம் ஆக ஐந்து. ஆகப் பூதாதிகள் பிறக்கருவி 25-ம் சரி.

பொறிகள் ஐந்துக்கும் வகை – ஶ்ரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்குபாராணம் – ஐந்துக்கும் விபரம் ...

முடிவு

புருடனென்னும் பயலாள் அகுவை என்கிற எருதைப் பூட்டி கருவென்னுங் கலப்பை கொண்டுழுது, சமன்பண்ணி மோகமென்னு மெருவைப் போட்டு, முளையில்லாத விதையைத் தெளித்து, அறிவு என்னும் வாய்க்கால் வெட்டி சாந்த மென்னும் மதகு திறந்து, சாத்துவித மென்னும் நீரையிரைச்சு மெய்ஞ்ஞான மென்னுந் தானியம் விளைந்து மீளாவழி பரவி, குருவின் நிலையில் நின்ற பேருக்கு ஆறாதாரமென்னும் அறிவும் திருவருளாலே கண்டு தெரிசிப்பன்.

பாலகிருஷ்ணப் பிள்ளை உபதேசம்

பிற்குறிப்பு

*சித்திராத்திரி வருஷம் ஆவணிமாதம் 23ஆந் தேதி.*

குறிப்புரை

**உரைநடை.** ஐம்பூதங்களின் கூறு தொடங்கி, மும்மலம், தோசம் மூன்று, அவத்தை போன்ற தத்துவக் கருத்துகளின் வகைகளும் ஒவ்வொன்றிற்கான விளக்கங்களுமாக அமைந்துள்ள இச்சுவடி 'பால கிருஷ்ணப் பிள்ளை உபதேசம்' என்ற பெயரைப் பெறுகிறது.

## 685. பிரகலாதன் கதை

**அ.** **70:120;** **ஆ.** *114 - 122* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** தெளிவான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**பின்னு மீதோர் கதைகேட்பாய் பிரக லாதப் பெயரோனுந்**
**தன்ன துணர்வால் மெஞ்ஞான தத்து வத்தைச் சார்வுற**
**றன்ன னதுரைப்பர் மிரணியனா மசுரர் வேந்த னிறந்தனவே**
**யின்னல் கூறுமவன் மைந்த னிதைய நடுங்கியிவை**
**யுணர்ந்தான் (1)**

முடிவு

**ஆயிரம் வருடஞ் சென்று மங்கமே யிருக்கி லுள்ளே**
**மெய்தா மிவ்வ வத்தை மெல்லென வொருபா னின்று**
**நேயல தாகித் தோன்றுஞ் செறியுமவ் வவத்தை யாலே**
**தூய நிறசீவன் முத்தரு ணர்ச்சியைத் துடர்வ ரென்றான. (72)**

*பிரகலாதன் கதை முற்றும். ஆக, கவி 977 யினி, காதிகதை.*

குறிப்புரை

***1 - 72* பாடல்கள்.** தன்னையே வழிபட வேண்டும் என்று கட்டளையிட்ட இரணியனையும், அதைமீறி நாராயணனே தெய்வம் என வழிபட்ட இரணியன் மகன் பிரகலாதனையும் பற்றி இக்கதைப் பாடல் விளக்குகின்றது.

## 686. பிரசாத பரமாட்சரி யென்கின்ற ஆகமம்

**அ. 356:590; ஆ.** *1–4* ஏடுகள்; **இ.** 23.5 x 3செ.மீ.; **ஈ.** *9–11* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

பிரசாத பரமாட்சரி யென்கின்ற ஆகமத்துக்குத் தமிழட்ட வணைப் பிரசாத மென்கின்ற சொல்லுக்குப் பொருள் பிர வென்ற சத்தம் சிவஞானம், சதாவென்ற சத்தம் வீட்டைச் சொல்லுமதா வென்ற சத்தம் சிவரூபம். இந்த மூன்று பதத்தினாலு முடிந்த பொருள் சிவஞானத்திலே சாயுச்சி யத்தைக் கொடுக்கு மென்றறிக.

முடிவு

**வியாபினிக்கும் சமனைக்கும் நடுவிலே – வியோம ரூபினியனா தையனா தையனா, சிருதை ஆகிய நாலுக்கும் இவ்விரண்டாக விவ்வொன்றுக் கொவ்வொன்று புள்ளி வடிவமாக விருக்கும். இனி யிருதையந்தொடுத்துப் பிரமாந்திர மட்டாக அஞ்சு தானத்திலுங் கலை முதலாகிய ஆர்த்து வரவு நிற்கும் நிலை யருளிச் செல்கின்றார்.**

குறிப்புரை

***உரைநடை.*** சைவசித்தாந்தக் கருத்துகளை இந்நூல் விரித்துக் கூறுகின்றது. இந்நூலினைத் தொடர்ந்து ஒன்று முதல் மூன்று ஏடுகளில் சைவசித்தாந்தக் கருத்துகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் நூலிற்குப் பெயர் இல்லை. இதனைத் தொடர்ந்து 'முப்பத்தாறு தத்துவம் நீங்கு முறைமை' என்ற நூற் பெயரில் ஓர் ஏடு இருக்கின்றது. அதனைத் தொடர்ந்து ஐந்து ஏடுகளில் 'குரு தோத்திரம்' என்ற நூல் அமைகின்றது.

## 687. பிரபுலிங்கலீலை

**அ. 24:44; ஆ.** *2–141* ஏடுகள்; **இ.** 37 x 2.5செ.மீ.; **ஈ.** 7 வரிகள்; **உ.** நன்று; முதல் இரண்டு ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

வார்க்குங் குமமென் முலைபாக
    னடியார் அறுவை மாசடித்துத்
தீர்க்குஞ் செயல்போல் விச்சலம
    னவன்றன் சேனை செய்பிழையைத்
தாக்குங் கரவாள் கொடுசின்ன
    பின்ன மாகத் தடிந்திட்டுப்
போக்குங் கருணை மடிவால
    மாச்சன் பொன்னங் கழல்போற்றி.

முடிவு

பார்கெழு சகாத்த மூவைஞ் நூற்றெழு பானான் காவ
தாகிய கரநா மங்கொள் ஆண்டுறு விடைஞா யிற்றில்
சீரகெழும் அல்ல மன்றன் திருவிளை யாடற் காதை
கார்கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண் டியம்பி னானே.

புண்ணியர் உலகில் வாழ்க புலஞ்செறு நோன்பு வாழ்க
பெண்ணொரு பாகன் பூசை பேணிவாழ் அடியர் வாழ்க
ண்ணுதல் ஒருவன் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க
அண்ணலல் லமன்சீர் கேட்கும் ஆதர வாளர் வாழ்க

குறிப்புரை

*சிவப் பிரகாசசுவாமிகள் துதிகதியில் ஏழாம் பாடல் வரை காணப்பெறவில்லை. துதிகதியின் 8–ஆம் பாடல் முதல் மான்மிய கதியின் இறுதிப் பாடல்கள் வரை முழுமையாக உள்ளன. இந்நூலின் ஆசிரியர் சிவப் பிரகாச சுவாமிகள். இவர் 17–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இந்நூல் ஒரு காப்பியம் போல் அமைந்துள்ளது. அல்லமா பிரபு என்பான் மாயா என்பவனை வென்று பேரின்பபுரியைக் கைப்பற்றியதாக இந்நூலில் சொல்லப்படுகிறது. அல்லமா என்பவன் சிவபிரான் என்றும், மாயா என்பது மாயை என்றும் இந்நூலில் உருவகிக்கப்படுகின்றன. பெரும் படையோடு அல்லமா என்பவன் ஞான யோக மார்க்கங்களைக் கையில் கொண்டு உடலாசைகளால் ஏற்படும் காம குரோதங்களை வென்று மாயையை அழித்து ஆடல்*

வல்லானின் நற்பதம் அடைவதற்கான நல்வழியை இந்நூல் நவில்வதால் இது லீலை என அழைக்கப் பெறுகிறது. லீலை என்பதற்கு முப்பொருளை மறைத்து இறைநேயன் உணராதவாறு இறைவன் ஆடுகின்ற நாடகமே ஆகும்.

பெரியபுராணம் எவ்வாறு சைவ சமயத்தாருக்குக் காப்பியமாகக் கருதப்படுகின்றதோ அது போன்று வீரசைவ சமயத்தாருக்குப் பிரபுலிங்க லீலை காப்பியமாகக் கருதப் பெறுகிறது. யோனியையும் லிங்கத்தையும் இணைத்து வழிபடுவது என்பது சைவ சமய மரபு. ஆயின் லிங்கத்தை மட்டும் (லிங்கதாரணிகளாக) கழுத்தில் அணிந்து கொண்டு சிவனே இறைவன் என்ற கோட்பாடோடு பரவுதல் வீர சமயத்தாரின் மரபு. சைவ சமயத்தின் கிளைச் சமயமாகக் கருதப் பெறும் வீர சைவசமயம் கன்னடிய நாட்டில் உருவானது. இந்நூலாசிரியர் சிவப் பிரகாசரைக் கன்னடியர் என்று கூறுவாரும் உளர். முதன் முதலில் இந்நூல் ஆசிரியரால் கன்னடத்தில் செய்யப்பட்டு, பின்பு அவராலேயே தமிழாக்கம் செய்யப் பட்டதாக மூர்டாக் அட்டவணை விளம்புகிறது.

இந்நூலாசிரியர் சிந்து பூந்துறையில் வாழ்ந்த வெள்ளி அம்பலத் தம்பிரானிடம் பாடம் பயின்றவர். அபிடேக மாலை, இட்டலிங்க குறுங்கழிநெடில் விருத்தம், இட்டலிங்கப் பெருங்கழிநெடில் விருத்தம், காளத்தி புராணம், கைத்தல மாலை, சதமணி மாலை, சித்தாந்த சிகாமணி, சிவநாம மகிமை, சிவப் பிரகாச வியாசம், சோணசைல மாலை, தர்க்க பரிபாசை, திருக் கூவப் புராணம், திருச் செந்திலந்தாதி, திருச் செந்தில் நீரோட்டயமக அந்தாதி, துறசை வெண்பா, நன்னெறி நால்வர் நான்மணி மாலை, பழமலை அந்தாதி, பிக்ஷாடனநவமணி மாலை, பெரிய நாயகி கலித்துறை, வேங்கைக் கலம்பகம், வேங்கைக் கோவை, வேங்கை உலா, வேங்கை அலங்காரம், வேதாந்த சூடாமணி (மொழிபெயர்ப்பு நூல்) ஆகிய நூல்களை இந்நூலாசிரியர் செய்துள்ளார்.

இறுதியில் ஒரு வெற்றேடு உள்ளது. 177:375 என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூலினைப் போன்றதே.

## 688. பிரபுலிங்கலீலை

**அ.** *177:375;* **ஆ.** *1-125* ஏடுகள்; **இ.** 34 x 3செ.மீ.; **ஈ.** *7-8* வரிகள்; **உ.** நல்ல நிலை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச்சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

முற்குறிப்பு

சய வருடம் பங்குனி மாதம் *20* ஆம் தேதி மங்கள வாரம் அசுபதியி லெழுதத் தொடங்கியது.

தொடக்கம்

**சுராகு லாதிபன் றூய்மலர் நந்தனம்**
**பெருகு வார்கடற் பெய்த வயிற்றினோன்**
**கரக நீரைக் கவிழ்த்த மதகரி**
**சரண நாளந் தலைக்கணி யாக்குவாம்**

**பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன்**
**கைகான் முடங்கு பொறியிலிதன்**
**நாவா யொழுகிற் றென்றுலக**
**மளந்த மாலு நான்முகனுங்**
**காவா யெனநின் றேத்தெடுப்பத்**
**தானே யுவந்தென் கரதலத்தின்**
**மேவா வமர்ந்த மாமணியைத்**
**தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்.** (1)

முடிவு 24:44 போன்றது.

ஆகத்திரு விருத்தம் *1155* துதிகதி செய்யுள் - *21*, கயிலாய கதி *61*, மாயை உற்பத்தி கதி - *74*, மாயை சிவபூசை கதி - *59*, பிரபு தேவரவர்கதி - *91*, விமலைகதி - *50*, மாயைகோலா கலகதி - *80*, வசவண்ணர் வந்த கதி - *45*, அக்கம்மா தேவி உற்பத்தி - *51*, அக்கம்மா தேவி துறவு - *58*, கொக்கி தேவர்கதி - *30*, முத்தாயி அம்மைகதி - *27*, சித்தராமதேவர்க்கு - *76*, வசவண்ணரிடத்திற் போன கதி - *48*, மருள்சங்கர தேவர்க்கு - *24*, இட்டலிங்க கதி - *43*, கதலிவன் கதி - *20*, சாதகாங்ககதி - *25*, கோரக்கர் கதி - *63*,

முனிவர்கதி - 23, சூனிய சிங்காதனம் - 15, சூனியசிங்காதனத்திலிருந்த கதி - 72, ஆரோகண கதி - 64, மனோலயகதி - 21, மான்மியகதி - 24, ஆகக்கதி 25 க்குத் திருவிருத்தம் 1155.

பிற்குறிப்பு

மன்மத வருஷம் சித்திரை மாதம் 2 ஆம் தேதி ஆதிவாரம் உத்திராட நட்சத்திரம் சஷ்டிதிதி, துலாலக்கின சாதமிக வேளை ... வண்டிப்பாளையம் அருணாசல பரதேசிக்குப் பிரபுலிங்கலீலை வளவனூர் கதிர்காம பரதேசி தோஷத்த லிகிதத்தினா லெழுதி நிறைவேறியது.

மான்மியகதி முற்றும்

குறிப்புரை

இந்நூல் அச்சு நூலினின்றும் சிறிதும் மாறுபடாமல் அப்படியே உள்ளது. 24:44 என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூலினைப் போன்றதே இந்நூல்.

## 689. புசுண்டன் கதை

**அ.** 70:127; **ஆ.** *169 - 181* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** சுமாரான நிலை; **ஊ.** படிக்கக் கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச்சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மீட்டு முரைப்பான் திசைகால மறவான மறைதல...
...தலடி முடிவற்கு நன்றா யறியு மாத்திரமாம்
நாட்டும் பிரமமுள வேறொன் றில்லை யென்றுள்ளே நாடிய...
..ன்கா... ண்பது விட்டுக் காய மில்லாப் பெரியோனாய்(1)

முடிவு

விட்டவ னின்றெழுந்து நான்விண் மேற்போக
விடாமலொரு யோசனை விண்மீது வந்தான்
மட்டறிந் திற்றியெனத் தடுத்தேன வன்பால்
வாலறிஞர் தமைப்பிரழ்தல் வருத்த மன்றோ

சிட்டனைவிட் டகன்றன்ன முன்னுகத்தே மீண்டுந்தெரி
　　சித்தே னிரண்டாய்ப் பின்செறி யுகத்திற்
கட்டவிழ் தார்புறந்தார் விராமனே யிக்கதை
　　புசுண்டன் வழியெண்ணிக் கருதிக் கொள்வாய் (99)

*புசுண்டன் கதை முற்றும். சூத்திரம் 400. இனி தேவபூசை கதை.*

குறிப்புரை

***1 - 99 பாடல்கள் உள்ளன.***

## 690. புண்ணியபாவன் கதை

**அ.** 70:118; **ஆ.** *102 - 108* ஏடுகள்; **இ.** 28.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமாரான கையெழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச்சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

மோக வற்சனா பிக்கொடி முளைத்தெழு மூலனா
சோகமா சுணமிருந் தரசாள் வதோர் சூழ
லாகமே முதலி யானெனக் காணு மஞ்ஞான
மேக மாகிய பராபரந் தோன்றினா லிறக்கும் (1)

முடிவு

உன்னுருவை நீகாணும் ஞானக் கண்ணி
　　லொன்றலர் வாசையெனுங் காமமுறு
மன்னது தீர்த்துளக் கமலத் துள்ளே
　　நொய்ய வறிவுடைய உன்மனத்தா
லுன்னை யின்னபடி யெனநோக்கி மயக்கமேலா
　　மிறையுமற வொழிந்தின்ப மெய்நிற்பாய்
பின்னவனே யென்முன்னோ னுரைத்தா னென்று
　　பெருந்தகைக்கு வசிட்டமுனி பேசினானே (49)

*புண்ணியபாவன் கதை முற்றும். 851. மகாவலி கதை.*

குறிப்புரை

***1 - 49 பாடல்கள் உள்ளன.***

## 691. பீரங்கி கதை

**அ. 70:138; ஆ.** *240 - 242* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச்சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

ஆதலாற் காண்பவற்றி னுண்மைநிலை யிப்படியே யறிவில் வைய்யம்
பேதமா வேறொன்றிற் பிறந்ததிலைக் கயிற்றி... தபே
லாதபனில் வேறல்லா தபமென்றே பாவித்தோர்க் காதபந்தான்
பேதமற வாத பனாம் பேணுதிருவிகற்ப...(1)

முடிவு

அன்னியமா வோரிடத்தி லிதுகிஞ்சி... லுறா
தென்றுள்ளே திடநிலையா யகங்காரந் துடைத்து நிற்பாய்
யுன்னுள்ளே முகமாதிப் புறத்தின் வருவன...
தொழிலிடர் மேவா துருவமிலா வகந்தையை நீபிரியே லென்றான் (19)

*பீரங்கி கதை முற்றும். ஆக விருத்தம் சூத்திரம்...*

இனி இட்சுவாகு கதை.

குறிப்புரை

***1 - 19* பாடல்கள் உள்ளன.**

## 692. பெருதற்கருமை

**அ.** ***141:301;*** **ஆ.** 59 ஆவது ஏடு; **இ.** 24.5 x 3செ.மீ.; **ஈ.** *10-11* வரிகள்; **உ.** கீழ்ப்பக்க ஓரப்பகுதி சற்று உடைந்துள்ளது; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சான தாகத் தெரியவில்லை.

தொடக்கம்

தன்பெருமை யெண்ணாமை தற்போத மேபெறத்தன்
மின்பெருமை யாஞ்செகத்தை வேண்டாமை - தன்பா
லுடலைத் தினம்பழித்த லோங்குஞ்சி வத்தோன்றில்
நடலைப் பிறப்பொழியும் நாள் (1)

முடிவு

அன்புமிக வுண்டா யதிலேவி பேகமுண்டாய்த்
துன்பவினை யைத்துடைப்ப துண்டாயின் பந்தரும்
பூரணத்துக் கேதாக முண்டா யோடிவருங்
காரணற் குண்ண மவை (6)

பெருதற்கருமை முற்றும்

குறிப்புரை

**1-6 பாடல்கள்.** நாம் எப்படி எப்படி இருந்தால் பிறப் பென்னும் பேறு ஒழிந்து வீடு பேறாகிய கிடைத்தற்கரிய ஒன்றைப் பெறலாம் என்பதை நூல் விளக்குகின்றது.

## 693. போசன விதி

**அ.** ***138:281;*** **ஆ.** *43-44* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *6-7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

திருவருளற் சனையிதனைச் செலுத்தி முந்திச்
செய்தவினைப் பயனருந்தச் சிந்தை யாறி
யிருவருமே லொருவனுள னில்லா தில்லை
யிடவுரியோர் கொடுவர்நின் றிடுவிப் பிக்கு
மருளுடனே யிடுபவர்தா மான வாணா
மவரேவல் புரிதுமினி யன்றி யப்பா
லொருவரிதென் றுள்ளத்திட வல்ல துண்ணு
முண்மைபூண்டு சோறென்று ரைக்கு மன்றே (1)

முடிவு

ஆரமுதர் நீரருந்தி யெச்சிலச்ச மகற்றி
யடைக்காய்நற் கடுக்காய்சுக் கடுத்ததொன்றை மென்று
கூரியபே ருணர்வுடனே தூங்கிக் கங்குற்
குளிர்வெம்மைக் கிசைப்பூசை கொள்ள நல்கி
யோருணர்வு நிவேதியர் துண்ணா வாய்மை
யுடையையா யுயர்ஞான யோக முற்றுச்

சாருமரு ணித்திரையு முய்த்துணர்க ஞானச்
சரிதமிது மெய்கண்டான் சந்தா னத்தே (4)

போசன விதி முற்றும்.

குறிப்புரை

**1-4 பாடல்கள்.** இந்நூல் உள்ளத்தால், உடலால் தூய்மை. வாழ்வு நடத்தி ஞானயோகத்தை அடையும் வழியைச் சுட்டுகின்றது. இதனை இயற்றியவர் அருள் நமச்சிவாயர். 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இந்நூல் சைவ சமயிகள் ஞான மார்க்கத்தைப் பின்பற்றும் போது மேற்கொள்ள வேண்டிய போசன விதிக்கான சடங்கு முறைகளைத் தெளிவுற எடுத்து இயம்புகிறது. சமயி, புத்திரன், சாதகன் என்ற வகைகளில் பிரிவுபட்டிருக்கும் மாணவன் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒழுக்க முறைகள் என்னென்ன என்பது இங்கு விளக்கம் பெறுகின்றன. அம்மூவகை மாணவர்களும் நித்திய பூசை முடித்தவுடன் இறைத் தலத்திற்குச் சென்று இறைவழிபாடு செய்து ஆச்சார முறைப்படியான பிற கடவுளரையும் வணங்குதல் வேண்டும். போதக ஆசிரியன் (குரு) வடக்கே அமர்ந்திருக்க இம்மூவகை மாணவர்களில் சாதகன் என்பான் வடக்கு நோக்கியும், மற்ற இருவர் மேற்கு நோக்கியும் அமர்தல் வேண்டும். அவ்விருவர்களில் கல்வி, பூசை முறைகளால் மேம்பட்டோ அல்லது சாதியால் மேம்பட்டோ இருப்பவன் அவ்வரிசையில் மற்றவனோடு பேசாது அமர்ந்திருத்தல் வேண்டும். இவர்கள் அமர்கின்ற நிலமானது பசுவின் சாணத்தால் மெழுகப்பட்டு, தக்க கோலங்கள் இடம் பெற்றிருத்தல் வேண்டும். அரசு, சுத்தி, ஆல், ஆமணக்கு, சுரை, தாழை, செம்முருக்கு, சாதி, மகிழ், வேங்கை முதலிய இலைகளுக்குப் பதிலாகத் தாமரை இலை, வாழை மரம், இருப்பை மரம், மாமரம், பலாமரம் ஆகியவற்றின் இலைகள் சுத்தம் செய்யப் பெற்று, செம்பகம், நீலோற்பனம் ஆகிய செடிகள் அருகே நிறுவப்பட்டு அழகுபடுத்தப்படவேண்டும்.

ஆசாரியன், சாதகன், புத்திரன், சமயி ஆகிய இவர்கள் பயன்படுத்தும் பஞ்சபாத்திரம் வெள்ளியாலோ, தங்கத் தாலோ செய்யப்பட்டு அகோர மந்திரம் சொல்லப்பட்டு அது

புனித முடையதாக ஆக்கப்படல் வேண்டும். அதன் பின் சிவார்ப்பணம் என்று சொல்லி நீர் வளாவி உணவானது இறைவனுக்கு முன்னும், ஆசாரியனுக்கு அடுத்தும் இடப்படல் வேண்டும். உணவு உண்ணுவதற்கு முன் ஒரு கைப்பிடிச் சோற்றைப் பிடித்து, தன் இலைக்கு முன்னே அமைத்துக் கொள்ள வேண்டும். சைவ சமய துணைக் கடவுளாகக் கருதப்படும் நாகன் கூர்மன், கிருகரன், தேவதத்தன், போன்ற தெய்வங் களை வணங்கி வலது பக்கத்தில், வலது கையில் நீர்விட்டு தற்புருட மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். அப்படிச் செய்யப்பட்ட உணவைத் தான் அனைத்துக் கடவுளருக்கும் நைவேத்தியமாகச் செய்ய வேண்டும். அதைப் பிறகு இவர்கள் உண்ணலாம். இவர்கள் தங்கள் உணவில் தேன், வெள்ளைக் கத்திரிக்காய், பசலைக்கீரை, வெள்ளைப் பூண்டு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உணவு உண்டபின் பதினாறு முறை கைச்சுத்தமும், 32 முறை வாய்ச்சுத்தமும் செய்தல் வேண்டும்.

இந்நூலாசிரியரின் பிற நூல்களாவன: 1. ஞான பூசாகரணம், 2. ஞானபூசை விதி, 3. ஞான தீட்சை விதி, 4. ஞான யந்தியேட்டி.

தருமபுர ஆதீனத்துச் சட்டநாதத் தம்பிரான் 1934 இல் இந்நூலை வெளியிட்டுள்ளார்.

*167:359* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் இந்நூலினைப் போன்றதே

## 694. போசனவிதி

**அ.** ***167:359;*** **ஆ.** *125-126* ஏடுகள்; **இ.** 24 x 4செ.மீ.; **ஈ.** *9-10* செ.மீ; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம், முடிவு 138:281 போன்றது.

குறிப்புரை

*138:281* என்ற எண்ணில் இடம் பெற்றுள்ள நூல் போன்றதே இந்நூல்.

## 695. போதுவிலுபதேசம்

**அ.** ***346:578;*** **ஆ.** *1 - 31* ஏடுகள்; **இ.** 27.5 x 3.4 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

வேதாக மப்பவுரி வீசுங்க ளாசநிலை
யாதார வெற்பி லபிடேகம் - போதத்
திருளிலே பானுவென் தொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை. (1)

முடிவு

கண்மணி யின்காய் நிழல்கலந்தாற் போலுண்மை யைநீ
யுண்டென் டெனையுணர்த்திற் றுண்ணெனவே பார்த்திருந்த
சித்திரம் பொற்பா தத்தானை நாம்பரவித்
தோத்திரஞ்செய் யாபிறவாச் சொல. (13)

ஆக *256* நிலையியல்பு முற்றும்

குறிப்புரை

***1 - 256* விருத்தப் பாக்கள்.** போதுவிலுபதேசம் *(1 - 63* பாடல்கள்*)*, சத்தனி பாதத் துத்தமரொழிவு *(1 - 28* பாடல்கள்*)*, யோகவாதனையொழிவு *(1 - 30* பாடல்கள்*)*, கருமகழற்றி *(1 - 17* பாடல்கள்*)*, சரியை கழற்றி *(1 - 14* பாடல்கள்*)* விரத்தி விளக்கம் *(1 - 13* பாடல்கள்*)*, துறவு *(1 - 26* பாடல்கள்*)*, அவத்தைத் தன்மை *(1 - 42* பாடல்கள்*)*, வாதனை :மாண்டார் தன்மை *(1 - 9* பாடல்கள்*)*, நிலையியல்பு *(1 - 13* பாடல்கள்*)* ஆகிய அத்தியாயங்களை நூல் பெறுகின்றது.

## 696. மகாவலி கதை

**அ. 70:119; ஆ.** *108 - 114* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** சுமாரான நிலை; **ஊ.** தெளிவான கையெழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

புண்ணிய னுணர்த்த ஞானம் பொலிந்த பாவணன் றன்னுள்ளம்
நண்ணியல் விடியல் கண்ட நூலம்போல் விளங்கித் தோன்றத்
திண்ணிய விருவர் தாமுஞ் சித்தராய் விவேக ஞானத்
தெண்ணிய கரையை யெய்தியம் பியவனறிந்தி ருந்தார் (1)

முடிவு

எங்கே யெங்கே மனமோடி யிளையோ ரென்ன வீழ்ந்தெழுந்து
மங்கே யங்கே நின்றெழுப்பிய கண்ட வறிவிலடை வித்தான்
சங்கேத மதாமிவ் வாறு சாதித் துளமா மதகரியை
வெங்கேத மறத்தவனைத் தெல்லா விசாரித் தாலும்வீ டணைந்தான்(54)

*மகாவலி கதை முற்றும். ஆக 935. யினி பிரகலாதன் கதை.*

குறிப்புரை

**1 - 54 பாடல்கள் உள்ளன.**

## 697. மயேசு பாவிக் கிரகம்

**அ.** ***235:451;*** **ஆ.** *1 - 75* ஏடுகள்; **இ.** 24 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**மகாவாக்கிய சம்பிரதாய நிலை** - பிரமதர்க்க நிச்சயம் ஸ்ரீ கைலாசவாசராயிருக்கின்ற தட்சணாமூர்த்தி சுவாமிகள் சந்ததிகள் நாலு பேர்க்கும் வேதாகமத்திலும் பலசாத்திரத்திலு முள்ள வாக்கிய சம்பிரதாயத்தைச் சொல்லும் படியை வகை சமாதியு மதற்கதிகாரிகளும்....

முடிவு

... ஸ்ரீகளோடுங் கூடியிருந்தாலுந் தேவையில்லை. சர்வதியாகியானவன் இந்த வருவதைக் கீர்த்தியும் விட்டு, சுழுத்தியவனைப் போல் விருக்கலாம். இந்த மூன்று பேருக்கும் முத்தி சரியென்றறிக.

குறிப்புரை

மகாவாக்கிய சம்பிரதாய நிலை, வாக்கிய சிந்தனை, அஞ்சுவகை சமாதிக்கு அதிகாரிகள், சமாதிபலம், மருதனுக்கு, பிரமானுபோகம், வாக்கிய சம்பிரதாயம், சைவம், வைணவம், சம்பவனுக்கு சுத்த சித்தாந்த மனுக்கிரகஞ் செய்யும்படி, சாங்கியன் முதலான தலைப்புகளில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு தலைப்பும் தனிநூல் போன்று முழுமையாக உள்ளது. அனைத்துத் தலைப்புகளிலும் சைவசித்தாந்தக்கருத்துக்கள் விளக்கம் பெறுகின்றன.

## 698. மகாவாக்கியம் தசகாரியக்கவி

**அ.** ***176:374;*** **ஆ.** *1 - 13* ஏடுகள்; **இ.** 20.5 x 3 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

உலகமுதற் பொருளையும்வாக் குணர்வரிதாம் பொருளை
யோகியவே தாகமத்தி னுச்சியினுட் பொருளைப்
பலகலையின் பொருண்முடிவின் முடிவான பொருளைப்
பற்றறப்பற் றியபெரியோர் பரவியவான் பொருளை
யலைதிவலை நுரைகடலி லுதித்தொடுங்கு மாபோ
லகிலாண்ட முதித்தொடுங்கு மதன்மூலப் பொருளை
யிலகியசற் குருவாகி யரனாகும் பொருளை
யெங்குமாம் பரம்பொருளை யானும்வணங் குவனே (1)

முடிவு

அற்றைதொறு மாயிரமா யிரம்பிழைகள்
செய்தாலு மடியேன் தன்பாற்
பெற்றதிரு வருட்கடலிற் குளிப்பாட்டித்
தான்மலரும் பேறாய்ச் சூட்டிச்
சொற்றதெல்லாந் தோத்திரமாய்ப் புனைந்தருளி
யெனைவளர்க்குந் தொட்டி லாகி
யுற்றகுரு ராயனெங்கள் வினாயகபா
ரதிதமியே னுள்ளத் தானே (51)

மகாவாக்கியந் தசகாரியக்கவி முடிந்தது

முற்றும்

குறிப்புரை

**1 - 51 திருவிருத்தங்கள்.** சற்குருவினருள், தசமுடிவின் பயன் ஆகியவற்றால் பிறப்பறுத்துப் பேறுபெற விரும்பும் ஞானியர்க்கு வாக்கிய உண்மைத்தொகை, வாக்கியமகிமை, வாக்கியப் பிரகாசம், வாக்கிய நன்னயம், வாக்கியவுரை தற்பதவிலட்சணம் போன்ற பல செய்திகளைக் கூறும் இந்நூல் 'மகாவாக்கியம் தசகாரியக்கவி' என்னும் பெயரைப் பெறுகிறது.

## 699. மகாவாக்கிய திசகாரியம்

**அ.** *569:925;* **ஆ.** *1 - 5* ஏடுகள்; **இ.** 28.5 x 3 செ.மீ.; **ஈ.** *6 - 7* வரிகள்; **உ.** நன்று; சில துளைகள்; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

வாக்கியோற்பத்தி - *1*, வாக்கிய பேதம் - *2*, வாக்கிய முக்கியம் - *3*, வாக்கியப் பிரகாசம் - *4*, வாக்கிய அஞ்ஞான நிவர்த்தி - 5, வாக்கிய நிர்ணயம் - *6*, வாக்கிய தியானம் - *7*, வாக்கிய அவதி - *8*, வாக்கிய கதை - *9*, வாக்கியார்த்தம் - *10*. இந்தப் பத்துக்கும் அர்த்த மெப்படி யென்னில்...

முடிவு

யானை தானே மரமானாப் போலவும், பாம்பு தானே பழுதை யானாப் போலவும், வெள்ளி தானே கிளிஞ்சிலானாப் போலவும், கள்ளனே கட்டையானாப் போலவும், கானற் செலமே பூமியானாப் போலவும், பூதப் பவுதிகமே பிரம்ம மென்றது. ஆக வாக்கியம் நாலுக்கும் அர்த்தஞ் சொல்லப் பட்டது. முற்றும்.

குறிப்புரை

**உரைநடை.** அத்வைத தத்துவத்தைக் கூறும் இந்நூல் வடமொழியிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது. அதாவது ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களில் பேசப்படக் கூடிய உன்னதமான செய்திகளை

ஆதிசங்கரர் மகா வாக்கியம் என்ற பெயரிலே உருவாக்கினார். இந்நூலாசிரியர் அதிற் சிறந்த நற்கருத்துகளை எடுத்து அஃதாவது வியாசர் போன்ற மாமுனிவர் கூறிய செய்திகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தியைக் கையாண்டு தமிழில் மகாவாக்கியம் என்ற பெயரிலே நூலைத் தந்துள்ளார்.

சென்னை விவேக விளக்க அச்சுக்கூடத்தில், முனியப்ப முதலியார் என்பவரால் *1876* இல் இந்நூல் அச்சிடப் பெற்றது. அடுத்துள்ள 6, 7 ஏடுகளில் ஞானபலன், காமாதி, சர்வ காமாதி, கிருதகிருத்தி முதலானவை விளக்கம் பெறுகின்றன.

## 700. மயேசு பாவிக் கிரகம்

**அ.** *76:160*; **ஆ.** *88 - 90* ஏடுகள்; **இ.** 17 x 2.5 செ.மீ.; **ஈ.** *8 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

### தொடக்கம்

**நாமசாகுக் குணக்கிரியை யில்லாத தன்னிய லரூபுபர்**
**சிவசிற்சத்தி ரூபம்பர் சிவசிற்சத்தி ரூபில் - சூத்திரம் ஒன்று**

அங்கசம் - மகாபத்தி - ஆனந்தபத்தி - அனுபாவ பத்தி - அவதான பத்தி - நயிட்டாபத்தி - சற்பத்தி ஆக பத்தி ஆறு இந்தப் பத்தி ஆறில் சூத்திரம் ஒன்று அங்கசம் பார். சத்தி - ஆதிசத்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி ஆக 4...

### முடிவு

...கரிசலந்தானை மாயத்தவனியன் மலை கொய்தோன் குய வீரேசண்டல கரியை யட்டவன் மதனாரீசன் விக்கிறாத னழிவில் கங்கா... எனுயர் சண்டேசனுக் கருளித்தவன் கடுவயின்றோனாக குரிலவு சக்காமளித்தவன் கரிமுகற் காதலற் கருள் செய்தவன் கவுரி குகனோடிருந்தவனேக பாதனங்கன் சுப்பிரத்ததுவனி தமுதவு தெக்கணா மூர்த்தி யுரு லிங்கபவனென்றுமை யைந்து வடிவு மின்பமொடு கொண்டனன்றன் பெருமை யறியாத எள்காத்துறைக் கடவுளே.

குறிப்புரை

**உரைநடை.** பத்தியின் வகைகள், சத்தியின் வகைகள், இறைவன் பண்பு, இறை வடிவு, இறைவன் அருட் செயல்கள் இந்நூலுள் விளக்கம் பெறுகின்றன.

## 701. மனத்தின் கதை

**அ. 70:107**; **ஆ.** *51 - 53* ஏடுகள்; **இ.** 28.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

**யிந்தச் சுகக்கதையை விளையாட்**
**டென்ன விசைந்தே மேவற்கு**
**மந்தத் தமதா முடலொன்**
**றயலா முடலோ னவற்றிற்**
**சிந்தை சரீரம் விரைவிற்**
**செயல்க ளெல்லாஞ் செய்து**
**தொந்தத் தலையு மற்றைத்**
**தூல வுடலொன் றறியார்** (1)

முடிவு

**கோச கார்புடுப் போற்கொடுங்**
**கற்பனை வாத னையாற்**
**பாச மடைவரி யாடும்**
**பகர்ந்த மனத்தின் கதையை**
**மாசில் லாத மனத்தால்**
**மதித்து மனத்தை மாய்ப்பாய்**
**தேச முடையா யென்று**
**தெளிந்த வசிட்ட னுரைத்தான்** (22)

மனத்தின் கதை முற்றும். ஆக *411.* இனி பாலன் கதை.

குறிப்புரை

*1 - 22* பாடல்கள் உள்ளன.

## 702. மான்வேடன் கதை

**அ.** **70:140;** **ஆ.** 250 - 253 ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** தெளிவு. **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இந்தவா றிருக்கிற சீவன் முத்தனா யினிய தான
புந்தி செரிவனுக் கெய்தும் புதுமை யாமதி செயத்தா
லந்தமில் பரத்தைக் கண்டோர்க் கதிகனே யென்று கேட்ட
சுந்தர ராம னுக்குத் தொன்மறை வசிட்டன் சொல்வான்.(1)

முடிவு

அந்த நிலையே யோகு கடர்மிரிதிற் சாதித்தடை கின்றார்
வெந்த துயர்செய் சங்கற்ப விகற்ப மில்லாத் துரியத்தே
மைந்தநிலை யாயிடாதீர் யமகத்தா லுயர்ந்த முனிவராய்ப்
பந்த மிலாய்ப் பேதமறும் பழையோர் விடாதீர் பத்ததுறையார்(25)

மான்வேடன் கதை முற்றும். ஆகக் கவி சூத்திரம் 982.
யிப்பால் யோகநிலை.

குறிப்புரை

1 - 25 பாடல்கள் உள்ளன.

## 703. மிருத்தியா புருசன் கதை

**அ.** **70:137;** **ஆ.** 238 - 240 ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இருமையொரு...ன்ப மருவு வாய்மிருத் தையான்
புருடன் போல வருந்த வேண்டா
குருசிலே யெனலு மெந்தாய் கூறுபொய்
புருடனா... துன்பமுற்றவ னுலைந்த வாரென (1)

முடிவு

ஆபத்துக் கெல்லாற்...த்தமவசம் விவேகம்
பாபத் துக்கு முதல்மடமை பவ்வித் தழிவைப் பற்றியது
தாபத்துக் கோரிட மானத் தவிலிசங்கி சாரந் தன்னை
தீபற் றில்லா வறிவாலே நீக்கி லதுவே நிமல நிலை (20)

*மிருத்தியா புருசன் கதை முற்றும். சூத்திரம் 877. இனி பீரங்கி கதை.*

குறிப்புரை

***1 - 20 பாடல்கள் உள்ளன.***

## 704. முத்தி நிச்சயம்

**அ.** ***138:294;*** **ஆ.** *99 - 100 ஏடுகள்;* **இ.** 38 x 3.5 *செ.மீ.;* **ஈ.** *6 - 7 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

சிவசத்தி யைத்திளைப்பர் சீவன்முத்த ரென்னு
மவசத்த மோதகமென் சிவசத்தி சாத்தனுவ
லவச்சிமப்ப ரானந்த வெள்ளமராத் தெவிட்டாத
தன்னைக்கண் டாங்கருளாற் சச்சிதா னந்தமெனு
மன்னைத் திளைத்து வாழ் வார் (1)

முடிவு

ஆகங் கரணமறி யாமை சுகதுக்க
போகம வையனைந்த போதெல்லா மேகமாய்த்
தானவையாம் பான்மை போற்றபர மானந்தந்
தானதுவாய் நிற்குந் தரம் (19)

முத்தி நிலையணுக்கள் சேரமொழிந் திட்டான்
சத்தியமெய்ஞ் ஞானசம்பந் தன் (20)

*முத்தி நிச்சயம் முடிந்தது*

குறிப்புரை

1 - 20 பாடல்கள். சிவசக்தியை வணங்கித் திளைப்பவர்கள் 'சீவன்முத்தர்' என்னும் சொல்லுக்கு நிகராகி விடுகின்றனர். ஆகத்தில் கரணநிலைகளை அறியாமையே சுகதுக்கங் களுக்குக் காரணமாக அமைகின்றன என்னும் கருத்துகளை விளக்கி முத்தி நிலையின் நுணுக்கங்களை ஞானசம்பந்தர் என்பவர் கூறியதாக நூல் அமைகிறது.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் கருத்துகளை விளக்கி வழிநூல்களுள் குறிப்பிடத்தக்கவையாக திருவாவடுதுறை ஆதீனத்தினரும், தருமையாதீனத்தினரும் தோற்றுவித்த இரண்டு வகையான பண்டார சாத்திரங்கள் உள்ளன. தருமையாதீனத்தில் குரு முதல்வரான ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரியால் அருளப்பெற்ற எட்டு நூல்கள் சித்தாந்த அட்டகம் என்று பெயர் பெறுகிறது. இவற்றுள் மேலும் ஆறு நூல்களைச் சேர்த்து தருமையாதீனத்தில் பண்டார சாத்திரங்களாகப் பயிலப்பட்டு வந்துள்ளது. இச் சித்தாந்த அட்டகத்துள் முத்தி நிச்சயம் என்ற நூலும் ஒன்று. சித்தாந்த அட்டகம் என்பது சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலா பிரசாத சட்டகம், சொக்கநாத கலித்துறை, பண்டாரக் கலித்துறை, நவரத்தினமாலை ஆகிய எட்டு நூல்களின் தொகுப்பேயாகும். மற்ற ஆறு நூல்கள் தற்போது வழக்கில் இல்லை.

## 705. முமுக்ஷித்துவப் பிரகரணம்

**அ.** 70:101; **ஆ.** 21 - 25 ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இராகதே ஸிப்பவத்தி லென்று மெல்லாம்
இயல்புறுநன் முயற்சியினாலி யார்க்கு மெய்து
மாகலைநன் னூல்முயற்சி ஒன்றா மொன்று
வருநூலில் லாமுயற்சி மற்றி வற்றிற்

சோகமின்நூல் வழிவீடாம் நூலில் லாமை
துன்பமாஞ் சைவத்தில் துடர்ப தின்னூல்
மோகமினல் லோர்க்கூட்டங் குணங்க ளாலே
முயற்சியுறும் பெரியோர்க்கும் முத்தி பேறாம் (1)

முடிவு

தந்திரியி லெழுமிசைபோல் சாந்தி முன்னால்
சற்குணத்தின் ஞானமெழுந் தம்மிற் றாமாம்
இந்தவிரண் டும்குளமும் நீரும் போலே
இனிதுவளர்ந் திடுமொக்க இரண்டும் கற்கில்
வந்தணுகுந் தனித்தனியே இரண்டும் கற்கில்
வருபயனொன் றிலதாமிவ் வாய்மை கேள்வி
முந்துமறம் பொருளின்பங் கீர்த்தி வாணாள்
முழுதளிக்கும் மனத்தெளிவால் முத்தி நல்கும் (28)

மூமுக்ஷுத்துவப் பிரகரணம் முற்றும்

ஆகக் கவி *189*.

குறிப்புரை

***1 - 28* பாடல்கள்**. தத்துவ நூலான இது ஞான மார்க்கத்தைப் போதிக்கிறது.

## 706. மெய்ஞ்ஞான நாடி

**அ**. ***440:686***; **ஆ**. *12* ஏடுகள்; **இ**. 23.5 x 3.5 செ.மீ.; **ஈ**. *7 - 8* வரிகள்; **உ**. ஏட்டெண்கள் சிதைந்தும், முடிவுப் பகுதி முறிந்தும் உள்ளன்; **ஊ**. தெளிவு; **எ**. குறை; **ஏ**. இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

செறியும் வினைக..ஞ்ச மனு நிற்றேகம் பொய்யென்
றறியும் பின் வன்னமும் வ... மூதறிய லறியேனை
நெறியுறக் காடடுங் குரவனைத் தேடி நினைந்து
குறிகுரு மானிலைக் கண்டுகைக் கொள்ளுங் குருபரனே (53)

முடிவு

உதிக்கு மனாகத மகமுத லீராறு முருத்திரனார்
மதிக்கும் விசுத்தியி லீரெட் டுயிர்கள் மகேசுரனாம்
விதிக்கு நல்லாக் கினைமேவு மடைசா...மு விளங்கு தெய்வம்
பதிக்குஞ் சதாசிவ மத்திமத்தே யுகப்பா லிக்குமே (129)

குறிப்புரை

**53 - 129 பாடல்கள்.** ஞானமார்க்கத்தை அடைவதற்கான வழிமுறைகளைக் கூறுகிறது.

## 707. யூசி கதை

**அ.** 70:104; **ஆ.** 42பி - 48. **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது..

தொடக்கம்

காட்சி யெனுங்குற் றமறக் கதித்த லீலைக் கதையாலே
யாட்சி யான சகமென்னு மதிபா ரத்தை யறிந்திடுவாய்
சூட்சி யான வுலகமெனுந் தோற்ற முடைத்தாய்ப் பேதமற
மாட்சி யான சுகவடிவாய் வயங்கும் பிரமமே யுளதே (1)

முடிவு

பூமகள்போ லங்கிருந்த வடிவைக் கங்குற்
போதிலொழித் தரக்கர் குலப்பூவை யா..ப்
பாம..ம்ப...த கரைத்தோள் மேல்கொண்டு
பார்த்திபனோ டமைச்சனுக்கும் பண்பு கூறி
யேமமுறு மிழகிரியிற் சமாதி மேவ
வேகினா னின்றளவு மிந்த வாறே
கோமகனு மரக்கியும் நட்பா னாரென்று
குரிசிலுக்கு வசிட்டமுனி கூறி னாரே (47)

யூசி கதை முற்றும். ஆகக் கவி 370. இனி அயிந்தவர் கதை.

குறிப்புரை

*1-47* பாடல்கள்.

## 708. யோகம் சத்த பூமி

**அ.** 70:141; **ஆ.** *253 - 262* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

எனைத்தும் ஞான நன்னூலிங் கியம்பு மறுதியே தென்னி
லனைத்துங் கனவு காண்பதுவே யன்றோ விஞ்சையிங் கில்லை
வினைத்தின் கவலை செய்கின்ற வெய்ய மாயை தானில்லைத்
தினைத்துன்பமு மற்றும் சாந்தத் திறமா மிதுவே திகழ் பிரமம் (1)

### முடிவு

மலரோன் வாழி நாமாது வாழி வசிட்ட முனிவாழி
யுல... ராமன் மிகவாழி யுயர்வான் மீகமுனி வர்வாழி
நலமார் பராத்து வசமுனி நாளும் வாழி வாசிட்டம்
பலவர் வாழி கான்மீர பண்டிதர் போகு குருவாழி (46)

யோகாத்தியாயம் முற்றும். ஆகவிருத்தம் *2050*. ஆகக் கதை *43* க்கு விருத்தம் *2036*. பதிகம் *14*. ஆக விருத்தம் *2050*.

### குறிப்புரை

கட்டுஎண் எழுபதில் இக்கதை *43* ஆவது கதையாக அமைகின்றது. இராமர் வைராக்கியம் என்பது முதல் கதையாக அமைகின்றது. இராமாயணக் கதையை அடியொற்றியே இக்கதைகள் அனைத்தும் அமைகின்றன. வசிட்டர் இராமருக்கு ஞானத்தெளிவை ஏற்படுத்துவதற்குக் கூறு வதாக இக்கதைகள் அமைகின்றன. முடிகின்ற கதையின் பெயரும் அடுத்து வருகின்ற கதையின் பெயரும் அனைத்துக் கதைகளிலும் இடம் பெறுகின்றன. அனைத்துக் கதைகளுக்கும் விருத்தங்கள் தொடர்ச்சியாக அமைகின்றன. *43* கதைகளுக்குமாக *2036* விருத்தப் பாடல்கள் உள்ளன. பதினான்கு பதிகப் பாடல்களையும் சேர்த்து மொத்தம் *2050* விருத்தப் பாக்கள் இடம் பெற்றுள்ளள. ஞானவாசிட்ட இராமாயணம் *(10:25)* என்ற நூலில் அமைந்துள்ள கதைகள்

உரைநடையில் இருப்பினும் அவையும் வசிட்டர் இராமருக்கு ஞானத்தெளிவை ஏற்படுத்துதற்காகக் கூறப்பட்டவையே. உத்தாளன் கதை, பிரகலாதன் கதை, பாசவிலாசவர் கதை, பகீரதன் கதை, காதிகதை முதலான கதைகள் இரண்டிலும் வருகின்றன. 43 கதைகளும் ஞானவாசிட்டம் என்ற நூலில் இடம்பெறும் கதைகளாகும்.

## 709. (லிங்கப்புலம்பல் முதலியன)

**அ.** ***79:180;*** **ஆ.** *75 - 77* ஏடுகள்; **இ.** 25 x 2.5 செ.மீ.; **ஈ.** *7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

அழித்திருக்கா விடையத்தே லிங்கமெய் வளிதாய்த்
தோன்றுவதே
விழித்திருக்க விடையம்போய் லிங்கமே விமலசிதூ னந்த
நடம் (1)

### முடிவு

ஆகமவை யமறந்து லிங்கமே
யகமறந்து மெணையொழிவில்
போகஞ்சிவ போகமாய் லிங்கமே யான்
பூரணத்து நிற்பதெப்போ (31)

### குறிப்புரை

**1 - 31 பாடல்கள்.** சிவனைப் போற்றி வணங்கி அவனது அருளை வேண்டி நிற்பதாய் நூல் அமைகின்றது. அடுத்து 78 - 83 ஏடுகளில் பாடல் எண்களின்றி ஒரு நூல் அமைகின்றது. 78 ஆவது ஏடு இன்மையால் நூற் பெயரினை அறிய முடியவில்லை. 79 - 90 ஏடுகளில் உபதேச திருமந்திரம் என்ற நூல் அமைகின்றது. 7 - 30 பாடல்களையுடைய இந்நூல் முடிவு பெற்றிருக்கிறது. 91 - 92 ஏடுகளில் 1 - 14 பாடல்களில் வேடச் சிறப்பு என்ற நூல் முழுமையாக இருக்கின்றது.

## 710. லீலை கதை

**அ.** 70:103; **ஆ.** *31 - 42* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இந்தப் பொருளைய்ய மறுத்திளைப் பாற மற்றோர்
முந்தைக் கதைகேள் குணமுற்றி விவேக முற்றோய்
விந்தைப் புயத்தோன் பதுமப் பெயர்வேந்தன் மணமேற்
சிந்தைக் கினிதாங் குணலீலை செம்மல் தேவி (1)

முடிவு

வாழிவாணி நாமமங்கை வாழிசொல் மாதுவாழி
யென்றினிது வாழ்த்தியே
யாழிமன்னனுந் தேவி மார்களும் யுதமெட்டி யாண்டரசு
— செய்தபின்
னேழிரும் பவந்துடைத்து வாணமுண்ணியம் சீவன்
முத்தியை யிறந்துபேர்
யூழிபெரிதி னும்சிறிது பேர்விலா வுடலிறந்து வீடொன்றி
மேவினார் (90)

லீலை கதை முற்றும். ஆகக் கவி 322. இனி யூசி கதை

குறிப்புரை

***1 - 90* பாடல்கள் உள்ளன.**

## 711. வஞ்சவிந்திரன் கதை

**அ.** 70:106; **ஆ.** 50 - 51 ஏடுகள்; **இ.** 38.x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரி; **உ.** ஓரளவு நல்ல நிலைமை; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

பொருவில் சுகத்தை யளிப்போனும்
புருடன் றானும் புகல்மனமே
கருது மனத்தில் செயல்செயலாங்
காயச் செயல்கள் செயலன்றாம்

பருதியுரை செய்புது மறையோர்ப்
    பதும தயப்பார் படைத்தார்
பெருமா மனத்தி னுயர்சத்தி
    பிறரா லறிதற் கெளிதாமோ (1)

முடிவு

யிந்த மனமே யொடுங்கி
    லுடலேது மறியாதெனக் கேட்ட
வந்த நிருபன பாதநெனு
    மருகில் முனியை முகநோக்கி
சிந்தை மயலுற் றிருந்துமிவர்
    சிற்பாவனை செப்பின ரென்னா
புந்தி மகிழ்ந்து புறநாட்டிற்
    போமென் றவரைப் போக்கினால் (9)

*வஞ்சவிந்திரன் கதை முற்றும். இனி மனத்தின் கதை.*

குறிப்புரை

***1 - 9* பாடல்கள் உள்ளன.**

## 712. வாக்கிய நிர்ணயம்

**அ.** ***248:464***; **ஆ.** *10* ஏடுகள்; **இ.** 22 x 2.5 செ.மீ.; **ஈ.** 5 - *6* வரிகள்; **உ.** *ஓரளவு நல்லநிலை*; **ஊ.** *சுமாரான எழுத்து*; **எ.** *முழுமை*; **ஏ.** *அச்சாகாதது*.

தொடக்கம்

காராசரம் பொருணற் கர்மம் வீடுற்றவர்க்கு
பேராசரம் கவிமெச்சவே சீராரும் சிற்றருளப்
பத்திதிற் சித்தமிக யுத் தறிவும்
கற்றன ருளத்தி முகன்காப்பு

*அதிதீ வரமுள்ள சீசனுக்கு உபதேசம் பண்ணுகிற முறைமை எப்படி என்றால் மகா வாக்கியார்த்தத்தை உபதேசம் பண்ணுவார். அதெப்படியென்றால் பிரக்கியானம் பிரம மென்றும் அகம் பிரமா, லட்சுமி என்றும், தத்துவ மசி என்றும் அயம் ஆத்தும பிரமமென்றும் இப்படி நாலு வாக்கியத்தை உபதேசிப்பார்.*

முடிவு

யீசுர வாக்கியமான உபரதியைப் பிரமமென்றது எப்படி யென்றால் ஆனைதானே மரமானாப் போலவும், பாம்பு தானே பழுதை யானாப் போலவும், கள்ளன் தானே கட்டையானாப் போலவும், பூமியே கானலானாப் போலவும் பூதப் பவுதிகமே பிரமமென்கிறது. ஆக வாக்கியார்த்தம் நான்கும் திசைகாரியம் பற்று முடிந்தது. சாதுன சதுட்டிய பிரக்கரணம் முற்றும். இனி அனாதி காலத்திலே பிரமக்கியானமறியும் படியாய் பகவான் பிரமதேவனுக்கு உபதேசித்த பஞ்சிகரணம் மூன்றாவதும் நிருபிக்கிறோம்.

குறிப்புரை

**உரைநடை.** உரைநடையில் அமைந்துள்ள முழுமை பெற்ற தத்துவக் கருத்துகளைக் கொண்டுள்ளது. ஏடுகளுக்கு எண்கள் இல்லை. மகாவாக்கியம் - தசகாரியம் என்ற நூலின் பகுதியாக இந்நூல் இருக்கலாம்.

## 713. வில்வதபல் கதை

**அ.** 70:129; **ஆ.** *190 - 192* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; பல ஏடுகளில் துளைகள் உள்ளன; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து. **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

நின்னுரைய முத்தாரை நிறைத்து முள்ளமைவு
தொன்றாப... ன...து ரணத்தைப் பேச்சென விராமன் கேட்ப
மன்னுமா முனிவன் சொல்வான் வருபொருள் முதற் கனத்தே
யின்னல் மா.... மையர்கா(1)

முடிவு

புகல்பிர மாண்ட மென்னும் பூசணிக் காயுள் மச்சை
யகல வடமேரு வாகி யகிலமு மான வர்போல்
மிகவுயர் சித்தாம் வில்வக் காயினுள் விரிந்த மச்சை
பகர்பிர மாண்ட மாதி யுலகங்கள் பலவு மென்றான் (16)

வில்வதபல் கதை முற்றும். சூத்திரம் 486. சிலைகதை.

குறிப்புரை

***1 - 16* பாடல்கள் உள்ளன.**

## 714. வீட்டுநெறி உண்மை

**அ. *514:788*; ஆ.** *127 - 129* ஏடுகள்; **இ.** 22 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

என்னை யான்காணேன் கண்டேனிருள் மலமொன்றாய்க் கண்ட
நின்னுரு வறிவே யன்றோ நீமெவ் வறிவாய் நின்றே
பின்னையம் மலத்தைப் பார்நீ பிரிந்துபோம் உனைவிட் டின்றே
மன்னுபே ரொளியின் முன்னர் மருவிடா விருளே போல (7)

முடிவு

பாரதோ ளிருண்மை வீட்டு நெறியிதை ஞானாசா னாலே
ஒதுறக் கேட்டுச் சிந்தித் துண்மையைத் தெளிந்து நிட்டை
தீதறத் தாம்அ தாயே செறிந்துளோர் அன்பு செய்யும்
மேத மிலடியர் வாழி யியம்பின நூலென்றும் வாழி (23)

வீட்டுநெறியுண்மை முற்றும்

குறிப்புரை

***7 - 23* பாடல்கள்.** நூல் தொடங்குகின்ற *126* ஆவது ஏடு இன்மையால் ஆறாம் பாடலின் இறுதி இரண்டு அடியுடன் நூல் காணப்படுகின்றது. வீடு பேரின்பத்தையடைய மேற் கொள்ள வேண்டிய நெறிமுறைகளை இந்நூல் கூறுகின்றது. குறிப்பிட்ட ஒரு நூலின் உட்தலைப்பாகவும் இத்தலைப்பு இருக்கலாம்.

## 715. வீதகவ்வியன் கதை

**அ.** 70:125; **ஆ.** *147 - 149* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - *8* வரிகள்; **உ.** சுமாரான நிலை; **ஊ.** சுமாரான கையெ எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

இங்ஙனமே நன்மை வினாத் தம்மிற்றா
    மியம்பி யுறையிரு வருக்கு
முன்னிய நற்காலத் தான்முத்தி தரு
    மெஞ்ஞான..ந் தித்தன்றே
யன்ன தனாலுரைக் கின்றேன் வெம்பவத்தை
    ஞானத்தா லன்றி மாய்க்க
பின்னை யொருநெறி யில்லை பாசத்தாற்
    பிணிப்புண்ட பிணிநெஞ் சுக்கே (1)

முடிவு

சுடர்பிறப்போ டிறப்ப னறியா தியனறி
    யாதியா யொன்றாகிய னேக மாகித்
துடர்சகள நிட்களமாய் ...ணி...ய
    தானநிலை யீச னாகி யொல்லைத்
திடமுற நின்றிரு பதினா யிரமான
    டெல்லை செருக்குற வேண்டிய படியே
..த்துவ... மீண்டெழாந் துவகை சமித்தொன்றா
    னாள பகரவீத கவ்வியனாம் பரம யோகி(76)

*வீதகவ்வியன் கதை முற்றும். ஆகக்கவி... யினி உபசாந்திப் பிரகரணம்.*

குறிப்புரை

***1 - 76 பாடல்கள் உள்ளன.***

## 716. வீம்பாசதிடர் கதை

**அ**. 70:113; **ஆ**. *77 - 79 ஏடுகள்; இ. 38.5 x 2.5 செ.மீ.;* **ஈ**. *7 - 8 வரிகள்;* **உ**. *ஓரளவு நல்லநிலை;* **ஊ**. *சுமாரான கையெழுத்து;* **எ**. *முழுமை;* **ஏ**. *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

பயிது நமக்கிது நமக்கென்
    றிரங்குறு பொல்லா வாழ்வா
லுதவியோர் சாம்ப லேனு
    முறப்பெறாது தாக மிக்குச்

சுதமுறு முலக மெல்லாற்
துரும்புபோல் காண்போர் தம்பால்
விதனங்க ளனைத்தும் வாரா
மிருகங் களுலா - புற்றீண்டர் (1)

முடிவு

மற்றினி யிந்த வாற்றால் வாதனை யாலே பந்தம்
பற்றுறு மதனை நீங்கிப் பந்தம்போம் விவேகத் தாலே
யுற்றறி யுண்மை யாலேயு பாதிவா தனைபோம் போனால்
யுற்றமில் சித்தம் நெய்தீர் தீபம் போலாகு மன்றே (25)

குறிப்புரை

***1 - 25* பாடல்கள் உள்ளன.**

## 717. வீராகமம் (குருலிங்க சங்கமம்)

**அ.** ***175:369;*** **ஆ.** *1 - 13* ஏடுகள்; **இ.** 36 x 3 செ.மீ.; **ஈ.** *7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

அரிய சஞ்சித மகலவும்
புரியு டம்பிட ரொழியவும்
விரியு நம்பவ மிரியவுங்
கரிமு கன்கழல் கருதுவாம்
சோதிகுரு பரன்சரணந் தொழுதுசிர மிசையிருத்தி
நீதிதருங் குருலிங்க சங்கமத்தி னிலமையெலாம்
நாதனுமைக் குரைத்ததனை நயந்துலககெண் அல்லமயர்
ஓதியநற் கருநடத்தின் பயின்றமிழா லுரைத்திடுவாம் (1)

முடிவு

தக்கனையன் தழித்ததுவு முராரியுட லொழிப்பதுவுந் தரியாய்வேவ
நக்கதுவு மன்மதனை யெரித்துதவு நமனையுதைத்து நான்முகனார் சென்னி
மிக்குகிரா லரிந்ததுவுமெம் மிறைக்கிவைகள் புகழலவாம் விரைந்து வேழம்
புக்குறவி யினமடிய மிதித்ததனு முரைகரிக்குப் புகழெ னாரே (109)

பிற்குறிப்பு

பவ வருஷம் ஆடி மாதம் 17 ஆந் தேதி.

குறிப்புரை

வீராகமம் என்னும் இந்நூல் வீரசைவ சித்தாந்தத் துண்மை யினை எடுத்தியம்புகிறது. கன்னட மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

## 718. வேதாந்த சாரத்திரட்டு

**அ.** *22:41;* **ஆ.** *95 - 178* ஏடுகள்; **இ. 24 x 3.5** செ.மீ.; **ஈ.** *11* வரிகள்; **உ.** நன்று; இறுதியுள்ள சில ஏடுகள் செல்லரிக்கப்பட்டுள்ளன; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

அத்தி முகனடி நித்த நினைபர்
சித்தி திருவொடு முத்தி பெறுவரே.
பராபரமா யறிவரித யகண்டா காரப்
பரஞ்சுடராய் முதனடுவீ றளவொப் பின்றாய்
னிராமயமாய்ச் சச்சிதா னந்த சுத்த
நித்தபரி பூரணமாய் னிலனீ ராதி
சராசரமாய்த் தத்துவா தீத மாகிச்
சம்புவா யேதிருத்த மின்றா யொன்றாய்ப்
புராதனமா யனைத்துமா யன்றாய் நின்றோன்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம் (1)

முடிவு

சமையங்களோடு கூடிநிற்றல் ஞானச் சாதகரிலக்கண மன்றென்றதற்குச் சாட்சி - திருக்கடையாப்பு - ஆடப்பால வற் கருளும் வண்ணமு மாதி மாண்புங் கேட்பான் புகிலள வில்லைக் கிளர்த்த வேண்டா கோட்பாலனாவும் வினையும் கூருகாமை எந்தை தாட்பால் வணங்கி தலை நின்றிவை கேட்கத் தக்கார். திருவாசகம். சமயவாதிகட்குத் தம் மதங்களின்மை வதகாவாத்தி மலைந்தனர்.

குறிப்புரை

வேதாந்த சாரத்திரட்டு எனும் இச்சுவடி, 95 ஆம் எண்ணுள்ள ஏட்டிலிருந்து தொடங்குகிறது, என்றாலும் நூலின் தொடக்கம் இதுவேயாகும். 95, 96 ஆகிய இரண்டு ஏடுகளில் வேதாந்த சாரத்திரட்டுக்கு விவரம் என நூலினுள் கூறப்படும் செய்திகளுக்கு முறையான அட்டவணை கொடுக்கப் பட்டுள்ளது. முதலில் உள்ள எண் இல்லாத ஓலைச் சட்டத்தில் நூற்பெயர் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் இறையருள், குருவணக்கம், வேதாகமச் சிறப்பு, போதுவில் உபதேசம்,.... பூரணப் பிரகாசம், தத்துவப்பிரகாசம், கலம்பகம், பாடுதுறை .... நமச்சிவாயலிங்கம், அவிநாசிநாதர் எனும் பல தலைப்புகளில் கொற்றவன் குடியார் நெஞ்சு விடுதூது எனும் பகுதியோடு முடிகிறது. அட்டவணையில் காணும் பிற செய்திகள் சுவடியில் இல்லை.

## 719. வேதாந்த சாரத்திரட்டு

**அ.** *61:89;* **ஆ.** *1 - 174* ஏடுகள்; **இ.** 22.5 x 2.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; இறுதியிலுள்ள சில ஏடுகள் செல்லரிக்கப் பட்டுள்ளன; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் 21:41 போன்றது.

முடிவு

திருமிகு மெவற்றி னுயர்வதாய்ச் சரச்சிற் சுகசிவ... ரொளி
யருளெறிய வராக மாதியோ ருருவா மாறுமா முகனடி வாழ்க
பொருவில்வே தாந்த சாரநற் றிரட்டைப் புகன்றநற் பிரம்ம
வாருதியோம்
பெரியவட் பலவாண் யயாதன் பதமும் பெரியாதனன்
அடிகளும் வாழ்க

வேதாந்த சாரத்திரட்டு நிறைந்தது. முற்றும்.

பிற்குறிப்பு

விகாரி வருஷம் புரட்டாசி மாதம் 30 தேதி புதவாரம் சதுர்த்தி அனுஷ நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ஸ்வாமிகள் படிக்கிற திருமுறையின் படியே எழுதி நிறைந்தது. முற்றும். திருச்சிற்றம்பலம்

குறிப்புரை: **சுத்தவேதாகமாந்த சாரத்திரட்டு மூல :பாடம்**

குற்றமற்ற கருமம், ஜபம், தவம், தியானம், வேதாந்தங்கள் மகாபூசை ஆகியவற்றின் முறைகளும் சிறப்புகளும் தொகுத்துக் கூறப்படுகின்ற சித்தாந்த நூலாகுமிது. மகாபாதகங்கள் நீங்கும் என்பதை ஸ்ருதி, மிருதி புராண ஆகமங்களின் வழி நின்று உணர்த்துவது இந்நூல். சகல வேதாந்த சாரமாகிய பஞ்சதேசப் பிரகரணம் போன்றவற்றின் உயர்ந்த இலக்கணம் கூறுகின்றது. நித்திய நிமல நிர்வய நிரந்தர நிற்குணம் சத்திய நிட்காரணம் முதலிய தலைப்பு களில் சித்தாந்த முறைகளை விளக்கிச் செல்லுகிறது. சிறந்த பாடல் நடை உடையது.

வேதாகமச் சிறப்பு, போதுவிலுபதேசம், பூரண பாவ நிச்சயம், சுத்த வேதாந்த உபதேசம், சுத்த வேதாந்த நிருத்தி யானச் சிறப்பு, சுத்த வேதாந்த சுத்த சித்தாந்த சமரசம் உரைத் தது முதலானவை பற்றிய விளக்கம் பல நூல்களிலிருந்து எடுத்துக் காட்டப்படுகிறது. ஒரு நூலின் கருத்துகள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

**எடுத்தாளப்பட்ட நூல்கள்:** திருப்பனுவல், ஞானவம் மானை, ஞானபிரமம், ஞானா சூரியன், ஞானசூளாமணி, பிரபுலிங்கலீலை, வீராகமம், சடுத்தலம், பிரமகீதை, வேதாந்த சூளாமணி, அனுபவசித்தி, சுவானுபவசித்தி, மூலசித்தி, அறிவானந்த சித்தி, சொரூபானந்த சித்தி, திருவாய்மொழி, சிவஞான சித்தி, ஒழிவிலொடுக்கம், திருமந்திரம், தேவிகாலோத்திரம், அவிநாசி நாதர் நெஞ்சுவிடு தூது, பொன்வண்ணத்தந்தாதி, திருக்களிற்றுப் படியார், சிற்றம்பல நாடியார், சிவஞான தீபம், சிவானுபூதி விளக்கம், சிவானந்த மாலை, பெரியபுராணம், சசிவண்ண போதம, சித்தாந்த சிகாமணி, வாதவூரார் புராணம், தேவாரம், சிவஞான வாசிட்டம், பூரணப் பிரகாசம், பகவத்கீதை, சங்கற்ப நிராகரணம், குறுந்திரட்டு, திருவாசகம், சதுரலிங்க சதகம், கொற்றவன் குடியார் நெஞ்சுவிடு தூது, திருவிசைப்பா, திருவாய்மொழி, குமாரதேவர் பேரில் நெஞ்சு விடுதூது, அத்துவித உண்மை, நித்தியானந்த சரிதை, சிவப்பிரகாசம், சிவப்பிரகாச தெரிசனம், சிவநெறி பிரகாசம், அருட்பிரகாசம், நின்மலப் பிரகாசம், பூரணப் பிரகாசம், தத்துவப் பிரகாசம்,

பட்டினத்துப் பிள்ளை நாயனார் சிவகீதை, சுத்தி காரம், சிவபோக சாரம், அமிர்தசாரம், ஏகாசம் கும்மித் திரட்டு, பெரிய புராணம், சிதம்பர புராணம், காசிக் காண்டம், உத்தர கீதை தாலாட்டு, அத்துவித வெண்பா, போற்றிப் பஃறொடை வெண்பா, சிதம்பர வெண்பா, தத்துவ நிசானுபவசாரம் முதலான நூல்களின் கருத்துகள் இந்நூலில் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

**இறுதியில்** ஒரு வெற்றேடு உள்ளது. 5 ஆம் ஏட்டின் ஒருபக்கம் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. *222:41; 88:189* என்ற எண்களில் இடம் பெற்றுள்ள நூல்கள் இந்நூல் போன்றவையே.

## 720. வேதாந்த சாரத்திரட்டு

**அ.** ***88:189;*** **ஆ.** *1 - 117* ஏடுகள்; **இ.** 30.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 5 வரிகள்; **உ.** ஓரளவு சிதைவு; இறுதியில் பெரும்பாலான 50- க்கும் மேற்பட்ட ஏடுகள் முறிந்துள்ளன; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம் *22:41* போன்றது.

முடிவு

இசையா னலனே னனையா ளுடையாளிந் தியங்களுட
னசையாத நெஞ்சங்கொண் டன்பால் னினைந்தழியும் உடம்பி
னசையான தின்றிலைம் செய்வாரா யின்றா டலையின்
மிசையார் வைத்தென்றும் மெய்யான தன்னை
வெளிப்படவே.

பாடுதுறை

ஊனை வடிவென்றல் விட்டுத்தன்
உண்மையை உள்ளவர் காணாவிடின்
மானும் மழுவுமாய் வந்தாலும்
அவன்பாவம் மாளாதி ருக்கும் கேடீர் (ஏடு - 110)

குறிப்புரை

*22:41; 61:89* என்ற எண்களில் இடம் பெற்றுள்ள நூல்கள் போன்றதே இந்நூல்.

## 721. வேதாந்த சாரத் திரட்டு - மூலபாடம்

**அ.** ***121:233;*** **ஆ.** *1 - 15* ஏடுகள்; **இ.** 23 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 10* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலையிலிருப்பினும் ஏட்டின் ஓரப்பகுதிகள் சிதைந்தும் ஏடுகள் முறை மாறியும் காணப்படுகின்றன; **ஊ.** நன்று; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

அத்தி முகனடி நித்தம் நினைபவர்
சித்தி திருவொடு முத்தி பெறுவரே

திருவளர் சருவாதீத மாயுயர் சற்சிரசுக
நித்தபூ ரணமாய் விரியுமெய்
பொருளுமாய் அலவாய் மேய
விண்சிவ துயரு ளுருவாய்க்
கருதுறு நலமிலா துழல் வேனையும்
கருணையால் ஆண்டருள் அளித்த
பொருவினற் கொல்லாறு மாமுகன்றன்
பொற்பாதம் வணங்கி வாழ்ந்திடுவாம் (1)
மிருதி புராண மாதினூண் மதனூல்
விளங்கரு சாத்திரங் கவிதாய்த்
திரிவில் வாக்கியம் எண்நான்கு பநிடனும்
சிரமதாம் வேதமுள் உயர்ந்த
விரிடிகள்மார் விரித்த தாதலின் நாவி
னியதாய் வேதமெக் கலைக்குஞ்
சுருதியை விரித்த தாகம் இறையே
துணிஇவை இரண்டும் மெய்யென்றே. (2)

முடிவு

தேனிரம்பு மலரையளி தேடுவபோ லெங்குந்
தேசிகனைப் பலநாளும் தேடிக்கண் டளவில்

ஞானகுரு விவன்பக்குவஞ் சோதிக்க வேண்டி
நடுக்கங்க ளுறவேயென் னாளுஞ்செய் வித்து
மீனாமாந் தொழிலதனி லேவிமிக விடுத்து
இரக்கமிலா தேயடித்து மிழிபுரையால் வைது
மானமின்றிச் செயும்போதுங் குருபத்தி வழுவா
வாய்மையருக் குயர்நிட்டை வழுத்திடவுந் தகுமால் (85)

குறிப்புரை

வேதாந்த சாரத் திரட்டு என்னும் இந்நூல் தொடக்கம் முதல் 85 பாடல்கள் வரை முழுமையாக உள்ளது. அதன் பின் எட்டெண்கள் சிதைந்த 60 ஏடுகள் உள்ளன. ஏடுகளும் முறை மாறி அமைந்துள்ளன. இந்நூலில் 300- க்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன. இந்நூலுடன் 'சிவானந்த மாலை' என்ற நூலின் பாடல்களும் கலந்துள்ளன. சிறந்த உவமைகளால் வேதாந்தக் கருத்துகளை விளக்கும் இந்நூல் சைவ சமயச் செய்திகளையே கூறிச் செல்லுகிறது.

## 722. வேதாந்த சூளாமணி உரைபாடம்

**அ.** ***26:46***; **ஆ.** *1 - 122* ஏடுகள்; **இ.** 23 x 3.5 செ.மீ.; **ஈ.** 9 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

தருண மாதுமை முகத்தா மறைக்கெழு
மருண னாமென வுதித்தடியர் பார்புரி
கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்
சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம்

என்பது - அம்மையுடைய விளமையாகிய வதனாம்புய முகைக் குதையமாகிய வால சூரியனென்னும் படிக்குதித்து அடியாரி டத்திற் செய்கின்ற கருணையாகிய மகா மதங்களையுடைய கெசமுகக் கடவுளினது பாதார விந்தங்களைச் சிரத்தின் மேல் வைத்துக் கொள்ள நின்றோ மென்றவாறு (1)

முடிவு

வேதாகம சாத்திரங்களினால் சொல்லா நின்ற
அருளையுடைய ஆசாரியனைத் தேடித் திகைத்து
உருகா நின்ற அன்பனைக் கண்டார்,
கண்டவுடனே அவனுக்குக் கொடுத்திடுக

என்றவாறு,

ஆக விருத்தம் *185*

குறிப்புரை

''அரிய வேதாந்தங்களைச் சொல்லா நின்ற விவேக சிந்தாமணி என்னும் பெயரினையுடைய சாத்திரத்துள்'' என்ற குறிப்பினால் இந்நூல் விவேக சிந்தாமணி என்னும் பெயரை உடையதாகவும் இருக்கலாம்.

## 723. வேதாளக் கதை

**அ.** 70:133; **ஆ.** 199அ - 202ஆ ஏடுகள்; **இ.** 38.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; சில ஏடுகளில் துளைகள் உள்ளன; **ஊ.** சுமார்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை; இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

கழுத்தி மவுனத் தினனாகித்..த்தி னெழுச்சியற
வழுத்து மலக்கற்பனை நீக்கிய கண்டபத் ததினிரு குவனலும்
வழுத்து கரண மவுனஞ் சொன்மவுனங் காட்ட
...றுந் தெளிந் தன்மேற் கழுத்தி மவுனஞ் செப்பென்னா(1)

முடிவு

இயல்விஞ் ஞான மாத்திரத்தி னிடையே யுலக மிருக்குமென
வுயர்மன்னவ னோதலுங் கேளற வுள்ளத்தே தன்னை வுணர்வுற்று
மயலில் விசாரத்தால் சாந்த மனவே தாளந் தனியிடம் போய்த்
துயர்கொள் பசியை மறந்தசையா தூய தியானத் திருந்ததுவே (26)

வேதாளக் கதை முற்றும். சூத்திரம் 571. பகீரதன் கதை.

குறிப்புரை

*1 - 26* பாடல்கள் உள்ளன.

# 2. துதி
# (தோத்திரம்)

## 724. அஷ் டக்கியானம்

**அ.** 431:677; **ஆ.** *18* ஏடுகள்; **இ.** 38 x 2.5 செ.மீ.; **ஈ.** *3 - 4* வரிகள்; **உ.** சிதைவு; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

### முற்குறிப்பு

சுக்கில வருசத்துக்குச் செல்லும் பிரமோதூத வருசம் மார்கழி மாதம் *18*, சோமவாரம் ஏகாதசி திதி, திருவாதிரை நட்சத்திரம், தனுசுலக்கினம், அமிர்தயோகம். இந்தச் சுப முகூர்த்த தினத்தில் அஷ்டக்கியானம் எழுத ஆரம்பம் பண்ணினது. இந்தச் சுவடியை எடுத்து வாசித்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் பின்பு பாலசுப்ரமணியர் பாதாரவிந்தம் சேருவார்கள்.

### தொடக்கம்

**நன்னு... சேர்...லைச் சமுத்திரத் துள்நிதம்**
**மன்னிவளர் பாலசுப்ர மணியர்மேல் - பண்ணிய**
**நன்னூலாற் கானமதை நோக்கமுடன் சொல்லுதற்குப்**
**பால கணபதிகாப் பாம.**

### முடிவு

மங்களம் - மங்களமே ஜெயமங்களம்

**சரணங்கள்**

தெள்ளமுர்தத்தில்வளர் சீதாபி ராமனுக்கும்
வள்ளிதெய் வானைமண வாளமுரு கையருக்கும்-மங்களமே
சந்திரா தித்தருக்கும் சகலகலை வல்லவர்க்கும்

இந்திரதூயம ராசனுக்கும் எண்டிசையில் அனைவோருக்கும்
மங்களமே ஜெயமங்களம்
நித்தியமங்களமே சுபமங்களம்
மங்களம் எழுதி முடிந்தது.

குறிப்புரை

இச்சுவடி கீர்த்தனை வடிவில் அமைந்துள்ளது. சுப்பிரமணியருடைய சிறப்புகளையெல்லாம் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இராகம், தாளம், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற கீர்த்தனைக்குரிய தலைப்புகளுடன் கீர்த்தனங்கள் எழுதப்பட்டுள்ளன.

## 725. ஔவையார் அகவல் முதலிய பல தோத்திரப் பாடல்

**அ.** 4:19; **ஆ.** *27 ஏடுகள்;* **இ.** *26 செ.மீ.;* **ஈ.** *6 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *கடினம்;* **எ.** *குறை;* **ஏ.** *சில தோத்திரப் பாடல்கள் அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்

சீரான திருக்கடையூர் அமிர்தலிங்க நாதரது செயலை வாழ்த்தி
பேரான செந்தமிழால் மார்க்கண்ட மாமுனிவர் பெருமை கூற
தீராத வினையெவையும் தீர்க்கும் அபிராமி முதற்செல்வ னான
காரானை மாமுகத்தோன் கருணைமிகு கமலபதம் காப்ப தாமே

சுந்தர முனிமார்க் கண்டன் சோதியான் அடிவ ணங்கி
வந்தனம் செய்ய ஈசன் மறலியை உதைத்த காதை
முந்தவே பாடி யாட மூஷிகன் தன்னி லேறும்
அந்தரி தவத்து தித்த ஐங்கரன் வருகின் றாரே

பல்லவி

ஆதிதேவரும் தோன்றினார் - ஆகுவிலேறி
ஆதிதேவரும் தோன்றினார்

அனுபல்லவி

பாதிமதியுங் கொன்றை - நீதியுடனே அணியும்
பசுமதிஉமை ஈன்ற கஜமுக வடிவுள
பகவனை அனுதினம் பரவியே துதிசெய (ஆதிதேவரும்)

**சரணம்**

**மார்பில் பூண்நூல் இலங்க - தங்கமிழைத்த**
**வைரப் பதக்கம் துலங்க....**

## குறிப்புரை

முதல் ஏடும் அடுத்த ஏட்டின் முதற்பக்கமும் ஆகிய மூன்று பக்கங்களில் இப்பாடல் முடிவு பெறுகிறது. இப்பாடல் மட்டுமே மார்க்கண்டேயர் நாடகத்தைச் சார்ந்ததாக உள்ளது. அதனைத் தொடர்ந்து,

**'ஆனையன் முகவன்எனும் ஆதியே போற்றிபோற்றி'**

என்னும் போற்றி மந்திரம் ஒருபக்கம் மட்டுமே உள்ளது. தொடர்ந்து,

**'அம்பிகா இருதையானந்தம்'**

என்னும் சுலோகம்,

**எங்கணும் நிறைந்தாய் போற்றி**

**இமையவர் முதல்வா போற்றி**

என்னும் தேவாரப்பாடல் ஆகியவை அமைகின்றன. ஐந்தாவது ஏட்டில்,

**சீதக்களபச் செந்தாமரை பூம்பாதச் சிலம்பு**
**பலவிசைப்பாட**

என்று தொடங்கும் ஔவை அகவலில், சகஸ்ரநாமம், பீஜாட்சரவர்ணமாலிகா தோத்திரம், சுந்தரமூர்த்தி நாயனார் திருபாண்டிக் கொடுமுடி அஞ் செழுத்து, காசிகேதார கௌரி திருவருட்பா, திருப்புகழ், இஷ்டலிங்க அபிஷேகமாலை, அஷ்டஹோரம், அங்கன்னி யாசம், விநாயகர் தோத்திரம் முதலான தலைப்புகள் காணப்பட்டு ஒவ்வொரு தலைப்பிலும் பல தோத்திரப் பாடல்கள் கூறப்படுகின்றன.

## 726. கனக சபாபதி தோத்திரம்

**அ.** **76:169**; **ஆ.** *128 - 131* ஏடுகள்; **இ.** 17 x 2.5 செ.மீ.; **ஈ.** *8 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

திங்கட் குழவி யசைந்தாடப் பொறிதிகழ் மணியர் வாடச்
சேந்து குருசாரங் குயகதி ரிற்செவி செறிகுழை யாட
வங்கைச் சிறுமா னம்பிக்கைக் கண்மா னாடத் துடியாட
வனலா டத்தலை மாலைக ளாடிட வணிகுண குணியாடத்
துங்கத் தேவர்கள் முனிவர்களாடத் தொல்லுல குயிரெனவ
யுஞ்சுருதி வழுத்துந் தொழிலைந் தின்படி துகளர நின்றாடக்
கங்கைப் பெண்ணோன் றாடா தாடக் காறா யிஃதரிதே
கட்செவி புவிகண் டெப்பொழு தும்பணி கனகசபா பதியே. (1)

முடிவு

விரிதரு பாசஞ் சட.... நானோ விழிக்கதிரா லறியுமே
தகவுன் னருளா லிங்கன்றி விளங்கே னென்னை யுனையு
முரைதரு மெனையு மதையு மியக்குறு முத்தம் சீர்பரனே
யுனதடி யடையவே னாலும தாலு மோரறி வுளதாமோ
திரமுறு மெனையு மதையும் விளங்குந் திருவருள் வெளியிலென்னைச்
சேர விருத்திப் பேரின்பச் சுதைசெறிதா வினிநிறைவாய் கரமதி
யரவுக் கழுத்திட வரவங் கதிர்ம ணியுமிழ் சடையாய்
கட்செவி புவிகண் டெப்பொழு தும்பணி கனகசபா பதியே (10)

குறிப்புரை

***1 - 10 பாடல்கள்***. இறைவனை வாழ்த்தி வணங்கி அன்புருக, நெஞ்சுருகத் தோத்திரங்கள் கூறப் பெறுகின்றன.

## 727. குரு தோத்திரம்

**அ. 356:591; ஆ.** *1 - 5 ஏடுகள்;* **இ.** 23.5 x 3.2 செ.மீ.; **ஈ.** *9 - 11 வரிகள்;* **உ.** *ஓரளவு நல்லநிலை;* **ஊ.** *படிக்கக்கூடிய எழுத்து;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சாகாதது.*

தொடக்கம்

திருமா லயனடி முடியறி யாது செழுஞ்சோதிர் மயமாய்த்
திகழும னாதியதாய் வாக்குமனாதீ தவகோ சரமாய்
வரும்மா யார்கிதமதாய் நிகழ நிருமல நிருபா திகமாய்
மகிழ்பரி பூரண மாய்ச்சாத் வதமாய் மருவுறுமொரு பொருளே

யிருமா நிலமிசை நித்திய நித்திய மேனிசை நல்வி வேகமுதல்
திருவுந்தனு வாயுறுமடி யர்க்கெழி வோர்மொழி யதனாற்
நிரமா கியவிரு டோகன்ற மறைமுத றிரிவித சமதமதாய்
சிவகதி தர வருளுரு வாகிய பரசிவ சண்முகக் குருவே (1)

## முடிவு

நிறைவா யென்வயினு முயரவர் யறிவரி தாயநிலை நித்தியமாய்
நிமல சுபாவமதாய் சற்சிரசிற் தாகமாய்த் திகழும் பொருளே
யறிவா வதுமறி யாமை யும்யறி வுடையா ருளமே
யல்லும் பகலுமில் லாதிடம் இனிலா னந்தக் கனியே
பிறவே தனைதருமல விருடேறு முதிர்போ ஞானக் கதிரை
பேயன் மகரமூ டன்றலை மிசையடி பெறவைத்தா ளரசே
செறிவே யற்புதமே கற்பகமே சிவசொ ரூபா நிதியே
சிவகதி தரவரு ளுருவாகிய பரசிவ சண்முக குருவே (12)

## குறிப்புரை

ஒன்று முதல் 12 பாடல்களில் நூல் அமைகின்றது. இதைத் தொடர்ந்து மீண்டும் ஒன்று முதல் மூன்று ஏடுகளில் பெயர் இன்றிக் குரு தோத்திரமாகவே 1 - 12 பாடல்கள் அமைகின்றன. இதனைத் தொடர்ந்து உள்ள 2 ஏடுகளில் முதல் ஏட்டில் சிவபோக சாரத்துக்கு முதநினைப்புப் பாடல் என்ற நூலும், அடுத்த ஏட்டில் ஆதிபுராணத் திருக்குறுந்தொகை என்ற நூலும் அமைகின்றன.

அடுத்த இரண்டு ஏடுகளில் 'அப்பர்சாமிகள் வாக்குத் **தனிக்குறுந்தொகை**' என்ற நூலும் அதனைத் தொடர்ந்து **திருக்**கோவல் வீரட்டர்திருநேரிசை என்ற நூல் இரண்டு ஏடுகளிலும், 'திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்' என்ற நூலும், 'பாவநாசதிருக்குறுந்தொகை' என்ற நூலும் முறையே ஒவ்வொரு ஏட்டிலும் அமைந்துள்ளன. இந்நூல்களிலுள்ள பாடல்கள் தங்களுடைய குருவைப் போற்றும் வண்ணம் அமைந்துள்ளன.

## 728. குருதோத்திரம்

**அ. 390:634; ஆ.** 5 ஏடுகள்; **இ.** 30 x 3 செ.மீ.; **ஈ.** 8 - 10 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

திருவளர் கயிலைச்சயில முஞ்சயி லச்செல்வியுந்
 தூம்புடையே யிற்றுத்
தீவிடப் பணியும் பால லோசனமுந்
 திரையேறி வாந்திமதியுங்
கருநிறச் சிறுகட்புகர் முகச்சுருள் கைக்கடாக்
 களிற்றுரு வை யம்போரவை
கனலுமிழ் மழுமான் கொடும்புலி யுடையுங்
 காந்தெனைப் பணிகோன்
பெருக்கொளியருளே திருவடிவாகப்
 பேரளி முதல்வோர் னாளாகும்
பெரு... பாகவோ ருருத்தாங்கிப் பெருந்தரைக்
 கண்ணின் பூவந்தெனக்கு
யருளோடும்... தாகமச்சீர் பொருளை யருளியக்
 கருணை வாருதியே
யணிகிளர் கோவனக ரில்வாழும் சேயாறு
 மாமுகச் சிகாமணியே (1)

முடிவு

திருவெந்நீர் அணிகள் வாழி
 தெய்வ கண்டிகைத் தார்வாழி
பாவினர்க் கருளும் பஞ்சாக்கரம்
 பகர பவளம் வாழி
மாருமலர்ச் சரணம் வாழி
 ...ணிடியக் குவளை வாழி
அருள்பொழி விழியெங் கோமா
 னாறுமா முகனும் வாழி (11)

குறிப்புரை

முருகனைப் போற்றிப் பாடும் **11 பாடல்கள் உள்ளன.**

## 729. கோவல் வீரட்டேசுவரர் குரு தோத்திரம்

**அ. 362:600;** **ஆ.** *17 - 20* ஏடுகள்; **இ.** 27 x 2.8 செ.மீ.; **ஈ.** *6 - 7* வரிகள். **உ.** ஓரளவு நல்லநிலை; ஒருசில ஏடுகளில் சிதைவு; **ஊ.** தெளிவு. **எ.** முழுமை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

பூவுலகந் தனிலிருளினை யொழித்துப்
புண்ணிய தானமா யிருக்குங்
கோவல் வீரட்ட ரருளருளாற்
கோதின் மூன்றா முறையாகித்
தீவிர தரத்தினி தெழுந்தருளிச்
சிறப்பதாய் விளங்கிய பரனே
தாவிலா தொளிருஞ் சங்கணவ
சிவசண்முக ஞான தேசிகனே (1)

முடிவு

ஒளியரு ளுருவிற் களிமுதலிய
நான்குறுப் பமைந்தோ ருருவாகிக்
களிவுறுமடி யார்க்கினி தருள்புரிந்து
கதிதரற் காயுறு மிறையே
வளமுறு முனதுதிரு வுருவாதி
வாழ்க மேன்மேலு மேல்வாழ்க
தளர்விலா திலகுஞ் சங்கணவ
சிவசண்முக ஞான தேசிகனே (10)

பிற்குறிப்பு

விக்குறுதி வருசம் புரட்டாசி மாதம் இருபத்தெட்டாம் தேதி ஞாயிற்றுக்கிழமை எழுதினது.

குறிப்புரை: கோவல் வீரட்டேசுவரர் குருதோத்திரம்- மூன்றாம் முறையாய் எழுந்தருளி விளங்கும் குருதோத்திரம்

***1 - 10 பாடல்கள்.*** முருகப் பெருமானின் அருளுள்ளம், சிறப்பு ஆகியன நூலுள் பேசப்படுகின்றன.

## 730. (சலந்தரேசுரர்)

**அ. 78:174; ஆ.** 5 ஏடுகள்; **இ.** 39 x 3 செ.மீ.; **ஈ.** - 6 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

தலமதன வடபா லற்குச் சலந்த ரேசுர மென்றானம்
வலனுற வப்பு வான்மண் டலத்து தையஞ் செய்தான்
னலகில் சீர்சலந் தரப்பே ரசுரனிங் கவனி மீதே
நிலவி னானகாஞ்சி மூதூர் நிலைமை தேர்ந்தங்க னூர்முன் (382)

முடிவு

தராத லாதிபனி ராகுவன் முன்னரி தலநிடைப் பெம்மானைப்
பராவி யேகிய நலத்தினி நிருதரைப்ப தேதன்ன மீள்காலை
விராவி யின்னிடைப் பின்னரும் பூசனை விகுத்த னொருலிங்க
மிராம னாதனென் றன்னது பணிகுவார் யாவரு மரசாள்வார் (472)

குறிப்புரை

சலந்தரேசுரர், திருமால் பேறு என்ற இரு உட்தலைப்புகள் உள்ளன. முதல் தலைப்பே நூலின் தலைப்பாகத் தரப்பட்டுள்ளது. 383 முதல் 390 வரை பாடல்கள் தொடர்ச்சியாக உள்ளன. அதன்பின் உள்ள ஐந்தாவது ஏட்டில் 466, 467, 468, 472 ஆகிய நான்கு பாடல்கள் உள்ளன. 468ஐ அடுத்து 469 வது பாடல் தரப்படாமல் 472 ஆவது பாடல் தரப்பட்டுள்ளது. இந்நூலில் குமரகோட்டத்தில் அமர்ந்து பூசனை புரிந்த மேன்மையன், பரமன், கருணையன், கயிலைமலையான் என்றவாறு சுந்தரேசுரர் போற்றிப் புகழப்படுகின்றார்; திருமால் சக்கரப்பேறு பெறுதல் கூறப்படுகின்றது. இதனையடுத்து உள்ள ஓர் ஏட்டில் (ஆறாவது ஏடு), 'ஆடியென்பது - கண்ணாடிக்குப் பேர்; வாதநாராயணரானவர் - வேதவியாசர்' ஆகிய அருஞ்சொற்பொருளும் தரப்பட்டுள்ளன.

## 731. சிவசண்முக தேசிக ஞானியார் திருவவதாரச் சருக்கம்

**அ.** 44:68; **ஆ.** 1 - 79 ஏடுகள்; **இ.** 21.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 6 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு. **எ.** முழுமை; **ஏ.** அச்சாக வில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

முதல் அத்தியாயம்

அரியானை யயன்மாலுக் கண்டபே ரொளியானை
தெரியானை யன்பிலாதந் தேகமனு வாக்கதனுக்
குரியானை யன்பர்தமக் குணபதியா ளீன்றெடுத்த
பெரியானைக் கணபதிதன் னிரங்கியபொற் பதம்பணிவாம்

திருவவதாரச் சிறப்பு

ஆரியனது திருவுளத்தெண்ணி யாயிரமோர் சேடர் கரத்தை
கூரயி லுடையோ னருளிடத்தின முங்கொளும்
விரதச் செபமதனா லாலியன் றனக்கு ஞான
புத்திர னாமம் பலவானை மாமுனிவன்
பேரினுக் கொருவராட்கொள வெனுங்காற் பேசுமுன்னன்
புளரினிலே (1)

முடிவு

சிவமக மென்னுந் தியான உண்மைய
தாஞ்செக வறிவயர்வு நீங்கியநல்
உவமையி லறிவுளறி வினையருள்
உணர்ந்திடாது ணரனு பூதி
சிவசேர் பாவமதா நிட்டையி லிருந்து
தினந்தொறுஞ் செப்புமாறான சிவனர்ச்சனை செய்திட
எழுந்திருந்து தேசிகன் தெரிசனஞ் செய்தே (22)

குறிப்புரை

சிவசண்முக ஞானியார் திருஅவதாரச் சருக்கம் என்னும் பகுதியின் முதல் அத்தியாயம் *1 - 11* ஏடுகளில், *1 - 24* பாடல்களும், இரண்டாவது அத்தியாயம் *1 - 6* ஏடுகளில், *1 - 6* பாடல்களும் அமைகிறது. இதன் தொடர்ச்சியாக *6 - 8* ஏடுகளில் வாழ்த்துப் பாடல்கள் அமைகின்றன. இரண்டாவது அத்தியாயம்,

'மருமலர் சரணம் வாழி - மணி
அருள்பொழி விளியுங் கோமான்
ஆறுமா முகனும் வாழி'

என்னும் வாழ்த்தோடு முடிகிறது. தொடர்ந்து சிவசண்முக ஞானியார் அஷ்டகம் 1 - 3 ஏடுகள், 1 - 8 பாடல்கள். அடுத்து 1 - 4 ஏடுகளில் திருமந்திரம் போன்ற நூல்களிலிருந்து சில பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அருணாசல ஞானதேசிகனே என்ற முழுவடிகளைக் கொண்ட பதினோரு பாடல்கள் 1 - 4 ஏடுகளில் உள்ளன. 'சிவசண்முக தேசிகேனையே கொடியேன் மறந்து உய்வனோ'' என்ற முடிவுகளோடு 1 - 10 பாடல்கள், 1 - 2 ஏடுகளில் உள்ளன.

''சிவசண்முக தயானிதியே'' என்ற முடிவை உடைய 1 - 13 பாடல்கள்; 1 - 4 ஏடுகள். ''சிவசண்முக குருதேவே'' என்ற முடிவை உடைய 1 - 12 பாடல்கள்; 1 - 4 ஏடுகள். அடுத்து ஏட்டெண் இன்றி இரண்டு ஏடுகளில் சில துதிப் பாடல்கள் அமைகின்றன. அடுத்து, சிவகுரு லீலை எனுந் தலைப்பில் பாடல் எண்ணின்றி 2 பாடல்கள் இரு ஏடுகளில் அமைகின்றன. ''சண்முகஞான தேசிகனே'' என்னும் முடிவுடைய 1 - 11 பாடல்கள் 1 - 8 ஏடுகள். மீண்டும் ''சண்முக தயாநிதியே'' என்னும் முடிவுடைய 1 - 11 பாடல்கள் 1 - 7 ஏடுகளில் அமைகின்றன. 4 - 13 ஏடுகளில்; 23 - 40 பாடல்களில் சைவ தத்துவச் செய்திகளடங்கிய பாடல்கள் உள்ளன. இறுதியில் ''வேதாந்த சாரத்திரட்டி லிருந்து எடுத்து எழுதியது. இந்தப் பிரம்மாபுர இலக் கணத்தைச் சர்வ காலமும் தோத்திரம் பண்ணிக் கொண்டே இருக்க வேண்டியது'' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

## 732. சிவ தோத்திரம்

**அ.** **76:153**; **ஆ.** 2 ஏடுகள்; **இ.** 17 x 2.5 செ.மீ.; **ஈ.** 8 - 10 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

**தொடக்கம்**

அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி
நாக கங்கணா போற்றி மூல காரணா போற்றி
நெற்றிச் செங்கணா போற்றி யாதிசிவ பரஞ்சுடரே போற்றி
யெங்கள் நாயகனே போற்றி யீரிலா முதலே போற்றி (1)

முடிவு

ஆதிதன லோமென்னும் பதம தாக
வந்தமதிற் சிவாய வொலி யணைந்து நிற்க
வேந்தியவா றெழுத்தினையு முடைத்தே யிந்த
வோமென்னும் பதப்பொரு டானுயிர் கட்கெல்லாம்
போதகனாய்ப் பொருவிலியாய் நிற்கு மீசன்
புனிதனவன் சத்திவித மைந்து மற்றை
யேதமிலா வஞ்செழுத்தின் பொருளே யெண்ணி
லிருப்பயனு முயிரடையு மிவற்றா லென்றும் (5)

குறிப்புரை

**1 - 5 பாடல்கள்.** சிவனை வணங்கும்போது உச்சரிக்க வேண்டிய மந்திர ஒலிகள், அவற்றை உச்சரிக்கும் முறைகள், அதனால் ஏற்படும் பயன், சிவனது பெருமை, அருளுள்ளம் முதலியன இடம் பெறுகின்றன.

## 733. சிவபூசையின் பலன் சிவனடியாருக்குச் செய்யும் பலன்

**அ.** 41:65; **ஆ.** 5 - 36 ஏடுகள்; **இ.** 35 x 2.5 செ.மீ; **ஈ.** 5 வரிகள்; **உ.** பல ஏடுகள் முன்னும் பின்னுமாக முறிந்துள்ளன; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

சீவனைச் சிவத்தி னொன்றாய்ச்
சேர்க்குஞ்சித் தாந்தத் தோர்க்குஞ்
சீவனைப் பரத்தி னொன்றாச்
சேர்க்கும்வே தாந்தத் தோர்க்கும்
பாவனை யிரண்டு மொன்றே
பரமஞா னத்தோர்க் கெல்லா
பாவிய கரும.......................
விளம்பிடிற் பேத மாமே (21)

முடிவு

நீங்க லாது நிறைசிவ நேசர்பார்
பாங்கி னாலணி பாதுகை யீந்துளோ
ரோங்கு தேர்முதல் வாகன மூர்ந்துபோய்த்
தீங்கி லாத சிவபுரஞ் சேர்வரால்

குறிப்புரை

**141 பாடல்கள். நல்ல நடை.** சிவபூசையின் பலன்களைக் கூறும் இந்நூல் சித்தாந்தியர், வேதாந்தியர் என்ற இரு வகையோரின் ஒன்றுபட்ட தன்மைகளைக் கூறத் தொடங்கிச் சிவாலயத்தின் கோபுர சிகரத்தைத் தரிசிக்கும் பலன், வழி நடந்துவந்த இளைப்போடு வலம் வரும் பலன், சிவாலயத்தைத் தினமும் மூன்றுமுறை வலம் செய்யும் பலன், சிவலிங்கத்தைத் தரிசிக்கும் பலன், பசுவிற்குப் புல் கொடுக்கும் பலன், சிவயோகிக்குப் பிச்சையிடும் பலன், பூசிக்கத்தக்க மூர்த்தங்கள், அம்மூர்த்தங்களைத் தரிசிக்கும் பலன், பஞ்சகௌவிய அபிஷேகப் பலன், சிவ பூசையின் பலன், ஆலயத்திற் சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்கும் பலன், சங்கு, வாத்தியம், சாமரை, வாள், கண்ணாடி, குடை, வஸ்திரம், பொன், தாம்பிரப் பாத்திரம் இவற்றின் பயன், சிவபெருமானுக்கு மணி கொடுப்போரடையும் பலன், சிவபெருமானுக்கு ஆதனம், சயனம், வாகனம், சிவிகை கொடுப்போரடையும் பலன், நாடகசாலை, திருமதில், கோபுரம், மண்டபம் சிவபெருமானுக்காகக் கட்டுவிப்போர் அடையும் பலன், பூமி, ஆபரணம், விளைநிலம், சாலை கொடுக்கும் பலன்கள், வாவி, தடாகம் வகுக்கும் பலன், பார்வதியாரை அருச்சிக்கும் பலன், ஆகமத்தின் பலன், சிவயோகியின் பெருமை, சமயதீட்சை பெற்றவருக்கு அன்னம் அளிப்போரடையும் பலன், தண்டுலம், தீபம், வஸ்திரம், கனி இவை சிவபெருமானுக்கும் ஆசாரியர்க்குங் கொடுக்கும் பலன், சடைமுடி பரிக்குஞ் சிவபக்தர் அடையும் பலன், முண்டிதம், சிகை, உடை, சிவபக்தர் அடையும் பலன், தேன், அபிசேகம், ஞானாக்கினியிற் பூசை செய்யும் பலன், எண்ணெய், இளநீர், விபூதி, அபசேகப் பலன், சிவபெருமானுக்கும் ஆசாரியருக்கும் பொன்னும் மணியுங் கொடுப்போரடையும் பலன், சிவனடியாருக்கு விசிறி கொடுப்போர் அடையும் பலன் எனப் பல்வேறு வகையான சிவபூசைப் பலன்களைத் தொகுத்துச் சொல்கிறது.

## 734. (சிவன் பாடல்கள்)

**அ.** 141:299 **ஆ.** 52 - 56 ஏடுகள்; **இ.** 24 x 3 செ.மீ; **ஈ.** 10 - 11 வரிகள்; **உ.** சுமாரான நிலை; முதல் இரண்டு ஏடுகள் முறிந்துள்ளன; சில ஏடுகள் செல்லரிப்பு; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்

அவரவர்க் குள்ளபடி ஈசன் அருளாலே
யவரவரைக் கொ....ற்று மானால் - அவரவரை
நல்லார்பொல் லார்என்று நாடுவதே நெஞ்சமே
எல்லாஞ் சிவன்செயலென் றெண. (1)

முடிவு

நேசஞ்சி வாலயங்கள்..... .........
மோசம் வந்து தய்யோ முதல்வனே - தேசத்து
மண்ணை வெறுப்பனோ....யை யூட்டி விக்கு
முன்னை வெறுப்பனோ உரை (29)

குறிப்புரை

**1-29 வெண்பாக்கள்.** அவற்றின் முதலும் முடிவுமே மேலே கொடுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் நூல் தலைப்பு ஏட்டில் காணப்பெறவில்லை. எனவே நூற்பெயர் ஆறிய முடியாததாலும், சிவனைப் பற்றிய பாடல்களாதலாலும் 'சிவன் பாடல்கள்' என்று பெயர் தரப்பெறுகின்றது.

## 735. (சிவன் பாடல்கள்)

**அ.** 242:458; **ஆ.** 114 - 140 ஏடுகள்; **இ.** 2.5 x 3 செ.மீ.; **ஈ.** 7 - 8 வரிகள்; **உ.** நன்று: இடதுபக்க ஓரப்பகுதிகள் சிறிது சிதைந்துள்ளன; **ஊ.** சுமாரான எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

இந்த ஆர்மர் எவ்விடத்தே நின்றுண்டு மென்னில்

மன்னுயி ரோதலத் தொன்றா விடையங்கள் மற்ற
ரென்னில் வுடலினு மாகி லவத்தையத் திந்திரிய
முன்னிலைந் தொக்க வறிவெழ வேணுமுற் றெவ்விடத்துத்
துன்னி வியாதறிக் கிலப்போக்கு வரவு சொல்லா துயிர்க்கே (185)

முடிவு

இரண்டில்ல யாகி யிசைக்க வொருவரிங்கே னென்பரே
முரண்ட சமையத்தின் மூர்க்கர்கள் மூன்றுமுத லிரண்டாய்த்
திரண்டுஒன்ற தாகவரி தெனும்வேத மிரசிற் சொரூபம்
புரண்ட கவயம் பிரகாச மறியப் புரைவருமே (303)

குறிப்புரை

***185 - 303* பாடல்கள்.** *சிவனை வாழ்த்தி, அவன் அருளைப் பெற அவனது சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது.*

## 736. (செந்திலாதிபன் துதி)

**அ.** 519:804; **ஆ.** *1- 7* ஏடுகள்; **இ.** 15 x 4 செ.மீ.; **ஈ.** *11 - 12* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

**காருகந்த மேனியனு மயனுங் காணாக்**
**கடவுளர்க் குபதேச மருளு மூர்த்தி**
**வாருகந்த குவிமுலையா ளுமையா ளீன்ற**
**வளர்கனியே செழுஞ்சுட ரேமயில் கடம்பா**
**தாருகந்த பன்னிரெண்டு கய்யும் வேலுஞ்**
**சண்முகமும் நின்னிருதாட் சதங்கை கொஞ்சச்**
**சீருகந்து யெனையாள்வாய் அய்யா வாவா**
**சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி** (1)

முடிவு

**அடங்காம லோடுகின்ற யென்ம னத்துக்**
**கருள்காட்டி யரவணைத்து அன்பாய் ஞான**
**வடம்பூணப் பிடித்திறுக்கி அறிவென் றோங்கு**
**மாமணி பற்றோடே வறிந்து சேர்த்து**
**உடன்தோனும் படியீரா றெழுத்தால் மூட்டி**
**யொடுங்குகின்றே னுளந்தனிலே யுகந்தேன் நாளுந்**
**திடங்காணும் படிக்கருள் செய்ய வாவா**
**சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி** (23)

குறிப்புரை

**ஒன்று முதல் 23 பாடல்கள் உள்ளன.** முருகனது பெருமை, அவன் உயிர்களிடத்துக் காட்டும் அன்பு, மக்களை ஆட்கொண்டு நெறிப்படுத்தும் வகை ஆகியன நூலுள் கூறப்படுகின்றன. அனைத்துப் பாடல்களும் **வாவா, *சிவசிவா செந்தில் வளர் சிவனே போற்றி*** எனும் மகுட அடியினைப் பெற்று முடிகின்றன.

## 737. திண்டிவனம் வாலை அங்காளம்மை துதி

**அ.** ***136:274*; ஆ.** *31 - 74* ஏடுகள்; **இ.** 42 x 3.5 செ.மீ; **ஈ.** 4 - 5 வரிகள்; **உ.** நன்று; ஓரிரு ஏடுகள் முறிந்துள்ளன; **ஊ.** தெளிவான எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

தோற்றுசத வலிநம்ப னுருமியன் தந்தன்
சேடன்வெண் சினக்கேசரி
துரையணிகன் முன்னவன் கன்னன் துமிந்தன்
துலங்குபன் சனத்தி முகனும்
ஏற்றகயனுந் துன்முகன் துமிர்ந்திர மைந்தன்
எதிரிலாக் கிஷகோமுகன்
இடபனும் பதுமுகன் தீர்க்கபா தன்சறப
னியல்விதை னீண்டகும்ப
சீற்றமா கியசம் பாரியொடு வெற்றியுஞ்
சேர்ந்தயிரு பத்து நால்வர்
சிலைராம ருக்குப் படைத்தலைவ ராமெனச்
செப்புவார் சேனைமத
மாற்று முடலுயிரு மொன்றாய் விளங்குசிங்க
வாகினி திண்டிநகரில்
வாசமாய் மேவுகுரு நாதரிட மகலாத
வாலையங் காளம்மனே (61)

முடிவு

பூசமக மும்பரணி பூரங்கார்த் திகைமூலம்
புரட்டாசி யிவையேழுமே
பொங்குமக் கினிமண் டலமென்னும் போதாற்
பொசிப்பில்லா மனிதர்மாயும்
வாசஉத் திரமுதல் நான்குமக பதியுமே
மனமான ஆயிலியமும்
வாய்வுமண் டலமென்றும் பேரதாற் சிராணமது
வந்துமே நீண்டினாக்கால்
பாசமுடன் பசிநோயால் மாய்ந்திடுஞ் சதையமகம்
பருலே முத்திரட்டாதி

பாந்தமகஞ் சீரிடம் பூராடம் திருவோணம்
பணிவருண மண்டலமாதல்
மாசமும் மாரியது பெய்துமே செழித்திடு
மகமாயி திண்டிநகரில்
வாசமாய் மேவுகுரு நாதரிட மகலாத
வாலையங் காளம்மனே (148)

குறிப்புரை

***61 - 148 பாடல்கள்.*** திண்டிவனத்தில் எழுந்தருளியுள்ள வாலை அங்காளம்மன் மீது பாடப்பெற்ற தோத்திரப் பாடல்களாக இந்நூல் அமைகிறது. இராமாவதார மறிவது, விதை விதைக்க நாளறிவது, நெய்தல் நிலமறிவது, அனுசரணை வாக்கியமறிவது, வாரத்தின் சூலநாழிகை யறிவது, இராகமறிவது, அசாத்தியக் குறியறிவது, நெய்தல் நிலமறிவது, மனையெடுக்க ஆகாத மாதமறிவது, முத்துப் பிறக்கிற தானமறிவது, நலமில்லாத துர்மார்க்கர், விபூதியிடும் தானமறிவது, சிவமணி துகையறிவது, கெற்ப நிலை பலன், உற்பன சிரோஷ்ட மறிவது, சசி, ரவி, யீசன் தன் ரத மார்க்கமறிவது, மகிமை கண்டு வருகிற சிராக்கியமறிவது, கற்பு மங்கையர் செய்கையறிவது, சாத்மீகம், ராட்சதம், தாமதமறிவது, சத்தியமில்லாதார் செய்கையறிவது, உள்ளக் கருத்தறிவது, நாலு வகைக்கும் வீற்றிருக்கிறது, அறிவிலார் நடத்தை அறிவது, சூலத்தேதி சொல்வது, சிரேஷ்டமான புருடனறிவது, கும்பனுக்கு அறுமுகன் கூறியது, புருடன் அளவு அறிவது, புருஷ லட்சமணமறிவது, மருவுற்பத்தியின் குறியறிவது, விரல் அளவின் குறியறிவது, கல் மனத்தாருக்குக் கருத்துரைப்பது, ஐவகைக்கும் மனதே காரணம், சிற்பாசாரியின் குறியறிவது, கத்துக்கொட்டியள் வேலையறிவது, அறிவுள்ளோர் கைக்கொள்ளாதது, மாச நாளறிவது, ஆடிமாதம் 5-ந் தேதியிற் குறியறிவது, தை அம்மாவாசி வருங்கிழமை விலை நிகுதியறிவது, வஞ்சக்காரர் செய்கையறிவது, சகஸ்ரநாமத்தின் விசேடம் பனிரெண்டு மறிவது, நாழிகை நட்சத்திரமறிவது, பஞ்சகமறிவது, பரிவேடக்குறி அறிவது, ஆடிப் பஞ்சமி குறிபலன் அறிவது, நகரச் சிறப்பு, வாசி மகிமை, வியாழன் சரியையறிவது, வெள்ளி சரியையறிவது, வாயுக்குறியறிவது, காத்தாடிக்

குறியறிவது, மின்னல் குறியறிவது, காலற்ற, உடலற்ற, தலையற்றன அறிவது, ரண்டு கண், ஒரு கண் குருட்டு நாளறிய, தனிநாளறிவது, கரிநாளறிவது, வார சூனியம், விட்டி கரணமறிவது, நாள் விஷமறிவது, கிரகநிறமறிவது, சுக்கிலபட்சம் யோகினி அறியும்படி, கிருஷ்ணபட்சம் யோகினி அறியும்படி, ருதுவில் ரத்தக்குறி அறிவது, பின்னும் ரத்தக்குறி அறிவது, ரத்தக்குறி நிறமறிவது, ரத்த சாமக்குறியறிவது, ருதுகண்ட பேர் குறியறிவது, பிடவை குறியறிவது, ருது சாஸ்திரம் சத்தம தானப் பலன், சித்திரை மாதம் 1-ஆம் தேதி கிழமை பலனறிவது, கிரக நட்பு அறியும்படி, கிரக பகையறிவது, ஆண்ராசிக் கோள், பெண்ராசிக் கோள், திருமணப் பலனறிவது முதலான தலைப்புகளில், இந்நூல் செய்திகளைத் தருகிறது. **வாலை அங்காளம்மனே** என்ற இறுதி மகுடத்தைக் கொண்டு முடிகிறது. நல்ல நடையில் பல சோதிடச் செய்திகள் இடம்பெறுகின்றன.

## 738. திருக்குற்றாலம் - பண் குறிஞ்சி

**அ.** ***519:806;*** **ஆ.** *1 - 2* ஏடுகள்; **இ.** 15.3 x 4 செ.மீ.; **ஈ.** *11 - 12* வரிகள்; **உ.** நன்று; ஓரிரு துளைகள் உள்ளன; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

**தொடக்கம்**

வம்பார் குன்றநீடுயர் சாரல்வளர் வேங்கைக்
கொம்பா... சாலைக்கோல் வேண்டியாள்செய் குற்றாலம்
அம்பானேய யொ...டா...டலமாந் தானவர் கொன்றை
நம்பான் மெய்நகர் போலு நமரங்காள் (1)

முடிவு

மாடவீதி வகுபுனர் காளியார் மன்னன்
கோடலின்று கொழுமுனை கூம்புங் குற்றால
நாட வல்லநற்றமிழ் ஞான சம்பந்தன்
பாடல் பத்தும்பாட நம்பாவம் மறையுமே (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்புரை

**ஒன்று முதல் 11 பாடல்களை**யுடைய இந்நூல் திருக்குற்றாலத்தின் தலப்பெருமையையும், தொன்மையையும், அங்கெழுந்தருளியுள்ள இறைவனைத் துதிப்பதால் ஏற்படும் பலனையும் கூறுகிறது. மேலும் ஞானசம்பந்தருடைய பாடல்களைப் பாடுவதால் நம் முடைய பாவங்கள் தீருகின்ற முறைமையையும் கூறுகின்றது.

## 739. திருக்கோவலூர் ஆறுமுகன் துதி

**அ.** ***386:629;*** **ஆ.** *4, 11 - 19* ஏடுகள்; **இ.** 20 x 3 செ.மீ.; **ஈ.** *6 - 7* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** குறை; **ஏ.** *அச்சாகாதது.*

தொடக்கம்

...ந் திங்கள் கார்த்திகையின் துணையாற் சோதிவரை
னாளாறு முகரருளினா லவதரித்திட லாறுமுகரெனப் பெயரணிவரென
கொன்றையணி வீரட்ட ரடிமை குமரையரிப் பழமை கூறிய தென்றவர்
சோவல் வீரட்டே சர்பாதமே பற்றான குருவாறு முகத்தேவனே (5)

முடிவு

திருவண்ணாமலை வாழ்க்கை நமசிவாய தேசிகர்க்கடிமை
சந்ததியாய் வருகுமய்யா வள்ளியம்மனுமே வளர்த்தன ராறுமா முகனைத்
தரையினிற்ற வருபருவ மாதியதாயித் தவஞ்செஞ் சரித்திர மதனை
யுரைசெயுஞ் செய்யுளனைத்தையு முரைவோ ரதுண்மை வீட்டுவகை
மேலிடுமே (70)

குறிப்புரை

**5 - 7 பாடல்கள்; 30-70 பாடல்கள்;** முருகனைப் பற்றிய துதிப்பாடல்களைக் கொண்டது இந்நூல். கோவல் வீரட்டேசர் பாதம் பணியும் ஆறுமுக தேவன், மெய்ஞான தேசிகன் முதலானவர் சுட்டப் பெறுகின்றனர்.

# 740. திருக்கோவலூர் ஞானாசாரிய சுவாமிகள் தோத்திரம்

**அ.** ***89:190;*** **ஆ.** *1 - 44* ஏடுகள்; **இ.** 21 x 2 செ.மீ.; **ஈ.** 5 - 6 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** படிக்கக் கூடிய எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

## முற்குறிப்பு

குமாரதேவர் சுத்த சாதகம். சிவசக்தி கணபதி திருவடி சரணம்.

## தொடக்கம்

**திருக்கோவலூர் ஞானாசாரிய சுவாமிகள் தோத்திரம்**

திருமருவு கோவல்வீ ரட்டேச ரருளினாற்
சீவகா ருணியமாதி
செப்புநான் கோருருவ மாகிவந் தவனியிற்
சீவர்பக் குவவக்கன

முரைமந்த மந்ததர மோதுதீ விரமுயர்வு
மொப்பிலதி தீவிரத்தாற்
குபதேச நூலசூக்கஞ் சுத்தமா சுத்தமோரெழுத்
துண்மைநிலைவைத் திரவுபகலில்
தறிவு ளின்ப மேலிடு நிராவவத்தை
யாயிலகு சிவமா
மிணையினி சவத்துவிதமருள் பரமவா ரியாவிழுவு
பக்குவ முளேனையுந்
திரமாகு மன்னிலையி னாடேறு மிருந்திடச்
சிற்றறி வகற்றியாளுந்
தேவர்பர வுங்கோவ லாறுமுக மெஞ்ஞான
தேசிகம காதேவனே

## முடிவு

சற்பத்தி பதிந்த காலைத்
தகும்பத்தத் தலம டைந்து
முற்பகர் தரையா மங்க
மெய்யதாங் கிரியை யாகித்

தற்பரா சார லிங்கந்
தரித்துநா சீனி வந்த
சிற்பரா னந்த கந்தத்
தேர்ந்ததிற் களிக்கு மென்றும் (9)

குறிப்புரை

இச்சுவடியில் முதல் ஐந்து ஏடுகளில் **ஆறு பாடல்கள்** முழுமையாக உள்ளன. ஏழாவது பாடல் குறையாக உள்ளது. ஆறாவது ஏடு முதல் மீண்டும் 1, 2, என ஏட்டெண்கள் தொடங்குகின்றன. அதில் பாடலும் 1, 2, என்று தொடங்கி 100 வரை முடிகிறது. இவ்விரண்டு நூல்களும் ஞானாச்சாரியர் தோத்திரமாகவே அமைந்துள் ளன. இறுதி 3 ஏடுகளில் சகச நிட்டை என்னும் நூலின் முதல் 9 பாடல்கள் உள்ளன. 10- ஆவது பாடல் குறையாக உள்ளது. இதன் 9-ஆவது பாடலே முடிவுப் பாடலாக மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

## 741. திருப்பள்ளியெழுச்சி

**அ.** *519:807;* **ஆ.** 2ஆ - 4 ஏடுகள்; **இ.** 15 x 3.4 செ.மீ.; **ஈ.** *11 - 12* வரிகள்; **உ.** நன்று; ஓரிரு துளைகள் உள்ளன; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்து பூங்குழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத்தே மக்கருண மலரும்
எழிற்கை கண்டுநின் திருவடி தொழுகொஞ்
சேற்றிதடக மலங்கண் மலருந் தண்வயல்
சூழ்திருப் பெருந்துறை உரைசிவபெரு மானே
மேற்றுயர் கொடியுடை யாயென் னுடைய
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே (1)

முடிவு

புவனியிற் போய்ப்பிற வாமை யின்னாம்
போக்குகின் றோமே யிந்தப் பூமி

சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலா
மவன்விருப் பெய்தவு மலர்வனாசைப் படவு
நின்னலர்ந்த மெய்க்கரு ணையும் நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லா
யாரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே (10)

திருப்பள்ளியெழுச்சி முற்றும்

குறிப்புரை

**1 - 10 பாடல்கள்**. திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் துயில் எழுப்புதற்காகப் பாடப்பட்ட பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## 742. திருவவதார திருவருள் விளக்கத் தோத்திரம்

**அ**. ***85:16;*** **ஆ**. *1 - 10* ஏடுகள்; **இ**. 23.4 x 3 செ.மீ.; **ஈ**. 6 - 8 வரிகள்; **உ**. நன்று; **ஊ**. மிகக்கடினம்; **எ**. முழுமை; **ஏ**. இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

திருநா வுக்கரை யர்முத லுரைகோ வற்குயர் கடவுள்
பெரியா னைக்கண பதியின் இருதா ளைப்பணிகுவனே
கூரரி யசுரர் முனிகளும் பெரிதெ னுமுயர்கதியினைத்
தாரோ மெனவரு ளுருவமா மாறு முகனடி பணிகுவனே.

முடிவு

ஒருமொழியுப தேசத்தை யிக்காலம் விளங்கு தற்கோ நமசிவாயன்
றிருவுளமக் காலத்தி னேமித்துத் திருவரு ளிருந்ததி னாலே
இருளிவனை யொழித்த தவத்தி லோருருவ மெடுத்தன் பர்களிருனை
யொருவசனத் தாலொழித்திடுங் குரவ னுமையதா ளுளத்துளும்
வைப்பாம்

ஆகத் துதிப்பாடல் *21*. திருவவதார மாதியான திருவருள் விளக்கத் தோத்திரம். சம்பூர்ணம்.

**குறிப்புரை: திருவவதார மாதிரியான திருவருள் விளக்கத் தோத்திரம்**

முதல் பாடல் நீங்கலாக ஒன்று முதல் 17 பாடல்களுக்கு எண்கள் தரப்பட்டுள்ளன. 18ஆவது பாடலுக்கு எண் இல்லை. இப்பாடல் முடிந்தவுடன் ஆகத் துதிப்பாடல் 21 என்று இருப்பினும் இதில் 18 பாடல்களே உள்ளன. திருக்கோவலூர் வீரட்டேசரின் அனுக்கிரகத்தை, தோற்றப் பொலிவை, புகழினை, போற்றியும் ஏற்றியும் இந்நூல் அமைகிறது. இறைவனது வீரச் செயல்கள், அவன் பெரியாம்பிகையின் இடப்பாகம் அமர்ந்த கோலம், மகா குருசுவாமி ஆறுமுக தேசிகருடைய பெருமைகள் முதலான வற்றைக் கொண்ட நூலாக இது அமைகிறது.

## 743. திருவொற்றியூர் சாமி பேரில் தோத்திரம்

**அ.** ***23:43;*** **ஆ.** *1 - 19* ஏடுகள்; **இ.** 21.5 x 3 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** ஓரப்பகுதிகள் தேய்ந்தும் சில ஏடுகள் ஒடிந்தும், துளைகள் பெற்றும் உள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

பிறவிகள் ஏதும் பிறந்தயரும் ஒருகால்முன்
பிறவிகட் செயுமறத்தாற்
பெருமைமிகு பருவமொன் றுறுமுயிர கன்றுகதி
பெறுமீசன் அருளால்அவை
உறுவதெத னால்எனின் நானென்னிருள் கெடின்அவை
யொழிதரும் மகாதவத்தால்
ஒப்பிலாத் தவமேத்து வேன்நாம மேயதுவோ
தொணாநலத் தொன்றையும் (12)

முடிவு

யொருசிற் சபாவிறைவர் பெயர்பெற்ற மாமுனிவர்
உரையொப் பிலாத துதியின்
உணர்வுற்ற சீதநிலை பிரிவுற் றிலாதடி
யருள்முற்ற மாகுரவனே

திருவொற்றி யூரிறைவ! திருவொற்றி யூரிறைவ
திருவொற்றி யூரிறைவனே
(21)

முற்றும்

குறிப்புரை

**12 முதல் 21 முடிய உள்ள பாடல்களே உள்ளன.** *12 சீர் ஆசிரிய விருத்தம். திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள இறைவனைப் போற்றியும் ஏற்றியும் துதிக்கிறது. இறைவனது திருஉருவமும், திருப்பெயர்களும் சிறப்பித்துக் கூறப்பட்டு, அவற்றை அறிந்தவர்க்குரிய பயனும் கூறப்படுகிறது. பாடல்கள் 'திருவொற்றியூர் இறைவனே என்று முடியும் மகுட அடியினைப் பெற்றுள்ளன. நூல் இறுதியில் 'இப்படி அம்பலவாண சுவாமிகள் செய்த தோத்திரம்' என்ற தொடர் காணப்படுவதால் நூலின் ஆசிரியர் இவராக இருக்க வாய்ப்புண்டு.*

## 744. துதிப்பாடல்

**அ.** ***243:459;*** **ஆ.** *2 - 12 ஏடுகள்;* **இ.** 14.5 x 2.5 செ.மீ.; **ஈ.** 5 வரிகள் **உ.** நல்லநிலை; **ஊ.** தெளிவு; **எ.** குறை; **ஏ.** *அச்சாகாதது.*

தொடக்கம்

அண்டம் புவனம் அனைத்தி னுக்கும்
ஆதிமறை னான்கத் தனைக்குந்
தண்டம் பெரிய மேரு வுக்குந்
தரணியு முலகு மீரே ழிணிக்கும்
பிண்டம் பலவாம் உயிர்க ளுக்கும்
வேறா நின்ற பெருஞ்சோதி
கண்டங் கறுத்த கரியவனே
காலால் நின்ற காரணமே (3)

முடிவு

அக்கினியே அகாரமா யமர்ந்து நிற்கும்
ஆகியதொரு காரமே கதிரோ னாகும்
மிக்கினிய மகாரமே சேர்ம னாகும்
மேனியே பஞ்சாட்சர மாய்மேவி நிற்கும்

மதிக்கினிய திசையெட்டும் எழுத்தஞ் சாருள்
திருமாலின் வடிவுதன்னைத் தெளிந்து பார்க்கின்
அக்கினியே அகாரமுதல் மந்திரங்க ளெல்லாம்
அரியுடைய பெருமையென்றே யறிந்து னோக்கே (21)

குறிப்புரை

***3 - 21 எண்சீர் விருத்தப் பாக்கள்.*** *22 ஆவது பாடலில் ஒருசில சீர்கள் குறையாக உள்ளன. மூன்று முதல் பதினேழு வரை இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் சிவன், திருமால் ஆகியோரைப் பற்றிய துதிப்பாடல்களாக அமைகின்றன. 12 ஆவது ஏட்டில் உச்சிதை பாட்டுக்கு மந்திரம், அனல்வாங்க மந்திரம் என்ற தலைப்புகளில் செய்திகள் உள்ளன.*

## 745. நகரத்தார் பேரில் திருமுக விலாசம்

**அ.** ***271:493;*** **ஆ.** *1 - 14 ஏடுகள்;* **இ.** 15.5 x 4 *செ.மீ;* **ஈ.** *13 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சாகாதது.*

தொடக்கம்

காப்புச் செய்யுள்

......
கங்கைமதி தரித்தகண் ணுதலார் சூரனுக்கு
சங்கையில் லாவாழ்வு தனைக்கொடுக்க - அங்கவனும்
தேவாதிக ளுக்கிடுக்கஞ் செய்ததினால் - இந்திரன்பால்
தேவாதிகள் பலருஞ்சென் றடர்ந்து- பூவானி
வேளை அரனிடத்தில் மிஞ்சசூரர் தன்னிடுக்கம்
தாளைநின்று வாய்புதைத்துச் சாத்துமென்றார்....

முடிவு

திஷ்டமுட னேவணிகர் செய்யுங்கலி யாணமதில்
கட்டளையாய் ஓர்பணமுங் கண்டெழுதி - இஷ்டமுடன்
சாதனமுந் தந்தாரென் சஞ்சலமெல் லாந்தீர்த்தார்
மாதவனாக யென்னை வாழ்வித்தார் - ஆதலினால்

துங்கமலை யான்வாழி துய்யதமி ழோர்வாழி
எங்கும்படியா லிறைவாழி - மங்களமாய்
வாழுங் குபேரர் மகராசர் தென்னிளைசை
யேழும் வாழி யெனவே.

திருச்சிற்றம்பலம்
*திருமுக விலாசம் முற்றும்*

குறிப்புரை

கலிவெண்பாப் பாடல்களால் ஆன இந்நூல் நாட்டுக் கோட்டைச் செட்டியாரின் புகழ் பாடுவதாக அமைகிறது.

## 746. நரசிங்க துதி

**அ.** ***76:168;*** **ஆ.** *126 - 127* ஏடுகள்; **இ.** 17 x 2.5 செ.மீ.; **ஈ.** *8 - 10* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

பரசிவ சங்கர புனித
சடாதர பழுதறு செய்கையமுப்
புரவர்வட சிலை யாள
களிற்றுரி புலியதள புனையமலர்
பிரம கபால வுயிர்க்குயி
ராகிய பெரும்ம கேச வுருத்
திரசா பித்துரு முதல்வ
சிதம்பர தினகாநீ சரணம் (1)

முடிவு

அறமுத லுதவிய தேசிக நாத அகத்திய வீரதார
மறைமுடி வினிலுறு பொருளது வாகி யிருந்தருள் வாதகுணா
கறைமலி கண்ட மலங்க ளகத்திய காரண காரியையா
பிறையணி மவுலிய நடநவில் நொடியவ பெரியவனே சரணம் (10)

குறிப்புரை: நரசிங்கயத்துதி

**1 - 10 பாடல்கள்.** பத்தாவது பாடல் நூல் முடிந்தபின் மீண்டும் தரப்பட்டுள்ளது. பாடல் எண் ஒன்பது எனக் குறிக்கப்பட்டுள்ளது.

## 747. நிட்கள நாம தோத்திரம்

**அ. *32:56*; ஆ.** *1 - 2 ஏடுகள்;* **இ.** 25 x 3 *செ.மீ.;* **ஈ.** *8 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *ஓரளவு தெளிவு;* **எ.** *முழுமை;* **ஏ.** *இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.*

தொடக்கம்

சீர்தரு மிவ்வுல கெடுத்துமா யல்லா யகலாத .....
யார்தரும் உள்ளறி வாயிலது உண்டென ஒப்பு உயர்வோ
தோருவமை யிலாதார் தருமின்ப அதீதவெலா முடையர்
வதிதூரமதா யண்ணியதாய்
சார்தரு மத்துவிதா வோமர்கா சாம்ப சிவாய னமோ நமவே.

முடிவு

நித்திய நிறைஞ்சன நின்மல நிற்குண
நிற்மோகா தீத சத்துச்
சித்தாதி முன்னோதும் இலக்கண தற்பரமே
அருண்மேனி கொடுசிற்றறி வாலுழல்
பித்தனை நன்னெறி சேரவே
யாண்டருள் செய்தினிய
முத்தி யளித்தருள் கோவலி னாறுமுக
சிவஞான நமோநமவே (11)

குறிப்புரை

**1 - 11 பாடல்கள்.** இந்நூல் திருக்கோவலூர் ஆறுமுக தேசிகன் மீது பாடப்பட்டது. இந்நூலை அடுத்து முதல்வன் முறையீடு எனும் தலைப்பிலமைந்த மூன்று ஏடுகளின் வலது பக்க மேற்பகுதிகள் உடைந்துள்ளன.

## 748. பார்வதியம்மன் பேரில் தோத்திரம்

**அ. *74:147*; ஆ.** *25, 27, 30, 31 ஆகிய 4 ஏடுகள்;* **இ.** 22.5 x 2 *செ.மீ.;* **ஈ.** *4 வரிகள்;* **உ.** *இறுதி ஏடு மட்டும் உடைந்துள்ளது;* **ஊ.** *நன்று;* **எ.** *குறை;* **ஏ.** *அச்சாகவில்லை.*

தொடக்கம்

பருதி கிரணம் பொன்மணி தேனிந்த மலர்மணம்
பகறரு விநிற மென்னவே

பரசிவஞ் சத்தியும் மனமிலுரை துவித மாய்
பனு மறைக ளாகம மெல்லாம்
பெரியரோது கையும் மணியொன்றி னுருவம் நிறம்
பிரகாச மின்சொல் பலவும்
பேசுவதலா துமணி யொன்றதே யாகையாற்
பிரிவில் சிவசத்தி யெனவே
யிருவிதப் பெயருயிர்கள் கதியடைய வெண்ணியே
யீரிரண்டொருசத்தியா
யிருபதைந் தாயபின் பலவாகி
யறுகோடி யெண்ணளவில்
... சத்தி யாகுஞ்
சிரம தாய்பொரு ளான சிற்பரா
சத்தியே சிவஞானி காணு மனையே
மென்மல்லி கார்சுன னாககன் னியமில்
மனமாற் தேவி பார்வதி யம்மனே (1)

முடிவு

அகர வுயிர்போ லெவையு மாகியல்
வாகியல் தண்ணலிணை யடிகள் வாழி
அபினமா மனையடி கள்வாழி கணபதி
யடிக ளாறுமுக ரடிகள் வாழி
தகமை நந்தீச ரிணையடி வாழி
தண்டீ சர்தா ளிணைகளும் வாழியே
பகரின் மெய்ப்பொருள் நாயனா ரடிகள் வாழி
மெய்பத்தி யோரடிகள் வாழி
பழமறைக ளாகம மோது மந்தணர் வாழி
பகரிசை வழியாவும் வாழி
செகமுளரு னடிமையென பூதிமுதல் வாழி
யுன்றிரு நகருள் ளோர்கள் வாழி
தென் பரு .... வர் வாழி
யின்பமுற்ற மாடிகடெவ ரும்வாழி வாழி

குறிப்புரை

இந்நூலில் முதல் பாடல் உள்ளது. இடையே பாடல்கள் இல்லை. இறுதிப் பாடலான 11 ஆம் பாடல் மட்டும் உள்ளது. வாழ்த்துப் டாடல் ஏடு முறிந்துள்ளதால்

முழுமையாக இல்லை. இதனையடுத்து 43, 51, 56 ஆகிய மூன்று ஏடுகள் உள்ளன. இவை வீரட்டேசுர ஞான தேசிகன் தோத்திரம், தயாநிதி தோத்திரம் என்ற நூல்களைச் சேர்ந்தவையாகும்.

## 749. பார்வதியம்மன் பேரில் தோத்திரம்

**அ**. ***521: 812;*** **ஆ**. *21 - 26* ஏடுகள்; **இ**. *23. 5* x *3* செ.மீ.; **ஈ**. *7 - 8* வரிகள்; **உ**. நன்று; **ஊ**. மிகக் கடினம்; **எ**. முழுமை; **ஏ**. அச்சாகவில்லை.

தொடக்கம், முடிவு 74:147 போன்றது.

குறிப்புரை

பார்வதி அம்மனைப் போற்றிப் புகழ்ந்து ஏற்றிப் பாடும் இந்நூலில் ஒன்று முதல் *11* பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதனையடுத்து வாழ்த்துப் பாடல் ஒன்று அமைகிறது. இதனை அடுத்துள்ள *26, 27, 28* என்ற எண்ணிட்ட மூன்று ஏடுகளில் காப்புப் பாடல்களும், இறைத் தோத்திரப் பாடல்களும், வாழ்த்துப் பாடலும் இடம் பெற்றுள்ளன. அகராதி விவேக விளக்கத்தில் காப்புப் பாடலாய் அமைந்த 'தூக்கம் போகணுந் தூய மொழிச்சொல்' என்ற பாடல் மீண்டும் இதில் இடம் பெற்றுள்ளது. அடுத்து 'அத்தி முகனடி நித்த நினைபவர்' என்ற பாடல் இடம் பெற்றுள்ளது. அடுத்து குருவணக்கமாக மூன்று பாடல்களும், ஆறுமுக தேவன் துதியாக இரண்டு பாடல்களும் வாழ்த்தாக ஒரு பாடலும் இடம் பெற்றுள்ளன.

## 750. பிரம்மதேவன் துதி

**அ**. ***76:167;*** **ஆ**. *124 - 125* ஏடுகள்; **இ**. *17*x 2.5செ.மீ.; **ஈ**. *8-10* வரிகள்; **உ**. நன்று; **ஊ**. தெளிவு; **எ**. முழுமை; **ஏ**. அச்சாகவில்லை.

தொடக்கம்

பொரும ரெதிர வருகா லன்விழப்
பொருதா ளிறைவா சரணஞ் சரணந்
திருமா மறையிற் பயனான
வுருத்திர மெய்யுருவா சரணஞ் சரண

மருளான முழுதும் பயில்வாய் சரண
மானே சிவசங் கரனே சரணங்
கருணா லையனே சரணஞ் சரணம் (1)

முடிவு

துன்றுங் கருணைக் கடலே சரணஞ்
சுருதிப் பொருளே சரணம் புவனம்
பொன்னுஞ் சுடலைக் களமீதில் நடம்
புரியுங் கரியீ ருரியாய் சரண
மொன்றும் பலவுந் திகழ்பே ருருவா
வுலகங்கள்அளித் தருள்வாய் சரண
மென்றின் னன்பன் னிறைமுன் பணிவா
ரெழுவார் தொழுவா ரிவைகூ றினரால் (8)

தேவர்களுடன் வந்து பிரம்மா வானவர் கயிலாயத்தில் சன்னதியில் நின்று கூறிய தோத்திரம் அஷ்டகம் முற்றும்.

குறிப்புரை: பிரம்மதேவன் ஸத்துதி

**1-8 பாடல்கள்.** பிரம்ம தேவர் கயிலாயச் சன்னதியில் நின்று கூறிய அஷ்டகத்தோத்திரம் நூலில் இடம் பெறுகிறது.

## 751. பூரண கால தினம் - தோத்திரம்

**அ. 362: 598; ஆ.** 1-9 ஏடுகள்; **இ.** 27 x 2.8செ.மீ.; **ஈ.** 6-7 வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; ஒரு சில ஏடுகளில் சிதைவு; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

தேர்கொண்ட கோவல்வீ ரட்டரு ளாறுமுக
தேவரா னந்தவாண்டிற்
திருமேனி கொண்டுதொண் ணூற்றே மிகுந்தமேற்
சீவர்கட் குபகாரமாய்ப்
பேர்கொண்ட தம்மையா வாகனஞ் செய்திடப்
பின்னறுபது மூவருடம்
பிரபலம தாய்ஞான விறையாகி யாவரும்
பேணவாழ்ந் தினிதிருந்தே

யார்கொண்ட சாலிவா கனமாயி ரத்தெழுநூ
றன்பதொரு நான்குகலிநா
லாயிரத் தொளாயிரமுப் பதுமூன்று நந்தனககார்த்
திகைமூணா மங்கள வார
மேர்கொ ளசுபதி துவாதசி வரியோகாபால்
கரணமியன் மிதுனராசி
இணையில்சிவ சண்முக சிவவாக்கி யான தேசிதரி
லிங்கமுள் கலந்த தினமே (1)

முடிவு

முன்னே பரிபூ ரணகா
முடிவை யொருபா வினிலெழுதி
முத்திக் குரிய வடியார்க்கு
மொழிய வேண்டு வனமொழிந்து
பின்னோர் நினைவு மில்லாமற்
பேரா னந்த வருட்குருதாள்
பிரியா துயர்சாட் சாற்கார
பிரம சொரூப மாயிருக்கும்
பொன்னா ருருவை யானந்தப்
பொருப்பை வெறிப்பிலா சுவையைப்
பொருவி லரவக் காட்சியினைப்
பொருத்திற் காண்க கிடைத்திலனென்

றென்னே ரமுஞ்சிந்தையிற் குடியாய்
மென் சிந்தை யிலிதுவே
யிருக்கவைத் தனையே யெழிலார்
சிவசண்முக குருவே
யினியான்காண்ப தென்றுனையே (12)

குறிப்புரை

*சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் சிவலிங்கத்தில் ஐக்கியமாகிய ஆண்டாகிய சாலிவாகன சகம் 1754, கலியாண்டு 4933, நந்தன, கார்த்திகை, மூன்றாம் நாள் மங்கள வாரத்தில் அவரைப்பற்றிய தோத்திரப் பாடலாகப் பாடப்பட்ட 12 பாக்களை யுடையது இந்நூல். அவரது பெருமைகளை எடுத்தோதுகின்றது. மேலும் இத்தகு*

அருமை மிக்கவரை இழந்து விட்டோமே என்ற துக்க உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது. இங்ஙனம் நூல் பக்தி உணர்வையும், இரக்க உணர்வையும், துக்க உணர்வையும் ஒருங்கே வெளிப்படுத்தி நிற்கின்றது.

## 752. மகாலிங்கேஸ்வர சுவாமி தோத்திரம்

**அ.** ***103:207;*** **ஆ.** *1-14* ஏடுகள்; **இ.** 23 x 3 செ.மீ.; **ஈ.** 7 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

திருநாவுக் கரையர்முதல் உரைகோவற் குயர்கடவுள்
பெரியானைக் கணபதியின் இருதாளைப் பணிகுவனே
.... ..... ...... ......
தவமுய ரெவையும் கனந்தோறும் செய்து
வமையில் அடியர் குளங்கண் டிரங்குச்
சிவமருள் குருவாய்ச் சிவகதி கொடுக்கும்

சிவகுரு லீலைஎனச் செப்புவதே
ஆயிரநான் கெழுநூற்றோ டெழுவது நான்கு
தாயகலி யானந்த வாண்டருனை அருனணத்
தேயுமொளிர் வாதினம் கோவலில்வாழ் ஆறுமுக
தேசிகனார் மானிடர்போல் வந்த தினமாம்.

முடிவு

அறிவே திருக்கோவ லம்பதியா னந்தச்சே
வுன்திரு உருவாய் தேரும்
அறிவையருளர் அனுபவச் சொருபா மாறுமுக
தேசிகனே யானுனடிமையை விடாதாள்.

குறிப்புரை: மகாலிங்கேஸ்வர ஸ்வாமித் தோத்திரம்

**1-50 பாடல்கள்.** சிவகுருலீலை என்னும் நூலை (*103: 26*) அடுத்து இது அமைகிறது. அந்நூலில் வரும் காப்புப்பாடலே இதிலும் இடம் பெற்றுள்ளது. இச்சுவடி, ஆறுமுக மெய்ஞானச் சிவாச்சாரிய சுவாமிகளின் திரு அவதாரத் திருநாள் தொடங்கி மகாலிங்கேஸ்வரர் என்னும்

இறைவனின் திருவடிகளைப் போற்றிச் செய்வதாக அமைகிறது. அடுத்துள்ள 1, 2 என்ற எண்ணிட்ட ஏடுகளில், 'ஆறாடிய வேணியனே சரணம்' **அறவாடிய அடியார் தலைமாலை யனே சரணம், நிகராறு மிலாதவனே சரணம்'** எனப் பாடல்கள் வருகின்றன. அடுத்துள்ள 136 என்ற ஏட்டில் இறைவாழ்த்து, எண்ணில்லா ஓர் ஏட்டில் இறையைப்புகழும் ஒரு 'வோல மோலம்' என முடியும் ஒரு பாடலும் உள்ளன. இறுதியில் 10 வெற்றேடுகள் காணப்படுகின்றன.

## 753. மல்லிகார்ச்சுன சுவாமி தோத்திரம்

**அ.** *521:811*; **ஆ.** *15-21* ஏடுகள்; **இ.** 234 x 3செ.மீ.; **ஈ.** 6 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** மிகக் கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

ஔவியம் - மனக்கொட்டம்

கௌவும் பசு காணம் - துனமாகிய விடையத்தைப் பற்றும்
ஞௌகிய மனம் - கெடுதல் செய்யு மனம்
பௌவறிவு - நீர்க்குமிழிக் கொப்பான விடையவறிவு
வௌவிலாதன்பு - துன்பமிலாத மெய்ப்பத்தி

முடிவு

அட்டவீ ரட்டமதி லந்நகர் சூர சங்காரஞ்
செய்கோலூ ருக்கதிப
வீரட்டர் திருவருளி னுத்தாவர் துளர்கமத்
திருபதின் மேலெட்டதாம்.
படலத்தி லோதுமெஞ் ஞானமுன் னிறைவிறனி
கேட்க மொழியுமினை
யினிட்டானு பவசாரமதை மாறுமுக
ரெனுமுனிக்கரு ளவ்வானனிட்
டையின்னிரவு பகலில் லாதவெளி
தனினின்று நில்லாம் நின்றே நிருபா
திகபமாம் வாருதி யின்மூழ் கியேநிறை
செல்வமுறும் வரைநீர்

சிட்டாய் வந்தவற் கிம்மார்க்க மருள்கேன்
திருவருண் மிகுந்தருள்
செயுந்தென் பருபத மீதிலின்ப சொரூபாய்
மருவுதிரமல் லிகார்ச்சுனனே (1)

குறிப்புரை

**2-11 பாடல்கள்.** பருபத மலை மீது குடிகொண்டுள்ள மல்லி கார்ச்சுன தெய்வத்தை வாழ்த்தி, வணங்கி, போற்றி முத்தியின்பம், ஞானம் முதலானவற்றை வேண்டுவதாய் நூல் அமைகிறது.

## 754. மாணிக்கவாசகர் தோத்திரம்

**அ.** ***582:940;*** **ஆ.** *2 ஏடுகள்;* **இ.** 15 x 4*செ.மீ.;* **ஈ.** *9-10 வரிகள்;* **உ.** *நன்று;* **ஊ.** *சற்றுக்கடினம்;* **எ.** *முழுமை;* **ஏ.** *அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்

மங்கையுமை பசுங்கொடியும் இடமுங் கண்டேன்
மான்மழுவுரு சூலமுமே வலமுங் கண்டேன்
பங்கையவென் றலைகண்டேன் புலியூர் கண்டேன்
பார்புலித்தோ லுடைகண்டேன் பண்புங் கண்டேன்
செங்கமலத் தாள்கண்டேன் நடனங் கண்டேன்
திருச்சித்தம் பலங்கண்டேன் சிவனைக் கண்டேன்
கொங்கவரும் பசுங்கொன்றைச் சடையுங் கண்டேன்
கோவில்சிதம் பரங்கண்டு கும்பிட் டேனே (1)

முடிவு

நச்சரவைக் கச்சைகட்டி நடிக்கக் கண்டேன்
நான்மறையைப் பரியாக்கி நடத்தக் கண்டேன்
பச்சையிடப் பாகத்தி லிருக்கக் கண்டேன்
பாதமது வெளியிலே பதியக் கண்டேன்
இச்சையுடன் புலியூரி லிருக்கக் கண்டேன்
யெந்ததேசம் அன்பத்தாறும் யெழிலுங் கண்டேன்
கொச்சையிலே வரும்புலவர் பாட்டுங் கேட்டுக்
குழைக்காட்டும் யிடைகண்டு கும்பிட் டேனே (10)

*திருச்சிற்றம்பலந்துணை*

குறிப்புரை

**1-10 எண்சீர் விருத்தப்பாக்கள்.** மாணிக்கவாசகர் என்ற பெயர் கொண்ட ஒருவர் இறைவன் சிவபெருமான் மீது பாடிய பதிகமாக இது அமைகிறது. சிவனது தோற்றப் பொலிவு, உமையை இடப்பாகத்தில் வைத்த செய்தி, சிதம்பரத்தில் நடனமாடும் சிவனைக் கண்டு தொழுத செய்தி சிதம்பரத்தின் சிறப்பு, தாண்டவச்சிறப்பு, அடியவர்க்கருளும் தன்மை முதலான செய்திகள் இடம் பெறுகின்றன. முதலிலும் இறுதியிலும் இரண்டு வெற்றேடுகள் உள்ளன.

## 755. மூட்டைப் பூச்சிக் கீர்த்தனை

**அ.** ***587:945;*** **ஆ.** *1-4* ஏடுகள்; **இ.** 38.5 x 2.5செ.மீ.; **ஈ.** *4* வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** நன்று; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

தரு - தோடிராகம்

வாருமையா யிந்தமூட்டுப் பூச்சிகள் - தன்னை
வகையறச் செய்யுமையா
ஆறுமுகனே மிம்மூட்டுப் பூச்சிகள் - செய்யுமா
கார்த்தியங் கேளுமையா - சொலவே
ஏராளமா கத்தன்சே னைகளோட
யிறங்கி வருகுதையா - வந்து
பூராயமா கவேதேகத்தி லெங்கும்
புகுந்து கடிக்குதையா யிதோ = வாரு

முடிவு

அய்யனே மெய்யனே பன்னிரு - கையனே
அப்பனே நின்சரணம்
புகழாதியே சோதியே தாந்தனே
பூதியணிந் தவனே சரணம் - சொலும்
அய்யெட்டு மையெட்டு மைந்தும் - ஈரைந்தோன்
அறிந்தவனே சரணம்
மேகார அகார வுகார வகாரசகார
மறிந்தவனே சரணம்

வாருமையா யிந்தமூட்டுப் பூச்சிகள் - தன்னை
வகையறச் செய்யுமையா

ஸ்ரீராமசெயம். குமரகுருபரன் துணையாக வேண்டியது. வேலும் மயிலும் துணையாக வேண்டிய்து.

## பிற்குறிப்பு

**யெதப்பட்டுலிருக்கும்** தாண்டவராய சுவாமிக்கருளிச் செய்தது. சுக்குல வருசத்துக்குச் செல்லும் பிரமாதூத வருசம் தையி மாசம், 5 தேதி சோம வாரம், நாள் காலமே 3¾ நாழி துவாதேசி திதி, உத்திரட்டாதி நட்சத்திரம், மகரலக்கனம், சித்தியோகம் யிந்த சோபன முகூர்த்தத்திலே சிவசுப்பிரமணி யருடைய அஷ்டகியானம் - கந்தருலா, மூட்டுப்பூச்சிப் பாட்டு எழுதி நிறைந்தது. கந்தசுவாமி பிள்ளை கையெழுத்து சிவமயம்.

## குறிப்புரை: மூட்டுப்பூச்சி கீர்த்தனை நலம்

பாடல்களுக்கு எண்கள் இல்லை. மூட்டைப் பூச்சிகள் கடித்துத் துன்புறுத்துகின்றன. எனவே முருகா நீ வந்து இத்துன்பத்திலிருந்து என்னைக் காத்தருள வேண்டும் என்று கூறுவதாகப் பாடல்கள் அமைகின்றன. தோற்றப் பொலிவு, மந்திர, தந்திரம், பல நாமங்கள், அசுரர் குலத்தை அழித்தது முதலாக முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடுவதான பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. பிற்குறிப்பில் அஷ்டகியானம், கந்தருலா ஆகிய நூல்களின் பெயர்கள் வருவதால் இவையிரண்டும் எழுதி முடித்தபின் இம் மூன்றாவது நூல் எழுதப் பெற்றிருக்க வேண்டும். ஆயின் சுவடிக்கட்டில் இந்த ஒரு நூல் மட்டுமே உள்ளது. நூல் முடிந்தபின் ஏட்டெண் இல்லா ஓர் ஏட்டில் **பிடிப்புகளுக்கு மருந்து செய்கிறது** என்ற தலைப்பிலான மருத்துவச் செய்தி இடம் பெற்றுள்ளது. இறுதியில் நான்கு வெற்றேடுகள் உள்ளன.

# 3. நாடகம்

## 756. அஷ்டக்கியானம்

(வள்ளி நாயகியாள் கதை)

அ. *463:710;* ஆ. *47 - 149(103)* ஏடுகள்; இ. 40 x 3செ.மீ.; ஈ. 4-5 வரிகள்; உ. நன்று; ஊ. தெளிவு; எ. முழுமை; ஏ. அச்சாகவில்லை.

தொடக்கம்;

அம்மானா ராடுவோம் அரிவையே வாராய்
ஆறுமுகன் பாதத்தை நாடியே நேராய்
செம்மையுள னாறுமுகத் தேவனைக் கூறாய்
அம்மானா ராடுங்கூர் அதிசியம் பாராய்
கொம்பைப் பயோதரங் குலுங்குது நேராய்
கோலமயில் மீதேறுங் குமரனை நிதமுஞ்
செம்மையுட னேதியானஞ் செய்வோ மிப்போது
சேயிழை யேஅருள் செய்வார் தப்பாது

முடிவு

மங்களம் மங்களம் சதாசுப மங்களம் மங்களம்
பொன்னானீ என்தேவர் புகழாறு முகவர்க்கு
மண்ணு பொன்யுல கெய்தும் மகாதேவ ரானவர்க்கும்
என்னையாண் டருள்முரு கேசப்பிர காசருக்கு
மண்ணை அறிநாமகள் அழகுதெய் வானைக்கும்
மங்களம் மங்களம் சதாசுப மங்களம் மங்களம்.

(ஏடு. 148)

முற்றும். பாலசுப்பிரமணியர் அஷ்டக்கியானம் எழுதி முடிந்தது. சிவசுப்பிரமணியர் வந்து அசுரர்களைச் செயித்தது, சூர சம்ஹாரம் பண்ணி அதன் பிறகு தெய்வலோகத்திலே இருக்கப்பட்ட தேவேந்திரனுடைய பெண் தெய்வா னையைக் கல்யாணம் பண்ணின கந்தரிவர் என அறியவும். இதற்குப் பின்னாலே வருகுது.

## பிற்குறிப்பு

நாகப் பிள்ளை குமாரன் சித்தரி புத்திரனாகிய கந்தசாமி பிள்ளை எழுதி வாசிக்கின்ற பாலசுப்பிரமணியர் அஷ்டக்கியானம் என்று அறிய வேண்டியது. எடுத்தவர்கள் பார்த்துப் படித்து உடனே குடுத்துவிட வேண்டியது.

## குறிப்புரை: பாலசுப்பிரமணியர் அஷ்ட்டக்கியானம்

இச் சுவடியின் தொடக்க ஏடுகள் காணப்பெறாததால் நூலின் தலைப்பை அறிய முடியவில்லை. எனவே, ''கந்தநற் குழலிவள்ளி நாயகியாள் கதைதனை யட்சகானமாய் பைந்தமி ழதனாற் சார்தனில் விளங்கப் பாங்குடனே'' என்னும் அடிகளைக் கொண்டு இந்நூலுக்கு **வள்ளிநாயகி யாள் கதை** எனப் பெயர் தரப்பட்டுள்ளது. மேலும் இக்குறிப்பு கதை, யட்சகான நாடக வடிவினது என்பதையும் காட்டுகின்றது. தொடக்கம் இல்லையெனினும் நூற் பகுதிகள் முழுமை பெற்றுப் பதிப்பிக்கும் தகுதியை உடையதாகவே இருக்கின்றன. நாரதர் வள்ளியின் அழகை முருகனிடம் கூற முருகர் வளையல்காரச் செட்டியாக வருவது, பின் வேடுவனாக வந்து தன் காதலைத் தெரிவிப்பது, வள்ளி முருகனை விரட்டுவதோடு அவனது ஊர், பேர் முதலானவற்றை வினவுவது, சுந்தரவல்லி முருகனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றதற்கு முருகன் மறுமொழி கூறுவது, வள்ளியை மணம் புரிவதால் தெய்வானை கோபம் கொள்வது, ஸ்ரீ பாலகிருஷ்ணர் ருக்மணி, சத்தியபாமையோடு இருப்பது முதலானவை நூற்கண் இடம் பெறுகின்றன. வெண்பா, விருத்தம், சம்பை, திரிபுடை, அஷ்டதாளம், கொச்சகக் கலிப்பா, ஏகதாளம், வசனம் ஆகியன கலந்துள்ளன. முதலிலும், இடையிலும் ஆங்காங்கு அர்த்தச்சந்திரிகை எனும் சொல் இடம் பெற்று, நூல் முடிவிலும் அர்த்தசந்திரிகைக்குரிய மங்களப் பாடல் (ஏடு. 148) அமைகிறது. 150 ஆவது ஏட்டில் 'கந்தர் உலா' எனும் தனிநூல் தொடங்குகிறது. நூலின் முடிவிலுள்ள குறிப்பு இந்நூலினை அடுத்துக் கந்தர் உலா வருகிறது என்பதைக் குறிக்கிறது. ஏட்டெண் இல்லா இறுதிச் சட்ட ஏட்டில் பிற்குறிப்பு இடம் பெறுகிறது. 431:677 என்ற எண்ணில் இது போன்ற நூல் பாடல் வடிவில் மட்டுமுள்ளது.

## 757. கயிலாச வல்லி கதை

**அ.** ***308:533;*** **ஆ.** *3,87,88, 100, 147, 149* ஆகிய பக்க எண்களை உடைய ஆறு ஏடுகள்; **இ.** 29. x 3.5செ.மீ.; **ஈ.** *8* வரிகள். **உ.** நன்று. **ஊ.** கடினம்; **எ.** குறை. **ஏ.** அச்சாக வில்லை.

### தொடக்கம்

நாட்டில் மேன்மை கயிலாசவல்லி கதையை
நன்றாய் அறிவான நாடகமாய் வழங்குவதற்கு
அன்புடைய பெரியோர்கள் பாதம் போற்றி
சிறியோன் செய்புன் சொல்லதைப் பழிப்பிகட்சி
செய்யாமல் பிழைசெய்த சிசுபோல் எண்ணிப்
பெரியோர்கள் மனம்பொறுத்துக் கருணைகூர்ந்து
பேணுவீ ரென்னாளும் பேணுவீரே (ஏடு. 3)

### முடிவு

சீர்பெருகு மாதுவளர் செல்வனே செல்வமிகு
பார்புகழுந் துங்காணப் பாண்டியா
நேருடனே ழையேனான் பட்டயிடுக்கந் துயரமெல்லாம்
வழியுடனே சொல்வேன் மகிழ்வாய்
தெளிவான பஞ்சமா சண்டாளப் பாதகி யாளான
தொரு இன்சொல் கயிலாசவல்லி யென்னிடத்தில்
மிஞ்சு மெந்தென் சொத்தை யெல்லாம் வாரிச் சுறையாக இரைத்து
மத்துமெனை இக்கோல மாக்கி வைத்த தத்தனையும்
சொல்லுகிறேன் மீயாகான துரைகளே கேட்டருள்வீர்
செல்வமுடன் விந்தையா தேசமதில் வல்லபமாய் ஆசாரச்
சாவடியில் அதிக நவரத்தின முத்துக்காசுக்கு வித்துக் கருத்துடனே
நேசமாயிருக்கு மொருனாளில் ராசாதி ராசனே
போன மருக்கமழுமுத்து மாளிகை யொன்று
பெருக்கமாய்க் கொண்டுவா நான்கண்டு கூப்பிட்டு
நீரெவடம் என்றுவந்த செய்தியியம் **பென்றேன்** விண்டுரைப்பான்
அழகை நகராள அளகேந்திர ராசனருள் **மதலை**
நான் மாணிக்க மாவதனில் குழகமாய் **சென்று**
கயிலாசபுரி தீர் சந்திர... (ஏடு. 3)

குறிப்புரை

கயிலாசவல்லி கதை நாடக வடிவில் கூறப்பெறுகிறது.

## 758. கயிலாச வல்லி நாடகம்

**அ.** *337:569;* **ஆ.** *1-267* ஏடுகள்; **இ.** *28 x 3.5* செ.மீ.; **ஈ.** *8* வரிகள்; **உ.** நன்று; இடையே சில ஏடுகளின்றியும் சிதைந்தும் உள்ளன; **ஊ.** சுமார்; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

பூமேவு சதுமுகத்துப் புத்தேள் மேவு
புகழ்வாணி கமலபதம் போற்றி செய்து
தேமேவு குழலிகயி லாச வல்லி
செல்விகதை நாடகமாய்ச் செப்பு தற்குக்
கோமேவு மறைப்பொரு ளின் வலஞ் சிறந்த
குழல் மொழிப்பூங் கோதையருள் குமரன் முன்னோன்
கார்மேவு மூசி கவர்கனத் தோன்முக்
கட்கரிபொற் பாதமலர்க் காப்ப தாமே (1)

பழுதில்லா வியாசர் சொன்ன பாரதம் அதனை முன்னாள்
எழுதிய மேரு தன்னில் யிதம்படப் பொதித்து வைத்தோ
முழுமதி நிறைந்த கொட்டு மும்மத மொழுகு முக்கண்
வழுவையின் முகத்தோன் தொந்தி வயரனுந்தோன்றினாரே.

முடிவு

தரு

ரத்தினமுடி சூடி னாரே - புரவலர்கள்
ராசாதி ராசனுக்கு (ரத்தின முடி சூடினாரே)
பத்தி பத்தியாய்த் துலங்கும்
பல பணியும் அணிந்து
வெற்றி பெறும குடாபிசேகமுடி புனைந்து (ரத்தினமுடி சூடினாரே)
நாகசின்னம் பூரிகைகள் எக்காளங்கள்
நகர்முதல்ப் பேரிகைகள் காகளங்கள்
தானமும் பட்டமும் துந்துமியுடன்
கனக முரசார்ப் பரிக்க
சேகரமாய் மாதர்கூடிச் செயசோபனமும் பாட
ராக கீத அலங்கார நடநாடகமும் ஆட (ரத்தினமுடி சூடினாரே) (408)

மங்களம் - மங்கள மங்களமே செய மங்கள மங்களமே.
சங்கை மிகும் அழகேந்திரன் சந்திரகாச மன்னனுக்கும் மங்கை
கயிலாச வல்லி மாது மணவாளனுக்கும் மங்களம்.

குறிப்புரை

**ஒன்று முதல் 408 பாடல்களில்** இடையே சில விடுபட்டுள்ளன. சிவன் பார்வதி கதை நாடக வடிவில் உள்ளது. இறுதியில் சட்ட ஏடு ஒன்றுள்ளது.

## 759. சோம வார நாடகம் - சீமந்தினிகதை

**அ. தாள். *15:44;* ஆ.** *75 பக்கங்கள்;* **இ.** *முழுமை;* **ஈ.** *அச்சாகவில்லை.*

தொடக்கம்

திருவளர் ஆதிபர் வர்த்த தேசமா நகரில் மேவும்
பெருமைசேர் சித்திர வர்மன் பெற்ற ஸ்ரீமந்தினி மாது
உருமையாயி சோம வார முகந்த நாடகத்தைப் பாட
கருமுகில் மருகனான தொந்திக் கணபதி காப்பு தானே

முடிவு

மாது வெற்றி வடிவேலருக்கும்
மெல்லி வள்ளி தெய்வானைக்கும்
சித்தரெனும் யோகிகுரவல்
வலக்காற் செய்ய மாமுனிவர்க்கும்
சித்திரவர்ம ராசனுக்கும்
தேவியாள் கொந்தழைக்கும்
கும்பனினி சீமந்தினிக்கும்
பங்கய விலாசனுக்கும்
தஞ்சை பிரதாபனுக்குஞ்
சரபோசி மன்னரருள எழுதி முற்றிற்று.

பிற்குறிப்பு

*சர்வசித்து வருஷம் தைமாதம் 21 ந் தேதி எழுதி முடிந்தது.*

குறிப்புரை: சோமவார நாடகம் - சீமந்தனி கதை

இச்சுவடி கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 5633 என்ற எண்ணுள்ள ஓலைச் சுவடியாக உள்ளது. இதன் நிழற்படி இந்நிறுவனத்தில் தாள்சுவடியாக உள்ளது. சித்திரவர்மனின் மகள் சீமந்தினி என்பவளின் தவத்தின் சிறப்பு விளக்கமுற நூலில் பேசப்படுகின்றது. இவள் தன் தவ வலிமையால் வெற்றி பொருந்திய சங்கிராஸ்கதனை எப்படி மணந்தாள் என்பதைக் கதை விளக்குகின்றது. நாட்டுப்புற நாடக வடிவில் அமைந்த இக்கதையில் திங்கள் விரதத்தின் மகிமை, மாங்கல்யத்தின் பெருமை, பெண்ணின் மேன்மை முதலானவை பேசப்படு கின்றன.

## 760. சோழன் யட்ச கானம்

**அ. 34:58; ஆ.** *1-11* ஏடுகள்; **இ.** 22 x 2.5செ.மீ.; **ஈ.** 6 வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** இறுதி ஏடு மட்டும் முறிந்துள்ளது; **எ.** முழுமை; **ஏ.** இதுபோன்ற சுவடியின் தாள் பிரதி வேறு இடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

அஞ்சு முகத்தனை ஆனை முகத்தனை
யிந்து யிளம்பிறை போலு மிகுத்தனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

சரணம் சரணம் சுரேந்திர வந்தித சரணம்
ஹரிசதிவல்லபா சரணம்
கெசமுக சூர சங்கரா் சரணம்
விக்கின வினாயகா சரணம் சரணம்
கந்த பத்தியம்

மேதினியிற் மேல் சுபமெய்தி நீதியுள்ள சோழன்கதை
நூதனமாக ஓது(வி)னென்றுளரும்
போதக மூர்த்தி வினாய கராதரவாலே.
சிங்காரத் தமிழ் நூலை அளந்து சங்கீதத்தோடு
சோழன் கதைதானது சொல்வேன்

பங்காகி இருக்கும் அரண் செயம். கோளக்கண
நாயகர் அருளது கொண்டே.

முடிவு

சொரிசொரி எனப்புஷ்பம் சோதனையாய்ச் சொரிந்து
அரகரா எனத்தேவர் ராதிந்த மார்ப்ப
பஞ்சாட் சரத்தில் பதிந்துவாழ்ந் திருக்கும்
பஞ்சாதை தத்துவப் பராபரன் வந்தான்

வெள்ளியங்கிரியிலே வீற்றிருந்தடியார் உள்ளமதுறைந்த உருத்திரன் வந்தான் .... சிறுதொண்டன் மனஞ்சிவன் சோதிக்கவே பிள்ளை அறுத்தரும் அருள்புரிந்த ரனிப்போ வந்தான் ........ அருள் சோழராசன் கதை யஷ்சகானம் புகல பரிவெனக் குண்டாமே.

குறிப்புரை

தேரூர்ந்த மன்னன்கதை எனும் இச்சுவடி மனுநீதிச் சோழனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. பசுவினுடைய கன்றின்மீது தேரினைச் செலுத்தி மன்னன் மகன் கொன்ற தால் துயருற்ற தாய்ப்பசு வழக்குத் தொடர வேண்டும் என்பதை உணர்த்து முகத்தான் ஆராய்ச்சி மணியினை அடிக்க மன்னன் அந்நீதிக்குத் தலைவணங்கி தன்மகன் இளவரசனைத் தேர்க்காலிலிட்டுக் கொல்கிறான். அதன்பின் இறையருள் பெற்று அனைவரும் பேறுபெறுகிறார்கள். கதையட்சகான நாடக நடையில் அமைக்கப்பட்டுள்ளது.

## 761. தாள நாடகம்

**அ. *403:647;* ஆ.** *10* ஏடுகள்; **இ.** 24 x 2.5செ.மீ.; **ஈ.** *6-7* வரிகள். **உ.** நன்று. **ஊ.** தெளிவு. **எ.** குறை. **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

அஞ்சுமுக மதிகாரம் வேற தாகும்
மலரவரே யொருவரை யொன்றறிய மாட்டீர்
அஞ்சுமுகந் தொழில் வேறுநிறம் வேறானா
லரன்வடிவை யறிவதெங்ங னறிவி லாரே

அஞ்சுமுகங் கன்னியர் போற்றருள்வ தெப்போ
அன்னமும் பால்போல் முத்தியாவ தெப்போ
விஞ்சுமுகம் போர்முக மொன்றாவ தெப்போ
வீட்டின்பங் கண்டவர்கள் விளம்பி டீரே (245)

முடிவு

முப்பத்தாறு பேரிலே பன்னிருவர் மொழியில்
வாசர லோக முதல்வ ராகும்
முப்பத்தாறு பேரிலே பன்னிருவர் மொழியில்
வாசர மீப முதல்வ ராவர்
முப்பத்தாறு பேரிலே பன்னிருவர் மொழியில்
வாசர ரூப முதல்வ ராவர்
முப்பத்தாறிலே யொருவர் முற்றியைப் பெற்றால்
முறைமுறையே யாசனம் போய்முறை செய்வாரே (583)

குறிப்புரை

*80, 95, 96, 107, 131, 155, 159, 163, 184, 199* ஆகிய *10* ஏடுகளே உள்ளன. தத்துவக் கருத்துகளை நூல் இயம்புகின்றது. *80* ஆவது ஏட்டில் தொடங்கும் *244* ஆவது பாடல் தொடக்கமின்றி இருப்பதால் *245* ஆவது பாடலே தொடக்கப்பாடலாகத் தரப்பட்டிருக்கின்றது. தாள நாடகம், தவமொழிதல் என்ற உட்தலைப்புகள் காணப்படுகின்றன.

## 762. வாத்தியமரபு

**அ.** ***224:434*; ஆ.** *1-73* ஏடுகள்; **இ.** 22.5 x 3செ.மீ.; **ஈ.** *1-26* வரிகள்; **உ.** நன்று. **ஊ.** கடினம்; **எ.** முழுமையானது; **ஏ.** நிறுவன வெளியீடு *(1987)*.

தொடக்கம்

இதில் ஒன்று முதல் எழுபத்து மூன்று வரையிலும், ஒன்று முதல் இருபத்து ஆறுவரையிலும் இரண்டு பாகமாக இருந்ததை இப்போது புதிதாய்க் கீழே இலக்கமிட்டிருக்கிறது. இதிலே காப்பு உட்பட நூறு ஏடு உள்ளதில் அதில் 31 - ம் 32 - ம், 42 - ம், 57 - ம் ஏடுகள் காணாததால் வெள்ளேடு சேர்ந்திருக்கிறது.

**ஆதியரன் அம்பலத் தாடியவன் சோதியை**
**ஓதித் துரங்கமெய் ... பாதி யாவானென்று**
**தாண்டவத்தே யன்பியனா ரதன்பாணி**
**மேவி விதியுரைப்பேன் கொண்டு**

முடிவு

**வன்மதா ளத்திலகு வந்தொருப தேநிற்ப**
**முன்மூன்றி லாறின் முடிவினு - மின்ன**
**துடியேரா கண்டமாந் துய்யமலர் வல்லிக்**
**கொடிபதி னொன்றென்றுங் கொள் மாத்திரை 11.**

மாத்திரை பேரறிய

தொகுத்த குரு 4

சாமசேகரன் 5

ரெங்காபரணம் 6

பஞ்சலகுப்பெயர்

1. குரச்சுக லகு
2. லகு
3. வானிலகு
4. தெம்வலகு
5. வாரிலகு

ஆக மாத்திரை 9¼. இந்த மாத்திரைகள் வைக்கும் இடமறிந்துவைக்கவும் முற்றும்.

குறிப்புரை

முதல் ஏட்டில் ஏடு பெயர்த்து எழுதியவர் பற்றியதான சுவடிக் குறிப்பு இருக்கின்றது. இரண்டாம் ஏட்டில் நூலின் முதல் பாடல் தொடங்குகின்றது. சூத்திரங்களும் குறிப்புரையும் நூலில் இடம் பெறுகின்றது.இரண்டு பாகமாக வாத்தியமரபு என்னும் நூல் எழுதப்பட்டுள்ளது. முதற்பாகம் 73 ஏடுகள்; இரண்டாம் பாகம் 26 ஏடுகள். மொத்தம் நூறு ஏடுகள் உள்ளன. தாளங்களும் அமைப்புக் கூறுகளும், தாள சமுத்திரம், தாளச் சேர்மானம் பற்றிய செய்திகள் நூலில் இடம்பெறுகின்றன.

# 4. கதைப் பாடல்

## 763. அயோத்திகதை

**அ.** *தாள்.20:51;* **ஆ.** *1-22 பக்கங்கள்;* **இ.** *குறை;* **ஏ.** *அச்சாகவில்லை.*

முற்குறிப்பு

மாசி மாதம் 7ஆம் தேதி 10.3.1886
அயோத்திகதை
நாராயண நாடார் குமாரர் தங்கையா (நாடார்)
கன்னங்குளம்

தொடக்கம்

காப்பு

மதத்தினால் வலிய வீரன் மன்னனுக் கிளைய தம்பி
விதத்தினா லிலங்கை யாண்ட விபூஷணர் சொன்ன புத்தி
சிதத்தினால் வேந்தர் கேட்கத் திருவெழுந் தூரான் சொன்ன
கதைக்குநான் முகத்தோன் மாது கந்தனுங் காப்பதாமே

நூல்

ஆறிலொன்று கடமை தண்டி அயோத்தியா புரிசமு சாரிக்கு
ஏது தேசம் காலமட்டும் ஏற்ற கடமைக்கு நீ கொடுத்தாய்
ஆண்டு பதினாலு வருடமட்டும் அடைத்தேன் நான்கட்டணமாய்
ஆறிலொன்று கடமை என்று அட வோலை யெழுதிநான்
கொடுத்தேன்

முடிவு

மாது சீதை சொன்னவுடன் வால்மீகரிஷி யீது சொல்வார்
கோசலைப் பிராட்டி மருமகளே கோபால ராமன் தேவியரே
சனக ராஜன் திருமகளே ஜானகி தேவி லெட்சுமியே
வாள்கொண்டு வந்த லெட்சுமணர் தான் வாழு
மயோத்தியில் போயிருப்பான்
நீகர்ப்பவதி யானதினால் கிலேசப் படாதபடி நான் காப்பேன்
அஞ்சவேண்டாம் பதற வேண்டாம் அச்சுதனார் தேவி
லெட்சுமியே

குறிப்புரை

*இந்நூலில் காப்புப் பாடலுக்குப் பின் 1,2 என்ற எண்ணிட்ட ஏடுகள் இல்லை. 3ஆவது ஏடு இடதுபுறம் சற்றுச் சிதைந்துள்ளது. மொத்தம் 23 ஏடுகளிலி லுள்ள செய்திகள் தாள் சுவடியில் எழுதப் பெற்றிருக்கின்றன. இராமர் தந்த பூசணி வித்து காய்க்காமல் போதல், கைகேயி சீதையைப் பழி கூறுதல், இராவணன் படத்தை வரையச் சொல்லுதல், வண்ணான் சீதை மேல் குறை கூறுவதால் இராமர் இலக்குவனிடம் சீதையை வெட்டக் கூறல், சீதையின் துயரம், இலட்சுமணன் சீதையை வெட்டாது காட்டில் விட்டுத் திரும்புதல், வால்மீகரிடம் காட்டில் சீதை தன் வரலாறு கூறல், வால்மீகர் சீதைக்குத் துணையிருத்தல் என்பது வரையிலான பகுதிகள், இக்கதைப்பாடலில் இடம் பெற்றிருக்கின்றன.*

## 764. அரவமுத்து வீரன் கதை

**அ.** ***27:58;*** **ஆ.** *1-14 பக்கங்கள்;* **இ.** *முழுமை;* **ஈ.** *அச்சானது (நிறுவன வெளியீடு, 1998).*

தொடக்கம்

வல்லவர் அரவ முத்தின் வளமையை முன்னோர் வில்லில்
சொல்லநய மாகப் பாடச் செய்தனர் யானு மிந்த
கொல்ல மாயி ரத்து நூற்று ஒன்பதிற் றேள்யிதத்தில்
சொல்லருந் தியதி எட்டிற் சீவனிற் கூறி னேனே (1)

முடிவு

நாட்டமாய்ப் பட்டணத்தார் ரோடை விட்டு
நாடிப் பஞ்சலிங்கப் புரமு மிட்டுக்
காட்டுப்பாதை யாய்சுக்குப் பாறை விட்டுக்
கடந்து கோட்டை விளையி லிருக்கிற
ஸ்ரீராமன் கபால காரி யம்மை
தீரன் செங்கிடாய்க் காரனிவர் களுக்குத்
தோழமையாகிப் பூஜையது உண்டு
சிறப்புடன் கோட்டை விளையிலிருந்தன ரென்று

குறிப்புரை

இந்தத்தாள் சுவடி ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திலுள்ள ஓலைச் சுவடிகள் (சுவடி எண் 10A) பிரதியாகும். இச்சுவடியில் *16* ஏடுகள் உள்ளன. அளவு 54 x 3செ.மீ. பக்கத்திற்கு *24* வரிகளாக மொத்தம் *380* வரிகள் உள்ளன. ஒவ்வொரு ஏடும் இரு பகுதிகளாகப் பிரித்தெழுதப் பட்டுள்ளது. சுவடி நல்ல நிலையிலுள்ளது. கொல்லமாண்டு *1109* என வருவதால் *1934* இல் எழுதப்பட்ட பிரதி எனத் தெரிகிறது. ''கும்பமுனி புரத்தில் வாழுங் குமாரசுவாமி நாடாரீன்ற பாலன் ஆறுமுகப் பெருமாள் சுருக்கிச் சொன்ன கதை என்ற குறிப்பும் சுவடியில் உள்ளது. மணிக்காஞ்சி நாட்டில் ஒத்தைக் காலன் சீமையில் வடுகர் குலத்தில் உதித்த வல்லவன் அரவமுத்து திண்டுக்கல் மன்னனின் அழைப்பின் பேரில் விருந்தினனாக அங்குச் சென்று தங்குகிறான். அப்போது அரசனின் கணையாழியைத் திருடியவன் என்ற பழி திட்டமிட்டு அரவமுத்து மீது சுமத்தப்படுகிறது, அதனால் அவன் கழுவேற்றத் தண்டனைக் காளாகிறான். அரவமுத்துவின் தங்கை, அண்ணனின் துயர முடிவு கண்டு அனற்குழியில் குதித்து மாண்டு அனற்காரி ஆகிறாள். அண்ணன் மரணத்திற்குக் காரணமானவர்களைப் பழி வாங்குகிறாள். இருவரும் தெய்வமாக வணங்கப்படு கின்றனர்.

## 765. அல்லியரசாணி கலியாணப்பாட்டு

**அ.** *227:438*; **ஆ.** *1-16* ஏடுகள்; **இ.** 40 x 3செ.மீ.; **ஈ.** *6-7* வரிகள்; **உ.** நன்று; சில துளைகள்; **ஊ.** ஓரளவு கடினம். ஒவ்வொரு பக்கமும் இரு பகுதிகளாகப் பிரித்தெழுதப் பட்டுள்ளது; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

கண்ணாலம் கண்ணாலம் காரிழைக்குங் கண்ணாலம்
திங்கள் முகநல்லாள் செல்வியர்க்குங் கண்ணாலம்
அல்லியர சாணியர்க்கும் அருச்சுனர்க்குங் கண்ணாலம்
வண்டார் குழலியர்க்கும் வடிவுள்ள மன்னவர்க்கும்
ஏகப் பொருத்தமது இன்பமுடன் தான்பார்த்து

என்று கலியாணம் இசையுமென்று வேதியரை நாளுங் கிழமையும் நன்றாகப் பாருமென்றார்.

முடிவு

வந்தவர்கள் கூடி வளமருவும் வாசலிலே
விஞ்சுமலர் மங்கையர்கள் விளையாடும் வாசலிலே
மும்முரசு நின்று முழங்குமணி வாசலிலே
செம்மைபுனை யுந்தமிழோ சேருமணி வாசலிலே
எந்நாளும் நன்றா யிருந்தேன் பிரதாபிக்க
நன்னா ளொடு முகூர்த்தம் நாட்டியவை கற்பிவைத்தார்

குறிப்புரை

அருச்சுனன் கிருஷ்ணனுடைய துணையால் ஆண் வாடையே விரும்பாமல் அரசாண்ட பாண்டிய இளவரசி அல்லியை வென்று அவளை மணக்கிறான். இச்சுவடியில் இவர்களது திருமணம் எப்படி நடைபெற்றது என்பது விளக்கப் பெறுகிறது. மணமேடை அலங்கரிப்பு, திருமணத் திற்கு நாள் பார்த்தது, அருச்சுனன் அல்லி இவர்களின் தோற்ற வருணனைகள், வந்திருந்தவர்களின் வாழ்த்துகள், இசையொலிகள் முதலானவை அழகு நடையில் **எளிய பாடல்களால்** விளக்கப் பெறுகின்றன.

## 766. இடைச்சி செல்லி கதை

**அ.** தாள். **14:43;** **ஆ.** 34 பக்கங்கள்; **இ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

பழைய பதியுமிட்டு பசுகிடக்குந் தட்டையிலே
அழைக்க வரும் கைப்பிடித்து யசுபத்திலே செல்லுவாளாம்
இளையசெம்பொன் தன்மடவார் யிரவிலங்கே தங்கிவிட்டாள்
விடியுமுன்னே தானழகி விலைமோரும் பானையுமாய்
வடிவுடை யாரிடைச்சியவள் திட்டெனவே மோரு கொண்டு

முடிவு

கட்டிவந்த குதிரைகளுங் கன்னடியன் பெரும்படையும்
தட்டழியவிட்டுத் தடாதரமுறிந்து போகுதடா
அட்டதிக்கு மவர்படைக்கு ளகப்பட்டார் கெட்டிடவே
திட்டெனவே கண்டுநின்ற திருநீலகண்டன் பாதம்
தொட்டிபொரு கின்றபேரைச் சுந்தரஞ்சேர் ஆனைமேலே

குறிப்புரை

இச்சுவடி கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 8016 என்ற எண்ணுள்ள சுவடியாக உள்ளது. இதன் நிழற்படி இந்நிறுவனத்தில் தாள் சுவடியாக உள்ளது. இடையர் குலப் பெண்ணை வைத்துப் பின்னப்பட்ட நாட்டுப் புறக் கதைப் பாடலாக இச்சுவடி அமைகின்றது. ஐவர் ராசாக்கள் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சி தனிக்கதையாகப் பாடப் பெற்றுவிட்டது என்று நா. வானமாமலை கூறுவர். ஏனெனில் ஐவர் ராசாக்கள் கதைக்குக் கிடைக்கும் பெரும்பாலான சுவடிகளில் இதுபோன்ற தனிக் கதை இல்லை. இக்கதை போருக்குமுன் கோட்டையினுள் நிகழ்கின்றது. கோட்டையைக் கன்னடியன் முற்றுகையிட்ட பொழுது கோட்டையிலுள்ள குளத்திற்குத் தண்ணீர் வருவதைத் தடுக்க முயல்கிறார்கள். குளத்திற்கு ஒரு கள்ள மடையிருப்பதைப் பற்றிக் கேள்விப்படுகிறார்கள். கோட்டையில் மோர் விற்கும் இடைப் பெண் ஒருத்தி எதிர்பாராமல் கள்ளவழியை அறிந்து வெளியே கூற ஊற்றை அடைத்து வள்ளியூர் கோட்டைக்குள்ளிருக்கும் குளத்திற்குத் தண்ணீர் வராமல் தடுத்துக் கோட்டையை எளிதாகப் பிடிக்கிறார்கள். அச்சான நூலினின்று இச்சுவடியின் இறுதிப் பகுதி சற்று வேறுபடுகின்றது.

## 767. இராமாயணக் கதை

**அ.** *231:445*; **ஆ.** *12–77* ஏடுகள்; **இ.** 26 x 3செ.மீ.; **ஈ.** *9–10* வரிகள்; **உ.** நன்று; இடையே ஏடுகள் இன்றியும் எண்கள் முறை மாறியும் உள்ளன. சில ஏடுகளும், ஏட்டெண்களும் சிதைந்துள்ளன; **ஊ.** கடினம்; சிறு எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

## தொடக்கம்

தசரதன் மிதிலைக்கு வருவது

தளிரிணங்கப் பணமிட்டு மத்தவர் வணங்க, வட்ட வெண்குடையும் முடிகளுந் துலங்க, மகரதோரணங்கள் முறைமுறையிலங்கச் சட்டமான திசையெட்டு மேலும் படைமட்டில்லாமல் கூடக் கட்டியம் போடப் பெண்கள் பாடிக் கொண்டாட, ராசா உஞ்சமாணிக்கத்தாலே தச்ச பல்லக்கு மேலே அச்சுதன்தாய் முதலாய மெச்சிய தேவிமார்கள் யிச்சையாலே பின்னே வரச் செய்து முன்னே பச்சைப் பைங்கிளி யென்னாலே பாங்கியர்கள்

.... *(ஏடு. 12)*

## முடிவு

மலைநிகராகிய உப்பரிகைகளும் பாட்டுங் கூடமுந் திரைகளும் பலபல புரவியின் வெள்ளமும் பள்ளமும் பாதாளஞ் செல்லும் புரைகளுங் குலைசெய்யு மரக்கியர் கிடைகளும் நடைகளுங் குங்கும நீராற் றங்கரைகளும் நலமுள்ள சந்தியும் பந்தியும் ஓரப்பித்து நாலு லச்சவீதி நிரைகளும் அலைகடலாகிய அகழியுங் கேணியும் ஆயிரம் வெள்ளம் அரைக்காதங் காணியுந் தலையெடுப்பாக உயர்ந்த அட்டரணியும் சத்திரசாஷியு மொற்ற நிட்டாணியுந் தடத்திலும் முனிவர்கள் மடத்திலும் பெண்கள் செய்நடத்திலும் போகவை போக விடத்திலும் போய்ப் பாய்ந்து ''தேடி''... (ஏடு. 77)

## குறிப்புரை

**உரைநடை.** *இராமாயணத்தில் இடம்பெறுகின்ற ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் ஆகிய காண்டங்களின் செய்திகள் இந்நூலில் கூறப்பெறுகின்றன. இராவணனுக்கு இராமர் சொல்லுறது, தசரதர் மிதிலைக்கு வாரது, பரதர் கைகேயியிடம் சொல்லுறது, சுவாமியுடனே லட்சுமணன் சொல்லுறது, அயோத்தி பட்டணம் சிங்காரிக்க, சுவாமிக்குக் கலியாணம், தேசதேசத்து ராசாக்கள் அயோத்திக்கு வர்றது, சுவாமி ரிஷிகளுக்குச் சொல்லுறது, சூர்ப்பனகை வந்தது, சூர்ப்பனகை அங்கலாய்க்கிறது, கரனோடே சூர்ப்பனகை சொல்லுகிறது, கரன் சண்டை, தசரத மகாராசா ராச்சியப் பரிபாலனம் பண்றது, தசரதர் வதிஷ்டருடனே சேர்றது, தசரதர் புலம்புகிறது, தசரதனார் அங்கலாய்க்கிறது, சுவாமி ராமாவதாரம் பண்றது, அனுமார்*

சுவாமியைக் கண்டது, ராவணனுடனே சூர்ப்பனகை சொல்லுறது, கைகேயி கூனியுடனே சொல்லுறது, சுவாமியுடனே தேவர்கள் முறையிட்டது முதலான தலைப்புகளில் நூற் செய்திகள் இடம்பெற்று உள்ளன. கொச்சை வழக்குச் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

## 768. இராமாயணக் கதை

**அ.** ***358:593***; **ஆ.** *1–115* ஏடுகள்; **இ.** 42.5 x 3.2செ.மீ.; **ஈ.** *7–8* வரிகள்; **உ.** நன்று; இடையிடையே ஏடுகளில் பல துளைகள் உள்ளன; **ஊ.** அழகான தெளிவான எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

### தொடக்கம்

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடிய வொளிய தாக்கும் வேத்தியன் கமல மொக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையில் ராமன் தோள்வலிகூறு வார்க்கே

ஸ்ரீ ராமச் சந்திர சீதாலெட்சுமி சமேதரரான மகாபுரு சனாகிய தேவர்களுக்கெல்லாந் தேவனாகிய ஸ்ரீராமச் சந்திர மூர்த்தி தேவர்கள் உபத்திரந் தீர வேண்டிப் பூலோகத்திலே தசரத மகா ராசாவுக்குப் புத்திரனாகச் செனித்து தாடகையை வதை பண்ணி.... கையான் சாப விமோசனம் பண்ணி மிதிலையிலே சென்று சினகா வில்லையும் ஒடித்துச் சீதா தேவியம்மனைப் பாணிக்கிரணம் பண்ணிக் கைகேயி மாதா வாக்கியத்தினாலே வனவாசஞ் செய்து இராக்ஷதர்கள் காண துஷணன் திரு சீரர்யிவர்களுடனே பதினாலாயிரம்...

### முடிவு

தம் புருசர் மண்டல மருத்திர வினை, கயிலாச வினை முறலி வெறும் வினாகார .... களாடவும் தேசத்து ராசாக்கள் கப்பங் கொண்டு வந்து கொடுத்து,கையைக் கட்டி நிக்கவும் அனேக மந்திரியாளர்கள் நிலை கொலுவாக நிற்கவும் இந்தப் பிரகாரமாய் பூரண உதையம் போலே ராமசுவாமி சிங்கா சனத்திலே எழுந்தருளியிருந்தார். இப்படிக் கொலுவாக

யிருக்கச் சகலபேரும் சேவித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீமன் ராமச் சந்திர மூர்த்தி சகாயம்.

பிற்குறிப்பு

நாகப்பன் ஏடு - நாகப்பன் கையெழுத்து - முற்றும். இராமாயண ஏடு எடுத்தவர் கொடுக்கவும்.

குறிப்புரை

**உரைநடை.** இராமாயணக் கதை முழுமையும் நாட்டுப் புறக் கதை வடிவில் ஒரு சில மாற்றங்களுடன் கூறப் பெறுகிறது.

## 769. இராமாயணக் கதை

**அ. 459:706; ஆ.** *259* ஏடுகள்; **இ.** 38 x 3.5செ.மீ.; **ஈ.** *9–11* வரிகள்; **உ.** பெரும்பான்மையான ஏடுகள் சிதைந்துள்ளன; **ஊ.** நன்று; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

வருகிற போது இதோ ஒரு குரங்கு என்னுடைய லங்கைப் பதிக்குள்ளே யிருந்து பூசை பண்ணி ... ஆங்காரித்து தன்னுடைய இருபது கரமும் வாலியான வனை நோக்குகிற போது வாலியானவனும் தன்னுடைய கிருகை தப்பாமல் சத்தே பிரிந்து பார்த்து ராவணனைத் தன்னுடைய வாலின் மயிற்காலிலே பிடித்துக் கட்டிப் போட்டான். அது கண்டு வண்டோதிரி இலங்கைக்குள்ளே போறபோது விபூசணன் இஷ்டத்துடனே இருக்கையில் ஒருபெண் பிறந்தவள் வருகிறதைக் கண்டு அது யார் என்று விசாரிக்கும் போது அந்நேரமே வண்டோதரியானவள் வாய்திறந்து ஏதோ உத்தரம் விபூசணருடனே சொல்லுகிறாளாம் வாரீர் ராட்சதர்களே (ஏடு.*11*).

முடிவு

ஆனால் சுவாமி ஆயிரத்தெட்டு பசும் பொன்னாலே சீதா தேவி அம்மனுக்கு... ஆடை ஆபரணங்களும் பூட்டி நங்கையாராக இருத்திக் கொண்டு வேள்வி வளர்க்கலாம் என்று சொன்னார்கள். அந்தப் படிக்கு சுவாமி ரகுநாயகரும்

சொல்லி அந்தப் படிக்கு சீதையைப் போலே தாபரித்துக் கொண்டு சுவாமி ரகுநாயகர் அண்டையில் இருத்தி மனையாகம் நடத்திவிக்க அந்த வேள்வி... ஏகியாக ஒரு குதிரை பிறந்தது. அந்தக் குதிரைக்கு நெத்தியிலே பட்டம் எழுதினது.

### குறிப்புரை

கம்பராமாயணம் உரைநடையில் ஆக்கப்பட்டுக் கொச்சை நடையில் கதை கூறுவது போல் அமைந்துள்ளது. ஒன்று முதல் 197 வரை ஏடுகள் முறையாக உள்ளன. 198–ஆவது ஏட்டில் மயில்ராவணன் வருத்தம் என்னும் தலைப்பு தொடங்குகிறது. மீண்டும் 60,61 என்ற எண்ணில் ஏடுகள் தொடங்குகின்றன. இறுதியில் 655 என்ற எண்ணோடு முடிகின்றது. ஆனால் இந்தப் பிற்பகுதியில் 62 ஏடுகள் மட்டுமே யுள்ளன.

## 770. இராமாயணக் கதை

**அ. 472:721**; **ஆ.** 1–126 ஏடுகள்; **இ.** 41 x 3செ.மீ.; **ஈ.** 6–7 வரிகள்; **உ.** தொடக்கத்திலும் இறுதியிலும் பல ஏடுகள் முறிந்துள்ளன; **ஊ.** படிக்கக் கூடிய எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

### தொடக்கம்

அழைத்துச் சீதையிடத்தில் காவலாக வைத்துப் போட்டு இராம சுவாமியுங் கையி..ப் பொன்மானைப் பிடிக்கிறதுக்கு மானின் பின் ஓட வெகுதூரம் போறபோது மானு.... மானான மாரீசன் ஓடிப் போறதினாலே சுவாமிக்கு மெத்தவும் கோபத்தை யடைந்து மானை... போது சுவாமியினுடைய பாணம் மானான மாரீசன் பேரிலே பட்ட மாத்திரத்திலே மாரீசனார் லெட்சுமணா வென்று சுவாமியுனுடைய குரல் போலே கூக்குரல் போட்டுக் கொண்... தேவி கேட்ட மாத்திரத்திலே அம்மானானவர் லட்சுமணரைப் பார்த்துச் சுவாமிக்கு ஏதோ... லட்சுமணர்க்குச் சொன்னாள்.

முடிவு

சுவாமி இராமர், பரதர், சத்ருக்கன், விபீசணர், அங்குதர், சுக்கீரிவர் இவர்களெல்லாம்...ஆகாசமார்க்கத்திலே கிளம்பி வாயு வேக மனோவேகமாய் வருகிற போது அநேகம் பேர் புருசாமண்டலம் ருத்திர வீணை, கயிலாச வீணை, மத்தளம், தாளம், மணி, செயகண்டி, முரசு, மல்லாரி இதுகளானதும் முழங்க அநேக இராசவீதிகள் அநேகம் பக்கத் தெருவும் பெரும் பட்டணங்கள் பாக்கிற பேரும் இந்தப் பிரகாரமாய் போகிறபோது சுவாமியானவர் ஆகாசத்திலே அநேகம் நட்சத்திரங்களின் நடுவே பூரணச்சந்திரன் எப்படி விளங்குவானோ அப்படிச் சுவாமி பிரவேசித்தார்.

குறிப்புரை

**உரைநடை.** இராமாயணக் கதை கொச்சை நடையில் எழுதப்பட்டுள்ளது. மாரீசன் வதை முதலில் தொடங்குகிறது. இராவணயுத்தம் முடிந்து நகரம் திரும்புகிறவரை கதை சொல்லப்படுகிறது.

## 771. இராமாயணக் கதை

**அ. *474:723*; ஆ.** 9 ஏடுகள்; **இ.** 41 x 3செ.மீ.; **ஈ.** 4–7 வரிகள்; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** படிக்கக்கூடிய எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

ஸ்ரீராமச் சந்திர சீத்தாலட்சுமி சமேத ராமன் மகாபுருச னாகிய தேவர்க்கெல்லாம் தேவனாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி தேவர் உபத்திரம் தீரவேண்டிப் பூலோகத்திலே தசரத மகாராசாவுக் குப் புத்திரனாகச் செனித்து தாடகையை வதை பண்ணி வருகிற போது அகலிகையின் சாபவிமோசனம் பண்ணி மிதிலையிலே சென்று செனகர் வில்லையும் ஒடித்து சீத்தாதேவி யம்மனைப் பாணிக்கிரகம் பண்ணிக் கைகேயி மாதா வாக்கியத்தினாலே வனவாசம் சென்று இராட்சதர் களை ... சங்காரம் பண்ணி.

முடிவு

விமானத்திலே போற பேர்களுக்கு வெஞ்சாமரம் போடுகிற பேரும் விசிறிகளாலே வீசுகிற பேரும் பாக்கு, வெற்றிலை குடுக்கிற பேரும், பிரசாதங்கள் கொண்டு வந்து கொடுக்கிற பேரும், பழங்கள் கொண்டுவந்து குடுக்கிற பேரும்,... சுவாமியைக் காண வருகிற பிரகாரமாய் அல்லோல...

குறிப்புரை

**உரைநடை.** இராமனின் கதை எளிய கொச்சை நடையில் எழுதப் பட்டுள்ளது. இறுதியில் ஏழு வெற்றேடுகள் உள்ளன.

## 772. இலட்சுமியம்மன் தவநிலை

**அ.** ***252:468***; **ஆ.** *1–80* ஏடுகள்; **இ.** 46 x 3.5செ.மீ.; **ஈ.** 6–7 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

சீர்சிறக்கும் செங்கோட்டைபுளி யரை நாட்டை யாண்ட
சிறந்தொரு வெங்கலமக ராசன் தானும்
பார்பெருகும் லட்சுமியா ரம்மை தானும்
பரிவினுடன் மணமுடித்து வாழும் நாளில்
பேர்பெருகும் சிவதலத்தில் தவங்கள் செய்து
பிறந்ததோர் காணியாளப் போற்றி தானும்
கார்சிறக்க விகடதட கடகும்ப கெம்பீர
கணபதி திருச்சரணம் காப்ப தாமே.

முடிவு

ஆயானிலும் வல்லவனாய் அழுகுகாணியாளப்
போற்றிப்படித்தார்
ஆயிரத்தெட் டாயுதமெடுத்து ஆசான்தன்னுட
கையிலேகொடுத்தார்
உம்பளமும் இறைகூறி உடன்கொடுத்தார் ஆசானுக்கு
ஆசானும் மனம்மகிழ்ந்து அவர்மனையில் போனபோது

செங்கோட்டைப் புளியரையில் சிறந்தகாணியாளப் போற்றி
வாழ்ந்திருந்தாரே.

லெச்சுமியம்மன் தவநிலை ஏடு முற்றிற்று.

## பிற்குறிப்பு

இந்த ஏடு எழுதி முடிந்தது 1129–ம் வருஷம் புரட்டாசி மாதம் 28–ஆம் தேதி புதன்கிழமை சு.காளத்திநாடார் சுப்பிரமணிய நாடார் குமாரர் இந்த ஏடு எழுதினவர் மாடநாடார் குடியிருப்பிலிருக்கும் லட்சுமணப் பெருமாள் நாடார். யாரும் எடுத்துப் படிக்கலாம். ஒருவரும் திருடக் கூடாது.

## குறிப்புரை

இரண்டு காப்புப் பாடல்களை அடுத்து நூல் தொடங்குகிறது. இந்நூல் கதைப்பாடல் வகையைச் சேர்ந்தது. குழந்தைப் பேறு வேண்டி இலட்சுமியம்மாள் மேற்கொண்ட பாத யாத்திரை, வேண்டிக் கொண்ட வேண்டுதல்கள், குறத்தி கூறிய பரிகாரம், பாத யாத்திரை முடிந்து திரும்புதல், கனவில் சர்ப்பம் தீண்டுதல், இலட்சுமியம்மாள் கர்ப்பம் தரித்தல், குழந்தை பெறுதல், அக்குழந்தை வளர்ந்து பல கலைகளும் கற்றுச் சிறப்புற்று வாழ்தல் போன்ற செய்திகள் நூற்கண் இடம் பெறுகின்றன. மக்கட் செல்வம் பெறாத ஒரு பெண்ணின் தன்னுணர்வும், ஆற்றாமையும், சமுதாயம் அவளை ஏசுதலும் இக்கதையில் உணர்வுப் பூர்வமாக வெளிப் படுத்தப் படுகின்றன. தவத்தினால் பிள்ளை பெறல் எனும் சமய நம்பிக்கையை இந்நூல் வெளிப்படுத்துகின்றது. காப்பு, வருபொருள் உரைத்தல், குருவடி பாடுதல், அவையடக்கம், கதைத் தலைவன், தலைவியின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவர்தம் தலைமைச் சிறப்பு. மேலோங்கித் தவநிலையில் பயன் பெறுதல் போன்றவை சிறப்புற அமைந்துள்ளன. வில்லுப்பாட்டிற்குரிய சந்த அமைப்பினைக் கொண்டுள்ளது. ஏடுகளின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரித் தெழுதப்பட்டுள்ளது. தொடக்கத்திலும் இறுதியிலும் 2 சட்ட ஏடுகள் உள்ளன. இச்சுவடி நூல் நிறுவனச் சுவடியியல் பட்டய ஆய்வேடாக அளிக்கப் பெற்றுள்ளது (1984).

## 773. ஈசன் திருக்கதை

**அ.** ***313:539***; **ஆ.** *2–186 (61) ஏடுகள்;* **இ.** 42 x 3செ.மீ.; **ஈ.** *7–8 வரிகள்;* **உ.** *சிறு சிதைவு; ஏடுகள் சற்று உடைந்துள்ளன; ஓரிரு துளைகள்; ஒவ்வொரு பக்கமும் இரண்டு பகுதிகளாகப் பிரித் தெழுதப்பட்டுள்ளது;* **ஊ.** *ஓரளவு கடினம்;* **எ.** *குறை;* **ஏ.** *அச்சாகாதது.*

### தொடக்கம்

வந்திதேசம் மெல்ல வழுத்துகின்ற மாதேசம்
அந்தநல்ல தேசமதி லழகாக வாழுகின்ற
விந்தை மறையவரில் வீரானவோர் மறையோன்
மந்தரனென் றேகூறும் வாகான பேருடையோன்
அம்மறை யோன்றானும் அனேகந்தரம் வியந்தான்
செம்மறையுடன் படைத்துத் திரவியத்தில் வல்லவனாய்
(ஏடு. 2)

### முடிவு

மந்திரவாசு யெடுத்து வரகாய ராரை நீக்கி
செந்திரு சேர்மன்னன் செழுலைகரத் திலேபிடித்து
கடல்போலப் பறந்துவரும் கரியானை யின்தடத்தில்
நடுவே ஒருசிங்கம் நடந்துவரு வதுபோல
செட்டி மகனுடனே தீட்டியவாள் மின்னலிட
கட்டியெதிரே மறித்துக் கடல்போல வரும்படையை
நோக்கினான் கண்ணாலே லோகமெல்லாம் வோர்குடையில்
(ஏடு. 186)

### குறிப்புரை

*இரண்டாவது கலமாடக பரதன் அத்தியாயம், மூன்றாம் அத்தியாயம் கலமாடக பரதன் முத்தி பெற்றது, அஞ்சாவது சனிபகவான் தோசம், ஒன்பதாவது சீமந்தனி பௌர்ணமி பூசை முதலான அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இக்கதை நாட்டுப் புறப்பாட்டு வடிவில் அம்மானையாகப் பாடப்பட்டுள்ளது. கதைச் சிறப்பும், கற்பனை வளமும், சொல் அலங்காரமும் இதில் பொதிந்து கிடக்கின்றன.*

# 774. ஐவர் கதை

**அ.** *62:90;* **ஆ.** *1–73* ஏடுகள்; **இ.** 48 x 3செ.மீ.; **ஈ.** *8* வரிகள்; **உ.** நன்று; ஒரு சில ஏடுகளின் ஓரப் பகுதிகள் முறிந்துள்ளன; ஒவ்வொரு பக்கமும் மூன்று பகுதிகளாகப் பிரித்தெழுதப் பட்டுள்ளன; **ஊ.** கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

## தொடக்கம்

பண்டாரங்கள் சிலபேர்கள் பாண்டிமன்னன் வடிவையெல்லாம்
கண்டிருந்து படமெழுதிக் காவியமாய்த் தான்முகித்தார்
கொண்டுசென்று பாடிடவே குவலையைத்தோர் கொண்டாட
எண்டிசையும் தான்திரிந்து யிசல்மதுரை கண்டடைந்து
வண்டருள்சேர் கொண்டாடும் வடநாடு தான்புகுந்து
தென்மதுரை சூழ்மண்டலமும் சிறந்தபுகழ் வளர்நாடும்
சோழனுட மண்டலமும் தொண்டர்வளர் நாடுமிட்டு
யீழமுதல் கொங்கைநாடு ராச்சியமெல் லாம்திரிந்து
வாழுமன்னர் வடிவையெல்லாம் வைய்யகமெல் லாம்புகழ
மன்னவர்கள் வடிவுகொண்டு வையகமெல்லாம் தேடிவுண்டு
கன்னடியன் தேசமதில் காவலவர் வீத்திருக்கும்
பொன்னின்மணி வாசலுக்கே புகுந்தானே பாடவென்று

## முடிவு

அனைவோர்க்குஞ் சட்டமிட்டு ஆண்டைக்கு இரண்டுதிருநாள்
விடத்தையமு தாகஉண்ட வேணியனா ரருளாலே
கடல்போலே பெரும்படையைக் கன்னடியன் றானுமப்போர்
வடசீமை தனைநோக்கி வாகுடனே போகவென்று
மந்திரிமார் தன்னோடே வடக்குநோக்கிப் போவானாம்.

## குறிப்புரை

முதல் பகுதி ஐவர் ராசாக்கள் கோட்டைகட்டி வாழ்ந்ததாக அவர்களது உயர்ந்த வாழ்க்கையை விளக்கிச் சொல்லுகிறது. பிற்பகுதி கன்னடியன் என்ற மன்னவன் ஐவர் ராசாக்களோடு போரிடத் தொடங்குகிறான். ஐவர் கோட்டைக்கு அழிவுகாலம் வருகிறது என்று தொடங்கி அவர்களுக்

கிடையேயான போர்ச் செய்தியை விரித்துச் செல்லுகிறது. இக்கதைக்கும் போருக்கும் இடைச்செருகலாக இடைச்சி கதை என்ற ஒருபகுதி இணைக்கப்பட்டுக் கதையோடு பின்னிச் செல்லுகிறது. அம்மானை நடையில் அமைந்த இக்கதை, தொடக்கம் முதல் இறுதிவரை படிப்பவருக்கு ஊக்க மூட்டுவதாக உள்ளது.

பாண்டி மன்னன் குலசேகரன் கன்னடியன் குலத்தில் பெண் கொள்ளலாகாது எனக் கருதுகிறான். கன்னடியன் மகள் குலசேகரனை விரும்புகிறாள். ஆனால் அவன் மணமுடிக்க மறுப்பதால் கன்னடியன் குலசேகரனைப் பிடித்துத் தன் மகளுக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என்பதற்காக அவனுடன் போரிடுகிறான். போரில் குலசேகரன் இறக்க, கன்னடியன் மகள் அவனுடலுக்கு மாலையிட்டு அவனது சிதையில் ஏறி எரிந்து உயிர் விடுகிறாள். இக்கதையை 'ஐவர் ராசாக்கள் கதை' என்ற பெயரில் நா. வானமாமலை (**1974**) வெளியிட்டிருக்கிறார். இரண்டு கதைகளுக்குமிடையே சில மாறுபாடுகள் உள்ளன.

## 775. கஞ்சன் அம்மானை

**அ.** ***581:939***; **ஆ.** *1–307* ஏடுகள்; **இ.** 43 x 3.5செ.மீ.; **ஈ.** *6* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

சீர்மடந்தை கேள்வன் திருவுந்தி யோன்படைத்த
பார்மடந்தை வாழ்ந்தருள் பல்லுயிருந் தான்தழைக்கத்
தர்மம்பெரு கத்தவஞ் செய்வா ருண்டாய்
கர்மம் கருக கவியன்பிறஞ் சாய
எம்மா தந்தோரு மெழிலிமழை சுரந்து
மும்மாரி பெய்ய முடிவேந்தர் தான்சிறக்க

### முடிவு

காயா வனத்தில்வளர் காத்தவீ ரப்பசெட்டி
சேயாம் சிவலிங்க செட்டியவர் மாதவத்தில்

உதித்தவீ ரப்பசெட்டி உண்மையுடனே வரைந்தான்
... ...
செல்லுகின்ற ராக்ஷஸ செயமான வாண்டதனில்
நல்லகும் பத்தில்ரவி – நடக்கின்ற நாளையிலே
நாலிரண் டொன்று நலமான தேதிதனில்
கோலமிகு மதியின் குணமுள்ள வாரமதில்
சித்தியோக மதனில் சிறந்தமேழ லெக்கனத்தில்
பத்தியுடன் வரைந்து பண்பாக முற்றியது

## பிற்குறிப்பு

ராக்ஷஸ வருசம் மாசிமாதம் 9–ம் தேதி திங்கட்கிழமை சித்த யோகத்தில் மேழ லெக்கனத்தில் மன்னங் காட்டிலிருக்கும் ராமசாமி வேளார் மகன் குவிடைக்குக் கஞ்சன் அம்மானை முற்றிற்று.

## குறிப்புரை

கிருட்டிண பரமாத்மாவின் கம்சவதம் அம்மானையாகப் பாடப்பட்டுள்ளது. 'சீரளர்ந்த செல்வன் றிருவரங்கிற் கண்டு யிலும்' எனத் தொடங்கும் காப்புப் பாடல் இடம்பெற்ற முதல் ஏட்டிற்கு எண் இல்லை. கிருஷ்ணாவதாரத்தில் இளமையில் கண்ணன் தன் மாமனான கம்சனைக் கொன்ற கதை நிகழ்ச்சி 'கஞ்சன் அம்மானை'யாக இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. கண்ணபிரானின் இளமைக் காலத்தில் நடைபெற்ற கதை நாட்டுப்புற மக்களுக் கேற்ற வகையில் அம்மானை வடிவில் ஆக்கப்பட்டுள்ளது. கஞ்சனின் சகோதரி தேவகியின் மகன் கண்ணன். சகோதரி மக்களால் சாவுண்டு என்பதை அசரீரி கஞ்சனுக்குக் கூறுகிறது. எனவே அவன் ஆறு குழந்தைகளைக் கொன்று விடுகிறான். ஏழாவது தப்பி விடுகிறது. எட்டாவது கண்ணனும் தப்புகிறான். கண்ணனைக் கொல்ல, கஞ்சன் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறான். அத்தனையிலும் அவனுக்குத் தோல்வியே. இறுதியில் கண்ணன் கம்சனைக் கொல்லு கிறான். இச்சுவடி நூலுள் ஜலக்கிரீடை, காளிங்க மடுவு, குமாரகிரிப் பொங்கல், வசந்தத் திருவிழா, நப்பின்னை கலியாணம், சத்தவாலிவதை, சுவாமி மதுரைக்குப் பிரயாணம், கேசாசுரன்வதை, கஞ்சன் யுத்தம், காசிபரிடத்தில் சுவாமி வித்தை கற்றது, காலைய

வண்ணன் வதை, துவாரகாபுரி அமைத்தல், துவாரகாபுரி அமைத்துக் குடியேறல், உருக்குமணி அம்மன் கலியாணம், சாம்புவன் யுத்தம், சாம்புவன் வதை, சத்தியபாமா கலியாணம், சதுகன் வதை, அனுருத்திரன் வரலாறு, அனுருத்திரன் பிறப்பு, பிரத்தூய்மனை அசுரன் கடலில் தூக்கி எறிதல், செம்பன் யுத்தம், செம்பன் வதை, கயிடவன் வதை, பிரத்தூய்மன் யுத்தத்திற்குப் புறப்படல், அக்கினி தேவன் யுத்தம், மதுவென்பவன் வதை, தேவலோசன யுத்தம் வதை, தெய்வலோகம் பாரிசாதம், சுப்பிரமணியர் பிள்ளையார் அய்யனார் சண்டை முதலான தலைப்புகளில் நூற்செய்தி விளக்கம் பெறுகின்றது.

## 776. கட்டபொம்மு கும்மி

**அ. தாள். *9:38*; ஆ.** *1–347* பக்கங்கள்; **இ.** குறை; **ஈ.** இந்தத் தாள் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

**தொடக்கம்**

பாஞ்சை நகரில் வளர்ந்தோங்கும் – வீர
பாண்டியன் கட்டபொம் மேந்திரன்மேல்
வாஞ்சையாய்க் கும்மித் தமிழ்பாடத் – திரு
வாக்கருள் வாள்சக்க தேவியம்மாள்
பூலோகப் பாண்டியன் கட்டபொம்மு – துரை
மேலுங்கும் மித்தமிழ்ப் பாட்டுரைக்க
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
சக்கதேவி பாதந்தான் தொழுது

முடிவு

மருது பாண்டியன் றன்னைக் கண்டு ஊமையன்
விருது பந்தையங் கூறினமும்
விருதுப ந்தையம்பே சிக்கொண்டு அங்கே
விஷ்த்தா ரமாய்ச்சபை செய்திருந்தான்
கும்பினிச் செய்தியைச் சொல்லுகிறேன்
கதைஅன்பாகக் கேளுங்கள் நல்லோர்
கெம்பீர மாகவே பட்டாளம்வெகு
சம்பிரதாயம் பாஞ்சைக் கோட்டையின்மேல்

முடிவு

19 x 15செ.மீ. நீள அகலமுடைய நான்கு நோட்டுகளில், *347* பக்கங்களில் *(1–98; 99–166; 167–257; 258–347)* இக்கதைப்பாடல் தாள் சுவடியாக இடம்பெற்றிருக்கிறது. *200* பக்கங்களைக் கொண்ட சுவடியிலிருந்து இது பெயர்த்து எழுதப் பட்டிருக்கிறது. *183* ஆம் எண்ணுள்ள சுவடி ஏடு இல்லையென்ற குறிப்பும் உள்ளது. இந்நூல் தென்பாண்டி நாட்டில் வாழ்ந்து வந்த கட்டபொம்மு நாயக்கன்மீது பாடப்பட்ட கும்மி நூல். பாஞ்சாலங்குறிச்சியைத் தலை மையகமாகக் கொண்டு வெள்ளையர்க்கு அடிபணியாது ஆட்சி செய்து வந்த வீரன், வீர பாண்டியக் கட்டபொம்மன் வெள்ளையர்க்கும் இவனுக்கும் நடந்த போர்களைக் கொண்டும், பேச்சு வார்த்தைகளைக் கொண்டும் நாட்டுப் புற வடிவமான, கும்மி வடிவில் அவனது சரித்திரம் கூறப்பெற்றுள்ளது. இந்நூல் வரலாற்றுக்குத் துணைபுரியும் பல குறிப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

வீரமும் விவேகமும் நிறைந்த முருக பக்தனான கட்ட பொம்மு வெள்ளையரால் கயத்தாற்றுப் புளியமரத்தில் தூக்கி விடப்படும் பகுதி இந்நூலில் இல்லை. *1934*–இல் 'கட்ட பொம்மு துரை கதை' என்ற பெயரில் ஒரு கதைப் பாடல் அச்சிடப்பட்டது. *1961*–இல் நா. வானமாமலை 'கட்ட பொம்மன் கதைப் பாடலைப்' பழைய ஏட்டுச் சுவடியி லிருந்து அச்சிட்டுள்ளார். தி. நடராசன் 'கட்டபொம்மு கும்மிப் பாடல்' என்ற நூலை *1978*–இல் வெளியிட்டுள்ளார்.

## 777. கம்பராமாயணம்

**அ.** ***457:704***; **ஆ.** *241–480 (239)* ஏடுகள்; **இ.** 40 x 3செ.மீ.; **உ.** ஓரளவு நல்ல நிலை; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

**பரசுராம படலம்** – ஒரு நாள் தசரத மகாராஜன் அயோத்தியா புரிக்குப் போகும்.... ரையத்த தினமா.. பிள்ளைகளும் மருமக்களும் பந்து ஜனங்களும் சேனா சமுத்திரம் போல் மிதிலை ஜனங்களுந் தொடர்ந்து வரத் தேரின் மேலேறிக்

கொண்டு நடக்கும்போது வழியிலே காகம் இடமும் மயில் வலமுமாயிப் பட சிறுநடையான் சகுனத்தைத் தசரத மகாராஜன் கண்டு யிவ்விடத்தில் என்னமோ இடையூறு வரயிருக்கிறதென்று எண்ணித் தேரை நிறுத்தினார்.

முடிவு

... தேவர்களை யெல்லாம் அடித்துத் துரத்தி விட்ட ராச்சதர்களையிந்த இரண்டு மனிதர்கள் என்ன செய்யப் போகிறார்களென்று உன் மனத்தில் யெண்ணத் தேவையில்லை. உன் கையிலாகுமானால் இராச்சதர் இயகர் முதலாக நீ யாரைப் பலசாலி யென்றெண்ணி யிருக்கின்றாயோ அவர்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு வா. உன் எதிரேதானே கொல்லுகிறோமென்று சொன்னார். அதற்கென்ன கொல்லலாம் மாயங்களை யெல்லாங் குறித்தறியலாம். செயிக்கலாம். அவர்கள் செய்கிற மாயங்களைக் கடக்கலாம். அவர்களுக்கு உபத்திரங்களைக் கொடுக்கலாம் என்னை ராச்சசி என்று இகழ்ந்துவிடாமல் கிருபை செய்யென்று உங்களுக்கு எதுதான் செய்யப் போகாது....

குறிப்புரை

**உரைநடை.** பரசுராமப் படலம், மந்திரப் படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம், குகன் பரதனைக் காணல், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம் விராதன் கதை, தண்ட காரணியம், அகத்தியரைக் காணுதல், சடாயுவதை காணுதல், பஞ்சகட்டி தீரத்தைக் காணுதல், சூர்ப்பனகை சூட்சி முதலான தலைப்புகளில் இராமாயணச் செய்தி இடம் பெறுகின்றது. தொடக்கத்தில் ஐந்தும், இறுதியாக இரண்டுமாக வெற்றேடுகள் உள்ளன.

## 778. கம்பராமாயணம்

**அ.** ***467:715***; **ஆ.** *1–325* ஏடுகள்; **இ.** 42.5 x 3செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** சிதைவு; **ஊ.** தெளிவற்ற ஓரளவு கடினமான எழுத்து; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடங்களில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடிய வெளிய தாக்கும் வேதியன் கமல நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையில் ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

முடிவு

மண்டோதரியை அழைத்துத் தாகத்துக்குத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, குடித்துத் தொண்டையைச் செருமி பின்னும் சொல்லுவான் காரியம் ஒன்றும் செவ்வையா இருக்கவில்லை. இனிமேல் யோசனை என்னவென்று விசாரமிட்டுச் சீதை முகத்திலே... முழிக்கப் போறோமென்று வாஞ்சினைப்பட்டுப் பலப்பலவிசாரத்துடனே சாவடியிலே வந்தான். அந்நேரம் மாலியவான் ... கிட்ட இருந்து ஏதடா தம்பி இராவணேஸ்வரா தவிப் பெழப்பாய் வந்திருக்கிறாய். யுத்த களத்திலே நடந்த செய்தி என்ன என்று கேட்டான். இராவணனும் அவ்விடத்துச் செய்தி ஒன்றும் செவ்வையா இருக்கவில்லை என்றான்.

குறிப்புரை

கம்பராமாயணம் கதாகாலட்சேபம் செய்யும் முறையில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு படலத்திலும் சில பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு தொடர்ந்து கதை சொல்லுவதாக அமைகிறது. ஆங்காங்கே சில விருத்தங்கள் எழுதப்பட்டுள்ளன.

## 779. கிருஷ்ணன் தூது

**அ.** ***233:448***; **ஆ.** *1–92* ஏடுகள்; **இ.** 39 x 3.5செ.மீ.; **ஈ.** *8–9* வரிகள்; **உ.** நல்ல நிலை; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

முற்குறிப்பு

மடத்தூர் இந்து எலிமெண்டரி இராப் பாடசாலையில் வசிக்கும் ராமசாமி மகன் திருமலைக் கொழுந்து நாடார் ‘கிருஷ்ணன் தூது’ ஏடு நன்றாக நீடுழி வாழ்க. சுப்பராயலு

நாயுடு தலைமை உபாத்தியாயர் *1105* ஆவணி... (முதல் ஏடு)

....

தொடக்கம்

பேர்படைத்த விசயனுட முன்பைநெடும் பிறவியினும்
சீர்படைத்த கேண்மை யினாற் றேரூர்தற் கிசைந்தருளுஞ் ..
பார்படைத்த சுயோதனற்குப் படையோடென மரிலெனப் ..
கார்படைத்த நிறத்தானைக் கைதொழுவார் பிறவாழிக்
கரை..(2)

பாதிப்பிறை குடும்பரம னருள்பாலகா
சோதிப் பொருளே தும்பிமுகத் தங்காய்
கடவூர் வளர்ந்து கடவுள்தனைப் பூசைசெய்
சடமழியாய் மார்க்கண்டன் தன்கதையை யான்பாட
தொந்திவயத் தைங்கரனே சோதியருள் புதல்வாய்
செந்தில்வந்த கந்தனுக்கு முந்திவந்த மாங்கனியைத்
தாவென்று வாங்கித் தானருந்தும் புண்ணியனே
வாவென்றால் தங்காமல் வந்துமிகக் காத்தருள்வாய்
இந்தக் கதையை யியல்புடனே கேட்டவர்க்கு

முடிவு

சித்தி வினாயகனுஞ் செங்கண்மால் தன்மருகன்
புத்திசொல்லி யெந்தன்வினை போக்கிடுவா ரம்மானை
பாவாணர் வாழி படித்தோர் மிகவாழி
பூவாணர் போற்றும் புகழுஞ் சரசுபதி
அன்பு பத்தியுள்ளோர் தங்களுமே வாழியதே
தாபமுடன்வந் தடைந்தோர் தாபரித் தோர் வாழியதே
ஆல்போல் தழைத்து யறுகதுபோல் வேரூன்றி
மூங்கில் போலன்ன சுற்றம் முசியாமல் வாழியதே

பிற்குறிப்பு

*1007 வருஷம் சித்திரை மாதம் 9–ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை ஆதித்த வாரத்தன்றைக்கு எழுதி முடிந்தது. இந்த ஏடு எடுத்தவன் படித்துப் போட்டு உடையார் முக்கந்தன் மகன் மாசான முத்து இடத்தில் குடுத்துப் போடவும்.*

குறிப்புரை

முதல் மூன்று ஏடுகள் எண் இன்றியுள்ளன. முதல் ஏட்டில் முற்குறிப்பு முடிந்தபின், 'நீடாழி யுலகத்து' என்ற காப்புப் பாடல் தொடங்குகிறது. மூன்று ஏடுகளில் காப்புப் பாடலும் நூல் பற்றிய சாரமும் இடம்பெறுகின்றன. பாரதக் கதையில் சில பகுதிகளை மட்டுமே தேர்ந்தெடுத்து, அவற்றை விவரித்துத் தனி நூலாக்குகின்ற வகையில் எழுந்த நூல்களுள் இதுவும் ஒன்று. வில்லிபாரதத்தின் மையக் கருவாய் இடம் பெற்ற நிகழ்வே கிருஷ்ணன் தூது சென்ற சருக்கமாகும். பஞ்ச பாண்டவர்களுக்காகக் கௌரவர்களிடம் கண்ணன் சொத்துரிமை கேட்டுச் செல்லும் பகுதியே நாட்டுப்புறக் கதைப் பாடல்களுக்கே உரிய இசையில் பேச்சு வழக்குச் சொற்கள் இயைந்து இந்நூற் பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. ஏட்டின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இறுதியில் மூன்று வெற்றேடுகள் உள்ளன.

## 780. குசலவர் சுவாமி கதை

**அ.** ***251:467***; **ஆ.** *1–72* ஏடுகள்; **இ.** 48.5 x 3செ.மீ.; **ஈ.** *6–7* வரிகள்; **உ.** நன்று; ஏடுகளின் பக்கங்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்தெழுதப் பட்டுள்ளன; **ஊ.** தெளிவு; **எ.** முழுமை; **ஏ.** *அச்சானது (நிறுவன வெளியீடு, 1995).*

முற்குறிப்பு

இவை கன்னங்குளத்திலிருக்கும் பொன்னையா நாடார் குமாரர் இராமநாடார் படித்து வருகிற குசலவர் சுவாமி கதை. நன்றாக. நீடுழி காலம் வாழ்க.

தொடக்கம்

அரனுகரா சிவசிவா சிவனே சரணம்
அரமை பார்வதி சிவசக்தி சரணம்
சிவசி வாசிவா சிவனே சரணம்
சிவனுமை பார்வதி சிவசக்தி சரணம்
கரிமுக வகணபதியே சரணம்
காரணி விநாய கியேஉன் சரணம்.
நாடா னதொரு நாடதிலே நல்ல அய்யோத்திமா நகர்தனிலே

தேச மானதோர் தேசத்திலே தெய்வஅயோத்திமா நகர்தனிலே
ஆடிக் கழித்ததோர் ஆவணிமுதற்தேதி அயோத்தி நாட்டிலே
இராமர்வந்தார்
வந்தார் மாயவர் வந்தாரென்பார் வர்ணத் தெருக்களை
அலங்கரித்தார்
தெருக்க ளென்றதோர் தெருக்களெல்லாம் தெருவில்
தோரணம் கட்டுவாராம்

முடிவு

பாடும்போது கேட்டவர்கள் பசையுடன் நன்றாய்த் தழைத்து வாழ்க
ஆல்போல் தான்தழைத்து அருகுபோல் வேரூன்றி
மூங்கில் போலன்ன சுத்தம் முசியாமல் தான்வாழ்க
அக்கம் பக்கம் உள்ளவர்கள் அனைவரும் நன்றாய்த் தழைத்து வாழ்க
ராமாவென்ற சொல்லைக் கேட்டவர்கள் மாநிலத்தில் நன்றாய்ப்
பெருகிவாழ்க
குசலவர்கள் கதையைக் கேட்டவர்கள் கோத்திர மெல்லாம் தழைத்து வாழ்க
லட்சுமி படுந்துயரம் அறிந்தவர்கள் நன்றாய்த் தழைத்து வாழ்க.

*குசலவர் சுவாமி கதை முற்றிற்று.*

குறிப்புரை

குசலவர் சுவாமி கதை எனும் இந்நூலில் முதல் ஐந்து ஏடுகளில் கடவுள் வணக்கம், விநாயக, ஆசிரிய வணக்கங் கள், வில்லுப் பாட்டுக்குத் துணை வேண்டுதல், பெற்றோர் வணக்கம், கதிரவன் வணக்கம், முதலான பாடல்கள் இடம் பெறுகின்றன. ஆறாவது ஏட்டில் நூல் செய்தி தொடங்கு கின்றது. இராமர் அரசியல் கதை தொடங்கி இராமருக்குச் சிங்காதனம் அமைத்தலோடு கதை முடிகின்றது. பின் அரி, அரன், அயன், சிரீராமர், குசலவர், குரு, தாய் தகப்பன் ஆகியோருக்கு வாழ்த்துப் பாடல் இடம் பெறுகின்றது. இறுதி ஏட்டில் கதை கேட்டதன் பலன் கூறப்படுகின்றது. இராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்ப அங்குச் சீதைக்குக் குசலவன் என்ற ஆண்மகவு பிறக்கின்றது. வால்மீகரின் அருள் ஆற்றலால் அசலவர் என்ற ஒரு ஆண் மகவும் உண்டாகின்றது. குதிரையைத் தேடிக் காட்டிற்கு வந்த இராமர் அனைவருடனும் அயோத்தி அடைந்து குசலவர்க்கு முடிசூட்டி, சீதையுடன் விண்ணுலகு அடைகின்றார் என்பது

இந்நூலின் கதையாக அமைகின்றது. முதலிலும் இறுதியிலும் ஒவ்வொரு சட்ட ஏடுகள் உள்ளன.

## 781. குருக்களாஞ்சி கதை

**அ. தாள்:16:45; ஆ.** *15* பக்கங்கள்; **இ.** முழுமை; **ஈ.** இந்தத் தாள் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

### தொடக்கம்

நாட்டிலேயும் நல்லநாடு நாவலர்கள் புகழும் நாடு
செந்நெல் கன்னல் விளையும்நாடு சிறுகதலி பழுக்கும் நாடு
கன்னல்செந்நெல் விளையும்நாடு கதலிக்குலை பழுக்கும் நாடு
தேன்கமுகு சோலைசூழுந் தென்னாட்டுச் சீமையிலே
மாங்கமுகு சோலைசூழும் வடநாட்டுச் சீமையிலே
மாதமூன்று மழையுமூன்று வருசமூன்று விளைவுமூன்றாம்
கதிரொழக்கு நெல்விளையுங் காஞ்சிபுர நாடதிலே

### முடிவு

வழிவழி வங்குசமாயது காத்து வருகுதப்பா
கோபாலசமுத்திர நாடதிலே குடியிருக்க குறுக்களாஞ்சி
பொய்சொல்லாப் பிள்ளை வங்குசத்தைக் காப்பாத்தி வருகுதப்பா
பாலோடே பவுசோடே - அது பாக்கியமாய் வைத்துக்கொண்டு
என்னேரமுங் காத்துக்கொண்டு இருக்குதய்யா குறுக்களாஞ்சி

முற்றிற்று.

### குறிப்புரை

இச்சுவடி கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் *8425* என்ற எண்ணுள்ள சுவடியாக உள்ளது. இச்சுவடிக் கட்டில் நம்பிராயன் கதை என்ற கதையும் உள்ளது. இச்சுவடிக் கட்டின் நிழற்படி இந்நிறுவனத்தில் தாள் சுவடியாக உள்ளது. இக்கதை ஆசியவியல் நிறுவனத்தின் வழி "The Wandering Voice' என்ற நூலில் வெளிவந்துள்ளது. இந்நூலிலுள்ள மூன்று கதைகளுள் இக்கதையும் ஒன்றாகும். ஏழு ஆண் மக்களையும், பூரணவல்லி என்ற பெண் மகளையும் உடைய இராம

சாஸ்திரி, முதலியார் இனத்துத் தூண்டிமுத்து என்பவனை யும் வளர்த்து வருகின்றார்.

இவன் தான் கற்ற மாயசித்து, பெண்வசியம் முதலியவற்றின் துணையால் பூரணவல்லியைக் கர்ப்பமாக்கி அவளுடன் வீட்டை விட்டு வெளியேறுகிறான். பெற்றோர் அவனைத் தண்டிக்கும்படி கூறி இறக்க, ஏழு அண்ணன்மாரும் அவர்களைத் தேடிக் கண்டு வெட்டி வீழ்த்துகின்றனர். பூரணவல்லியை வெட்டும் போது உச்சியில் விழுந்த வெட்டினால் அவள் குறுக்கிலிருந்து 'குறுக்களாஞ்சி' என்ற தேவதை வெடித்து வெளிவருகிறது. அது அண்ணன் மாரைக் கொன்றுவிட்டு ஊரில் பல அட்டூழியங்கள் செய்கிறது. அப்போது பகவதியம்மன் தோன்றி குறுக்களாஞ்சிக்குக் கோயில் கட்டி, சிலை செய்து வணங்க வேண்டும் என்று கூறுகிறது. அதோடு குறுக்களாஞ்சியை ஏழு கடாரத் திரவியத்தைக் காக்கும் காவல் தேவதையாகவும் வைத்துக் கொள்கிறது.

## 782. கோவலன் கதை

**அ. *432:678*;** **ஆ.** *1–178* ஏடுகள்; **இ.** 21 x 3செ.மீ.; **ஈ.** *6–8* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** கிறுக்கலான படிக்கக் கூடிய; பிழைமிகுந்த எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இப்பெயரில் வேறு சுவடி அச்சாகியுள்ளது.

**தொடக்கம்**

பூவுலகி லேபெரிய புகழ்மதுரை சொக்கருட
ஏவலினா லேஇருக்கும் எவ்வுலகும் கொண்டாட
காவுநறும் பூங்குழலாள் கண்ணகியாள் கணவனென்னும்
கோவலவன் கதைபாட குஞ்சரமே காப்பாமே.
சித்தி வினாயகனே தெய்வகுலக் கொழுந்தே
சத்தி கணபதியே தைய்யநல்லாள் புத்திரனே
வித்தைக்கு நாயகனே வேலவர்க்கு மூத்தோனே
பொரிகடலைப் பணியாரம் போதவேநான் படைப்பேன்
சத்தி கெவுமாரி சரசுபதி வந்துதவும்
புத்திவித்தை தந்தருள்வாய் பூதலத்து லட்சுமியே
கோவலன் கதைபாட கொம்பனையே காத்தருள்வாய்
கண்ணகியாள் கதைபாட காரணியே காத்தருள்வாய்.

முடிவு

வித்தைமதி தந்தருள்வாய் விநாயகனே வாழியதே
சொல்லிய வரங்குடுக்கும் சுப்பிரமணியர் வாழியதே
இட்டமுடன் கேட்டோர்க்கு ஈசுரனார் வாழியதே
துன்பவினை களெல்லாம் துலைந்திடுவார் வாழியதே
கேட்போர் படித்தோர்க ளெல்லாம் வாழியதே
ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூணி
மூங்கில்போல் அன்னசுத்தம் முசியாமல் வாழியதே

கோவலன் கதை முடிந்தது. முற்றும்.

பிற்குறிப்பு

*1413*–ஆம் வருசம் தை மாதம் *16*–ஆம் தேதி புதன்கிழமை வாரம் புனர் பூச நட்சத்திரம் கோவலன் கதை முடிந்தது.

குறிப்புரை

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகனான கோவலன், கண்ணகியை மணந்து, மாதவியை விரும்பிப் பொருளை இழந்து, மதுரை வந்து கொலையுண்டு இறந்த கதையை இக்கதைப் பாடல் விளக்குகின்றது. சிலப்பதிகாரத்தில் கூறப்படாத பல நிகழ்ச்சிகள் இதில் இணைக்கப் பட்டிருக்கின்றன. இதில் காளியே கண்ணகி வடிவில் பாண்டிய மன்னனுக்கு மகளாகப் பிறக்கிறாள். பின் பாண்டியன் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிடுவதால் அவள் வணிகனின் மகளாக வளர்கிறாள். வில்லுப் பாட்டு நடையிலமைந்த இந்நூல் கொச்சைத் தமிழ் கலந்ததாக உள்ளது. கோவலன் கதை என்ற பெயரில் வெளியான அச்சு நூலினின்றும் இது பல்வேறு நிலைகளில் மாறுபட்டமை கிறது. இச்சுவடிநூல் நிறுவனச் சுவடியியல் பட்டய ஆய்வேடாக அளிக்கப் பெற்றுள்ளது. முதலிலும் இறுதியிலும் சட்ட ஏடுகள் உள்ளன.

## 783. சாமி கதை

**அ.** ***253:469***; **ஆ.** *29* ஏடுகள்; **இ.** 50 x 3 செ.மீ.; **ஈ.** 4 - 9 வரிகள்; **உ.** இறுதி மூன்று ஏடுகளைத் தவிர மற்றவை நல்ல நிலையிலுள்ளன; ஏடுகளுக்கு எண்கள் இல்லை; **ஊ.** கடினம்; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

உயிலான நடையுஞ் செம்பொட்டுடையும் உயர்ந்தசெஞ்சொல்
குயில்கூவும் தெய்வக் குலக்கொழுந்தே கோதை வில்லியருள்
மயில்வாகனம் பெறமா தங்கள் சாமனாக நகர
வெயலு கருதாளுண்டு நமக்கொரு நாளும்வினை யில்லையே.

கயிலைவிட்டு வரும்வழிக்கு கனகமலை வாசத்தாயோ
ஆமெனவே சம்மதிக்க ஆதிநாராயணர் மகிழ்ந்து
ஏவல்செய்ய இடதுபுறம் எப்போதும் நின்றிடுவாய்
அன்றுஆயர் சொன்னபோது ஆமெனவே பூதவரும்

நின்றிடவே நெடியோனும் நேசமுள்ள நம்பியிடம் பூதத்துக்குப் பூசைசெய்ய பெருமாள்உத் தரவுசெய்தார்...

முடிவு

அந்தரஞ்சேர் கண்திறந்து அய்ங்கரனார் திருமுடியில்
சந்திரனைத் தான்தரித்த தவமேது தவப்பொருளே
ஆனநல்ல புரோசனங்கள் அங்கயிலே ஏந்தாமலே
மாறுமருவும் ஏந்தும் வகையேது மாமுதலே
செங்கைமலர் மல்லிகையும் சிறந்தஇரு வாச்சிபிச்சி
கொங்கை கரும்பூமாலை குளிர்மாலை, பொன்மாலை
அங்கம் கிறக்கவேதான் அடுமாலை சூடாமல்

குறிப்புரை

இக்கதைப் பாடல் அம்மானை வடிவில் இடம் பெறுகிறது. கயிலாசத்தின் சிறப்பு, சதுரகிரி மலையிலுள்ள ஆதிசங்கரனார் சிறப்பு, நாராயணனின் புகழ்பாடல், அவனது தோற்றப் பொலிவினை வருணித்தல், வேள்விப்பூசை, தியானம் முதலான செய்திகள் நூலுள் விளக்கப் பெறுகின்றன. ஏட்டின் ஒவ்வொரு பக்கமும் மூன்று பகுதிகளாகப் பிரித்து எழுதப் பெற்றுள்ளது. தொடக்கத்தில் நரம்பு பிரிக்கப்படாத ஒரு சட்ட ஏடு உள்ளது.

## 784. சிவன் பார்வதியைச் செம்படவனாக வந்து மணந்த கதை

**அ.** ***275:497***; **ஆ.** *1 - 29* ஏடுகள்; **இ.** 5.2 x 4 செ.மீ; **ஈ.** *8 - 11* வரிகள்; **உ.** நன்று; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. பார்வதி அம்மன் கதை என்ற பெயரில் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

## தொடக்கம்

சீரோர் செறிந்த நேமிதன்னில் சிறந்த படவில் அரனெறி
பாரோர் புகழ வலைவீசி படுமா மகர மதுபிடித்தே
வாரே செறிந்த குழலுமையை மணமே முகித்த கதைபாட
காரே செறிந்த கடவிகட களிறை முகவன் காப்பாமே!

சீர்செறிந்த பொன்னுங் கயிலைமலை செய்யச் சிவார் இருக்குமலை
பார்செறிந்த பொன்னின் கயிலைமலை பார்வதி பாகர் இருக்குமலை
ஆடரவும் மகப்பறை மழுமானும் அமைந்தங் கிருக்கின்ற கயிலைமலை
தேடரிய பொன்னுங் கயிலைமலை சிவமுனிவர் வந்து வணங்குமலை

## முடிவு

நின்றிடவே நெடியோனும் நேசமுள்ள நம்பியிடம்
பூதத்துக்குப் பூசைசெய்ய பெருமானுத் தரவு செய்தார்
அந்தபடி நம்பியோனும் யனுதினமும் பூசைசெய்ய
பூதவரும் அரிராமாவென்று புகழ்ந்தவர் இருந்தாலே!

## பிற்குறிப்பு

*1101 ஆம் ஆண்டு புரட்டாசி 15 ஆம் தேதி வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு எழுதி முடிந்தது.*

## குறிப்புரை

*நாட்டுப்புறத் தெய்வங்கள், சிவபெருமானின் திருமண நிகழ்ச்சி, கொடுத்த சீதனம், மீனவர்கள் நலம் பெற்று வாழ இறைவனை வேண்டுதல், பிறவி பற்றிய எண்ணம், மீனவர்களின் பழக்க வழக்கம், மீன்வகைகள், அணிகலன்கள், மரக்கல வகைகள் முதலான செய்திகள் நூலுள் இடம் பெறுகின்றன. திருவிளையாடற் புராணத்தில் ஒரு பகுதியான வலைவீசின படலமே பரதவர் குலத்தில் வளர்ந்துவந்த பார்வதி அம்மையை மணம் முடித்த கதை. நாட்டுப்புற பாடலாசிரியர் ஒருவரின் கற்பனைக்கும் எண்ண ஓட்டத் திற்கும் தகுந்தவாறு பல சிறப்புக் கூறுகளோடு இந்நூலாக அமைந்துள்ளது. ஏட்டின் ஒவ்வொரு பக்கமும் மூன்று பகுதிகளாப் பிரித்தெழுதப்பட்டுள்ளது. நூல் முடிந்தபின் ஒரு சட்ட ஏடு உள்ளது. இச்சுவடிநூல் நிறுவனச் சுவடியியல் பட்டய ஆய்வேடாகத் தரப்பட்டுள்ளது.*

## 785. சின்னணைஞ்சான் கதை

**அ.** ***376:617***; **ஆ.** 70 ஏடுகள்; **இ.** 54 x 3.5 செமீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஏடுகளின் ஓரப்பகுதிகள் சிதைந்துள்ளதால் ஏட்டெண்களை அறிய இயலவில்லை; ஏடுகள் முறைமாறி உள்ளன; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகியுள்ளது (நிறுவன வெளியீடு, *1998*).

தொடக்கம்

நாடான நாடு நல்ல... நாடு
நாடகங்கள் கேட்டு விளையாடும் அவர்நாடு
சூடானது போலிருக்கும் துங்க வளநாடு
சொல்தவறா மனுநீதியின் தோரண வாசலும்
வேடர் மனைதோறும் மயில் கூவி விளையாடும்
விதம் விதமாய் நெல்விளையும் வேந்தர் குலநாடு
ஆடவர்களும் பரிமேல் ஏறும் மலைநாடு
அண்டரச னானகுல தென்காசி மன்னன்
ஆண்டிருந்தார் சீர்வர்ம ராசன் எனவேதான்
குண்டங்களும் புரல கோடிப் படையோடே
கோட்டை யுடன்கொத் தலங்களும் மதில்களும்
வேட்டமுடன் சீர்வர்ம ராசமன்னன் தானும்
நாட்டை எல்லாம் கட்டிஅரசாண் டிருக்கும்நாடு

முடிவு

ஊரிலுள்ள கோடிமார் உனைநின்று கவிகூற
உத்ததிருப் புகழ்பாடி ஊரிலுள்ளோர் தான்மகிழ
அருதிபர தேசியர்கள் அரகரா வென்றசந்தம்
கோப்பாலா அரிகரா வெண்ண கோவிந்த வென்றசத்தம்
தேவாதிமார் கூட்டங்களும் திருச்சிறப்பும் திருமாலும்
சண்முகவிலாச மானதிலே தவம் செய்வோர் சதாகோடி
இப்படியே செந்திவனம் இவர்கள் கண்டு மனமகிழ்ந்து
... ... ... ... ...
சிவபூஜை மிகமுடித்து செந்தில் வேலவரைத் தான்நினைந்து
திருவாசல் தன்னில்வந்து சிவன்மகன் தன்னைக் கண்டான்.

குறிப்புரை

**அம்மானை வடிவம்.** தென்காசிப் பகுதியை ஆண்ட சீவலமாறனின் மருமகனான சிவனணைஞ்ச பெருமாள், தன் மாமனின் ஆணைக்கிணங்க ஒரு பகுதியை ஆட்சிசெய்து வருகிறான். தீண்டத்தகாத வண்ணார் குலப் பெண்மீது கொண்ட காதலால் மாமன் சீவலமாறனின் படையுடன் மோத நேரிடுகிறது. தோல்வி யுறும் நிலையில் சிவனணைஞ்ச பெருமாள், வண்ணாத்தி சின்னணைஞ்சியின் வேண்டுகோளின்படி அவள் கழுத்தை அறுத்துவிட்டுப் படையினரின் கையில் சிக்காமல் தானும் குத்திக்கொண்டு மாண்டுவிடுகிறான். இறுதியில் இருவரும் சிவலோகஞ் சென்று அங்குச் சிவனின் வேண்டுகோளின்படி அவுணரை அழித்து, சிவனின் திருத்துடையில் வைத்துப் போற்றப்பட்டுத் திரும்பவும் பூலோகம் வந்து தெய்வமாகிப் பூசையுண்டு இருந்தனர். முடிவுப் பகுதி கதை முடிவு நிலைக்கு வந்தாலும் இறுதிப் பகுதியான சிலவரிகள் இல்லை. தாள்: *28:59* என்ற எண்ணிலமைந்த நூல் இதுபோன்றதே.

## 786. சின்னணைஞ்சான் கதை

**அ.** **தாள். 26:57;** **ஆ.** *1 - 58* பக்கங்கள்; **இ.** குறை. **ஈ.** அச்சானது (*நிறுவன வெளியீடு, 1998*).

தொடக்கம்

பொன்னிலங்கு தென்கயிலை வாழும் பரனாரும்
பூதலமளந்த திருமாலுந் துணை யாமே
கன்னிபர மேஸ்பரியா ளீன்றெடுத்த பாலன்
கணபதியுஞ் செந்தில்வளர் கந்தன்துணை யாமே
வந்தருள வேணுந் தெய்வயானை வள்ளி தாயே
மாது பொன்னுருவி கதை வையகத்தில் கூற

முடிவு

களமது தன்னில் வந்து கவலைதா னில்லையே
வளமொடுஞ் சேனை சூழ மங்கையர் குரவை பாட
உளமது வுருகி வாடி அன்னைபோ லொருவள்
சளமது வய்யோ வென்று தலையாரி மழுவெடுத்தான்

பிற்குறிப்பு

ஆறுமுகப் பெருமாள் நாடார் எழுதிய ஏடு.

குறிப்புரை

இத்தாள் சுவடியானது ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் உள்ள சுவடியின் (எண். *46 - 47*) நிழற்படப் பிரதி ஆகும். தென்காசி, செங்கோட்டைப் பகுதிகளை ஆட்சி புரிந்த சீவலமாறனின் தங்கை மகனான சிவனணைஞ்ச பெருமாள் எனும் சின்னணைஞ்சான், வண்ணார் குலத்தவளான சின்னணைஞ்சி எனும் பெண்ணை விரும்புகிறான். அவளைத்தன் அரண்மனையிலேயே உடன் வைத்து வாழ்வதை அறிந்த மாமனும் மன்னனுமான சீவலமாறன் அவள் தொடர்பைத் துண்டித்துவிட்டுத் தன் மகளை முறையாகத் திருமணம் செய்யக் கூறுகிறான். ''வண்ணாத்தியான சின்னணைஞ்சி தவிரப் பிற பெண்ணுக்குத் தன் வாழ்வில் இடம் இல்லை'' என்று சின்னணைஞ்சான் உறுதியாக மறுத்துவிட, சினம் கொண்ட சீவலமாறன் படையை ஏவி மருமகனான சின்னணைஞ்சானைப் பிடித்து, மன்னர் குலத்தில் உதித்த ஒருவன் தீண்டத்தகாத குலத்தவருடன் உறவு பூணுவதற்குச் சின்னணைஞ்சான் ஒரு எடுத்துக்காட்டாகக் கூடாது என்று மழுவால் வெட்டிக் கொல்ல ஆணையிடுகிறான். வெட்ட மழுவெடுப்பது வரைதான் கதை உள்ளது. முடிவுப் பகுதி இல்லை. ***376:617*** என்ற எண்ணில் அமைந்த நூல் இதுபோன்றதே.

## 787. ஞானசவுந்தரி(ய) அம்மானை

**அ.** ***588:946***; **ஆ.** *1 - 104 (101)* ஏடுகள்; **இ.** 36.5 x 3.5 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள். **உ.** ஓரளவு நல்லநிலை; இறுதிப் பகுதியிலுள்ள 30 க்கும் மேற்பட்ட ஏடுகளின் ஓரப்பகுதிகள் உடைந்துள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப் போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

முற்குறிப்பு

இயேசுவே ரட்சியும் வடிய நாடானுடைய அம்மானை நீடூழி வாழ்க.

### தொடக்கம்

பொன்னுலகம் பூலோகம் பொருந்தி நிறைந்தோர் பேரருளாய்
நின்னிலங்கு மெய்ப்பொருளே நித்தியனே கத்தாவே
உன்னுதவி கொண்டடியே ரோமாபுரி தனிலே
தென்னவன் தருமருட தேவியர் ஈன்றெடுத்த
ஞானசவுந் தரியாள்...

### முடிவு

சீரிலங்க எங்களுட தேசம் சிறந்திலங்க
உத்தார் உடன்பிறப்பு உகந்தோர் மகிழ்ந்திலங்க
இத்தரையில் மானிடர்கள் யெல்லாரும் சிறந்திலங்க
சிற்றின்பம் கீழாகத் தேவமறை மேலாக
சத்திய வேத செகலருங் கைக்கொண்டிருக்க

### குறிப்புரை

இந்நூல் அம்மானை வடிவில் செய்யப்பட்ட ஒரு கிறித்தவ கதைப்பாடல். சிற்றன்னையின் கொடுமையால் பாதிக்கப் பட்ட மன்னர் மகளான ஞானசவுந்தரி பலவிதமான துன்பங்களுக்கு உட்படுத்தப்படுகிறாள். ஆனாலும் ஏசுபிரானின் இன்னருளால் அத்துன்பங்களை எல்லாம் தாங்கிக் கொள்கிறாள். இத்துன்பங்களின் உச்ச கட்டமாக சிற்றன்னையும், ஆட்சியைக் கைப்பற்ற விரும்பிய மதகுருமார்களும் சேர்ந்து ஞானசவுந்தரியின் தந்தை வெளியில் சென்றிருந்த காலகட்டத்தில் அவளைக் காட்டிற்குக் கொண்டுசென்று மாறுகால், மாறுகை வெட்டி விடுகின்றனர். அவ்வழியாக வந்த வேற்று நாட்டு இளவரசன் ஒருவன் ஞானசவுந்தரியின்பால் கருணை கொண்டு அவளைத் தன் நாட்டிற்குக் கொண்டுசென்று மருத்துவம் செய்கிறான். அவர்கள் இருவருக்குமிடையே காதல் மலர்கிறது. பரமபிதாவின் இன்னருளால் ஞானசவுந்தரி இழந்த கைகால்களைப் பெறுகிறாள். ஞானசவுந்தரியின் காதலன் அவள் சிற்றன்னையைத் தண்டித்து, சூழ்ச்சியால் கவரப்பட்ட நாட்டையும் மீட்கிறான். ஞானசவுந்தரியின் தந்தை அந்த இளவரசனுக்கு மகளை மணமுடித்துத் தருகிறார். 'சிட்டாடல் பிலிம்ஸ்' என்ற பண்டைய திரைப்

படக் கம்பெனி ஒன்றினால் இக்கதை திரைப் படமாக்கப் பட்டு மிகுந்த செல்வாக்கினைப் பெற்றது என்பது குறிப் பிடத்தக்கது. 'ஆதியே இன்ப சோதியே' என்ற ஞானசவுந்தரி பாடுவதாக அமைந்த இப்பாடலும் மக்களிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்திய பாடலாக அமைந்தது.

## 788. தடிவீரன் கதை

**அ.** *தாள்:13:42*; **ஆ.** *15* பக்கங்கள்; **இ.** முழுமை; **ஈ.** அச்சானது (நிறுவன வெளியீடு - *1996*).

தொடக்கம்

செந்திநகர் பட்டணத்தில்
 செம்பாரக் குடும்பனென்றும்
சந்திரக் குடும்பன் சூரியக் குடும்பன்
 தானே யிந்த மூவர்களும்
ஏழுரு பச்சேரிக்கும் இசமான்
 செம்பாரக் குடும்பனென்று
வடகரையுந் தென்கரையும்
 மேல்கரையுங் கீழ்க்கரையும்
நாலுகரையு மவர்உழுது
 நலமுடனே பயிர்கள் செய்தார்

முடிவு

மலையிலுள்ள மிருகங்களை
 வதபெலிகள் தான்குடுத்தார்
தடிவீர னென்று நிலையமிட்டு
 தாடாளர் போட்டுத் தான்குடுத்தார்
அன்றுமுதல் பட்டணத்தில்
 அமர்ந்தது தான் கக்கலது
வெயிலுங் காத்தும் வேறொழிய
 விக்கின மில்லாமல் காத்தருள்வாயே

*தடிவீர சுவாமி கதை முற்றும்*

பிற்குறிப்பு

கொல்லமாண்டு *1054* சித்திரை மாதம் *17* ந் தேதி அழநேரி.

குறிப்புரை

இத்தாள் சுவடியானது கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள சுவடியின் (எண்.8440) நிழற்படப் பிரதியாகும். இது கொல்லம் ஆண்டு 1054 (கி.பி.1879) சித்திரை மாதம் 17 ஆம் தேதி எழுதப்பட்டது என்பதை ஓலைச் சுவடியின் இறுதிக் குறிப்பு காட்டுகின்றது. வண்ணார் குலத்தில் சங்கரனார் அருளால் பிறந்த 'மந்திர மூர்த்தி' மந்திரப் பயிற்சிகள் அனைத்தையும் கற்றவன். திருச் செந்தூரில் குடும்பமார் தலைவனாகத் திகழ்ந்த செம்பாரக் குடும்பன் வீட்டாருக்கு மந்திரமூர்த்தியின் பெற்றோர் துணி வெளுத்துக் கொடுத்து வந்தனர். செம்பாரக் குடும்பன் மகளைத் தன் மந்திரப் பயிற்சியால் மந்திரமூர்த்தி வசியப்படுத்தி அவளுடன் பிறர் அறியாமல் உறவு கொண்டு வருகிறான். இதனையறிந்த அவளது அண்ணன்மார் அவனைக் கொல்ல பலவாறு முயன்றும் அவனிடமுள்ள மந்திர சக்தியால் அவனைக் கொல்ல இயலவில்லை. இறுதியில் அவனே மந்திர சக்தியைப் பயன்படுத்துவதை நிறுத்தி அவர்களால் மடிகின்றான். மடிந்த மந்திரமூர்த்தி ஊருக்குத் துன்பத்தைக் கொடுக்க, மக்கள் ஒனறுகூடி நிலையமிட்டு, தடிவீர சுவாமிக்குப் பலிகள் கொடுத்து வணங்க, அன்றுமுதல் மக்களைக் காத்து வருகிறார் தடிவீர சுவாமி என்பதாகக் கதை அமைகிறது. கதை நடந்த காலம் 16 ஆம் நூற்றாண்டு என்பதற்கான குறிப்புகளை நூல்வழி அறிய முடிகிறது.

## 789. தோட்டுக்காரி கதை

**அ.** ***250:466***; **ஆ.** *1 - 61* ஏடுகள்; **இ.** 43.5 x 3 செ.மீ.; **ஈ.** 6 - 7 வரிகள்; **உ.** நன்று; **ஊ.** அழகிய எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** அச்சானது (நிறுவன வெளியீடு - *1995*).

முற்குறிப்பு

இவை கன்னங்குளத்திலிருக்கும் இரா. பொன்னையா நாடார் குமாரர் - இராமநாடார் - படித்து வருகிற தோட்டுக்காரி கதை. குருவை வணங்குவது குணம். கல்வி அழிவில்லாத பொருள்.

புத்திரனைப் பெறுவது பூலோகத்தில் மாதர் கடன்
கடவுளை வணங்குவது காருண்ணியத்தில் பாலர் கடன்
பிள்ளைதான் குற்றம் செய்தால் பொறுப்பது பிதாவின் கடன்
காலதூதர் வரும்பொழுது காப்பது கடவுள் கடனே.

தொடக்கம்

சீரணி செல்வ மோங்கும் தெச்சணாப் பூமி தன்னில்
பாரணி யான முட்டப் பதிதனில் தோட்டுக் காரி
தாரணி தனில்பி றந்த கதைதனை வில்லில் கூற
காரணி யுமையாள் யீன்ற கணபதி காப்ப தாமே.

நாடான நாடதிலே நல்ல புகழ் நாடதிலே
வாடாத பகவதியாள் வாழும்நல்ல நாடதிலே
நீடுபுக ழாகவேதான் நின்னிலமெல் லாம்புகழும்
மாடுதென்னி லேறுகின்ற மகதேவர் திருவருளால்
கடலாம் திரைமுகமாம் கனகமணி மண்டபமாம்
அடவான கொடிமரமாம் அதியமணி பொற்தேரும்
தென்குமரி நாடதிலே தெச்சணா பூமியிலே
சீரிலங்கும் நன்னாடு சிறப்புடையோன் தன்னாடு.

முடிவு

...
பலசொரூப மாடிவாறாள் என்னாச்சியார் பலசொரூப மாடிவாறாள்
பல சொரூப மாடிவாறாள் பல சொரூபக் காரியம்மன் மாடிவாறாள்
கருங்கிடாய்க் காரனையும் பலசொரூபக் காரியையும்
காசினியி லுள்ள மனுவோர்கள் தொழவும்
தோட்டுக் காரியம்மைக் கதையைப் படிப்போரும்
வலங்கைக் குலத்திலுதித்த மாகாளி புத்திரரும்
மறைவாழி தமிழ்வாழி மானிடர் வாழி
மங்கையுமை பங்கிலுறை சங்கரரும் வாழ்க
நித்திய கல்யாணமாய் நீடூழி காலம் வாழ்க
நிறைவுடனே கன்னங்குளம் ஊரதுவும் வாழ்க.

தோட்டுக்காரி கதை முற்றிற்று.

பிற்குறிப்பு

இந்த ஏடு எழுதினவர் மாடநாடார் குடியிருப்பிலிருக்கும் ராமசுவாமி நாடார் குமாரர்பால்நாடார் என்ற சுப்பிரமணிய நாடார். இந்த ஏடு கன்னங்குளம் பொன்னையா நாடார் குமாரர் ராமநாடாருக்கு. யாரும் எடுத்துப் படிக்கலாம். திருடக்கூடாது. இந்த ஏடு எழுதி முடிந்தது. 1907 ஆம் ஆண்டு ஆடி மாசம் செவ்வாய்க்கிழமை மாலை மணி 4 க்கு.

குறிப்புரை

விநாயகர், திருமால், இலக்குமி, சரஸ்வதி முதலிய பல கடவுளர் வணக்கத்துடன் தொடங்கி, நாட்டுச் சிறப்பினைக் கூறும் இந்நூல் பலவகையான இலக்கியச் செய்திகளையும் விதி, தானம், சடங்கு, கோயில் திருப்பணிகள், நிமித்தம், கனவு, தீவினை என்ற பலவகையான நம்பிக்கைகளையும் கூறிச் செல்கின்றது. 'தோட்டுக்காரி அம்மன் கதை' என்னும் பெயரில் பல சுவடிகளைக் கொண்டு ஆறுமுகப் பெருமாள் நாடார் என்பவரால் பதிப்பிக்கப் பெற்ற அச்சுநூல் *1967* இல் வெளியாகியுள்ளது. இச்சுவடிக்கும் வெளிவந்த அச்சுநூலிற்கும் இடையே சில வேறுபாடுகள் உள்ளன. முட்டபதிக் கோனாண்டி ராசன் மகள் தோட்டுக்காரியை குமரப்பன் விரும்பிப் பெண் கேட்க, கோனாண்டி பெண் தர மறுப்பதால் இருவருக்கும் போர் நடக்கிறது. கோனாண்டி மடிந்ததை அறிந்த தோட்டுக்காரி சிவனருளால் வேள்வி பெற்று மடிகிறாள். குமரப்பனும் வேள்வியில் மடிகிறான். இருவரும் தெய்வமாயினர் என்ற மையக்கதை இரண்டிலும் ஒன்றுபோலவே அமைகிறது. இச்சுவடிநூல் நிறுவனச் சுவடிப் பட்டய ஆய்வேடாக *1988*ல் அளிக்கப் பெற்றுள்ளது.

## 790. நாட்டுப்புறக்கதை

**அ. 299:524**; **ஆ.** *36* ஏடுகள்; **இ.** 40 x 3 செ.மீ.; **ஈ.** 4 - 5 வரிகள்; **உ.** ஏடுகளுக்கு எண்கள் தரப்படவில்லை; ஏட்டின் இறுதிப் பகுதி பல ஏடுகளில் சிதைந்துள்ளன; **ஊ.** பிழை மிகுதி; தெளிவு சற்றுக் குறைவு; **எ.** குறை; **ஏ.** அச்சாக வில்லை.

தொடக்கம்

சோதித்துப் பாராமல் எல்லோருமே அமட்டி பொல்லாப்பு நேர்ந்த தென்பான் என்றால் மலர்ந்து இந்திரனை நிலை கலங்கியே உரைக்குக் கல்லவடா இந்திரனே சொல்ல வந்தாய் சேதி தனை ஆரடா சண்டாளா பாரடா உந்தனுட ஆணவமதை இவளோட மனத்தைப் பாழ் அடைய வைக்கிரண்டா வாடா வெளியே என்பாள்.

முடிவு

தேதி அறுபத்து மூன்று நாயனார்மார்களுக்கும் சேர்த்துத் தேதியை அளித்தோர் செகத்தினில் புகழ்பெறத் தோன்றி அந்தமுள்ள பாவி அவர் முடுகி சேதி அறிந்து மதசேன் விதினைகள் செய்தாரோடி எந்தன் நேசன் சீக்கிரத்தில் சென்றோடிப் பார்த்து வாயென் தோழி முடுகி செங்கமலத் தாதியரே பாங்கினாம்.

குறிப்புரை

இந்நூலில் இடம்பெறும் நாட்டுப்புறக் கதை பேச்சு வழக்குச் சொற்களை மிகுதியாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ளது.

## 791. நம்பிராயன் கதை

**அ. தாள். *17:46*; ஆ.** *18* பக்கங்கள்; **இ.** முழுமை. **ஈ.** *அச்சாகாதது.*

தொடக்கம்

கணபதியும் யென்குருவும் கினாவதிலும் நான்மறகேன்
குணபதியே அறுமுகனே குஞ்சரமே நான்மறவேன்
பாடுவேனே நானுமுன்னைப் பலகாலம் உனைத்தொழுவேன்
கூறுவேனே நானுமுன்னைக் குற்றம்பிழை யொன்றும் பாராமல்

முடிவு

சொரிமுத்து ஐயரைச் சேர்வை செய்து
தோகை மலரடியை அடிபணிந்து
யென்மகனே பொன்மகனே
யேற்றபிள்ளை சங்கிலி பூதத்தானே
யென்னுடைய வாசலிலே
யிருக்கவேணும் கேத்திரிப் பாலனே
முந்தின பூசைக்குத்தான் முதற்பூசை
உந்தனக்கு
வாசலுக்கு மந்திரியாய்
வாய்த்தபிள்ளை யிருக்கலுற்றான்.

பிற்குறிப்பு

*1611 மேற்படி வருசம் அப்பசி மாதம் 20-ந் தேதி புதன்கிழமை நம்பி கதை முகிர்ந்தது முற்றிற்று.*

குறிப்புரை

இச்சுவடி கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் *8425* என்ற எண்ணுள்ள சுவடியாக உள்ளது. இச்சுவடிக் கட்டில் 'குருக்களாஞ்சி கதை' என்ற கதையும் உள்ளது. இச்சுவடிக் கட்டின் நிழற்படி இந்நிறுவனத்தில் தாள் சுவடியாக உள்ளது. ஏழு அண்ணன்மார்களைப் பற்றியும், மந்திர, மாந்திரீக வேலைகளின் செய்முறை பற்றியும், உழவுத்தொழில் பற்றியும், நம்பியுட கோவிலில் வேண்டிப் பிள்ளை வரம் பெறுதல் பற்றியும் போன்ற பல செய்திகள் நூலுள் இடம் பெறுகின்றன. மலையாள நாட்டைச் சேர்ந்த கதையாக இருப்பதால் மந்திரச் செயல் களுக்கு அதிக முக்கியத்துவம் கதையில் தரப்பட்டிருக்கிறது.

## 792. பஞ்சத்தியாயம்

**அ.** ***338:570;*** **ஆ.** *1- 412* ஏடுகள்; **இ.** *48 x 2.5* செ.மீ.; **ஈ.** *5 - 6* வரிகள்; **உ.** நன்று; சில ஏடுகள் சிதைவு; ஒவ்வொரு பக்கமும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது; **ஊ.** ஓரளவு கடினம்; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

துய்யதவ சுடையோர் துலங்கும் பெருந்தவற்றோர்
வேதமொரு நான்கும் விளங்குகின்ற சாத்திரமும்
போதமெனவே புகழ்கலை ஞான மோடு
புண்ணிய மாய்நின்ற புராணமுத லாகமமும்
வண்ணமெனக் கற்றவர்கள் மறையோதும் நாவுடையோர்

சீர்பெரு மீராறுபருவ... சென்றிடும்
பேர்பெரும் வேள்வியைப் பெரிதி யாறுவான்
வார்பெரும் பலாமர வனங்கள் சுற்றிய
வேர்பெரு நைமி சாரணியத் தெல்லை வாய்வு

முடிவு

நன்னயமாய்ப் பேறுபெற்ற நல்லவிட மிதுகாண்
இந்தநதிப் பெருமைஇனிப் பேணாது வாயார
விந்தையுடன் சொல்லரிது வேதவீதி யாகையினால்
பெருகுகின்ற பிரயாகக் கார ணத்தைப்
பூராய மாயொரு வர்புகழ முடியாது
என்றுசொல் லுறோமே மினியாறு மெய்களுடன்

குறிப்புரை

நாட்டுப்புறப் பாடல் வடிவான அம்மானை நடையில் கதை அமைகிறது. தவத்தின் அருமை, முனிவர்களது பெருமை, ஞானத்தின் ஆற்றல் முதலானவற்றை இயம்பும் இக்கதையில் பராசர முனிவர், கோசிகன், வசிட்டர், இராமன், மாரீசமுனி, சடைமாமுனி, வியாசமுனி முதலான பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. 26 அத்தியாயங்களில் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒவ்வொரு கதை இடம் பெறுகின்றது. முதல் 4 ஏடுகளுக்கு எண்கள் இல்லை.

| **அத்தியாயங்கள்** | **கதைகள்** |
|---|---|
| 3 | விஞ்சையன் கதை |
| 4 | மிருகசிங்கன் கதை |
| 6 | சுவாத்தை கதை |
| 7 | உயிர் பெற்ற கதை |
| 8 | புண்ணிய கதை |
| 9 | பாவ கதை |
| 10 | புக்களன் கதை |
| 11 | சம்பு கதை |
| 13 | கலியாணக் கதை |
| 14 | நித்திய கர்மத்தின் கதை |
| 17 | மார்க்கண்டன் கதை |
| 18 | தீர்த்த யாத்திரைக் கதை |
| 19 | சுவாத்தன் கதை |
| 20 | வீமன் ஏகாதேசிக் கதை |
| 21 | சிவராத்திரி மான்மியக கதை |
| 23 | சிவராத்திரி பூசைக் கதை |
| 24 | சுந்தோப சுந்தன் கதை |

பஞ்சத்தியாயம் இரண்டாங்கதை, குண்டலன், விகண்டலன் கதை, பஞ்சத்தியாயம் மூன்றாங் கதை, காஞ்சனமாலை கதை, பஞ்சத்தியாயம் நாலாங்கதை அக்கினிபன் கதை, பஞ்சத்தியாயம் ஐந்தாம் கதை சித்திர சேனன் கதை, வண்டான பட்சி கதை, அக்கினிபன் சாபந் தீர்ந்த கதை முதலான தலைப்புகள் உள்ளன. பல கதைத் தலைப்புகள் சிதைந்துள்ளன.

## 793. பாகவத அம்மானை

**அ.** ***166:349***; **ஆ.** *1 - 375* ஏடுகள்; **இ.** 37.5 x 3.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

சதுமறையில் நர்த்தமிடுந் தற்பரனார் சொற்படியே
பொதுவியர்க ளெல்லோரும் புனலாடுதற் கெழுந்தார்
திரையமுனை நன்னதியிற் சென்றுநீ ராடியபின்
வரையதனை நோக்கி வணங்கிக் குலவையிட்டு
காரார் புகைபோய்க் ககனந் தனைமறைக்கச்
சீராகப் பொங்கலிட்டார் தேன்மொழியா ரெல்லாரும் (67)

முடிவு

புனத்துளப மாலைப் புருடோத்த மன்கதையை
மனத்தின் மகிழ்ச்சிபெற வாகாய்ப் படிப்பவரும்
இனித்தவமு துண்பவர்போ லின்புற்றே கேட்பவரும்
நினைத்தவரம் பெற்றுலகில் நீடூழி வாழியதே.

பிற்குறிப்பு

சுபகிருது வருஷம், மார்கழி மாதம், 20 ஆம் தேதி சோமவார நாளும் உத்திராட நட்சத்திரம் நாழிகை 24½ க்கு மேல் திருவோணம் லக்கினமும் மிதுனம் சாத்மீக வேளையும் துதிகை திதியும் கூடிய சுபயோகச் சுபதினத்தில் பாகவதம் முத்தால நாயக்கர் குமாரன் வேங்கடபதி நாயக்கன் எழுதி முடிந்தது. முற்றும்.

குறிப்புரை

இந்நூல், பிருந்தாவனம் அடைந்த கதை, கோபியர் துகில் கவர்ந்த கதை, மங்கையருணவளித்த கதை, மதுரை கண்ட கதை, கஞ்சனைக் கொன்ற கதை, குறவன் மைந்தனைக் கொண்டுவந்த கதை, சராசந்தனொடு பொருத கதை, முசுகுந்தர்க்கருள் செய்த கதை, பிரத்துனன் பிறந்த கதை, நாரதர்க்கு மனைதொறுந் தோன்றின கதை, வசுதேவர்க்கு நாரதர் தத்துவமுரைத்த கதை, ருக்குமணி திருமணமுரைத்த கதை, பவுண்டனைக் கொன்ற கதை, சாம்பன் மணம் புரிந்த கதை, சிசுபாலனைக் கொன்ற கதை, சமந்த பஞ்சகத்திற் சென்ற கதை, சுமத்திரையைப் பார்த்தன் மணம் புரிந்த கதை, பிருகுமுனி சென்ற கதை, குரு புதல்வரைக் கொணர்ந்து தந்த கதை, கண்ணன் யுத்தவர் தத்துவங் கேட்ட கதை, தேத்தாத்திரேய் ரேதுவுக்கு இருபத்தினாலு குருவைப் புத்தியில் அடைத்துரைத்த கதை, கண்ணன் உத்தவர்க்கு ஞான கர்மமுரைத்த கதை, கண்ணன் சனகாதியர்க்குக் குணவிகார முயிர்க்கில்லையென்று உரைத்த கதை, யோகசித்தி உரைத்த கதை, உத்தவர்க்கு இயமநியமம் உரைத்த கதை, தெசகால கதை, தத்துவமுரைத்த கதை, அந்தணர் நிந்தை பொறுத்த கதை, குணமொன்றுடன் ஒன்று கலத்தலுரைத்த கதை, சூரிய கதியுரைத்த கதை எனப் பல்வேறு கதைகள் உள்ளன. இறுதியில் ஐந்து வெற்றேடு கள் உள்ளன.

## 794. பாகவத அம்மானை

**அ. 417:661; ஆ.** *1 - 112* ஏடுகள்; **இ.** 41.5 x 3.5 செ.மீ.; **ஈ.** *7 - 8* வரிகள்; **உ.** இடையில் ஒருசில ஏடுகள் இல்லை; நல்லநிலை; ஏட்டின் ஓரப்பகுதிகள் மிக இலேசாகச் சிதைந்துள்ளன; **ஊ.** சுமாரான கையெழுத்து; ஏட்டின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு பகுதிகளாகப் பிரித்தெழுதப் பட்டுள்ளது; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

சீர்பூத்த மெய்யிற் செகம்பூத்தோன் பைந்துளப
தார்பூத்த மார்பனிரு தாமரைப்பா தந்தொழுவேன்
நிலமளந்தோன் மார்பிடத்தில் நீங்காமல் வாழுகின்ற

மலர்மடந்தை பாத மலரைமுடி மேற்புனைவேன்
கொங்கலர்செந் தாமரைக்கை கொண்டகோ தண்டம் வில்வாள்
சங்கினொடு சக்கரமுந் தண்டுந் துணையாமே

முடிவு

துவரைத் திருநகரில் வந்து யோரைந்து விம்ம
குவளைக் கண்மாதி னோர்க் கொண்டல் வண்ண
னெய் தினனே

முற்றும்

பத்திரைக் கலியாணம் பகர்ந்தோடி மிலக்கணையை
மைத்த கார்வண்ணன் மணம்புரிந்த வாறுரைப்பான்
மலர்க்கண் வளர்வாளுரையு மத்திர்நாடாளு மன்னன்
இலக்கணை யென்றே பேரிசைந்த வளையான
தெடுத்தான்
நீரிலேஇலது ஒன்றும் நிழல் தெரிவதல்லாமல்

குறிப்புரை

துகில் கவர்ந்த கதை, கோவியர்களாடையைக் கொண்ட கதை, கண்ணன் பிறந்த கதை, சகடக்கதை, கோவர்த்தன கிரியை குடை பிடித்த கதை, கோவியரைச் சேர்ந்த கதை, திருமாலின் சகடக் கதை, காலன் மைந்தனைக் கொண்டுவந்த கதை, சராசந்தனோடு போர்; சங்கு சூடனசுரனைக் கொன்ற கதை, நாரதர் கஞ்சனோடு உரைத்த கதை, உத்தவன் கோகுலம் விடுத்த கதை, இலக்கணை கலியாணம், மதுரை கண்ட கதை, கஞ்சனைக் கொன்ற கதை, அக்குரானை அத்தி நகரத்துக்கு விடுத்த கதை முதலான தலைப்புகளில் அவதாரச் சிறப்புகள் அம்மானையில் பாடப்பட்டுள்ளன. 110 ஆவது ஏட்டை அடுத்து 151 ஆவது ஏடு ஒன்று உள்ளது. அதனை அடுத்து உள்ள இறுதி ஏட்டில் நூலின் தொடக்கம் மீண்டும் எழுதப் பெற்றுள்ளது. நூல் குறையாக இருப்பினும் தொடக்கமும் முடிவும் உள்ளன.

## 795. பாகவத அம்மானை

**அ.** ***456:703***; **ஆ.** *1 - 379* ஏடுகள்; **இ.** 40 x 3.5 செ.மீ.; **ஈ.** *6 - 8* வரிகள்; **உ.** ஓரளவு நல்லநிலை; பல ஏடுகள் செல்லரிக்கப்பட்டுத் துளைகள் உள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு. **எ.** முழுமை; **ஏ.** அச்சாகவில்லை.

## தொடக்கம்

திருமேவும் பாகவதச் செந்தமிழம் மானைசெப்ப
கருமேவும் கடல்மேனி கண்ணனடி காப்பாமே
பானத்... திருமால் பாகவதம் பாடுதற்கு
சேனைத் தலைவன்மலர் சேவடியை நாவில்வைப்பான்
பாந்தள் ... பாம் பாகவதம் கூறுதற்கு
காந்தா மறைநேர் கருடனைக் கைகுவிப்பேன்

## முடிவு

கருவிளையாட் டைக்களையும் கண்ணனன்பால் மண்ணினிற்செய்
திருவிளையாட் டென்னபரிச் சித்துஅப்பால் கேட்டதென்ன
சுகமுனிவன் வாய்திறந்து சொன்னதென்ன உட்பகையை
மிகமுனிவோய் எல்லாம் விரித்துரைக்க வேண்டுமென
தக்கநைமி சாரண்யம் சார்ந்தமுனி வோர்கேட்க
தொக்கவறி வுக்கறிவாய் சூதம்விரித் தோதலுற்றான்

காந்தம் ஒன்பது - மரபுஉரைத்த கதை முற்றும்.

## பிற்குறிப்பு

சித்திரபானு வருசம் தை மாதம் 21 ந்தேதி வெள்ளிக்கிழமையும் அனுச நட்சத்திரமும் கடக லக்கினமும் பக்கம் ஏகாதசியும் கூடிய சுபயோக சுபதினத்தில் பாகவத அம்மானை ஒன்று முதல் ஒன்பது காந்தம் வரைக்கும் எழுதி முடிந்தது. இது எழுதினது மல்லான்குணா வாத்தியார் அருணாசலம் செட்டி கை அட்சரம்.

## குறிப்புரை

முதல்காந்தம் நாரதர் தோற்றம் உரைத்த கதை தொடங்கி 9 ஆவது காந்தம் மரபு உரைத்த கதை வரை ஒன்பது காந்தங்களும் முழுமையாக உள்ளன. தருமன் முதலானோர் வீடு பெற்ற கதை, சுகமுனி தத்துவ உற்பத்தி உரைத்த கதை, உத்தவன் விதுரனுக்குக் கர்ணன் சரித்திரமுரைத்த கதை, மலைவான் தோற்றமுரைத்த கதை, சனகாதியர் பிறப்புரைத்த கதை, தேவர் முதலானோர் படைப்புரைத்த கதை, தக்கன் வேள்வி அழித்த கதை, துருவன் பதம் பெற்ற கதை, பிருகு மன்னன் கதை, பிராசினாதியர் பதின்மர் கதையுரைத்தது,

பரதன் சரித்திரமுரைத்த கதை, ஏழு தீவோடேழு கதையுரைத்த கதை, சக்கரன் கதையுரைத்தது, சம்புத்தீவின் கதையுரைத்தது, மேலுலகமுரைத்த கதை, கீழேழு உலகமுரைத்த கதை, நரக வருணனை உரைத்த கதை, சாமிளன் கதை, நாராயணன் கவசமுரைத்த கதை, சித்திரகேதுவின் கதையுரைத்தது, மருத்துக்கள் முதலானோர் பிறப்புரைத்த கதை, நாரதர் தருமனுக்குச் சிசுபாலர் வீடு பெற்ற கதையுரைத்தது, வருணாசிரமமுரைத்த கதை, மனுக்களை உரைத்த கதை, ஆனை காத்தளித்த கதை, அரிச்சந்திரன் கதை உரைத்த கதை, இல்லறத்தோர் சேர்கதி யுரைத்த கதை, கடல் கடைந்த கதை, சகரன் கதையுரைத்தது, பகீரதன் கதையுரைத்த கதை, மரபுரைத்த கதை, மயித்திரேயர் தத்துவமுரைத்த கதை, யயாதி கதையுரைத்தது, பூருவின் மரபிற் பரதன் கதையுரைத்தது முதலான கதைகள் உள்ளன. பல தலைப்புகள் அறிய இயலாதவாறு சிதைந்துள்ளன.

## 796. பாகவதக் கதைகள்

**அ.** ***483:732***; **ஆ.** *118 - 288* ஏடுகள்; **இ.** 41 x 3 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** ஓரளவு சிதைவு; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

அக்கினியின் போதரித்த அக்குமர ருக்கு மெழில்
மிக்கதொரு மூவர்மிகுந்த பேராசை விட்டு
சீரேந்திடத் தவசுசெய்து நின்றார் தீவேழும்
ஓரேழு புதல்வர் தமக்குச் சிதஞ்சேர்த்ததைத் தந்தான்
பிரியவிரதன் றவத்தால் பெற்றெடுத்த பேதைதனை
உரியதொரு காவியனுக் குரமாகக் கொடுத்தான்
காவியன் பூவதனைக் காதலுடனே தழுவி
ஆவியன்ன மென்னடைத் தெய்வானையை
யங்கீன்றெடுத்தான்

முடிவு

கைநாக மன்னனான கடல்நடு வில் .....
மைநாகமீது சற்றேவைகி மிளைப்பாறி யப்பால்
யிங்கிதம்யேற்ற கிரியே யதியதன் மீதிருந்த

அங்கத குமாரன் முதலானோர் இலங்கையினிற்
சானகியைக் கண்டுவந்த சந்தோடஞ் செப்பியபின்
வானர்குலவர சருடன்வா...காயம் மகிழ்கூர்ந்து
பண்டுவந்த பாதைவழி பற்றி இராமன் முன்போய்க்
கண்டுவந்தேன் சீதைதனைக் கார்வண்ணா
வென்றுரைத்தான்

குறிப்புரை

முதல் 3 ஏடுகளில் அவையடக்கம் இடம்பெற, அடுத்துப் பின் வரும் கதைகள் உள்ளன.


| எண்கள் | கதையின் பெயர்கள் | ஏட்டெண்கள் |
|---|---|---|
| 1. | நாரதர் தோற்றமுரைத்த கதை | 3 - 11 |
| 2. | கண்ணனறுவரை அடைந்த கதை | 11 - 17 |
| 3. | பரிசித்து தோற்றமுரைத்த கதை | 17 - 23 |
| 4. | பரிசித்து கலி கடிந்த கதை | 23 - 27 |
| 5. | பரிசித்து வேட்டையாடி சாபம் பெற்ற கதை | 27 - 30 |
| 6. | சுகமுனி மாயவன் நிலையுரைத்த கதை | 31 - 33 |
| 8. | சவுனகர் அரன்நிலையுரைத்த கதை | 34 |
| 9. | சுகமுனி தத்துவம் ... உரைத்த கதை | 35 |
| 10. | உத்தவன் விதுரனுக்குக் கர்ணன் திறமுரைத்த கதை | 36 - 38 |
| 11. | மயித்திரேயர் தத்துவமுரைத்த கதை | 39 - 42 |
| 12. | மலரவன் தோற்றமுரைத்த கதை | 43 - 45 |
| 13. | காலமுரைத்த கதை | 46 - 47 |
| 14. | சனகாதியர் பிறப்புரைத்த கதை | 48 - 49 |
| 15. | அதிராதி நிலையுரைத்த கதை | 50 - 51 |
| 16. | தேவர் முதலானோர் படைப்புரைத்த கதை | 52 - 58 |
| 17. | கருத்தம ... கதை | 59 - 60 |
| 18. | கபிலன் தத்துவ முரைத்த கதை முதலியன | 61 - 65 |
| 19. | தக்கன் வேள்வி அழித்த கதை | 74 - 75 |

20. துருவன் ... கதை 76 - 85
21. பிருகுமன்னன் கதை முதலியன 86 - 94
22. பிராசினாதியர் பதின்மர் கதையுமுரைத்து 104 - 112
23. பிரியவிரதன்மர் உரைத்த கதை 113 - 116
24. பரதன் சரித்திரமுரைத்த கதை 117 - 121
25. சம்புத் தீவின் கதையுரைத்தது 122 - 128
26. ஏழுதீவோடேழு கதையுரைத்த கதை 129 - 136
27. சூரிய மண்டல முரைத்த கதை 137 - 139
28. மேலுலக முரைத்த கதை 140 - 143
29. கீழுலக முரைத்த கதை 144 - 145
30. நரகமுரைத்த கதை 146
31. சாமிளன் கதை 147 - 148
32. தக்கன் படைப்புரைத்த கதை 149 - 151
33. தெய்வேந்திரன் அகில்ரூபனை
குருவாக வந்தடைந்த கதை 152 - 156
34. நாராயணன் கவசமுரைத்த கதை 157 - 160
35. அகில் ரூபனையும் விரத்தா சூரனையும்
தெய்வேந்திரன் கொன்ற கதை 161 - 165அ.
36. விருத்திர கதியைத் தீர்த்த கதை 165ஆ - 166அ
37. சித்திரகேதுவின் கதையுரைத்தது 166ஆ - 170அ.
38. மருத்துக்கள் முதலானோர்
பிறப்புரைத்த கதை 170ஆ - 174அ
39. பஞ்சவன் விரதமுரைத்த கதை 174ஆ - 176அ
40. நாரதர் தருமனுக்குச் சிசுபாலன்
வீடு பெற்றதுரைத்த கதை 176ஆ - 178அ
41. இரணியனைக் கொன்ற கதை 178ஆ - 195
42. வருணாசிரமுரைத்த கதை 196 - 200
43. இல்லறத்தோர் ஆசை உரைத்த கதை 201 - 203
44. மனுக்களை உரைத்த கதை 204 - 211
45. கடல் கடைந்த கதை 212 - 222
46. தேவரோடு அசுரன் போர் செய்த கதை223 - 227
47. ஈஸ்பரர்க்கு மாயவன்மோகினி
ரூபங் காட்டின கதை 228 - 231அ.

48. வைவச்சுத மனுக்களை
உரைத்த கதை 231ஆ - 234
49. வாமன அவதாரமுரைத்த கதை 235 - 245
50. மீன் அவதாரமுரைத்த கதை 246 - 248
51. வைவச்சுத மனுவினமாயுமிளன்
கதை உரைத்தது 249 - 250
52. சையாதி கதையுரைத்தது 251 - 254
53. அம்பரீடன் கதை 255 - 258
54. இச்சுவாகுவின் கதை 259 - 263
55. அரிச்சந்திரன் கதையுரைத்தது 264 - 266
56. சுக்கிரன் கதை 267 - 268
57. பகீரதன் கதை 269 - 270
58. கலமாட பாகன் கதை 271 - 274
59. இராம அவதாரமுரைத்த கதை 275 - 295
60. இராமன் வைகுண்டமடைந்த கதை 296 - 300
61. நிமி மரபுரைத்த கதை 301 - 304
62. சந்திரவங்கிசத்தார்
புதன் கதையும் புரூர்ராவின் கதையும் 305 - 239
63. .... மரபுரைத்தது 330 - 338
64. பூருவின் மரபிற் பரதன் கதையுரைத்தது 339 - 324
65. அணுமரபுரைத்த கதை 325 - 3389

ஆகக் காந்தம் 9-க்குக் கதை 65.

இறுதியில் இரண்டு வெற்றேடுகள் உள்ளன.

## 797. பாரத அம்மானை

**அ. *310:535***; **ஆ.** *1 - 164* ஏடுகள்; **இ.** 38 x 3.5 செ.மீ.; **ஈ.** 9 - 10 வரிகள்; **உ.** 22, 25, 26, 32, 37, 38, 59, 79, 92, 102, 104, 105, 157, 160 ஆகிய ஏடுகள் இல்லை; 40, 70, 76 ஏடுகளைத் தவிர மற்றவை நல்ல நிலையிலுள்ளன; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

முற்குறிப்பு

1030 ஆம் வருஷம் ஆனி மாதம் 16 ஆம் தேதி எழுதினது. முத்துக்குமாரனாடன் சுவாமி.

தொடக்கம்

நீடாழி உலகத்தில் மறைநாலோ டைந்தினால்நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மகாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக மகாமேருவு வெற்பாக வெங்கூர் எழுத்தாணிதங்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாம்
மேதினியில் முன்னாள் வினாயகனார் தாமெழுது
பாரதத்தை நூல் வழியே பாடவே - சீர்புனைய
வேதமேயான புகழும் (வேல்) முகனைத் தமிழுக்கு
நாதனே துணைசெய்கு வாய்.

நாட்டுச் சிறப்பு

முந்திமுந்தி வினாயகனே முருகா சரசுவதி
கந்தனுக்கு மூத்தோனே கச்சி கணபதியே
பேழைவயித் தோனே பெருச்சாளி வாகனனே
ஆனைமுகத் தோனே அரனார் திருமகனே
வெள்ளை முகத்து வினாயகனே முன்னடவாய்
அத்திபுரம் நாட்டிலது வன்மை சொல்லுகிறேன்
எழுதி வினாயகனார் யீசுவரர்க்குத் தாமுரைத்தார்

முடிவு

இட்டமுடன் பேர் விசையன் இயம்பிய சொல்லத்தனையும்
விட்டு விடென்றப் பொருது வீரமும் இப் போதிழந்தோம்
இன்று காண்டாவனமு மிமையோரையு மிழந்தோம்
மாண்டு போனாலும்நன்று மகவானே நான்பொறேன்
தூண்டு பெரும்புகழென துய்யவச்சி ராயுதமென
என்றுரைத்து விண்ணவர்கோன் என்றிசை யெல்லாம் புகழ்
வென்றி அயிரர வத்ததை விசயன்மேல் விடுத்தார்
அப்போது விண்ணவருமான வியாளத் தோறும்
செப்பரிய நான்முகனுஞ் சிறந்த வசிட்டர் தாமும்
வந்துமிகவே மதித்து வானவர் கோனை நோக்கி
உந்தனக்குப் புத்தியதை யோதினவர் அங்குளர்தான்
மைந்தனுடனே பொருதால் வாய்த்த வந்தாளிலைகாண்.

(பக்.163)

குறிப்புரை

நாட்டுச்சிறப்பு, துரோணாச்சாரி வந்தது, பாஞ்சாலன் போர், பஞ்சவர்களுக்கு நஞ்சிட்டது, வீமன் சலப்படுகைக்குப் போனது, அரக்கு மாளிகை கட்டிய வகை, பஞ்சவர்கள் இடும்பவனம் போனது, இடும்பன் வரலாறு, இடும்ப வல்லியை வீமன் கல்யாணம், செய்தது, பஞ்சவர்கள் யேகசக்கர புரத்துக்குப் போனது, துரோபதை கல்யாணம் சதிராங்கினி கல்யாணம் முதலான தலைப்புகள் உள்ளன. ஏட்டின் ஒவ்வொரு பக்கமும் இருபகுதிகளாகப் பிரித்தெழுதப் பட்டுள்ளது.

## 798. பாரத அம்மானை

**அ.** ***453:700***; **ஆ.** *16 - 366* ஏடுகள்; **இ.** 40 x 3.5 செ.மீ.; **ஈ.** *9 - 11* வரிகள்; **உ.** பெரும்பாலான ஏடுகள் சிதைவு; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகாதது.

தொடக்கம்

.... சினந்து அரியசிறு வீட்டுமனும்
தாடிவிட் டப்போது சாலுவனும் தான்முறிந்து
ஒடிவிட்டுப் போய்த்திரும்பில் ஒருவனாகவே திரும்பி
வந்துசிறு வீட்டுமனை வணங்கிநின்றங் கென்சொல்வான்
கந்தமுறு தார்புயனே காவலற்கெல் லாமரசே
அரும்பிருக்கும் நன்முலையாள் ஆனதொரு அம்பிகைதான்
விரும்பியுனக் கேதாரம் விரும்புவே னென்றுமுன்னாள்
தப்பா மலேமொழிந்து தானிருக்கு மின்னாரை
இப்போ கொடுபோனால் என்னைநகைப் பார்வேந்தர்
என்றுரைத் ததைக்கேட்டு யிரங்கிய வீட்டுமனும்

முடிவு

மாலவனார் தன்னருகே வைகுண்டத் தேயிருக்க
சீலமுட னம்மைவந்து தெரிசித்துத் தானிருக்க
தூயவனார் பாதம் தொழுதனர்காண் எல்லோரும்
மாயவரே போய்மீள வாருமென்று ஈசுவரனார்
செந்தமிழ்சேர் மாலேனீர் செல்லுமென்று தான்அனுப்பி
வெள்ளி கயிலைதனில் வீற்றிருந்தா ரம்மானை

குறிப்புரை

சூதாட்டத்தில் நாட்டை இழந்த பாண்டவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகள் வனம் சென்றனர். சூரிய வனம் முதல் காளவ வனம் ஈறாகப் பன்னிரண்டு வனங்களில் வாழ்ந்தனர். பிறகு ஓராண்டு விராட தேசத்தில் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர். பின் பாரதப் போர் முடிந்து தருமர் முடிசூட்டப்பட்டார். இக்கதைப் பகுதியில் துரோணர் பிறப்பு, சராசந்தன் போர், நச்சுப் பொய்கை, விசயன் தவநிலை, நாகக் கணை விட்டது, விசயன் தவமழிக்க நாகத்தை ...விட்டது முதலான தலைப்புகளில் செய்திகள் உள்ளன.

## 799. பாரத அம்மானை

**அ.** ***454:701***; **ஆ.** *3 - 363* ஏடுகள்; **இ.** 50.5 x 3.5 செ.மீ.; **ஈ.** *10 - 11* வரிகள்; **உ.** நன்று; இறுதியில் சில ஏடுகள் சிதைந்துள்ளன; ஒவ்வொரு பக்கமும் *3* பகுதிகளாகப் பிரித்தெழுதப்பட்டுள்ளது; **ஊ.** ஓரளவு தெளிவு; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

> தெருத்தலை வாசல்தோறும் சிறந்தஅலங் காரமுடன்
> கருத்தூர நாழிகோங்கு கதலிவருக் கைக்கமுகு
> நரைசெறிந்த சண்பகமும் நல்லசந் தனக்காவும்
> குறைகள் சற்றுமில்லாத குணக்கும் திருக்கமுடன்
> ருத்திராட்ச விருட்சம் ஓங்கிவளர்ந் தேயிலங்க
> திருத்தமுள்ள வில்வமுடன் தெருவீதியும் யம்பலத்தும்
> வீதிதோறும் மறுகு மீதுற்ற பலபாதையிலும்

முடிவு

> அப்போ சுபத்திரையாள் அகமகிழ்ந்து கொண்டாடி
> மெய்ப்பாம் வரிசைசொல்லி வேண்டுஉப சாரமிட்டு
> இப்போ தமக்கையிடத் தேகியந்த செய்தியெல்லாம்
> தப்பாமலே யுரைத்து தானிருங்கோ என்றனுப்ப
> மெய்ப்பாய் நேமியேறி விரைந்திரு வரும்போய்
> செப்பரிய கடோற்கயனும் சென்றுதா யைத்தொழுது
> ஒப்பரிய கண்ணாலத்து யுவகைசொல்லி யங்கிருந்தான்

குறிப்புரை

இச்சுவடியில் பாரதக்கதை அம்மானை நடையில் எழுதப்பட்டுள்ளது. துருபதன் தவசு, வஞ்சம், பிரம்மன் வரவு, வீமன் பாதாளமுற்றது, இடும்பன் கதை, அரக்கு மாளிகை, காண்டவவனம் எரித்த கதை, சராசந்தன் போர், ஆரணிய காண்டம், தினை வாங்கினது, மிருகத்தின் பால் வாங்கினது, கழுநிறுத்தின கதை, வனவாச கதை, சிம்புள் கதை, நச்சுப் பொய்கைக் கதை, நெல்லிப் பழம் பொருந்தின கதை, குருசேத்திரப் போர், விராடபுரத்தில் வந்து சேர்ந்த கதை, கீசகன் கதை, சுந்தரி கலியாணமான கதை முதலான தலைப்புகளில் கதைகள் கூறப்பட்டுள்ளன.

## 800. பாரதக் கதைப்பாடல்

**அ. *396:640*; ஆ.** *35 - 162* ஏடுகள்; **இ.** 34.5 x 3 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** நன்று; ஏடுகளின் இடதுபக்க ஓரப்பகுதி கள் சிதைந்துள்ளன; **ஊ.** தெளிவான அழகான எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

மெய்யென் றிருந்தோம் மேதினியை நம்மிதென்று
பொய்யாமுடிந் திதுகாண் புத்தியுள்ளோர் தான்கேளீர்
மோசம் வருவதற்கு முன்னறிய நன்செயலோ
பாசம்பிடித் திழுத்தால் பக்க விலக்குமுண்டோ
நாசம் வருங்காலம் நல்லறிவு போய்விடுங்காண்
நேசம் புலையாட்டாய் நினைவுதடு மாறிவிடும்
வல்லமை யாலே வாழ்வதுண்டோ பூவுலகில்
நல்லவர்கள் நீங்கள் நமக்குதவி யாகவந்தீர்

முடிவு

மத்துஞ் சராசரங்கள் மண்டலங்கள் மூன்றுடனே
சுற்றண்ட கூடச்சு வருமடங் கலுமாய்
பித்தகனார் லட்சிக்கும் பெருஞ்சிவனு முதலாய்
சந்திரருஞ் சூரியருந் தாரகைநட் சத்திரமும்
இந்திரரும் வானவரு மிமையோர் முனிவர்களும்
தந்திரமாய் நாள்வகுத்துச் சகலமெல்லா முண்டாகி
அந்தரத்தி லப்பேச்சுயார் பெரியோர்என் றறியில்

குறிப்புரை

பாரதக் கதை கதைப்பாடல் அமைப்பில் சுவடியாக அமைகிறது. எண்ணில்லாத பல ஏடுகள் இறுதியில் வைக்கப்பட்டுள்ளன.

## 801. பாரதப்போர் அம்மானை

**அ. 455:702; ஆ.** 1 - 439 ஏடுகள்; **இ.** 50.6 x 3.5 செ.மீ.; **ஈ.** 9 - 19 வரிகள்; **உ.** முழுமை; **ஊ.** நன்று; **எ.** ஓரளவு கடினம்; **ஏ.** அச்சாகவில்லை.

முற்குறிப்பு

1347-வது வருசம் வைகாசி மாதம் 12-ஆம் தேதி வியாழனாட்சையும் அனுச நட்சத்திரம் கூடிய சுபயோக சமயத்தில் சொத்தவி குமாரசுவாமி குமரகுருபரன் துணையால் சர எழுதி, படித்து வருகிற பாரதப்போர் யம்மானை ஏடு.

தொடக்கம்

மேருதனில் முன்னாள் வினாயகனார் தாம்எழுதும்
பாரதத்தை யம்மானை பாடவே - ஏரனைய
வேய் புகழ்சேர் வேழமுக னேதமிழுக்கு
நாயகனே முன்னட வாய்.

ஏடாக மேரும் எழுத்தாணி தன்னுடைய
கோடாக மாமுனிசொல் குன்றாமல் - பாடற்
பழுதில்லா வண்ணமிந்த பாரதத்தை யெல்லாம்
எழுதினை எங்கட் குறை.

முடிவு

ஆனந்த மானமுனி பூசிக்க யடலிங் கருமாய
தேனுந்து பாயும் கையிலாச நாதசிவப் பண்பிலுறை
ஆனந்த மானந்தம் என்றவர் நாவுக்கழி வில்லையே

பிற்குறிப்பு

1347-ஆவது வருடம் ஆடிமாதம் 12ஆம் தேதி வியாழனாச்சையும் பஞ்சமியும் உத்திரட்டாதியும் கூடிய அன்று நாள் சொத்தவி இடத்திலிருக்கும் ஆதிநாராயணன்

குமாரர் கவிமுன்னோர் எழுதின சுவடி பார்த்து சர எழுதிப் படித்து வருகிற பாகவத பாரதப்போர் நன்றாய் நீடூழி வாழ்க. எழுதி முடிந்தது. வைகாசி மாதம் 12ஆம் நாள் துவக்கி இடைக்கிடை எழுதாமல் 40 நாள் எழுதியிருக்கிறது.

## குறிப்புரை

பூமி பாரம் தவிர்த்த புண்ணியனார் கதையை, பாகவதம் முதலாய பாரதத்தை அம்மானையாகப் பாட, கணபதி முதலான பல கடவுளர்களை வணங்கித் தொடங்குவதாக முதல் ஏடு அமைகிறது. கிருஷ்ணன் பிறப்பு, துரோணர் பிறப்பு, அசுரன் சித்திரனுக்கும் அரசன் சித்திரனுக்கும் படை, பரதன், பாண்டு, விதுரன் பிறப்பு, ஆசாரி தேச துருபதிராயன் படை, துரோபதை பிறப்பு, முடிசூட்டடல், வினை வழுத்தல், சோற்றில் விசம் கலத்தல், துரோபதை முறைக்கேடு, சுபத்திரை கல்யாணம், காண்டாசவ வனம் எரித்தல், பஞ்சவர் வனவாசம் போறது, பஞ்சவர் வேசம் மாறுதல், பாண்டுவனம் போனது, சாரசந்தன் போர், சூது பொருதல், தினைவிரை வாங்குதல், துரியோ தனனைப் புள்ளெடுத்துப் போடுதல், மச்சவதாரம், வராக அவதாரம், நரசிங்க அவதாரம், தேய்சந்திரன் பசுநிரை கொள்வது, சித்திரசேனைப் போர், சுனையில் கழுநிரைத்தல், ஓமத்தில் வேதாளம் பிறப்பு, நாலுபேரைச் சேட்சுரன் எடுத்த கதை, கெவுரி நோன்பு, தொழில் சோதினை, ‘‘மான்ராசா ஓடையிலே செங்கழுநீர் பூப்பறித்தல், தேத்தரசன் துரோபதையை எடுத்த கதை, தேத்தரசன் கொண்ட மாலை வாங்கல், தேய்சந்திரன் கவச குண்டலம் வாங்கல், சுந்தரி கலியாணம், விசையன் தவநிலை, குருகேத்திரன்கதை, பஞ்சவர் வேசம் மாறுதல், விராடபுரத்தில் நிரை கொள்தல், பஞ்சவர் நாட்டில் வாழ்வு, நாராயணர் தீது என்றது, அரவானைப் பெலியூட்டடல், துரியோதனன் படை அணிவகுத்தல், தர்மர் படையணி வகுத்தல், பெருந்திருவானையின் கனவு, மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிங்க அவதாரம், வாமன அவதாரம், தசரதராமன் அவதாரம், பரசுராமன் அவதாரம், அரக்கு மாளிகை எரிகொளுத்தல், துரோபதை கலியாணம், இந்திரப் பிரத்தத்தில் படைப்போர், இராட்சியம் இருகூறாக்குதல், துரியோதனனைக் கிழியூட்டடல், அசுவ

வியாகம் போன்ற அவதாரங்கள், போர் நாள், போர் தொடங்குதல், போர் முறைகள், கிருஷ்ணன் வைகுண்டம் போகுதல் போன்ற தலைப்புகளில் நூல் அமைகின்றது. நூல் அம்மானை நடையிலமைந்துள்ளது. ஏட்டின் ஒவ்வொரு பக்கமும் மூன்று பகுதிகளாப் பிரித்து எழுதப் பெற்றுள்ளது.

## 802. மாகதை

**அ.** ***306:531***; **ஆ.** *13* ஏடுகள்; **இ.** 42 x 3 செ.மீ.; **ஈ.** *7 - 10* வரிகள்; **உ.** ஏட்டு எண் *26* முதல் *415* வரை *13* ஏடுகள் உள்ளன; ஓரளவு சிதைந்த நிலை; **ஊ.** கடினம். **எ.** குறை; **ஏ.** இந்தச் சுவடி அச்சாகவில்லை. இதைப்போன்ற நூல் வேறிடத்தில் அச்சாகியுள்ளது.

தொடக்கம்

போதமுடனே அந்தவழிபாரு கலோடியைத் தானனணிந்தார்
அப்போ னதிலேதான் அழகுதமை யந்திதான்
செப்பமுட னீன்றாள் சீரான புத்திரனை
போற்றி வளர்த்து பொன்மகுட முஞ்சூட்டி
நாற்றிசையுங் கொண்டாட நற்பாய் வந்தான்
தவவேடம் பூண்ட சதிரான் வித்திரசேன்
பவந்தீரக் கானகத்தில் பாங்காய் தாத்தவசு (பக். 26)

முடிவு

ஓவியமாய் நூற்றிமுப்பத் தொன்பதானது கலந்து
பூவுலகோர் கொண்டாடப் புனிதவம்மானை யெனவே
மகமுன் னிலையாக வசக்கு மாகதைக்கு
அகமகிழவே கேளீர் அம்மானை யானதுவே
இக்கதையைப் பொய்யென்று யெண்ணுவார் தன் பலனை
மிக்கான் பூவுலகில் வீதிதனிற் காண்பாரே
அய்யமில்லா மாகதைக்கி அஞ்சிநடந்தாள் பலனை
செய்ய புராணமெல்லாம் சொல்லுமனு கேட்டருள்வீர்
ஓதுங்கதை தனையே உண்மையாய்க் கேட்டவர்கள்
நாதன் கிருபை பெற்று நற்பதவிதான் பெறுவார் (பக்.415)

*26* ஆம் அத்தியாயம் முற்றும்

குறிப்புரை

**அம்மானை நடை.** நளன் தமயந்தி கதை இந்நூலில் இடம் பெறுகிறது. தொடக்கமும் முடிவும் இல்லையாதலால் நூற்பெயரை அறிய முடியவில்லை. வாழ்த்துப் பாடலில் வரும் மாகதை என்ற சொல் நூலுக்குத் தலைப்பாகத் தரப்பட்டிருக்கிறது. நூற்பயன் நூலில் கூறப்பெறுகிறது.

## 803. (மாகஷ்த்தான் கதை)

**அ.** ***475:724***; **ஆ.** *343* ஏடுகள்; **இ.** 38 x 3 செ.மீ.; **ஈ.** *8 - 9* வரிகள்; **உ.** ஏடுகள் பழுதடைந்து சிதையும் நிலையிலுள்ளன; **ஊ.** தெளிவற்ற எழுத்து; **எ.** குறை; **ஏ.** அச்சாகவில்லை.

தொடக்கம்

பழமரங்கள் சூழ பலசாதி... கிளி பயின்ற
தானே நெருங்கி சத்தகால...
வானில் மழைபோல வழிந்தொழுகும் .... குழியிற்
... .... ... ....
கருணைக் கடலானோர் கடியதவ மாமுனிவர்
பெருமை சிறுமை ரண்டும் பேசாத மாதவத்தோர்

முடிவு

ஓசையில் ஒருகவி யெனினும் ஓதுவான்
போகமா யாவையும் புவியில் துய்த்துவிண்
ணாகநாட் டின்பமும் நயந்து துய்ப்பரே

குறிப்புரை

முதற்கதைப் பாயிரம், 2-ஆவது அத்தியாயம் திலிபதிராசன் வேட்டை, 3ஆவது விஞ்சையன் கதை, 4ஆவது அத்தியாயம் மிருகசிங்கன் கதை, 5ஆவது அத்தியாயம் மிருகசிங்கன் தவம் பெற்று மீண்ட கதை, 6ஆவது அத்தியாயம் சுவாத்தை கதை, 7ஆவது அத்தியாயம் மாண்ட பெண்கள் உயிர் பெற்ற கதை, 8ஆவது அத்தியாயம் புண்ணியம் செய்த கதை, 9ஆவது அத்தியாயம் பாவியர்கள் கதை, 10ஆவது அத்தியாயம் புக்களன் கதை, 11ஆவது

சம்புகதை, *12*ஆவது விஞ்சை மந்திரக்கதை, *13*ஆவது மிருகசிங்கன் கதை, *14*ஆவது நித்திய கர்மத்தின் கதை, *15*ஆவது கற்புநிலை கதை, *17*ஆவது மார்க்கண்டன் கதை, *19*ஆவது சுவாதனங்கன் கதை, *20*ஆவது வீமன் ஏகாதேசிக் கதை, *21*ஆவது சிவராத்திரி மான்மியம், *25*ஆவதுபஞ்சாச் சரம் அத்தியாயம் *26*ஆவது குண்டல விண்டலன் கதை, *27*ஆவது வண்டான பட்சி கதை, *30*ஆவது அக்கினிபன் சாபந் தீர்ந்த கதை முதலான *30* கதைகள் உள்ளன. கதைத் தலைப்புகள் தெளிவாக அறிதற்கியலாதவாறு சிதைந்துள் ளன. *338:570* இல் இடம் பெற்றுள்ள கதைகளுடன் இக்கதைகள் ஒத்து அமைகின்றன. 29ஆவது அத்தியாயங்கள் முழுமையாக உள்ளன. *30*ஆவது அத்தியாயம் முற்றுப் பெறவில்லை. இறுதி வாழ்த்து அடிகளில் மாகஷ்த்தான் கதை என்ற பெயர் இடம் பெற்றுள்ளது.

## *804.* வன்னிராயன் கதை

**அ. தாள், *12:41*; ஆ.** *18* பக்கங்கள்; **இ.** முழுமை; **ஈ.** அச்சானது (நிறுவன வெளியீடு, *1996*).

தொடக்கம்

சட்டைதொட்டுக் கச்சைகட்டி
சக்கரமும் அட்டியலும்
வட்டப் பரிசையுடன்
வல்லயமும் நீபிடித்தாய்
அட்டதுஷ்டப் பேயை
அடக்கியே யாளும்
சித்தர்புகழும் வன்னியராயன் - எங்கள்
தெய்வச் சிகாமணியே

முடிவு

வெட்டுப் பட்ட தேவ தைதான்
வேந்தன் வன்னிய ராயனவன்
அட்டா துட்டி பண்ணு தய்யா
அழகு வன்னிய ராயனவன்
வெட்டுப் பட்ட தேவ தைக்கு
வேந்தன் வன்னிய ராயனுக்கு
நிலையம் போட்டு பீட மிட்டு
நீதியுடன் குடைகொடுத்தார்

குறிப்புரை

இச்சுவடி கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 8017 என்ற எண்ணுள்ள சுவடியாக உள்ளது. இதன் நிழற்படி இந்நிறுவனத்தில் தாள் சுவடியாக உள்ளது. 27 x 2.9 செ.மீ. நீள அகலம் கொண்ட இச்சுவடி 33 ஏடுகளைக் கொண்டதாக உள்ளது. பக்கத்துக்கு 5 முதல் 9 வரிகள் உள்ளன.

புலமாடக்கோன் வாசித்து வருகிற வன்னிராயன் கதை என்று முதல் ஏட்டில் குறிப்பு உள்ளதால், புலமாடக்கோன் என்பவருக்குச் சொந்தமான சுவடி இது என்பது தெரிகிறது. வன்னிராயனின் புகழைக் கூறுவதாக முதல் காப்புப் பாடல் அமைகிறது. தொடர்ந்து கணபதி, சரஸ்வதி என்ற பல தெய்வ வணக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தென்பாண்டி நாட்டில், ஊத்துமலைப் பகுதியைக் காவல் தலைமை இடமாக வைத்து வாழ்ந்து வந்த வன்னியர் குலத்தைச் சேர்ந்த ராமசுவாமித் தேவரின் மனைவி பிள்ளை வரம் வேண்டி சங்கரனார் அருளால் ஆண்மகவை ஈன்று வன்னிராயன் என்று பெயர் சூட்டுகிறாள். அவனுக்கு மணமுடிக்க பெற்றோர் தமையன் மகளைப் பெண் கேட்கின்றனர். அவர்கள் சாதித்தொழிலாகிய களவு செய்தல் அறியாத வன்னிராயனுக்குப் பெண் தர மறுப்பதால் வன்னிராயன் களவில் ஈடுபட்டு அப்போது ஆட்சி அதிகாரத்திலிருந்த வடமலையப்ப பிள்ளையின் ஆணையால் வெட்டப்படுகிறான். வன்னிராயனின் சினம் நாடடுக்குத் தீங்கை ஏற்படுத்தியதை அறிந்த மக்கள் பீடம் அமைத்துப் பூசை செய்ததால் ஊர்மக்களைக் காத்து வருபவனாக வன்னிராயன் ஆகிவிடுகிறான். இங்ஙனம் வன்னிராயன் என்பவனின் கதைப்பாடலாக இந்நூல் அமைகின்றது. கதைக்குறிப்பு களைக் கொண்டு நோக்கும்போது இந்நூல் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தாகத் தெரிகிறது.

## 805. வைகுண்ட அம்மானை

**அ. தாள். 21:52**; **ஆ.** *1 - 187* பக்கங்கள்; **இ.** குறை; **ஈ.** அச்சாகவில்லை.

## தொடக்கம்

கந்தனே செந்தமிழுக்குக் கணபதியே காப்பாக
எந்தன் சரசுவதி எப்போதும் வாக்கில்நித்தம்
வந்துதவி செய்ய வழுத்துகிறே னிக்கதையை
முந்து பரமீசர் மொழிந்த வசனமிது
செப்புதற்கு லட்சுமியாள் சீதேவி யுண்டாக
இப்புவியில் மாலையனு மெடுத்துரைத்த வேதாந்தம்

## முடிவு

வெல்லரிய குந்திபுற மேதினியில் வாழ்ந்தளவில்
எங்களய்யா கண்டு யிருமென்று ஆதரித்தார்
அங்கவருந் தங்கி யமந்துயிருக்கும் வேளையிலே
அஞ்சயசான் ஆரணங்கு கையாலே
மிஞ்சுமொரு சமையல் விதமாகத் தான்முடித்து
அமுதுபடைத் தாலருமை யுடனுண்ப மென்று

## குறிப்புரை

இந்நூல் ஆசிரியர் வெங்கியருள் வடவன் (சீரங்கராயருட தன்சீசன்). எழுதியவர் புகழழகு தன்புதல்வன். பாண்டவர் வைகுண்டம் சேர்ந்த இக்கதை அம்மானைப் பாடலாகத் தமிழ் இலக்கிய வகையில் அமையும். நெடும் பாட்டாகும். பஞ்ச. பாண்டவர் துரியோதனனை வென்று, பாரத யுத்தத்தை முடித்து நாட்டை ஆண்டபிறகு வைகுண்ட மெய்திய செய்தி கூறப்படுகின்றது. இச் சுவடிக்குப் பல பிரதிகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், ஆசியவியல் நிறுவனம், கேரளப் பல்கலைக் கழகச் சுவடிகள் நூலகம் முதலான இடங்களில் காணப்படுகின்றன.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை. |
|---|---|
| சங்கத் தமிழர் வாழ்வியல் | .. 75.00 |
| தமிழக மேடைநாடகப் பெண் கலைஞர்கள் -குறிப்பேடு | .. 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil | .. 80.00 |
| Cilappatikaram | .. 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | .. 125.00 |
| Tani Pacura Togai | .. 30.00 |
| Dedication | .. 25.00 |
| Temple Chimes | .. 20.00 |
| Nala Venba | .. 45.00 |
| Tamil Heroic Poems | .. 40.00 |
| Six Long Poems from Sangam Tamil | .. 30.00 |
| Kurinci-P-Pattu-Muttollayiram | .. 40.00 |
| Kuruntokai | .. 110.00 |
| Landscape and Poetry | .. 50.00 |
| Tamil Culture and Civilization | .. 60.00 |
| Tolkappiyam and Astadhyayi | .. 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | .. 50.00 |
| தமிழில் நவீன நாடகம் | .. 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | .. 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | .. 80.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 1 | .. 50.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 2 | .. 65.00 |
| சோதிடவியல் | .. 70.00 |
| மூலிகைக் கற்பங்கள் | .. 80.00 |
| அமிர்த மதன கூத்து நாடகம் | .. 90.00 |
| சித்த மருத்துவ மணிகள் | .. 75.00 |
| கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவனை (முதல் தொகுதி) | .. 85.00 |
| Tamil Scripts - Work Book | .. 50.00 |
| Work Book Written Tamil | .. 50.00 |
| விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் | .. 30.00 |
| திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள் | .. 25.00 |
| தமிழ்க் காட்சி நெறியியல் | .. 46.00 |
| இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | .. 30.00 |
| ஒப்பிலக்கியம்:கொள்கைகளும் செயல்முறைகளும் | .. 15.00 |
| கருணையம்மன் அந்தாதி | .. 22.00 |